

சிறப்பிதழ்

கேப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்



புது எழுத்து

சித்திரை 2004 ஆசிரியர்: மனோன்மணி **9**

புது எழுத்து 9

ஆசிரியர்
மனோன்மணி

ஆர்ட் எடிட்டர்
ஜீ.முருகன் ,சி.கேசவன்

ஓவியர்கள்
சிவா, கார்த்திகேயன், ரிவேரா, ரவீந்திரன்.

அச்சுக் கோர்ப்பு
தே. சங்கர்
அமைதி

ஒளி அச்சு, வடிவமைப்பு
ஜீவா கம்ப்யூட்டர்ஸ்
செங்கம்
செல்: 94434 92461

அச்சு
செந்தில் ஆப்செட்
தருமபுரி, செல்: 94434 64460

அனைத்து தொடர்புகளுக்கும்
மனோன்மணி
ஆசிரியர் - புது எழுத்து
39/20 ஜே கே சி தெரு
காவேரிப்பட்டிணம் 635 112
கிருஷ்ணகிரி மாவட்டம்
தொலைபேசி: 04343 252665,

அஞ்சலி

புரிசை கண்ணப்பத்தம்பிரான்
எட்வர்ட் சையத்
உஸ்தாத் விலாயத் கான்
வி.எம். தார்குண்டே

ஆண்டு சந்தா : ரூ. 200/-
மாணவர் சந்தா : ரூ.150/-
ஆயுள் சந்தா : ரூ. 5000/-
நிறுவன சந்தா : ரூ. 350/-

விளம்பர விகிதம்
2வது அட்டை: ரூ. 3000/-
3வது அட்டை: ரூ. 2500/-
பின் அட்டை: ரூ. 4000/-
முழுபக்கம்: ரூ. 500/-
அரை பக்கம்: ரூ. 300/-
வண்ண விளம்பரம் ரூ.10,000
(விளம்பரம் காரணங்கள் எதுவுமின்றி நிராகரிக்கப்படலாம்)

முன்அட்டை: சிவன் -கெமர் சிற்பம்

சிறப்பு விலை: ரூ.101
இணைப்பிதழுடன்

Published with financial Assistance from the Central Institute of Indian languages (Ministry of Human Resource Develapment, Department of Secondary and Higher Education, Govt. of India) Manasagangotri, Mysore - 570 006 vide sancetion lr.No. F. 53-10(2)/2003-2004/ LM/TAM/GRANT dated 29th August 2003under the Scheme of Grant-in-Aid L.M

நீலகண்டன்

கவிதைகள்



1.

சென்று கொண்டிருந்தது ஊர்
திரும்பிப் பார்க்க முடியாத தூரத்தில்
வந்து கொண்டிருந்தது பாதை
எங்கும் எப்போதும் ஒரே மாதிரியாகக்
காய்ந்து கொண்டிருக்கவில்லை சூரியன்
அன்பின் கைப்பள்ளத்தைப் போல் வானம்
எல்லோரின் மேலும் பதிந்திருக்க
ஓய்வற்றுப் பறந்து கொண்டிருந்த
ஒரு பறவை பூமியைக் கொத்திச்செல்ல
ஆட்கள் யாருமற்றுக் கதறிக் கொண்டிருந்த
நகரத்தின்மேல் ஓடிக்கொண்டிருந்தது ரதம்
வேலஞ் செடியின் நிழல் நீள்கிறது.
இடமும் இருப்புமற்று அலைந்து
கொண்டிருக்கும் கனவான்களே
காலமும் மொழியுமற்ற பிரதேசத்தில்
நமக்காக யாரோ ஒருத்தி
சிறுமணல் அள்ளிக்கொண்டிருக்கிறாள்
உங்கள் தலையை நீங்களே வெட்டும்
ஓவியத்தை வரைந்துகொண்டு
வாருங்கள் அன்பின் பரிசெனக்
கொடுத்து விடுவோம்.
0


2.

ஆறு அண்ணன்களைக் கொன்ற கள்ளத்தோழி
பிரசவிக்க நீலவால் மீன்தேவர்களிடம் சென்றது
அன்று அஸ்தமனத்திற்கு முன்பே ஊர் வெள்ளத்தில்
மிதக்க பல ஆண்டுகளாக

2

மழைகாணாத பூமி தாகித்த நாவுகளால் நீரைப்பருகியது
ஏர்க்காலும் உழவுக்கோலும் இரவு முழுவதும்
முணுமுணுத்துக் கொண்டிருக்க கிளம்பிஎழும்
மண்வாசனையில்
தேகத்தை புரளவிட்ட உழவனும் உழத்தியும் சந்தோசத்தைப்
பகிர்ந்துக் கொள்ள இரவு முழுவதும் புணர்ந்தார்கள்
சிதறிய விந்து பல ஆண்டுகளாக பொரிந்திடாமல்
மண் இடுக்குகளில் தங்கிவிட்டிருந்த
விதை தானியத்தின் மேல் விழ
எங்கும் பச்சைக் கோலம் பூண்டது பூமி
அந்த ஆண்டு செழுமையாகவே இருந்த மக்கள்
நீண்ட நாட்களாக திருமணமாகாமல் தங்கிவிட்டிருந்த
ஆண் பெண்களுக்கு திருமணமாக ஏற்பாடுகள் செய்தனர்
அண்ணன் கெடுத்ததாக கர்ப்பமான சின்னச்சிறுக்கி
வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய ஆற்றில்
ஒரு சிறு மணல் மறைவில் அமர்ந்து மீன்குஞ்சுகளை
பிரசவித்துக் கொண்டிருந்தாள்
ஆறெங்கும் மீன்குஞ்சுகள் நிறைந்திருக்க
நீலவால் மீன் அவற்றை அழைத்துச் சென்றது
நீரினுள்ளே உருமாறிக் கொண்டிருந்த சிறுக்கி
ஊர்மக்கள் கண்டுக் கொண்டிருந்த போதே
தங்கநிற மீனாகி நீலவால் மீனின் பின்னே நீந்தலானாள்
சமுத்திரத்தை நோக்கி எல்லாம் சென்றன
தங்கநிற மீன் அதன் கதையை மக்களுக்குச்
சொல்லிக்கொண்டே போக
அண்ணன்மார் ஒவ்வொருவரும் உயிர் பெற்று வந்தனர்
ஆறாவது அண்ணன் உயிர் பெறுவதற்கு முன்
சமுத்திரம் வந்துவிட அதன் வினோத உலகில்
ஆழ்ந்து போனாள்
காலதேவன் நாள்புத்தகத்தின் தீராத பக்கங்களைப் புரட்டினான்
ஆறாவதானவன் கல்லறையின் மேல் பல விதமான
பூக்கள் பூத்திருந்தன
பிறகொருநாள் அல்லது இப்போதும் தங்கநிறமீன்
கரைக்கு வருகிறது அதன் கதையைச் சொல்ல நினைக்கும்
இப்போது கேட்க யாருமில்லை
தங்கநிற மீன் கரைக்கு வரும்போதோ
உலகம் ஒரு பெரிய மாறுதலைக் கண்டது
அந்த மாறுதல் துயரமோ சந்தோசமோ
எதுவாக இருந்தாலும் அது நிகழும்போது
மீளமுடியாமல் அங்கே சிறிது காலம் எல்லோரும்
தங்கிவிடுகிறார்கள்.

0



எழுத்து 9

கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ்

சிறுகதை



செயற்கை ரோஜாக்கள்

இருள் பிரியாத விடியற்காலைப் பொழுதில் தன் வழியை உணர்ந்தவாறு, முந்தைய இரவு படுக்கையருகே தொங்கவிட்டிருந்த கைப்பகுதியற்ற உடையை அணிந்து கொண்டு டிரங்குப் பெட்டியில் பிரித்து அணியக்கூடிய சட்டைக் கைகளைத் துருவித் தேடினாள். பிறகு அதே அறையில் தூங்கிக் கொண்டிருந்த அவளது கண் தெரியாத பாட்டியை எழுப்பி விடாதிருக்கும் பொருட்டு சப்தம் செய்யாமலிருக்க முயன்றபடி கதவுகளுக்குப் பின்னாலும் சுவர் ஆணிகளிலும் தேடினாள். ஆனால் இருட்டுக்கு அவள் கண்கள் பழகிவிட்ட பின் அவள் பாட்டி ஏற்கனவே எழுந்து விட்டிருந்ததைக் கவனித்தாள். பிறகு அந்த சட்டைக் கைகள் எங்கே இருக்கின்றன என்று அவளிடம் கேட்பதற்காகச் சமயலறைக்குச் சென்றாள்.

"அவை குளியலறையில் இருக்கின்றன", அந்த பார்வையற்றவள் கூறினாள். "நான் நேற்று மதியம் அவற்றைத் துவைத்தேன்". அவை அங்கேதானிருந்தன, ஒரு கொடிக்கம்பியில் இரண்டு மரக்கிளிப்புகளில் பொருத்தப்பட்டு, இன்னும் ஈரமாக இருந்தன. மினா சமயலறைக்குச் சென்று அந்த சட்டைக் கைகளை அங்கிருந்த கணப்புக்கல் மீது பரத்தினாள். அவளுக்கு நேரெதிராக, எந்த இடத்தில் மருந்து மூலிகைச் செடிகள் கொண்ட பூந்தொட்டிகளின் வரிசை இருந்ததோ அந்த வராந்தாவின் கல் விளிம்பின் மேல் நிலை குத்திப் போன கண் பாவைகளுடன் பார்வையற்ற முதியவள் காபி கலக்கிக் கொண்டிருந்தாள்.

"மறுபடி ஒரு தடவை என் பொருட்களை எடுக்காதே", என்றாள் மினா. "வெய்யிலை நம்ப முடியாத நாட்கள் இவை."

பார்வையற்றவள் அந்தக் குரலை நோக்கித் தன் முகத்தைத் திருப்பினாள்.

"இது முதல் வெள்ளிக் கிழமை என்பதை நான் மறந்து விட்டேன்" என்றாள் அவள்.

காபி தயாராகி விட்டதா என்பதை ஒரு ஆழமான மூச்சிழுப்பில் சோதித்த பின் அந்தப் பாத்திரத்தை அடுப்பிலிருந்து இறக்கினாள்.

"ஒரு காகிதத்தை அடியில் போட்டுக் கொள், ஏனெனில் இந்தக் கற்கள் அழுக்காக இருக்கின்றன."

சுட்டு விரலால் அந்தக் கணப்புக் கற்களைத் தேய்த்துப் பார்த்தாள் மினா. அவை அசுத்தமாக இருந்தன. ஆனால் படிவமாய் கரிப்புகை படிந்த மேல்பாகத்தில் அழுந்த உரசாமல் போனால் அந்தச் சட்டைக் கைகள் அழுக்காகாது.

"அவை அழுக்கானால் நீதான் பொறுப்பு", என்றாள் மினா.

பார்வையற்ற முதியவள் தனக்கு ஒரு கோப்பை காபியை ஊற்றிக் கொண்டாள். "நீ கோபமாக இருக்கிறாய்" வராந்தாவை நோக்கி நாற்காலியை இழுத்துப் போட்டவாறு கூறினாள் அவள். "கோபமாக இருக்கும் போது ஒருவர் புதிய நன்மை பெறுவது தெய்வ நிந்தனை." உள் முற்றத்திலிருந்த ரோஜாச் செடிகளுக்கு எதிராக காபி அருந்துவதற்கு அமர்ந்து கொண்டாள். கூட்டுப் பிரார்த்தனை அறிவிப்புக்கான மூன்றாவது மணி அடித்த போது கணப்புக் கல்லிலிருந்து இன்னும் ஈரமாக இருந்த அந்த சட்டைக் கைகளை எடுத்தாள் மினா. ஆனாலும் அவற்றை அணிந்து கொண்டாள். மறைக்கப்படாத வெற்றுத் தோள்கள் தெரியும் உடையில் இருந்தால் பாதிரியார் ஏஞ்சல் அவளுக்குப் புதிய நன்மை தர மாட்டார். அவள் முகம் கழுவிக் கொள்ளவில்லை. முகத்தின் ரூஜ் தீற்றல்களை துண்டால் துடைத்துக் கொண்டு, அவள் அறையிலிருந்த சால்வை மற்றும் பைபிளை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினாள். கால் மணி நேரத்தில் திரும்பி வந்து விட்டாள்.

செடிகளுக்கு எதிரே அமர்ந்திருந்த அந்த பார்வையற்ற முதியவள் கூறினாள்.

மினா நேராகக் கழிவறைக்குச் சென்றாள். "நான் கூட்டுப் பிரார்த்தனைக்குச் செல்ல முடியாது," என்றாள். "என் சட்டைக் கைகள் ஈரமாகவும், உடை எல்லாம் சுருக்கமாகவும் இருக்கிறது. ஒரு அர்த்தமுள்ள பார்வை தன்னைத் தொடர்வதை அவள் உணர்ந்தாள்.

"முதல் வெள்ளி நீ கூட்டுப் பிரார்த்தனைக்குப் போக மாட்டாயா? ஆச்சரியப்பட்டாள் பார்வையற்றவள்.

அறையிலிருந்து திரும்பிய மினா அவளுக்காக ஒரு கோப்பை காபி ஊற்றிக் கொண்டு பார்வையற்றவளின் அருகில் வெள்ளையடிக்கப்பட்டிருந்த அந்தக் கதவு வழியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். ஆனால் அவளால் காபியை குடிக்க முடியவில்லை.

“நீ தான் காரணம்”, மந்தமான ஒரு வன்மத்துடன் தான் கண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் உணர்வுடன் முணுமுணுத்தாள் அவள்.

“அழுதுகொண்டிருக்கிறாய் நீ!” பார்வையற்றவள் வியந்தாள். ஒரிகேனோ (சமையலுக்கு பயன்படுத்தப்படும் மூலிகைக் கீரை) இருந்த பூந்தொட்டிக்கு அருகில் பூவாளியை வைத்து விட்டு உள் முற்றத்திற்குச் சென்றவள், மறுபடியும் கூறினாள், “நீ அழுது கொண்டிருக்கிறாய்!” நிமிர்ந்து உட்காரும் முன்னர் கோப்பையை தரையில் வைத்தாள் மினா.

“நான் கோபத்தால் அழுது கொண்டிருக்கிறேன்” அவள் கூறினாள், பாட்டியின் அருகில் நகர்ந்தவாறே, மேலும் கூறினாள், “நீ பாவமன்னிப்பு கேட்கச் செல்ல வேண்டும், ஏனெனில் நீதான் நான் முதல் வெள்ளியின் புதிய நன்மை இழந்து விடக் காரணம்.”

மினா அந்த படுக்கையறைக் கதவை மூடுவதற்காக அசைவின்றிக் காத்திருந்த பின், பார்வையற்ற முதியவள், தொடப்பட்டிராத அந்தக் கோப்பையின் துண்டுப்பகுதி தரையில் தட்டுப்படும் வரை வராந்தாவின் ஒரு கோடிக்கு நடந்தவள் சற்று நிறுத்தி குனிந்தாள். மண் தொட்டியில் காபியை கொட்டிவிட்டு தொடர்ந்தாள்:

“ஆண்டவருக்குத் தெரியும் நான் தெளிந்த மனசாட்சி உடையவள் என”

படுக்கையறையிலிருந்து மினாவின் தாயார் வெளியே வந்தாள்.

“யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் நீ?” என்று கேட்டாள்.

“யாரிடமும் இல்லை”, பார்வையற்றவள் சொன்னாள். “நான் ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேனே என் புத்தி தடுமாறிக் கொண்டிருக்கிறது என்று”

தன் அறையின் பாதுகாப்பில் இருந்தவாறு, மினா உள்பாடி பட்டன்களை கழற்றி சேஃப்டி பின்னில் கோர்த்திருந்த மூன்று சிறிய சாவிகளை எடுத்தாள். அவற்றில் ஒன்றைக் கொண்டு துணி அலமாரியின் கீழ் இழுப்பறையைத் திறந்து ஒரு சிறிய மரப்பெட்டியை எடுத்தாள். அதை வேறு ஒரு சாவியால் திறந்தாள். உள்ளே ஒரு ரப்பர் பேண்டினால் சுற்றப்பட்ட, வண்ணத்தாள்களில் எழுதப்பட்ட ஒரு கற்றை கடிதங்கள் இருந்தன. அவற்றைத் தனது உள்பாடிக்குள் மறைத்து கொண்டு, அந்தச் சின்னப் பெட்டியை அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு, இழுப்பறையைப் பூட்டினாள். பிறகு கழிவறைக்குச் சென்று அந்தக் கடிதங்களை வீசியடித்தாள்.

மினா சமையலறைக்குள் வந்தபோது, “நீ தேவாலயத்தில் இருப்பாய் என்றல்லவா நான் நினைத்தேன்,” அவள் தாயார் கூறினாள்

“அவளால் போக முடியவில்லை”, பார்வையற்றவள் இடைமறித்துக் கூறினாள். “நான் முதல் வெள்ளி என்பதை மறந்து போய் நேற்று மதியம் அந்தச் சட்டைக் கைகளைத் துவைத்து விட்டேன்”

“அவை இன்னும் ஈரமாக இருக்கின்றன”, மினா முணுமுணுத்தாள்.

“நான் இப்போதெல்லாம் கடுமையாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது” என்றாள் பார்வையற்ற முதியவள்.

புது எழுத்து 9

“ஈஸ்டருக்கு ஒரு நூற்று ஐம்பது டஜன் ரோஜாக்களை நான் முடித்துக் கொடுக்க வேண்டியுள்ளது”, மினா கூறினாள்.

சீக்கிரமாகவே சூரியன் வெதுவெதுக்கத் தொடங்கியது. ஏழு மணிக்கு முன்னரே மினா காகித ரோஜாக்கடையை வரவேற்பறையில் அமைத்தாள்: ஒரு கூடை நிறைய கிரேப் பேப்பர், இரண்டு கத்திரிக் கோல்கள், ஒரு நூல் கண்டு, ஒரு மண் சட்டியில் பசை. ஒரு நொடி கழித்து தன் கையில் ஒரு அட்டைப் பெட்டியுடன் வந்து சேர்ந்த ட்ரினிடாட் ஏன் அவள் (மினா) கூட்டுப் பிரார்த்தனைக்குச் செல்லவில்லை என்று கேட்டாள்.

“என்னிடம் சட்டைக்கைகள் இல்லை” என்றாள் மினா.

“எவர் வேண்டுமானாலும் உனக்குக் கடனாகக் கொடுத்திருக்க முடியும்” ட்ரினிடாட் கூறினாள். பூ இதழ்கள் வைத்திருந்த கூடைக்கு அருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள் அவள்.

“நான் மிகவும் தாமதமாகியிருந்தேன்” மினா கூறினாள். ஒரு ரோஜா செய்து முடித்தாள். பிறகு கத்திரிக் கோலின் உதவியுடன் பூ இதழ்களில் சுருக்கம் வைக்க அந்தக் கூடையை தன்னருகே இழுத்துக் கொண்டாள். ட்ரினிடாட் அந்த அட்டைப் பெட்டியை தரையில் வைத்து விட்டுத் தானும் அந்த வேலையில் இணைந்து கொண்டாள்.

மினா அந்தப் பெட்டியைப் பார்த்தாள்.

“ஷூக்கள் வாங்கினாயா நீ?” என்று கேட்டாள்.

“செத்த எலிகள் அவை”, ட்ரினிடாட் கூறினாள்.

சுருக்கம் வைத்து காகிதப்பூ இதழ்கள் செய்வதில் ட்ரினிடாட் தேர்ந்தவள் என்பதால் மினா, பச்சை நிறத்தாள்கள் சுற்றிய கம்பிக் காம்புகள் செய்வதில் நேரம் செலவழித்தாள். எளிய கிராமாந்திர வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்களாலும், குடும்பப் புகைப்படங்களாலும் அழகு படுத்தப்பட்டிருந்த அந்த வரவேற்பறையில் சூரியன் முன்னேறிக் கொண்டிருந்ததை கவனியாது, அமைதியாக அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். காம்புகள் செய்து முடித்தவுடன் மினா ட்ரினிடாடை நோக்கித் திரும்பினாள் வெறுமையில் முடிவது போன்ற ஒரு முகத்துடன். மெச்சத் தகுந்த வகையில் சுத்தமாக, அவளது விரலிடுக்கில் இருந்த காகித இதழ் நுனியை நகர்த்தி விடாமல் சுருக்கம் வைத்துக் கொண்டிருந்தாள் ட்ரினிடாட், கால்களை நெருக்கிக் கொண்டு. ஆண்களுக்கானது போன்ற அவளுடைய ஷூக்களை மினா நோட்டம் விட்டாள். தன் தலையை உயர்த்தாது ட்ரினிடாட் அந்தப் பார்வையைத் தவிர்த்தாள். கால்களைப் பின்னுக்கு இழுக்காமல் வேலை செய்வதை நிறுத்தினாள்.

“என்ன விஷயம்?” அவள் கேட்டாள்.

மினா அவளை நோக்கி சாய்ந்தாள்.

“அவன் போய் விட்டான்,” அவள் சொன்னாள். ட்ரினிடாட் கத்திரிக்கோல்களை மடியில் நழுவவிட்டாள்.

“இருக்காது”

புது எழுத்து 9


அயர்லாந்தின் போராட்டம்:
தேசியமும் சோசலிசமும்



மரணத்துள் வாழ்வோம்



தெபாகா எழுச்சி


வேற்றாகி நின்ற வெளி


பெட்ரோ பரமோ


பயங்கரவாதம்:
அகமும் புறமும்




ஒடுக்கப்பட்டவர்கள் :
விடுதலையின் வடிவங்கள்

"அவன் போய் விட்டான்," திரும்பச் சொன்னாள் மினா. இமைக்காது அவளைப் பார்த்தாள் ட்ரினிடாட். செங்குத்தாய் ஒரு நெற்றிச்சுருக்கம் அவள் புருவ முடிச்சைப் பிரித்தது.

"சரி, இப்போது?," அவள் கேட்டாள்.

மினா நிதானமான குரலில் பதில் சொன்னாள் "இப்போது ஏதுமில்லை". ட்ரினிடாட் பத்து மணிக்கு முன்னதாகவே விடை பெற்றுக் கொண்டாள். அவள் அருகாமை தந்த பாரத்தினின்று விடுபட்டவளாய் ஒரு நிமிடம் அவளை நிறுத்தினாள் அந்த செத்த எலிகளை கழிவறைக்குள் எறிந்துவிட. அந்தப் பார்வையற்ற பெண்மணி ரோஜாப் புதரை நறுக்கி விட்டுக் கொண்டிருந்தாள் .

அவளைக் கடந்து செல்கையில், "பந்தயம், இந்தப் பெட்டியில் நான் வைத்திருப்பது என்னவென்று உனக்குத் தெரியாது , என்றாள் மினா.

அந்த எலிகளை குலுக்கினாள் அவள்.

பார்வையற்ற முதியவள் கவனம் செலுத்தி, "மறுபடியும் அதைக் குலுக்கு" என்றாள். மீண்டும் அசைத்தாள் மினா. ஆனால், தன் காது மடல் மீது சுட்டுவிரலை அழுத்திக் கொண்டு மூன்றாம் முறையாகக் கேட்ட பிறகும் கூட அவை என்ன என்பதை பார்வையற்றவளால் கண்டு பிடிக்க முடியவில்லை.

"தேவாலயத்தின் எலிப்பொறிகளில் நேற்றிரவு பிடிக்கப்பட்ட எலிகள்தான் அவை" மினா சொன்னாள்.

அவள் திரும்ப வந்ததும் ஏதும் பேசாது அந்தப் பார்வையற்ற முதியவளைக் கடந்து சென்றாள். ஆனால் பார்வையற்றவள் அவளைப் பின் தொடர்ந்தாள். வரவேற்பறையை அடைந்ததும், மூடியிருந்த ஜன்னலுக்கு அடுத்து, அந்த காகித ரோஜாக்களை செய்து முடித்தபடி இருந்தாள், தனிமையில்.

"மினா" என்றாள் பார்வையற்றவள். "நீ மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால் முன்பின் தெரியாதவர்களிடம் மனந்திறந்து எதையும் சொல்லாதே."

எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தாள் மினா. அவளுக்கு நேரெதிராக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள், வேலையில் அவளுக்கு உதவ முற்பட்டபோது மினா அவளைத் தடுத்தாள்.

"நீ பதற்றத்திலிருக்கிறாய்," பார்வையற்றவள் கூறினாள்.

"நீ ஏன் கூட்டுப் பிரார்த்தனைக்குச் செல்லவில்லை?" அவள் கேட்டாள்.

"உனக்கு நன்றாகத் தெரியும் வேறு எவரையும் விட".

"அந்த சட்டைக் கைகள் காரணமாக இருந்தால் வீட்டை விட்டு கிளம்ப யத்தனித்திருக்க மாட்டாய்" என்றாள் பார்வையற்றவள். "உனக்கு ஏதோ ஏமாற்றத்தைத் தந்த யாரோ ஒருவர் வழியில் உனக்காகக் காத்துக் கொண்டிருந்திருக்கலாம்."

கண்ணுக்குப் புலப்படாத கண்ணாடிப் பலகையைத் துடைத்து விடும் பாவனையில் அவள் பாட்டியின் கண்கள் முன்னால் கைகளைக் கொண்டு சென்றாள் மினா.

"நீ ஒரு சூனியக்காரி," அவள் கூறினாள். பார்வையற்றவள் கூறினாள். "இன்று காலை நீ இரண்டு தடவை கழிவறைக்குச் சென்றாய். ஒரு தடவைக்கு மேல் எப்போதும் நீ சென்றதில்லை."

மினா தொடர்ந்து ரோஜாக்கள் செய்தபடி இருந்தாள்.

"அந்தத் துணி அலமாரியின் இழுப்பறையில் நீ எதை ஒளித்து வைத்திருக்கிறாயோ அதை என்னிடம் காட்டத் துணிவிருக்கிறதா உனக்கு?" என்று கேட்டாள் பார்வையற்றவள்.

அவசரப்படாமல் அந்த ரோஜாவை ஜன்னல் சட்டத்தில் செருகி விட்டு, மூன்று சிறிய சாவிகளை அவளது உள்பாடிக்குள்ளிருந்து வெளியே எடுத்தாள் மினா. பிறகு அவற்றை பார்வையற்ற முதியவள் கைகளில் வைத்தாள். அந்தக் கைகளை அவளே மூடினாள்.

"போ, உன் கண்களால் நீயே பார்த்துக் கொள்", அவள் கூறினாள்.

அந்தச் சிறிய சாவிகளை விரல் நுனி கொண்டு சோதித்துப் பார்த்தாள் பார்வையற்றவள்.

"என் கண்களால் கழிவறையின் கீழே பார்க்க முடியாது".

வித்தியாசமான ஒரு உணர்வினை அடைந்த மினா தன் தலையை உயர்த்தினாள். அவளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறாள் அவள் என்பது கூட தெரிந்திருக்கிறது அந்தப் பார்வையற்றவளுக்கு என்பதை உணர்ந்தாள் மினா.

"நான் என்ன செய்கிறேன் என்பதில் நீ மிகவும் விருப்பம் காட்டினால் உன்னை அந்தக் கழிவறையின் கீழே தள்ளி விட்டுக் கொள்." அவள் சொன்னாள்.

இந்த இடைமறித்தலை பார்வையற்றவள் லட்சியம் செய்யவில்லை.

"எப்போதும் விடியற்காலை வரை நீ படுக்கையில் எழுதிக் கொண்டிருக்கிறாய்", அவள் சொன்னாள்.

"நீதான் விளக்கை அணைப்பாய்", மினா சொன்னாள்.

"உடனே அந்த டார்ச் விளக்கை நீ ஏற்றுவாய்."

"நீ எழுதிக் கொண்டிருக்கிறாய் என்பதை உன் சுவாசத்தை வைத்தே என்னால் கூற முடியும்", என்றாள் பார்வையற்றவள்.

அமைதியாக இருக்க முயற்சி செய்தாள் மினா.

"நல்லது" தலையை உயர்த்தாமல் சொன்னாள் அவள்.

"அது அப்படித்தான் என்று வைத்துக் கொண்டாலும் அதில் என்ன விசேஷம் இருக்கிறது?"

"ஒன்றுமில்லை", பார்வையற்றவள் பதில் சொன்னாள். "அது உன்னை ஒரு முதல் வெள்ளி புதிய நன்மை இழந்து விட செய்திருக்கிறது என்பது மட்டுமே."

இரண்டு கைகளிலும் அந்த நூல் கண்டு, கத்திரிக்கோல்கள், முடிக்கப்பட்டிராத காம்புகள் மற்றும் ரோஜாக்களை எடுத்துக் கொண்டாள். அந்தக் கூடையில் எல்லாவற்றையும் வைத்து விட்டு பார்வையற்றவளை நோக்கித் முகம் திருப்பினாள். "எதற்காக நான் கழிவறைக்குச் சென்றேன் என்பதை உன்னிடம் கூற வேண்டும் என்று நீ விரும்புகிறாயா?" என்றாள் மினா. ஒரு கல்பெஞ்சில் இருவரும் இருந்தனர். தனது கேள்விக்கு மினாவே பதிலளிக்கும் வரையில்:

"நான் மலங்கழிக்கச் சென்றேன்"

பார்வையற்ற முதியவள் மூன்று சிறிய சாவிகளையும் கூடைக்குள் எறிந்தாள். "இது ஒரு நல்ல சாக்காக அமையலாம்", அவள் சமையலறைக்குச் சென்றவாறே முணுமுணுத்தாள். "நீ என்னை நம்ப வைத்திருக்க முடியும் ஒரு வேளை இதுதான் உன் வாழ்நாளில் முதல் முறையாக நான் கேட்க நீ செய்யும் சத்தியம் என்ற பட்சத்தில்."

மினாவின் தாயார் எதிர்ப்புறமிருந்த நடைபாதையிலிருந்து வந்து கொண்டிருந்தாள், கை நிறைய முட்கள் நிறைந்த மலர்க் கொத்துக்களுடன்

"என்ன நடந்து கொண்டிருக்கிறது?" அவள் கேட்டாள்.


"புத்தி பேதலித்திருக்கிறது எனக்கு", பார்வையற்ற முதியவள் கூறினாள். "ஆனால் கற்களை எடுத்து நான் வீசாதிருக்கும் வரை என்னைப் பைத்தியக்கார விடுதிக்கு அனுப்புவதைப் பற்றி மேலோட்டமாக யோசித்துப் பார்த்ததில்லை நீ."

ஆங்கிலத்திலிருந்து தமிழில் **ரெங்கநாயகி**

Artificial Roses, from Gabriel Garcia Marquez's **Collected Stories**. Translated from the Spanish by Gregory Rabassa and J.S.Bernstein.

சு. இராஜவேலு

கட்டுரை



பிராமி பண்டைத்தமிழ் எழுத்து வரி வடிவமே

இந்தியாவில் கிடைத்துள்ள தொன்மையான எழுத்து வரிவடிவங்களில் முதன்மையானதாக விளங்குவது 'பிராமி' ஆகும். இவ்வெழுத்து வடஇந்தியாவில் பேரரசன் அசோகனின் காலத்தில் முதன்முதலாகப் பயன்பாட்டில் வந்தமையால் இதனை 'அசோகன் பிராமி' என அறிஞர்கள் பெயரிட்டனர். ஆனால் தமிழ்நாட்டில் இவ்வெழுத்துமுறை மாறுபட்ட தன்மையைக் கொண்டு விளங்குவதால் இதனை 'தமிழ்-பிராமி' என வேறுபடுத்திக் கூறி வருகின்றனர்.

சமண சமய நூல்களான 'சமயவங்கசுதர்' 'பண்ணவான சுதர்' ஆகியன பண்டைய இந்தியாவின் பதினெட்டு வகையான எழுத்து வரிவடிவங்கள் மக்களின் புழக்கத்தில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றன. இதே போன்று பௌத்த நூலான 'இலலித விஸ்தாரம்', 64 வகையான எழுத்துக்கள் இந்தியாவில் புழக்கத்தில் இருந்துள்ளவையைப் பட்டியலிடுகிறது. இந்தப் பட்டியலில் பாம்பி எனப்படும் பிராமியும், தாமிழி எனப்படும் தமிழும் அடங்கும். பிராமி என்பது அசோகனின் பிராமியையும் 'தாமிழி' என்பது தமிழ் எழுத்து வரிவடிவத்தையும் குறிக்கும் என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை. இந்நூல் பிராகிருத மொழியில் எழுதப்பட்டதால் தமிழ் எழுத்து வரிவடிவத்தைத் தாமிழி எனக் குறித்துள்ளது.


தமிழ்நாட்டில் காணப்படும் தொன்மையான எழுத்து முறையை 'தமிழ் பிராமி' என அறிஞர்கள் குறித்து வருகின்றனர். மேற்கூறப்பட்ட சமண பௌத்த நூல்களிலேயே தமிழ் எழுத்து வடிவம் கூறப்படுவதால் பிராமியை 'பண்டைத் தமிழ்' எழுத்து என்றே கூறுவது சாலச் சிறந்தது ஆகும். தமிழ்

மாங்குளம் கல்வெட்டு



(இ)த்தாஅ
நெடுஞ்சழியன் பணஅன்
கடல்அன் வழுத்தி

புகளூர் கல்வெட்டு



த அமணன் யாற்றூர் செங்காயபன் உறை
கோ ஆதன் செல்லிரும்பொறை மகன்
பெருங்கடுங்கோன் மகன் இளங்
கடுங்கோ (இ) ளங்கோ ஆக அறுத்த கல்

இலக்கியங்களை எழுதப் உயன்படுத்தப்பட்ட எழுத்து தமிழாகவே இருந்திருத்தல் வேண்டும். மேலும் இவ்விலக்கியங்களில் 'பிராமி' எழுத்து முறைப் பற்றி எவ்வகை குறிப்புகளும் காணப்படவில்லை. பிற்காலத்தில்தான் இப்பெயர் பயன்பாட்டிற்கு வந்துள்ளமையால் அறிஞர்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற தொன்மையான எழுத்து வகைக்கு 'தமிழ் பிராமி' எனத் தவறாகப் பெயர் சூட்டினர். இக்கூற்றை திரு.கே.ஜி. கிருஷ்ணன் என்ற கல்வெட்டறிஞரும் இரா. நாகசாமி, நடன காசிநாதன் ஆகியோரும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

தமிழ் நாட்டைத் தவிர இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் அசோக மன்னன் வெளியிட்ட கல்வெட்டுகள் பரவலாகக் கிடைக்கின்றன. (கி.மு.3ஆம் நூற்றாண்டு) இம்மன்னனின் கல்வெட்டுகள் தென்னிந்தியாவில் கர்நாடகப் பகுதியில் 'மாஸ்கி' என்ற ஊர் வரை உள்ளன. தமிழ்நாட்டு அசோகனின் கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும், சத்திய புத்திரர் என்னும் அதியமான் மரபினர் ஆட்சி புரிந்து வந்தனர் என்ற குறிப்பு காணப்படுகிறது மேலும் இம்மன்னர்கள் கிரேக்க மன்னன் இரண்டாம் ஆண்டியோகசு, எகிப்திய மன்னன் இரண்டாம் தாலமி, எபிரசை ஆண்ட மாசிடோனிய மன்னன் அலெச்சாந்தர் ஆகியோருக்கு இணையாணவர்களாகவும் அசோகனின் காலத்தில் தனித்த ஆளுமையும் வலுவான ஆட்சியாளர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

அசோக மன்னனின் காலத்தினவாகவும் அதற்கு முற்பட்டனவாகவும் கருதப்படும் பல கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. ஆனால் அறிஞர்கள் பலர் இக்கல்வெட்டுகள் யாவும் அசோகனுடைய 'பிராமிக்கு

பிற்பட்டவை எனக் கூறி வந்தனர். இது அடிப்படையில் தவறு என்பதையும் அசோகனுடைய பிராமிக்கல்வெட்டு எழுத்துகள் தமிழ் எழுத்துகளில் இருந்துதான் பிறந்தன என்பதும் 'அசோகனின் பிராமிக்கும்' முற்பட்ட வடிவங்களே தமிழ் வரிவடிவங்கள் என்பதுதான் உண்மை.

தமிழ்நாட்டில் பண்டைத் தமிழ் எழுத்துகள் கொண்ட கல்வெட்டுகள் ஏறக்குறைய பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் கிடைத்துள்ளன. 28 இடங்களில் காணப்படும் இக்கல்வெட்டுகள் முற்காலத்தில் சமணத்துறவிகள் வாழ்ந்த குகைத் தளங்களில் பெருவாரியாகக் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் குறிப்பாக இயற்கையாக அமைந்த குகைகளின் கூரைப்பகுதிகளிலும் மேற்கட்டிகளிலும் சமண முனிவர்கள் தங்கி இளைப்பாறிய கற்படுக்கைகளிலும் சுவர்ப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர, தமிழ்நாட்டில் 20 முக்கிய நகரங்களில் நடந்த அகழ்வாய்வுகள் மற்றும் களஆய்வுகளில் கிடைத்த பானை ஓடுகளிலும், அக்காலத்திய முக்கிய மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகளிலும், முத்திரைகளிலும் பொன் மற்றும் வெள்ளி மோதிரங்களிலும் இவ்வெழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டைத் தவிர மத்தியதரைக்கடல் பகுதிகளில் அமைந்துள்ள 'குவாசீர் அல் காதீம்' மற்றும் 'பெரினீகே' துறைமுக நகரங்களின் அகழ்வாய்வுகளிலும் இலங்கையில் பூநகரில் நடந்த ஆய்வுகளிலும் தமிழ் எழுத்துப் பொறித்த மட்கல ஓடுகள் கிடைத்துள்ளமை இதன் பழமையையும் பரவலையும் காட்டும்.


தமிழ்நாட்டில் 1882 ஆம் ஆண்டு முதன் முதலாக இராபர்ட் சீவெல் என்னும் அறிஞர் மாங்குளம் என்ற இடத்தில் தொன்மையான தமிழ்க் கல்வெட்டைக் கண்டுபிடித்தார். இக்கல்வெட்டின் சிறப்புத்தன்மையை இவ்வறிஞர் அறியவில்லை. இவருக்குப்பின் கேரளப் பகுதியில் எடக்கல் என்ற இடத்தில் பிறிதொரு கல்வெட்டை அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் 1894 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். வெங்கோபராவ் என்னும் அறிஞர் மதுரைக்கு அருகில் கீழவளவு என்னும் இடத்தில் 1903 ஆம் ஆண்டு மற்றொரு தொன்மைவாய்ந்த கல்வெட்டைக் கண்டுபிடித்தார். இவர்களைத் தொடர்ந்து பண்டைத் தமிழ் கல்வெட்டுகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இதுவரை தமிழ்நாடு கேரள மாநிலங்களில் முப்பது இடங்களில் ஏறக்குறைய 89 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்தின் தோற்றம் குறித்தும் அதன் காலம் குறித்தும் பல்வேறு கருத்துகள் அறிஞர்களிடம் நிலவி வருகின்றன. தமிழ் எழுத்து வட இந்தியாவில் இருந்து அசோகனின் பிராமியிலிருந்து பெறப்பட்டதே என்ற கருத்தும் , தமிழ் எழுத்து தமிழ்நாட்டில் தோன்றியதே என்ற மற்றொரு கருத்தும் அறிஞர்களிடம் இன்று பேசப்பட்டு வருகின்றன. தமிழ் எழுத்து தமிழ்நாட்டில் தோன்றியது; அசோகன் பிராமிக்கும் முற்பட்டது. அசோகனின் பிராமியே தமிழகத்திலிருந்து தோன்றியது என்ற கருதுகோளின் அடிப்படையில் இக்கட்டுரை ஆய்வு செய்த அறிஞர்களைச் சற்று விளக்குவது பயனுடையதாக அமையும்.


எட்வர்ட் தாமஸ் என்ற அறிஞர் 'பிராமி' எழுத்து தமிழ்நாட்டில்

புது எழுத்து 1





விந்தை ஊர்
சைய் அளன்
செவிய்



முத்துப்பட்டி கல்வெட்டு


தோன்றிய எழுத்து வகையாகும் என்ற கருத்தை முதன் முதலில் (நியுமிஸ்மேடிக் கிராணிகல்ஸ் (1883 நெ III)) என்ற ஆய்வு நூலில் குறிப்பிட்டார். தமிழின் தொன்மை, இலக்கிய வளம் ஆகியவற்றின் அடிப்படையில் இவர் இக்கருத்தைக் கூறினார்.

பண்டைத் தமிழ் எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலக்கட்டத்தில் அவ்வெழுத்துக்களைப் படிப்பதற்கு அறிஞர்கள் பெரிதும் முயன்றனர். திரு. வெங்கோபராவ் என்னும் அறிஞர் அதை தமிழே அல்ல பாகத மொழி (பிராகிருத மொழி) எனக் கூறினார். அதனை ஆய்வு செய்த அறிஞர்களான திரு. எச். கிருஷ்ணசாஸ்திரி மற்றும் கே.வி. சுப்பிரமணிய அய்யர் ஆகியோர் தமிழுக்கே உரித்தான சிறப்பு எழுத்துக்களை இக்கல்வெட்டுகளில் கண்டுபிடித்து இக்கல்வெட்டுக்கள் யாவும் தமிழே என உலகிற்கு உணர்த்தினர்.


இவர்களை அடுத்து வந்த திரு. தி.நா. சுப்பிரமணியன் என்ற அறிஞர் தமிழ் எழுத்திற்கும் அசோகனுடைய பிராமி எழுத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும் இக்கல்வெட்டுகளின் காலம் அசோக மன்னனின் காலம் அல்லது அதற்குச் சற்று முற்பட்ட காலம் எனவும் கூறினார்.

அண்மை காலங்களில் திரு நடன காசிநாதன் திரு. பி.ஆர் சீனிவாசன் போன்றோர் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் தமிழ்நாட்டில் தோன்றியவையே எனக் கூறி வருகின்றார்.

பண்டைத் தமிழ் எழுத்துக்கள் வட இந்திய 'அசோகன் பிராமி 'யில் இருந்து தோன்றியவை என்ற கருத்தைப் பல்வேறு அறிஞர்கள் கூறியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பேராசிரியர் டி.வி. மகாலிங்கம், திரு. ஐராவதம் மகாதேவன் போன்றோர் ஆவர். பேராசிரியர்



திருப்பரங்குன்றம் கல்வெட்டு



எருகாடூர் ஈழ குடும்பிகன் 'பொலாலையன்'

டி.வி. மகாலிங்கம் அவர்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற பண்டைத் தமிழ் எழுத்துக்களைக் குறித்து விரிவாக எழுதி உள்ள நூலில் பல அறிஞர்களின் வாசிப்புகளையும் நூலாசிரியரின் வாசிப்பையும் ஒருங்கே கொடுத்துள்ளார். இவற்றுள் பல வாசிப்புகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவாகக் காணப்படவில்லை. இவர் அசோகன் பிராமியிலிருந்து தோன்றிய எழுத்துமுறை 'தமிழ்' எனக் கூறுகின்றார்.

அண்மைக் காலம் வரை கிடைத்த கல்வெட்டுக்கள் முழுவதையும் ஆய்வு செய்து பலரும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் கல்வெட்டுப் பாடங்களைச் செம்மை செய்த மற்றோர் அறிஞரான திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ் எழுத்து அசோகனின் பிராமியிலிருந்து தோன்றியது என்றும் இதன் காலம் கி.மு. 200 என்றும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியக் கல்வெட்டுத்துறையின் மேலாண் இயக்குநர் முனைவர் கே.வி. இரமேஷ் என்பவர் தமிழ் எழுத்துக்கள் அசோகனின் பிராமி எழுத்திற்கும் காலத்தால் முற்பட்டவை என்றும் அசோக மன்னருக்கு முன்பு ஆட்சிபுரிந்த சந்திரகுப்த மௌரியர் தமது இறுதிக் காலத்தில் கர்நாடகப் பகுதியில் சரவணபெலகோலாவிற்கு வருகை புரிந்த பொழுது அவருடன் வந்த வடநாட்டு சமணத் துறவிகள் மூலம் தமிழ்நாட்டில் இவ்வெழுத்து பரவியது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இத்தமிழ் கல்வெட்டுக்களின் காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டு என இவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த அறிஞர்களின் கருத்துக்களை மேலும் ஆய்வு செய்வோமானால் தமிழ் எழுத்துக்களின் தனித்தன்மையையும் இவ்வெழுத்துக்களிலிருந்தே அசோகனின் பிராமி எழுத்துக்கள் தோன்றியுள்ளன என்பதையும் தமிழ் எழுத்துக்களின் காலம் அசோகனின்

பிராமி எழுத்துக்களுக்கும் முற்பட்டது என்பதையும் அறியலாம்.


வருக்கம் இல்லாத் தன்மை:


தமிழ் அல்லது தமிழி எழுத்திற்கும் அசோகன் பிராமி எழுத்திற்கும் உள்ள மிகப்பெரிய வேறுபாடு வருக்க எழுத்துகள் வேறுபாடு. தமிழ் எழுத்தில் வருக்க எழுத்துக்கள் இல்லை. அசோகனுடைய பிராமியில் க,ச,ட,த,ப ஆகிய எழுத்துக்களின் வருக்கங்கள் காணப்படுகின்றன. தமிழ் மொழியில் வருக்கப் பலுக்கல்கள் பேச்சுவழக்கில் ஒலிப்பில் காணப்படுகின்றன. ஆனால் எழுதும்பொழுது ஓர் எழுத்தே பயன்படுகிறது. அசோக பிராமியில் அந்தந்த வருக்க ஒலிக்கு ஏற்றவாறு எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்மொழிப் பலுக்கலில் ஒலி வேறுபாடு பேசும் பொழுது மாற்றி ஒலிக்கப்படுகிறது. எழுதும் பொழுது ஓர் எழுத்தே அதனை நிறைவு செய்கிறது. அசோகன் பிராமியிலிருந்து தமிழ் எழுத்துக்கள் தோன்றி இருந்தால் இந்த ஒலி வேறுபாட்டிற்கு ஏற்ப ஏற்கனவே வழக்கிலுள்ள அந்தந்த வருக்க எழுத்துக்களையும் தமிழர்கள் பயன்படுத்தி இருத்தல் வேண்டும். அதற்கு மாறாக 'க' என்ற மூல எழுத்து இடத்திற்கு ஏற்ப ஒலி வேறுபாடு அடைவதைத் தமிழின் நடைமுறையில் காணமுடிகின்றது. இவ்வாறே ச,ட,த,ப போன்ற வல்லெழுத்துக்களும் இடத்திற்கு ஏற்ப ஒலி வேறுபாடு அடைகின்றன. எழுத்துக்களே இல்லாது இருந்த தமிழ்மொழிக்கு அனைத்து வருக்க எழுத்துக்களும் தேவையாக இருக்கும் பொழுது அசோகன் பிராமியிலிருந்து எடுக்கப்பட்ட க,ச,ட,ப என்னும் மூல எழுத்துக்களை மட்டும் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது. மாறாக படிநிலை வளர்ச்சி அடிப்படையில் மூல எழுத்திலிருந்துதான் வருக்க இன எழுத்துக்கள் தோன்றியிருக்க வேண்டும். இதன் அடிப்படையில் தமிழ் எழுத்துக்களில் இருந்தே அசோகனுடைய பிராமி எழுத்துக்கள் தோன்றியமை நன்கு விளங்கும். மேலும் தமிழ்க் கல்வெட்டுக்களில் வருக்கப் பலுக்கல்கள் உள்ள சொற்கள் பல மலிந்துள்ளன. எடுத்துக்காட்டாக கடலன், நெடுஞ்செழியன், நிகமம் போன்ற சில சொற்களை இங்குச் சுட்டலாம். கடலன் என்ற சொல்லில் 'க'வை அடுத்துவரும் ட ஒலி வலிந்து காணமுடிகிறது. ஆங்கிலத்தில் இதனை எழுதும்பொழுது Kada என்றே ஒலிப்பலுக்கலுக்கு ஏற்ப எழுதுவர். அதே போன்று நெடுஞ்செழியன் என்பதை Nedu என்றே எழுதுவர். நிகமம் என்ற சொல்லில் 'க' என்ற எழுத்து ஒலி வலுப்பெற்றுக் காணப்படும். இச்சொற்கள் யாவும் இனச்சார்பு ஒலி அமைப்பு பெற்றிருப்பினும் தமிழ் எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன. அசோகன் பிராமியிலிருந்து தமிழ் தோன்றி இருப்பின் வருக்க ஒலி அமைப்பு எழுத்துக்களும் தமிழகத்தில் புழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும் அல்லவா? அதற்கு மாறாக மூல எழுத்திலிருந்து அசோகன் காலத்தில் வருக்க எழுத்துக்களை உருவாக்கினர் என்பதே பொருத்தமுடையதாகும்.

புள்ளி இல்லாத் தன்மை:

பண்டைத் தமிழ் கல்வெட்டுகளைப் படிப்பதற்கு அதன் மெய்

தெரிந்திருத்தல் வேண்டும். காரணம் தொடக்கக் காலத்தில் மெய் எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களும் ஒரே குறியீட்டில் எழுதப்பட்டன. 'க' என்ற உயிர்மெய் எழுத்தும் 'க்' என்ற மெய் எழுத்தும் + என்ற ஒரே வரிவடிவம் பெற்றிருந்தன. இதனை அச்சொல்லின் பொருளிற்கு ஏற்றவாறு படிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக 'அக்கம்' என்ற சொல்லைப் பண்டைத் தமிழ் எழுத்தில் எழுத வேண்டுமாயின்  என எழுதவேண்டும். முதல் எழுத்தை அடுத்து உள்ள இரண்டாவது எழுத்து 'க்' என்ற மெய் எழுத்தையும் அதற்கு அடுத்து வரும் குறியீடு 'க' என்ற உயிர்மெய் எழுத்தையும் குறிக்கும். பொருளறிந்தே இவ்வெழுத்துக்களைப் படிக்க வேண்டும்.

இவ்விடர்ப்பாடு அசோகன் பிராமியில் காணப்படவில்லை. மெய் எழுத்தையும் உயிர்மெய் எழுத்தையும் வேறுபடுத்திக்காட்ட இக்காலத்தில் தேவநாகரியில் பயன்படுத்தப்படும் கூட்டெழுத்து முறையையே அசோகன் காலத்திலும் பயன்படுத்தி உள்ளனர். மேலும் மிகக் குறைந்த அளவிலேயே உயிர்மெய்யும், மெய்யும் இணைந்த சொற்கள் பயன்பாட்டில் (அசோகன் பிராமிக் கல்வெட்டுகளில்) காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக உருமண்டிக் கல்வெட்டில் 'சாக்யமுனி'  என்ற சொல் முதல் எழுத்தை அடுத்து உள்ள மெய் எழுத்தும் உயிர்மெய் எழுத்தும் மேலும் கீழுமாக 'க், ய'  இணைத்து எழுதப்பட்டுள்ளன. அசோகன் பிராமியிலிருந்து தமிழ் எழுத்து தோன்றி இருப்பின் இக்கூட்டெழுத்து முறையைப் பின்பற்றி இருக்கவேண்டும் அல்லவா? மேலும் அசோகனுடைய கல்வெட்டுகளில் கூட்டெழுத்துக்கள் உள்ள பெரும்பாலான சொற்கள் தவறாகவே எழுதப்பட்டுள்ளன. மெய் எழுத்து வரும் இடத்தில் உயிர் மெய் எழுத்து எழுதப்பட்டுள்ளன. இதன் மூலம் அசோகன் பிராமியில் தமிழில் உள்ள இடர்பாட்டைத் தவிர்க்க கூட்டெழுத்து முறை முதன்முதலாகப் பயிலும்



குட்டுவன் கோதை காசு

பது எழுத்து 9

முயற்சிக்கு வித்திடப்பட்டது என்று கூறினால் அது மிகையல்ல. இதனால் அவற்றை எழுத விழைந்தோர் பெரும்பாலான இடங்களில் தவறாகப் பயன்படுத்தி உள்ளனர். தமிழ் எழுத்துக்களில் மெய் எழுத்தும், உயிர் மெய் எழுத்தும் வேறுபாடு அற்று ஒரே குறியீட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ் எழுத்தின் தொன்மை விளங்குகிறது. சொல்லின் பொருளிற்கு ஏற்ப இவ்வெழுத்துக்களைப் படிக்கல் வேண்டும். இவ்விடர்ப்பாடு அசோகன் பிராமியில் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

மேலும் தொடக்கக் காலத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளில் உயிர் மெய் எழுத்துக்கள் சிலவற்றை எழுத உயிரும் மெய்யும் தனித்தன்மையாக எழுதப்பட்டுள்ளன. உயிரும் மெய்யும் இணைந்தே உயிர்மெய் வரும் என்ற கோட்பாட்டிற்கு இணங்க மெய் எழுத்திற்குப் பின் உயிர் எழுத்து உள்ளது உள்ளவாறே பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக மாங்குளம் கல்வெட்டில் 'கடலன்' என்ற சொல்  (க ட ல் அ ன்) என்று எழுதப்பட்டுள்ளது. இதுபோன்ற சொற்கள் தொடக்கக் காலத் தமிழ் கல்வெட்டுகளில் மிகுந்து காணப்படுகின்றன.

தமிழ் எழுத்தின் பயன்பாட்டுப் பரவல்:

தமிழ் எழுத்துக்களின் பயன்பாட்டுப் பரவல் பொதுமக்களும் அறிந்திருந்த வகையில் இருந்துள்ளது. தமிழகத்தில் நடந்த பல்வேறு அகழாய்வுகளில் தொன்மைக் கால மக்கள் தம் பெயர் பொறித்த ஓடுகள் பெருமளவில் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, அழகன்குளம், கரூர், உறையூர், காஞ்சிபுரம், மாங்குடி, வல்லம் போன்ற அகழாய்வுகளை இங்குக் குறிப்பிடலாம். இதே போன்று இவ்வெழுத்து முறை பல்வேறு குறுநில மன்னர்களின் காசுகளிலும், வெள்ளி, பொன் மோதிரங்களிலும் முத்திரைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழர்களின் கடல் கடந்த வாணிகத் தொடர்பால் செங்கடல் பகுதிகளான பெரினிகே, அல்-குசீர்-காதீம் ஆகிய இடங்களிலும் தமிழ்ப் பொறித்த மட்கல ஓடுகள் கிடைத்துள்ளன. ஆனால் அசோகன் பிராமி அசோக மன்னனைத் தவிர மக்களால் அறியப்பட்டதாகச் சான்றுகள் இல்லை. வட இந்தியாவில் நடந்த அகழாய்வுகளில் எழுத்துப் பொறித்த மட்கலன்கள் கிடைக்கவில்லை. தமிழ் எழுத்தின் பரவலால் பாகத மொழிக்கு ஏற்ப, அசோகன் காலத்தில் அசோகன் பிராமி, தமிழ் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் நன்கு விளங்கும்.

மேலும் அசோகனின் கல்வெட்டுகளால் தமிழகத்தில் தனி அரசுகள் இருந்தமையை அறிய முடிகிறது. அசோகனின் கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டியர் மற்றும் சத்தியபுத்திர அரசர்கள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. திருக்கோவிலூருக்கு அருகில் ஜம்பை என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டில் இடம்பெற்றுள்ள அசோகன் குறிப்பிடும் சத்தியபுத்திரர் எனப்படுவோர் அதியமான் மரபினர் ஆவர். அதியமான் நெடுமான் அஞ்சி அசோகனின் காலத்தவன் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பது எழுத்து 9

தமிழ் (பிராமி)

உயிர் எழுத்து



அ ஆ இ ஈ உ ஊ ஏ ஒ

மெய் எழுத்து



க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம்




ய் ர் ல் வ் ழ் ள் ற் ன



த ஸ

உயிர்மெய் எழுத்து (க)



க் கா கி கீ கு கூ கே கை கோ


அசோகன் பிராமி

உயிர் எழுத்துக்கள்



அ ஆ இ உ எ ஒ அம்

உயிர்மெய் எழுத்துக்கள் (வர்க்க எழுத்துடன்)



க1 க2 க3 க4 ங ச1 ச2 ச3 ஞ



ட1 ட2 ட3 ட4 ண த1 த2 த3 த4 ன



ப1 ப2 ப3 ப4 ம ய ர ல வ




வ2 வ3 ஸ ஹ கா கி கீ கு கூ

கூட்டெழுத்துக்கள்




கே கோ க்ர த்ர த்ப இன்ய இம்ஹ் இஸ்தி




ர்சி க்ந வர் இம்யூ ஹம்ய க்யச தோயி தேம்

புது எழுத்து 9



புகளூர் கல்வெட்டு



நல்லி யூர பிடந்தை மகன் கீரன் கொற்றன்

எழுத்துக்களின் தன்மை:


கல்வெட்டியல் அறிஞர்கள் எழுத்து வளர்ச்சியின் அடிப்படையில் எழுத்துக்களின் காலத்தை வகைப்படுத்துவர். இதனைத் தொல்லெழுத்தியல் காலப்பகுப்பு எனக் கூறுவர். இதன் அடிப்படையில் தமிழ் எழுத்துக்களையும் அசோகன் பிராமி எழுத்துக்களையும் வகைப்படுத்தும் பொழுது தமிழ் எழுத்துக்கள் அசோகனுடைய பிராமி எழுத்துகளுக்கும் முற்பட்டன என்பது எளிதில் விளங்கும். எடுத்துக்காட்டாகத் தமிழின் சில எழுத்துக்கள் தொடக்க நிலை எழுத்துக்களாக உள்ளன. படுக்கைக் கோடுகளும் செங்குத்துக் கோடுகளும் தொடக்க நிலைக்கு உரியனவாகும். 'ம' என்ற எழுத்து தமிழில்  என்ற குறியீடு கொண்டு விளங்குகிறது. அசோகன் பிராமியில் வளைவுகள் கொண்டு கையை எடுக்காமல் எழுதும் வழக்கம் உள்ளது. 'ம' என்பதற்கு  என்ற குறியீடு காணப்படுகிறது. இதே போன்று 'ர' என்பது தமிழில் ஒரு செங்குத்துக்கோடாக காட்டப்பட்டுள்ளது. அசோகன் பிராமியில் வளைவுகளுடன்  இவ்வெழுத்து காணப்படுகிறது. மேலும் பல எழுத்துக்கள் அசோகன் பிராமியில் பிற்காலத் தமிழ் எழுத்துக்களின் அமைப்பைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக 'அ' எழுத்து அசோகன் பிராமியில்  என்று எழுதப்பட்டுள்ளது. தமிழில் இவ்வெழுத்து என்றே எழுதப்பட்டுள்ளது. இவ்வெழுத்தின் இடப்பக்க இரு வளைவுகள் அசோகன் பிராமியில் நடுப்பகுதியில் இணைந்து காணப்படுகின்றன. தமிழில் இவை இடைவெளி விட்டுச் செங்குத்து படுக்கைக் கோடுகளாக காணப்படுகின்றன. அசோகன் பிராமி 'அ' வளர்ச்சி பெற்ற காலம் இணைத்து எழுதப்பட்டுள்ள காலக் கட்டத்தைச் சார்ந்தது. தமிழ்நாட்டில் திருவாதவூர், புகழூர், ஆனைமலை, குன்றக்குடி, மாமண்டூர் போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளில் இடைவெளி அற்ற இணைந்த அசோகன் - பிராமி 'அ' காணப்படுகிறது. குறிப்பாக ஜம்பைக் கல்வெட்டில் காணப்படும் 'அ' அசோகனுடைய 'அ' போன்று உள்ளது. எனவே ஜம்பைக் கல்வெட்டு அசோகனின் சமீப காலத்தைச் சார்ந்தது என்பது தெள்ளென விளங்கும். இதே போன்று 'அ'  காரத்தின் குறியீடு தமிழில் குறியீட்டின் வலப்பக்கம் மேல்பகுதியில் படுக்கைக் கோடாகக் காட்டப்பட்டுள்ளது. அசோகன்

புது எழுத்து 9

பிராமியில் இப்படுக்கைக் கோடு கீழிறங்கி நடுத்தண்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. அசோகன் பிராமி பிற்காலத்தைச் சார்ந்தது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. ஓர் எழுத்தின் அமைப்பு தொடக்கக் காலத்தில் மேலிருந்து கீழ் இறங்கி வரும் தன்மையைப் பெறுமே தவிர, நடுவில் இருந்து மேலே செல்லும் குறியீட்டை இட்டிருப்பர் என்பது எழுதும் தன்மைக்கு ஒவ்வாதது என்பது எளிதில் விளங்கும். புகழூர் கல்வெட்டில் ‘ஆ’ காரம் நடுவில் காட்டப்பட்டுள்ள நிலையைப் பெற்றுள்ளது. புகழூர் கல்வெட்டு பிற்காலத்தைச் சார்ந்தது என்பதை அனைவரும் அறிவர். எனவே அசோகன் பிராமி தமிழ் எழுத்தில் இருந்து பிறந்து பாகத மொழிக்கு ஏற்பதான புதிய வடிவங்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

தமிழ்நாட்டின் இலக்கிய வளம், மொழி வளம் ஆகியவற்றை உணர்ந்த சமண முனிவர்கள் சந்திரகுப்த மௌரியர், பத்திரபாகு ஆகியோரின் காலத்தில் கருநாடகத்தில் உள்ள ‘சரவணபெலகொல’ விற்கு வருகை புரிந்தபொழுது தமிழ்நாட்டின் மதுரைப் பகுதியில் வந்து தங்கித் தமிழ் எழுத்துக்களைக் கற்று அதனை வட இந்தியாவில் பரவச் செய்தனர். அவ்வாறு பரப்பிய பொழுது பௌத்தர்களின் துணைகொண்டு பாகத மொழிக்கு ஏற்பப் பல புதிய எழுத்து வடிவங்களை உருவாக்கிக் கொண்டனர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது ‘பட்டிபொருலு’ கல்வெட்டுகள். இதனைப் பல்வேறு அறிஞர்களும் தென்னகத் தன்மை உடையது என்றும் அசோகனுடைய காலத்திற்கும் முற்பட்டது என்றும் கூறி உள்ளனர். இதன் பின்னரே இவ்வெழுத்து முறை அசோகனின் காலத்தில் பரவலாக்கப்பட்டது.

மேற்குறித்த கருத்துக்களின் அடிப்படையில் தமிழ் எழுத்துக்கள் கி.மு.5ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தோன்றி வளர்ச்சியடைந்த எழுத்துக்கள் என்பதை அறியமுடிகிறது. இவ்வெழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வட இந்தியாவில் அசோகன் பிராமி அமைக்கப்பட்டது. வருக்க எழுத்துக்கள் உள்ள இவ்வசோகன் பிராமி கி.பி. முதல் நூற்றாண்டளவில் பல்வேறு மாற்றங்களை அவ்வப்பகுதிகளுக்கு ஏற்பப்பெற்றன. தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் வடமொழி தமிழகத்தில் புகுத்தப்பட்ட பொழுது பல்லவர்கள் கிரந்த எழுத்துக்களை உருவாக்கினர். இந்தக் கிரந்த எழுத்துக்களே அசோகனுடைய பிராமியிலிருந்து தோன்றி வளர்ச்சியடைந்த எழுத்துக்களாகும். எனவே ‘தமிழ் எழுத்து’ தமிழர்களால், தமிழர்களுக்காக தொடக்கக் காலத்தில் பயன்படுத்திய சில கீறல் குறியீடுகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட எழுத்து வகை என்பது தெளிவாக விளங்கும்.



புது எழுத்து 9

க. மோகனரங்கன்

நூல் விமர்சனம்

பெருமாள் முருகனின்

‘கூளமாதாரி’

சுதந்திரத்திற்குப் பிந்தைய இடஒதுக்கீடு, இலவசக் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றின் காரணமாக உண்டாகிய அறிவுப் பரவலாக்கத்தின் பிறகே, கீழ்மத்தியத்தர வர்க்கத்தினருடையதும், சமூகத்தின் படிநிலையில் ஓரமாக இருப்பவர்களினுடையதுமான சித்திரங்கள் இலக்கிய ஆக்கங்களில் இடம்பெற ஆரம்பித்தன. இதில் முற்போக்கு எழுத்தாளர்களின் பங்கு கணிசமானது. அவர்களுடைய படைப்புகளின் கலை மதிப்பீடு பற்றி கருத்து மாறுபாடுகள் இருப்பினும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை யாரும் மறுக்கவியலாது. மார்க்ஸிய சித்தாந்தத்தின் அடிப்படையில் ரஷ்ய இலக்கியங்களை முன் மாதிரியாகக் கொண்டு அவர்கள் உருவாக்கிய படைப்புகளில் சமூகத்தின் கடை நிலையிலுள்ள பல்வேறு தரப்பினரின் வாழ்க்கை இயல்புகள் பிரதிபலித்தாலும் அவையனைத்தும் ‘பொருளாதர அடிப்படையிலான வர்க்கப் பார்வை’ என்ற பொதுச் சரடால் கட்டி இணைக்கப்பட்டிருந்தன. பொருளியல் ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் அரசியல் மாற்றத்தினால் சரி செய்யப்படும் போது எல்லா விதமான ஆதிக்கக் கருத்தியல்களுமே அழிந்து சமதர்ம சமுதாயம் உருவாகிவிடும் என்ற லட்சியவாத நம்பிக்கை வெகுவாகக் காணப்பட்டது. ஆனால் நிதர்சனமோ வேறாக இருந்தது.

விடுதலையடைந்து அரை நூற்றாண்டு கடந்த பிறகும் கல்வி, வேலைவாய்ப்பு என தாழ்த்தப்பட்ட சாதியினரில் குறிப்பிட்ட சதவீதத்தினர் பொருளாதார ரீதியாக முன்னகர்ந்திருந்தாலும் அவர்கள் மீதான கருத்தியல் ரீதியிலான ஒடுக்குமுறையிலும், சுரண்டலிலும் எவ்வித மாற்றமும் பெரிதாக நிகழவில்லை. இந்தியாவில் சாதி அடுக்கு முறை என்பது பிரக்ஞை நிலை என்பதையும் தாண்டி சமூகத்தின் கூட்டு நனவிலிமனதிலேயே ஆழவேரோடிப்போன ஒன்றாக உள்ளது.எனவேதான் சீர்த்திருத்தவாதிகளால் முன்வைக்கப்பட்ட நல்லெண்ண அடிப்படையிலான தீர்வுகளெல்லாம் வெறும் வார்த்தைகளாகவும், சடங்குகளாகவும் மட்டுமே நின்றுவிட்டன. இந்நிலையிலேயே பொருளாதாரரீதியாக ஒடுக்கப்பட்ட பிற சாதியினரது பிரச்சனைகளை விடவும், தாங்கள் உணரும் தனிமையும், அடையும் அவமானமும் அடிப்படையிலேயே வேறானவை. தங்களது பிரச்சனையின் ஆழத்தையும், சிக்கலையும் தாங்களேதான் போராடித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே கல்வி பெற்ற ஒரு தலைமுறையினரிடம் உருவாகியது. அம்பேத்கார்,பூலே போன்றோர் அவர்களுடைய கருத்தியல் வழிகாட்டிகளாக இருந்தனர்.

முதலில் மராத்தியிலும் பிறகு கன்னடத்திலும் பெரிய இயக்கமாகத் தோன்றி வளர்ந்த தலித் இலக்கியம் சற்று தாமதமாகவே எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழுக்கு வந்தது. இதன் கருத்தியல் மாத்திரமல்ல அழகியலும் கூட மைய நீரோட்ட இலக்கியங்களிலிருந்தும் வேறாகவே இருந்தது. மென்மையான குறிப்புணர்த்துதல் என்ற நியதிக்கு மாறாக அப்பட்டமாகவும், உரத்த குரலிலும் இவை பேசமுற்பட்டன. எள்ளல், பகடி, கூச்சமின்மை, வசவு, கொச்சைமொழி போன்றவை இவர்களுடைய படைப்புகளின் பிரதான உத்திகளாக மாறின. இன்றைய சூழலில் தலித் இலக்கியம் படைப்பவர்களில் இருபிரிவினர் உள்ளனர். முதலாவது வகையினர் பிறப்பாலேயே தலித்தாக இருப்பவர்கள். இரண்டாவது பிரிவினர் தலித்அல்லாத சாதியினராக இருந்தாலும் பிரக்ஞை பூர்வமாகத் தங்களை தலித் வகுப்பினருடன் அடையாளப்படுத்திக் கொண்டு எழுதுபவர்கள். இவற்றுள் பெருமாள் முருகனின் எழுத்துக்கள் இரண்டாவது பிரிவிற்குள் அடங்குபவை.

விவசாயத்தை பிரதானத் தொழிலாகக் கொண்ட கொங்கு வட்டாரம் என வரையறுக்கப் பெறும் நிலப்பகுதிக்குள் வாழும் வெள்ளாளக் கவுண்டர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியரிடையேயான சாதி உறவுகளையும் அதில் நிலவிவரும் குரூரமான அடக்குமுறைகளையும், அவற்றின் காலப்போக்கிலான உடைவுகளையும், நகர்மயமாதலினால் கிராமப்புற மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றையும் மையப்படுத்தி எழுதும் இவரது படைப்புகளில் இவருடைய கரிசனம் தலித் மக்களுடைய பார்வையின் வழி இயங்குகிறது.

தலித் மக்களுக்கு ஆதரவாக எழுதும் பிறசாதியினரால், தலித் மக்களுடைய பிரச்சனைகள் பேரளவு புரிந்து கொள்ளப்பட்டாலும் கூடஅவற்றிலுள்ள உளவியல் ரீதியிலான சிக்கலை அதன் முழு ஆழத்துடன் அவர்களால் உணரவே முடியாது.எனவே மெய்யான தலித் இலக்கியம் என்பது ஒரு தலித்தால் மட்டுமே எழுதப்படமுடியும் என்ற ஒரு தரப்பு உண்டு என்றாலும் தலித் இலக்கியமும், அதற்கான பிரத்யேக வீச்சில் வளர்ச்சியுறாத இத் தொடக்க நிலையில் அது பற்றிய தீர்மானகரமான முடிவுக்கு ஒருவர் வரஇயலும் எனத் தோன்றவில்லை.

கூள மாதாரி என்ற இந்நாவலில் வெள்ளாளக் கவுண்டர் ஒருவரான் பண்ணையத்தில் ஆடு மேய்ப்பவனாக இருக்கும் பதின் பருவத்தைச் சேர்ந்த சக்கிலியச் சிறுவன் ஒருவனின் சில வருட வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. பெருமாள் முருகனின் முந்தைய நாவல்களின் கதைப் போக்கிலிருந்த தீவிரமோ, நிதானமானதொரு கதியிலேயே நகர்கிறது. புழுதி, பொழிமண், வறள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள நாவலில் வரும் மானாவாரி நிலமும், அதில் ஊன்றி வளர்ந்திருக்கும் மர, செடி கொடி வகைகளும் கூட பசுமையற்றதாகவே உள்ளன. அவ்வறட்சியும், புழுதியும், அவற்றை நின்று நிதானமாக விவரித்துச் செல்லும் நடையும் எல்லாமும் கூடி அந்நாவலின் தொனிக்கு, வாழ்க்கையின் பாரம் இன்னும் தலையிலிறங்காத சிறுவனின் விட்டேற்றியான மனநிலைக்கு, ஒரு கச்சிதமான பின்னணியாக அமைந்து விடுகிறது.

ஆடு மேய்த்தல் என்ற தனது தினப்படிக் கடமைக்கு நடுவில் அவன் தன் சிநேகிதர்களுடன் சேர்ந்து உருவாக்கிக் கொள்ளும் விளையாட்டுகள், மேற்கொள்ளும் சாகசங்கள் சக மேய்ப்பியான சிறுமியுடன் உணருகிற பிள்ளைப் பருவக்காதல், தன் மந்தையிலுள்ள ஆடுகளுடனும் நிலத்தில் தென்படும் பிற ஜீவராசிகளுடனும் கொண்டிருக்கிற பிணைப்பு இவையெல்லாம் விலாவாரியாக சிறு சிறு நுணுக்கமானத் தகவல்களுடன் முதற்பகுதியில் விவரிக்கப்படுகின்றன.

இரண்டாம் பகுதியில் அதே நிலப்பகுதி இரவுக்கு நகர்த்தப்படுகிறது. விதைப்பிற்கு முன் ஆடுகளை நிலத்தில் இடை நிறுத்தும் பொருட்டு கூளையனும் அவனுடைய கவுண்டர் மகனும் காவலிருப்பதை விவரிக்கிறது. இருவருக்குமிடையிலான சாதிபேதத்திற்கு நடுவிலும், பரஸ்பரம் தேவையை முன்னிட்டு உருவாகும் ஒரு வித தோழமை உணர்வு இயல்பாகக் காட்டப்படுகிறது. இரவில், வானத்திற்கும் பூமிக்கும் ஆக விகாசம் கொண்டெழுந்து வேட்டைக்கு புறப்பட்டு விட்ட முனியப்பசாமியை கூளையன் எதிரிட நேருகிற அனுபவம் மிகவும் ஜீவனுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் பகுதியில் கூளையன், அவனது சகாவான நெடும்பன் ஆகியோர் தெரிந்தோ, தெரியாமலோ செய்ய நேர்ந்துவிடுகிற தவறுகளுக்காக அவர்களுடைய ஆண்டைகளால் கடுமையான தண்டனைகளுக்குட் படுத்தப்படுகின்றனர். தப்பித்து போக அவர்கள் எடுக்கும் முயற்சிகளும் தோல்வியில் முடிந்து மறுபடியும் தத்தமது வேலைக்கே திரும்புகின்றனர். கடைசியில் பண்ணைக் கவுண்டரின் மகனைக் கூளையன் கிணற்றில் அழுத்தி மூழ்கடிப்பதுடன் நாவல் முடிகிறது.

இந்நாவல் பண்ணைக்கவுண்டர்களின் ஆதிக்கத்திற்கு எதிரான மனநிலை கொண்டு செயல்பட முற்படுகிறவர்களாக பண்ணையாட்களான கூளையன், நெடும்பன் முதலியோரைக் காட்டுவதில்லை. மாறாக கதாசிரியன் தன் சார்பை அல்லது நோக்கை கதாப்பாத்திரங்களுக்கு அளிக்காமல், பாத்திரங்களின் இயல்பிற்கேற்ப நிகழ்வுகளை உருவாக்கியுள்ளமையால் நாவல் மிகவும் நம்பகத் தன்மையுடன் வந்துள்ளது. பண்ணையக்காரர்களின் கடுமையான வசவும், அரை வயிற்று உணவும், கூளையனுக்கு வருத்தத்தைத் தந்தாலும் அது சிறு பொழுதுதான். கவுண்டர் வீட்டைவிட்டு மேய்ச்சல் நிலத்திற்கு வந்ததுமே, அந்த ஏகாந்தமான பரந்த வெளியின் கீழ் அவன் துயரம் மறைந்து, அந்த வயதுக்கேயுரிய வண்ணங்களைக் கொண்டு தன் சொந்த மகிழ்ச்சியின் விதவிதமான சித்திரங்களை உருவாக்கிக் கொள்கிறான். ஒரு தலித் சிறுவனின் மீதான ஆதிக்கச் சுரண்டல் என்ற பார்வையில் பார்க்கும்போது ஒருவருக்கு இந்நாவல் ஏமாற்றத்தை தரக்கூடும் என்றாலும், அச்சிறுவனின் பால்ய காலத்தை காட்சிப்படுத்துவது, அத்தனை அழுத்தத்திற்கு நடுவிலும் அவன் மனம் நசுங்குறாமல் தன்னியல்பாக வளர்வது என்ற நோக்கிலிருந்து காண்கையில் இந்நாவல் இன்னும் கூடுதலான அனுபவத்தை நமக்குத் தரும் எனப்படுகிறது. (இதனுடன் சிலவகைகளில் ஒப்பிட்டுப் பார்க்கத்தகுந்தது யூமா வாசுகியின் நாவலான 'ரத்த உறவு'. அது வேறு பின் புலத்தில் வேறு துயரங்களுக்கிடையில் தன் பால்யத்தின் பிரகாசத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிற ஒரு சிறுவனின் பார்வையில்

சொல்லப்படுவது) இந்நாவலின் புறச்சித்தரிப்பும், கதாப்பாத்திரங்களின் மனமொழியும் கூடுமானவரை இயல்பாக உருவாகி வந்துள்ளது. இதில் விடுபட்டுப் போன அம்சமாகப்பட்டது எனக்கு ஒன்றுதான். அது கூளையனின் புற வாழ்க்கை அதாவது ஒரு பண்ணையாளாக அவனது முழுசித்திரமும் நுணுக்கமாக சித்தரிக்கப்பட்டுள்ள அதேசமயத்தில் அவனுடைய மறுபுறமான அக வாழ்க்கை அவனுடைய குடும்பம், உறவுகள், அவற்றினுடைய நம்பிக்கைகள், சடங்குகள் முதலியனவை அழுத்தமாக வரவில்லை என்பதுதான். சிறுவர்களின் மனவுலகை நெருக்கமாக பிரதிபலிக்கும் படைப்புகள் தமிழில் குறைவானவையே. அவ்வகையில் பெருமாள் முருகன், நாம் முன்னர் கண்டிருக்க அவ்வளவாக வாய்ப்பில்லாத ஒரு புதிய பகுதியை நமக்கு இந்நாவலில் காட்டியிருக்கிறார்.

காளிங்கராயன்

நூல் விமர்சனம்

விழி.பா. இதயவேந்தனின்
'தலித் அழகியல்'

தமிழில் தலித் இலக்கியம் தனக்கான அடையாளத்தை உருவாக்கிக்கொண்ட தொண்ணூறுகளின் தொடக்கத்தில் நந்தனார் தெரு சிறுகதைத் தொகுப்பின் மூலம் அறியப்பட்ட தோழர் இதயவேந்தன் தற்பொழுது 'தலித் அழகியல்' என்கிற விமர்சன நூலைத் தந்திருக்கிறார். பல்வேறு தலைப்பிலான பத்துக் கட்டுரைகளும் ஒரு விரிவான நேர்காணலும் கொண்ட தொகுப்பாக இது அமைந்துள்ளது.

1. ... அமிலத்தால் அரித்தெடுக்கப்பட்டதைப் போல நமது தொடர்ந்த கையாள்கையில் தேய்வுற்ற கவிதை, வியர்வையும் புகையும் அடர்ந்த கவிதை, மூத்திரமும் லில்லி மலரும் மணக்கிற கவிதை, சட்டத்திற்குட்பட்டும் மீறியுமான மனித செயல்பாடுகளை வெளிப்படுத்தும் கவிதை, அழுக்குக் கந்தலைப்போன்ற இத்தூய்மையற்ற கவிதையில் எச்சில் கறையும் அவமானமும் எட்டியுள்ளது.(மீட்சி 20 நவ 1985) பிரம்மராஜன்

என்பதாக முப்பதுகளின் இறுதியில் தூய்மையற்ற கவிதையின் இயல்குணங்களாக பாப்லோ நெருதா முன் வைத்த இத்தகைய வரையறைகளே பிந்நாளில் மேற்குலகில் தோன்றி எதிர்கவிதை (Anti - poetry) இயக்கத்திற்கு அடிப்படையாக இருந்து கேள்விக்குள்ளாக்கியது. எளிய மனிதர்களுக்கான கலையையும், அரசியலையும் பேசியது. ஆனால் தமிழின் ஒரு நூற்றாண்டு கால நவீன இலக்கிய வரலாற்றில் கடந்த 20 ஆண்டுகளாகத்தான் மேற்கின் எதிர் இலக்கிய போக்கை (Anti litateure) காணமுடிகிறது. அல்லது தலித் இலக்கியம் வளரத் தொடங்கியபோது

அவற்றினூடாகத்தான் அத்தகைய எதிர் இலக்கியத்திற்கான கூறுகளை நாம் அவதானிக்க முடிகிறது. அதற்கு முன்பே பல்லாண்டுகளாக, மய்ய நீரோட்ட வெகுசன இலக்கியங்களுக்கு மாற்றாக முன்வைக்கப்பட்ட சிறுபத்திரிகை (மீட்சி, படிகள், நீங்களாக) நடவடிக்கைகளிலாகட்டும் இடதுசாரி கோட்பாட்டாளர்களால் உருவாக்கப்பட்ட முற்போக்கு இலக்கியல்களாகட்டும், பெரும்பான்மையானவற்றில் உன்னதம், புனித பேருண்மை, தீர்வுகள், முழுமை/நிறைவு போக்கினையே காணமுடிகிறது. தலித் இலக்கிய படைப்புகள் மட்டுமே இவ்விலக்கிய நோக்கை தகர்த்தெறிந்தன. மாற்று அழகியில் குறித்த அற உணர்வை உண்டாக்கின. இதையே தனது தலித் அழகியில் கட்டுகரையில் விரிவாகப் பதிவு செய்துள்ளார் விழி.பா.இதயவேந்தன்.

இது எனது மண், இது எனது, மொழி இது எனது பேச்சு, இது எனது கலை, இது எனது நாகரிகம், இது எனது பண்பாடு, இது எனது அழகியல் என்று வெளிப்படையாகப் பிரகடனம் செய்கிறார். ஆதிக்கசாதி அழகியலுக்கு எதிரான தலித் அழகியலை படைப்பது தலித் படைப்பாளிகளின் வரலாற்றுக் கடமை என்பதை உறுதிப்படுத்துகிறார். மேலும் தலித் படைப்பாளிகள் ஆதிக்கசாதியினர் மதிக்கிற கலை நுட்பங்களும், செய்முறைகளும், வாழ்நிலைக் கூறுகளும் நம்மிடையே இல்லை என்று அங்கலாய்த்துக் கொள்கிற தலித் பிராமணர்கள் பற்றி கவலைப்படத் தேவையுமில்லை (பக் - 7) என்றும் சரியான கருத்துத் தெளிவை உண்டாக்குகிறார்.

2. ரெண்டாம் கட்டுரையான 'என் சனங்களின் கதை' ஒரு எளிய புனைகதைக்கான [illegible] மொழியையும் கொண்டிருக்கிறது. ஆசிரியர் பிறந்த இடமான புறாகுட்டை என்கிற நிலப்பகுதி பிறகு [illegible] என்றும் பின்பு 1990-ல் கருணாநிதி நகர் என்று நாகரிகமாகவும் பெயர் மாற்றம் கொள்கிறது. ஆனால் அங்கு வாழ்ந்திடத் தள்ளப்பட்ட அடித்தட்டு மக்களின் வாழ்நிலையோ 30 ஆண்டுகளுக்குப் பின்னர் கூட அப்படியேதான் இருக்கிறது. சிலர் முன்பைவிட மோசமான நிலையை அடைகின்றனர். இப்படைப்பு எம்போன்ற ஆதிக்கசாதியில் பிறந்தோரை குற்றவுணர்வும், கழிவிரக்கமும் சுயவெறுப்பும் கொள்ள வைக்கிறது. தலித்தல்லாத வாசகரிடத்தில் இப்படியான வினையாற்றுவதை தலித் அழகியல் கூறுகளின் ஒன்றாகக் கொள்ள முடியும்.

3. அடுத்து வரும் இரு கட்டுரைகளில் தலித் இலக்கியத்தின் போக்குகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தலித் இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி, தலித் இலக்கியம் சந்தித்த எதிர்ப்புகள் அவற்றை வென்றெடுத்த தலித்/தலித் ஆதரவு சிந்தனையாளர்கள் மற்றும் படைப்பாளிகள் தலித் அரசியலுக்கான தலித் இலக்கியத்தின் பங்கு, தலித் இலக்கியம் யாரை நோக்கி செயல்படுகிறது, தலித் இலக்கியம்/ அரசியல் எதிர்கொள்கிற சமூக அரசியல் பிரச்சனைகள், குறிப்பாக உட்சாதி முரண்களைக் களைந்துவிட்டு முன்னோக்கி நகர்தல் மற்றும் இடதுசாரி வழியினைத் தெரிவு செய்தல் போன்ற பலவகையான கூறுகள் அலசப்படுகின்றன. தலித் அல்லாதோரை [illegible] எவ்வாறு வேண்டும் என்கிற கேள்விக்குப்பின்னே தலித் அல்லாதோரின் அங்கீகாரத்தை தலித் இலக்கியம் யாசித்து நிற்க வேண்டியதில்லை என்கிற தெளிவான முடிவினை முன்வைக்கிறார்..

புது எழுத்து 9

4. பின்வரும் படைப்புகளில் தலித் சிறுகதைகளும் நாவல்களும் விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சிறுகதைகளில் பூமணி தொடங்கி மதிவண்ணன் வரை ஒவ்வொரு படைப்பாளியின் கதைகள் குறித்தும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனக்குறிப்புகள் தலித் சிறுகதைகளின் போக்கு குறித்த கோட்டுச்சித்திரத்தை நமக்களிக்கின்றன. நாவல்களில் வெளிப்படும் பண்பாட்டுக்கூறுகளில் எங்ஙனம் இந்துத்துவ ஆதிக்க சாதிப் பண்பாட்டுக்கு எதிரான கலகத்தன்மை உள்ளன என்பதை டானியல் தொடங்கி ஜெயசாந்தி வரையிலான படைப்பாளிகளின் எழுத்துகளிலிருந்து நிறுவுகிறார்.

5. முன்பே தலித்முரசில் வெளியான விழி பா. இதயவேந்தனின் நேர்காணல் இந்நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இதில் தலித் அழகியல் குறித்த கேள்விக்கு 'அழகியல் என்பது ஒரு மாயை தலித்துகளின் அழுக்கு, துர்நாற்றம், கவுச்சி நாத்தம்தான் தலித் அழகியல். ' கற்பிக்கப்பட்ட அழகியலுக்கு நேர் எதிர்மறையானது இது என்று பதிலளிக்கிறார். மேலும் முன்பொரு முறை தலித் படைப்புகள் குறித்து எழுதும்போது அறுந்த கதையிலிருந்து ஒழுகும் புது ரத்தமாய் தலித் படைப்பாளிகளின் பதிவுகள் எல்லாத்தளத்திலும் வருவது புதிய பாய்ச்சலுக்கான அடையாளமாய் நாம் பார்க்கலாம் என்றெழுதுகிறார். மேற்கண்ட இவ்விரு கூற்றுகளுமே இந்நூலின் சாரமாக நாம் சொல்ல முடியும்.

மேலும் சில குறிப்புகள்:

1. தலித் படைப்புகள் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் மொழிதான் தலித் அழகியலின் அடிப்படையாக இயங்குகிறது. ஆனால் 'தமிழில் தலித் மொழிமைப்பு' குறித்த விரிவான பார்வையேதும் இதயவேந்தனால் முன் வைக்கப்படவில்லை. போலவே தலித் இலக்கிய வடிவங்களில் பிறவற்றைப் பார்க்கினும் தலித்கவிதைகளே அவற்றுக்கான தனித்த மொழியையும் எதிர் அழகியல் கூறுகளையும் கொண்டு படைக்கப்பட்டு வருகின்றன. தலித் கவிதைகள் குறித்து பேசப்படாததும் இந்நூலின் முக்கியமான குறைபாடாகும்.

2. நூலில் பல்வேறு சிந்தனையாளர்களின், ஆய்வாளர்களின் கூற்றுகள் பலவிடங்களில் பலமுறை எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே நூலாசிரியரின் தனித்தன்மை வாய்ந்த குரலே பலநேரங்களில் ஒலிக்காமல் போய்விடுகிறது. நூலின் இன்னொரு குறை ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருக்கும் பெயர்ப்பட்டியல். பல தலித் படைப்பாளிகளின், ஆய்வாளர்களின் பெயர்ப்பட்டியல் பலமுறை திரும்பத்திரும்ப வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு சமயங்களில் எழுதப்பட்ட கட்டுரைகள் என்றாலும் நூலாக்கப்படும்போது இவை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். தமிழின் அச்சுப்பிழைகளுக்குப் பேர்போனவை காவ்யா வின் வெளியீடுகள். நூலகத்தில் இடம்பிடிக்க வேண்டிய இலக்கிய அவசரஅவசரமாக அக்கறையின்மையுடன் அரைகுறைத் தயாரிப்பில் முதலிடம் காவ்யாவுக்கு

புது எழுத்து 9

எனலாம். இந்நூலிலும் அச்சுப்பிழைகள் நிறைய உண்டு.

3. தலித் ஆதரவாளர்கள் என்று நூலாசிரியர் வெளியிட்டிருக்கும் பட்டியலிலும் சில கேள்விகள் எழுகின்றன. - தோழர் மேலாண்மை பொன்னுசாமி, ராமசாமி போன்றோர் தலித் ஆதரவு நிலையினை எப்போதிலிருந்து எடுத்தனர், தலித் இலக்கியமும் அரசியலும் ஆதிக்கசாதி இந்துக்களால் பல்வேறு எதிர்ப்புகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகியிருந்த தொண்ணூறுகளின் தொடக்கத்திலா அல்லது எதிர்ப்புகளை மீறி தலித்தியம் நிலைபெற்ற பின்னரா? தெரியவில்லை. தலித்திற்கு தத்துவம் இல்லை, வரலாறு இல்லை, தெளிவானஅரசியல் பார்வையில்லை, அழகியல் இல்லை என்றெல்லாம் வெண்ணெய் வெட்டி ஆய்வு நிகழ்த்தி எழுதி புத்தகம் போட்டவர் திருவாளர் ராசேந்திர சோழன் 1995-ல் தூத்துக்குடியில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபோது Star writer பொன்னுசாமியிடம் தலித் இலக்கியத்தை தலித்துகள் எழுதுவதுதானே நியாயமாக இருக்க முடியும் என்று வினவியதற்கு சிவகாமி, ராஜ்கௌதமன் எல்லாரும் இந்த நிலைமைக்கு வருவதற்கு யார் காரணமாம்? என்று தனது முற்போக்கு மனப்பூணுலை உருவிவிட்டுக் கொண்டே கேட்டவர் மேலாண்மை நாட்டுக்காரர். கோ. கேசவன் அவர்களோ தலித்தியத்திற்கும், மார்க்சிய - லெனினியத்திற்கும் உள்ள கொள்வினை கொடுப்பினைகளை தட்டித்தட்டி ஆய்ந்தறிந்த பின்பு (இந்துத்துவத்தின் லட்சம் டாலர் கதியைப் போல) எல்லாம் எங்கிட்டயே இருக்கு அப்புறம் எதுக்கு தனியா தலித்தியம்? என்று அந்தணனாய் அறக்கேள்வி போட்டவர். இவர்ளெலெல்லாம் எப்படி தலித் ஆதரவாளர் பட்டியலில் அடங்குவர் என்பதை இதயவேந்தன்தான் சொல்ல வேண்டும்.

இறுதியாக

தலித் இலக்கியம் தமிழகத்தில் காலூன்றி 10 ஆண்டுகளாகிறது. இதுவரை தமிழில் வெளிவந்த தலித் படைப்புகள், பிற மாநில மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கும் தலித் படைப்புகள், உலக மொழிகளில் உருவாகும் ஒடுக்கப்பட்டோர் இலக்கியங்கள் போன்றவற்றை ஆழமாகப் பரிசீலித்து தமிழின் தலித் அழகியலுக்கான சில முன் வரவுகள் உருவாக்கப்பட வேண்டும். தலித்இலக்கியம் அடுத்த கட்டம் நோக்கிச் செல்வதற்கு இது இன்றியமையாத பணியாகும். மைய நீரோட்டத்திற்கு எதிரியான மாற்று அழகியலைப் படைப்பதற்கும், தலித் அழகியல் குறித்த தலித்/ தலித் ஆதரவு விமர்சகர்களால் எழுப்பப்படும் பல்வேறு கேள்விகளுக்கும் அது பதிலளிப்பதாக அமையக்கூடும். தோழர் இதயவேந்தன் போன்றவர்கள் இதற்கு முன்கையெடுக்க வேண்டும்.

(கடந்த 10.08.2003 அன்று சேலம் தமிழ்ச்சங்கமும் எழுத்துக்களம் அமைப்பும் இணைந்து நடத்திய விமர்சன அரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

தே. நேசன்

நூல் விமர்சனம்

அமலன் ஸ்டேன்லியின்

'மேய்ப்பதும் மேய்வதும் யாது'

நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளின் மொத்தத் தொகுப்பு மாத்திரமல்ல அமலன் ஸ்டேன்லியின் முதல் தொகுப்பாக அமையப்பெற்றுள்ள இதில் அடர்த்தியானதொரு பொருட்படுத்தக் கூடிய மொழியில் "சாதுர்யமும் நுட்பமாகத் தீட்டப்பட்ட" கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இது தொகுப்பின் பலம். பலவீனத்தைப் பற்றிக் குறிப்பிடவேண்டுமெனில் ஈவிரக்கமில்லாமல் கழித்திருக்கவேண்டிய பழகிய உணர்வுகளாலான மேலோட்டமான பல கவிதைகளும் இதில் அடங்கியிருப்பதுதான். தொகுப்பின் பின்னட்டையில் யூமாவாசுகி, 'சமீப காலமாக ஸ்டேன்லியின் கவிதைகளோடு எனக்கு உவப்பான அந்தரங்கப் கசிந்து வருகிறது. சாதாரணமாக புழங்கிக் கொண்டிருக்கும் ஒரு வாக்கியப் விசேஷ மனநிலையில் சப்த வாக்கியமாக உருவெடுப்பது போல.......' என்றும் 'இந்தக் கவிதைகளோடு எனக்கு நீண்டகாலப் பரிச்சயமிருந்தாலும் அண்மையில்தான் புதிய ஊடுபாதைகளையும் வார்த்தைகளைமீறிய அர்த்தங்களையும் விளங்கிக் கொள்கிறேன்' எனவும் குறிப்பிட்டுள்ளார். மேற்கூறப்பட்டுள்ள வாக்கியங்களிலிருந்து கவிதைகளைப் புரிந்து கொள்ளவோ, உணர்ந்து கொள்ளவோ பிரத்யேகமான மனநிலைகளின் ஒத்துழைப்பு அவசியப்படுவதை அறியலாம். அது பிரதி சார்ந்தும் பிரதியாளரின் நட்பு சார்ந்தும் வாசிப்பின் தேர்வு அல்லது பயிற்சி சார்ந்தும் பல வேளையில் அதுவும் தமிழ்ச் சூழலில் சலுகையாகவோ புறக்கணிப்புக்கான அளவுகோலாகவே மாறிவிடுகிற ஆபத்தையும் உடன் வைத்திருக்கின்றன என்பதையும் கூற வேண்டும். அமலன் ஸ்டேன்லி ஒரு கவிதை கூறக் கையாளும் உத்தியில் பிரதானமாக, பத்தி பத்தியாகப் பிரித்து அதில் காட்சிகளை வரிசைப்படுத்துவதை கொண்டிருக்கிறார். இந்த மாதிரியான உத்தியில் சலிப்பை உணராதவாறு கூறப்படும் கவிதையின் அடர்மொழி நம்மைக் காப்பாற்றி விடுகிறது. நெடுநிலம் கடந்த/ வெடிப்புறு பாதங்களை கருணையுடன் இதப்படுத்தும் /விரிநதியின் சிறுபனி/ எனத் தொடங்கும் தீர்த்த யாத்திரை (ப.22) கவிதையை இங்கு குறிப்பிடத் தோன்றுகிறது. இந்த மாதிரியான கூறல் கவிதையை நாம் காட்சிப் படுத்திக் கொள்வதில் தடையெதையும் உருவாக்காத அதே நேரத்தில் சாதாரண அனுபவத்தை அசாதாரண அனுபவமாகப் பரிமாற்றி தந்துவிடுவதையும் காண்கிறோம். ஆனால் இதே தன்மையான கவிதைகளில் பல விவரணையின் பழகிய மொழியில் எதிரான உணர்வை எழுப்பி விடுவதையும் கவனிக்க வேண்டும். இவரது மற்றொரு குறிப்பிடத்தகுந்த

கவியாளுமை மனிதக்கடல்(ப.44), தலைப்பிடப்படாத 52 மற்றும் 54 ஆம் பக்கக் கவிதை ஆகியவற்றில் இயங்கும் ஒலியமைவு கொண்ட தொடர்களை கவிதை முழுவதிலும் விரவி வரச் செய்யும் விதத்தைக் கூறலாம். நான் மீனைக் சொல்லவில்லை - நான் மணலைச் சொல்ல வில்லை - நான் கவடுகளைச் சொல்லவில்லை என காட்சிகளின் ஊடே கூறுவதிலெழும் ஓசை நயமே கவிதைக்கு கூடுதல் தகுதியைத் தந்துவிடுகிறது. இத்தகைய கவிதைகள் தொகுப்பின் எண்ணிக்கையில் மிகச் சொச்சமாக இருப்பினும் எளிமையும் ஓசையும் அமலன் ஸ்டேன்லியை அடுத்தக் கட்டத்திற்கு அழைத்து வரக் கூடியவையாக இருக்கும் என்பது என் கணிப்பு. முடிவுகளும் தொடக்கங்களும் (ப.11), இருப்பின் அபத்தம் (ப.26), மனிதக் கடல் (ப.44), தலைப்பில்லாத 54,57 ஆம் பக்கக் கவிதைகள் கடந்த காலம் பற்றி இடர் (ப.71), அவ்வீடு (ப. 85), மாலையிலொரு தேநீர் விருந்து (ப.116) போன்றவற்றை என் வாசிப்பில் தேர்ந்த கவிதைகளாகக் கூற முடிகிறது. 49 ஆம் பக்கத்து கெட்டித்து இருக்கிறது வேதிக் கலவை எனத் தொடங்கும் கவிதையும் காலையில் அரும்பி (ப.82) மற்றும் குளோன் பட்ட கவிதை (ப. 83) ஆகியவையும் அறிவியல் தமிழில் எழுதப்பட்ட நவீன கவிதைகள்.

இன்று கவிதைகளை வெகுசாதாரணத்துக்கும் சாதாரணத்தளத்துக்கு வேகமாக தளர்த்தி வருகிற புதிய பல கவிஞர்களின் போக்கிலிருந்து எவ்வித அதிரடி கவனிப்புக்காகவும் இன்றி வெகு சகஜமாக அதேபோழ்தில் நுணுக்கமாகவும் எழுதி வந்துள்ள அமலின் ஸ்டேன்லி பொருட்படுத்தவும் வரவேற்க வேண்டிவரும்தான். இத்தகைய கவிதைகளை கவனத்துடனும் பொறுப்புடனும், விற்பனைக் குறித்த அச்சமின்றியும் வெளியிட்டுவரும் தமிழினியின் பணியும் மெச்சத்தகுந்ததே. ●


நிறைசூலி

கவிதைகள்

வாழ்வை வென்றவனின் படகு புறப்படுகிறது.

1.

ஊழி கழிய
படகுள் ஏறிக் கொண்டன
சரிபார்த்தான்
விலங்குகள் கணத்தில்
பூமியுள் ளிருந்தன
தாவரங்கள் விதிவிலக்கு
வரம் மறுப்பும்
முட்டைகள்
கூடுகள் உடைக்காது
புழுக்கள்
வளர்சிதைமாற்றம்
அறை உரிதலில்
விதைகள்
முளைப்பிலிருந்தன
பிர்னா அறிவான்
தன் மனைவி
வருவாளென
அவள் சேமிப்பு
உள்கிடக்கும்
யாவைக்குமா
நிச்சயம் யோசிப்பாள்
பிரதிமை செய்த
கடவுள்
அறைகள் போதாதது
இந்த ஊழிக்கு
முன்னர்
வேலை யிருந்தது
குறைத்தல் சரியாக்கல்
எரிமலை வாய்களற்ற
கீழைக்கடலுக்கு
ஊதுவான் கப்பலை
பிரார்த்தனைக்கு
கற்கள் வைக்கப்பட்டு
மேடாய்
நித்யத்தோட்டம் மறவாததன்
பெருமரங்கள்
பிர்னாவின் மனைவி
கண்டஞ்சின
கத்தினாள் அவள்
பிழைத்தாலும் நிச்சயம்
தற்கொலை
செய்வேனென்று
தாமதம் கடவுளுக்கு
கோபதேவதை யறியாள்
சாந்தம்
மீட்சியில்
உயிர்கள் காட்டி
பிர்னா பிழைப்பான்
விலங்குகள்
பறவைகள்
வராத தாவரங்கள்
சிலவும்
தம்மின மழிய
வாழல் தள்ளின
அலையெழும்பித்
தின்றதொரு தீவை
ஒரு
பெருந்திமிங்கலம்
செத்தொதுங்கியது
அலை வந்து
கொண்டிருந்தது
நிலமரிப்புத் தூறலில்
மின்னல்கள்
மஞ்சள் ஆரஞ்சு
வண்ணங்களில்
துப்பியது இடிகளை
மயங்கிக் கிடந்தாள்
கையில்
மலர்த் தாவரத்துடன்
நனைந்த பிர்னா
இறைஞ்சுவான் சாவிற்கு
ஞாபகமற
குதிரையின் பற்கள்
அசைவி லிருத்தின



பெருமழையை
ஆடுகளி ரண்டு
மூலையில் ஒதுங்கின
பெருமழை
எறும்புகளி ரண்டே யிரண்டு
அலைந்தன பதறி
பிர்னா விழுந்தான்
இருட்டு
தள்ளி மூடியது
கூரையை
சூரியன் ஒதுங்க
படகு நகர்ந்தது திசையறிந்து
சங்கலி யில்லாத
நங்கூரம்
சடலங்கள் கீழ்
விதைக்கப்பட தானியங்கள்
மலையுச்சியில்
பலிபெறவென விக்கிரகம்.
0

2.

நீரில் தன்னிழல் துடைக்க
கை நீட்டினான் வாழ்க்கைச்செடியுடன்
அலை முடங்க
பாம்பாய்த் தோன்றி
பிடுங்கப்பட்டது நித்யம்
மரண நிரந்தரத்தில்
எண்ணெய்க் கசடாய் கில்காமிஷ்
ஆவிக்கு முன்னேயே புலம்பினான்
0

பாவண்ணன்

நூல் விமர்சனம்

வீரமும் விடியலும்

(கேரளத்தின் முதல் தலித் போராளி அய்யன் காளி
-நிர்மால்யா,
தமிழினி வெளியீடு, 342 டி.டி.கே.சாலை, ராயப்பேட்டை,
சென்னை -14 விலை 65)

கேரளத்துக்கு வருகை தந்த விவேகானந்தர் அப்பிரதேசத்தை மனநோயாளிகளின் இல்லம் என்று சொன்னதாகச் சொல்வதுண்டு. அந்த அளவுக்கு கேரளத்தின் சாதிப்பிரிவினைகளும் தீண்டாமைக் கொடுமைகளும் கடுமையான அளவில் காணப்பட்டிருந்தன. பிராமணர்களிடமிருந்து நாயர் பதினாறு அடி தூரமும் ஈழவன் முப்பத்திரண்டு அடி தூரமும் விலகி நிற்க வேண்டும். ஈழவனிடமிருந்து புலையன் ஆறடி தூரமாவது தள்ளி நிற்க வேண்டும். ஈழவனிடமிருந்து புலையன் ஆறடி தூரமாவது விலகி .. .. சாதியினர் பிராமணன் பார்வையில் பட்டாலே பிராமணன் அசுத்தமாகி விடுவான். இப்படியெல்லாம் விதிகள் இருந்த காலம் அது. அந்தச் சூழலில் புலையர்கள் வாழ்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட தலைவர் அய்யன்காளி. அவருடைய வாழ்க்கை வரலாறு ஒரு புராண பாத்திரத்தின் சாகச வரலாற்றுக்கு நிகராக விளங்குகிறது. அவர் வீரத்தையும் ஆற்றலையும் [illegible] நினைத்துக் கொள்ளும் விதமாக இந்த நூலை உருவாக்கியுள்ளார் நிர்மால்யா.

தலித் சிந்தனைகளுக்கு மூல ஊற்றாக விளங்கிய அயோத்திதாசரின் படைப்புகள் சமீபத்தில்தான் கண்டெடுக்கப்பட்டு தமிழ்ச்சூழலுக்குள் அறிமுகமாகின. ஏறக்குறைய சமகாலமாய் வாழ்ந்து மறைந்த கேரளத்துத் தலித் போராளியான அய்யன்காளியின் வாழ்க்கையை அறிமுகப்படுத்தியுள்ள நிர்மால்யா பெரிதும் பாராட்டுக்குரியவர்.

இந்த நூல் 17 பிரிவுகளாக விரிவு கொள்கிறது: முதலில் அய்யன்காளி பற்றிய சிறு அறிமுகம். அப்புறம், சாதியமைப்பின் தோற்றம் பற்றிய வரலாற்றுப் பின்னணியில் அமைந்த தகவல்கள். பிறகு கேரளம் முன்னர் எப்படி இருந்தது என்கிற சித்திரம். அதைத் தொடர்ந்து உரிமைப் போராட்டத்துக்கும் சாதி எதிர்ப்புப் போராட்டத்துக்கும் மூலமாக அமைந்த சாணார் எழுச்சியின் விவரம். அதற்கப்புறம் அய்யன் காளியின் தோற்றமும் வளர்ச்சியின் எழுச்சியும் படிப்படியாகச் சொல்லப்படுகின்றன. ஒரு தேர்ந்த ஆய்வாளரைப் போல நிர்மால்யா ஒவ்வொரு பிரிவையும் வகுத்துச் சொல்லியிருக்கும் நூல் அமைப்பு முறை படிக்க ஊக்கமூட்டும் வண்ணம் உள்ளது.

நெய்யாற்றங்கரை வட்டத்தில் உள்ள கோட்டுக்கல் கிராமத்துக்கு உட்பட்ட வெங்ஙானூர்ல் அய்யன் மாலை தம்பதியினருக்குப் பிறந்த பத்து பிள்ளைகளுள் ஒருவர் காளி. சிலேட்டையும் புத்தகத்தையும் மார்போடு அணைத்தபடி பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளைப் பார்த்து ஏக்கத்துடன் தானும் அதுபோல செல்ல வேண்டும் என்கிற ஆசையைத் தன் பெற்றோரிடம் தெரிவித்த போதுதான் தனது சாதிக்காரர்களைப் பள்ளியில் அனுமதிக்க மாட்டார்கள் என்கிற உண்மை சிறிய வயதுக் காளிக்குப் புரிந்தது. இச்சம்பவம் சிறுவனின் நெஞ்சுக்குக் கடுமையான அதிர்ச்சியைக் கொடுத்தது அந்த முதல் அதிர்ச்சியைத் தொடர்ந்து அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிகள். ஓணம் பண்டிகைச் சமயத்தில் மேல்சாதிச் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடியதால் நேர்ந்த அவமானம், எதிரில் வந்த மேல்சாதிக்காரன் காரணமில்லாமல் ஓடு ஓடு என்று நாயை விரட்டுவது போல விரட்டியபடியதால் உருவான மனக்காயம். பெரிய சாதிக்காரர்களின் வீட்டு வாசலைத் தெரியாமல் மிதிக்க நேர்ந்ததால் கிடைத்த வசைகள், தனது சாதிக்குரிய கட்டுப்பாட்டோடு நடக்கத் தெரியாதவன் என்று தந்தையே மனம் வெறுத்துப் பேசிய பேச்சு எனப் பல முனைகளிலிருந்து நேர்ந்த கசப்பான அனுபவங்களால் துவண்ட சிறுவன் காளியின் மனத்தில் தன் முகம் கல்வியும் விழிப்புண் பெற்ற முகமாக மாறுவதே எல்லாத் தாழ்வுகளிலிருந்தும் மீட்சியைக் கொடுக்கும் என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்தது.

1888 சிவராத்திரி நாளன்று நாராயணகுரு அவர்கள் அருவப்புறம் என்னும் இடத்தில் நடத்திய சிவன் பிரதிஷ்டை சமுதாய மறுமலர்ச்சி வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். இதனால் உத்வேகமுற்ற அய்யன் காளி புலையர்களை ஒருங்கிணைத்துத் தலைமைப் பொறுப்பேற்று சாது ஜனபரிபாலன் சங்கம் என்ற அமைப்பை நிறுவினார்.

அய்யன்காளியின் போராட்டம் விசித்திரமானது. சாகசம் மிகுந்தது. அறிவாற்றலையும் உடலாற்றலையும் இணைத்து எதிர்க்கும் வல்லமை கொண்டது. பொது வழியினூடே நடந்து போகும் உரிமையை மீட்டெடுக்க நடத்திய போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பள்ளியில் அனுமதி மறுப்பதை எதிர்த்து நடத்திய போராட்டம் என அய்யன்காளியின் எல்லாப் போராட்டங்களுமே தீவிரமான தொடர்ந்த முயற்சிகளுக்குப் பிறகே வெற்றி கண்டவை.

தாழ்த்தப்பட்டவர்களைப் பள்ளியில் சேர்க்க அனுமதி மறுக்கும் தலைமை ஆசிரியரை எதிர்த்து ஒரு போராட்டம்; யாரையாவது சேர்த்தால் பள்ளியை கொளுத்தி விடுவோம் என்று அச்சுறுத்தும் மேல்சாதிக்காரர்களை எதிர்த்தும் போராட்டம். சேர்க்கப்பட்ட பிறகு பிள்ளைகளுக்குச் சொல்லித் தர மறுக்கிற ஆசிரியர்களை எதிர்த்துப் போராட்டம். சொல்லித்தர ஆசிரியர் யாராவது கிடைக்க மாட்டார்களா என்று நாடெங்கும் அலைந்து திரிவதில் ஒரு போராட்டம். எடுத்து வைத்தது ஒவ்வொரு அடியிலும் இப்படி எதிர்ப்பைச் சமாளித்தபடி முன்செல்ல வேண்டியிருந்தது. எக்கணத்திலும் மனம்தளராது, சுற்றி இருப்பவர்களின் மனமும் தளர்வடைய விடாது தொடர்ந்து உறுதியாகப் போராடி வெற்றியை அடைந்தார் அய்யன்காளி.

பள்ளியை எரிக்க வருகிறவர்களை எதிர்க்க சிலம்பப் பயிற்சி மிகுந்த

புது எழுத்து 9

படையொன்றைக் காவலுக்கு நிறுத்தி வைக்கார். வெகுதொலைவிலிருந்து வரும் நாயர் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியருக்கு ஒரு படகுப்பயணம், ஒரு சைக்கிள் பயணம் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து தினந்தோறும் அழைத்து வரும்படி நேர்கிறது. ஒவ்வொரு செயலிலும் பல முட்டுக்கட்டைகள், அனைத்தையும் சாமர்த்தியமாக வெல்கிறார் அய்யன்காளி.

அந்தக் காலத்தில் இந்தியச் சிற்றரசுகளிலேயே திருவிதாங்கூரில் மட்டுமே இருந்த சட்ட சபைக்கு ஸ்ரீமூலம் மக்கள் சபை என்பது பெயராகும். புலையர்களின் மேம்பாட்டுக்காக இந்தச் சபையில் உறுப்பினர்களாக இருந்த பி.கே. கோவிந்தன், அய்யன் காளி ஆகியோர் ஆற்றிய உரைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. தனிநூலாக விரிவு கொள்ளும் அளவுக்கு விஷயமுள்ளவை என்பதை நூலில் உள்ள ஒரு குறிப்பின் மூலம் அறிகிறோம்.

புலையர்கள் கலகம் என்னும் பகுதியில் வரலாற்றின் திருப்புமுனையாக சில சம்பவங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அய்யன்காளி வெளிப்படுத்தும் உறுதியும் போராட்டக்குணமும் தலைமைப்பண்பும் எல்லாத் தலைமுறையினரும் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும். கோயில் நுழைவு ஆணை தொடர்பாக காந்தி-அய்யன்காளி சந்திப்பும் திருவிதாங்கூரில் காந்தி நிகழ்த்திய உரைக்குறிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மகாராஜாவுக்கு காந்தி எழுதிய சிறு கடிதக் குறிப்பையும் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விவேகாநந்தரின் குறிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும் மனம் ஒரு வேறுபாட்டை உடனடியாக உணர முடியும். இன்றைய சமுதாய மாறுபாட்டுக்கும் அணுகு முறைக்கும் தாழ்த்தப்பட்டவர்களின் தொடர்ந்த போராட்டங்களும் வெற்றிகளுமே காரணம் என்பது மிகையான கூற்றாகாது. அய்யன்காளியின் அயராதஉழைப்பு இதன் பின்னணியில் இருந்த எப்போதும் மறக்கக் கூடாத ஓர் உண்மை.

ஓயாத அலைச்சல்களால் உடல்நலம் குன்றிய அய்யன்காளி 18.6.1941 அன்று இந்த உலகைவிட்டுப் பிரிந்தார். அவரது கல்லறையின் மீது மங்காத ஒளியக்கூடம் நிறுவப்பட்டது.

நூலின் பிற்பகுதியில் அய்யன்காளிக்கு முன்னாலும் சமகாலத்திலும் பிற்பாடும் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து பாடுபட்ட பலரைப் பற்றிய தகவல்கள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. வைக்காட்டு அய்யா சாமிகள், சட்டம்பி சாமிகள், நாராயணகுரு,சுவானந்த குரு தேவன், பீமானந்த சிவயோகி, குமாரன் ஆசான், சாங்கணச்சேரி பரமேஸ்வரன் பிள்ளை, வைக்கம் சத்தியாகிரகி டி.கே. மாதவன் என நீளும் அந்தப் பட்டியல் விரிவான ஒன்று. அய்யன்காளியின் வரலாற்றைப் படித்து முடித்ததும் நம் தமிழ்ச்சூழலிலும் இப்படிப் போராடிய போராளிகள் யாராவது இருக்கக் கூடும் என்று நம்பத் தோன்றுகிறது. வாய்மொழியாகவே அவர்கள் வாழ்க்கை மக்களிடையே புழங்கக் கூடும் என்றும் முயற்சியெடுத்துத் தொகுத்தால் தொகுத்து விட முடியும் என்றும் நம்பத் தோன்றுகிறது. என்றாவது ஒருநாள் அப்படி ஒரு வரலாற்று நூல் தமிழில் எழுதப்படுமானால் அதற்கு உந்து சக்தியாக விளங்கிய நூலாக நிச்சயமாக நிர்மால்யாவின் இந்த நூலைத்தான் சொல்லவேண்டும்.

புது எழுத்து 9

அ. முரளி

சிறுகதை



வியாபார வீதி

பெரிய கருப்புக்குடையைத் தலைகீழாக கவிழ்த்துவைத்து அதனடியில் கைக் குட்டைகளை, எடுத்து வந்த அட்டைப் பெட்டியை வைத்து சண்டே மார்க்கெட்டில் கடைபோட்டிருந்தவன் வியாபாரம் செய்துகொண்டு இருந்தான்.

மேல்நோக்கியிருந்து குடையின் கைப்பிடியில் ஒரு மடித்த கைக்குட்டை பளிச்சென தெரிந்தது. மற்ற கைக்குட்டைகள் குடையின் உட்புறத்தில் அடுக்கப்பட்டிருந்தன. அந்த முக்கிய வியாபார சாலையிலிருந்து பிரிந்து செல்லும் குறுகிய சாலையின் ஓரத்தில் நின்று கொண்டு சைக்கிளின் பாரிலும் கேரியரிலும் கைலிகளை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருந்த இன்னொருத்தன் கைக்குட்டைக்காரனைப் பார்த்து கண்ணடித்து சிரித்தபடியே சைகையால் என்னவோ கூறினான். அவனும் அந்த சைகையின் உள்அர்த்தத்தை புரிந்துகொண்டு "கச்சீப் .....கச்சீப்" என்ற தொண்டை கம்மிய குரலை நிறுத்திவிட்டு, கூட்டத்தில் தன்னுடைய புதுமனைவி கசங்கிவிடக்கூடாது என்பதற்காக அணைகட்டி செல்லுபவனைப் பார்த்துச் சிரித்தான். போன ஞாயிற்றுக்கிழமையை விட இந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டம் கொஞ்சம் அதிகம்தான். பக்கத்திலிருந்த பிளாஸ்டிக் சாமான் கடை கூட்டத்துக்குப் பின்னாலிருந்து குபுகுபுவென பொங்கியெழும் சோப்பு நுரைக்குமிழிகள் மனிதர்கள் மேல் மோதி வெடித்தன சத்தமின்றி.

"ரெண்டு முட்டை பஜி, ரெண்டு மொளகா பஜி" என்று சொல்லிவிட்டு ஒருவன் தன்னுடைய சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு கேரியரில் உட்கார்ந்து கொண்டு பெடலை பின் பக்கமாக சுற்றினான். அவன் கூட வந்த இன்னொருத்தன் தாளில் மடித்துக் கொடுத்த முட்டை பஜியையும் மிளகாய் பஜியையும் கடைகாரனிடம் வாங்கினான்.

"டேய் அங்க இன்னா பண்ற" என்று கடைகாரன் கேட்டதும் "ஒன்னுமில்ல" என்று வாடிக்கையாளர்கள் சூப்பு குடித்துவிட்டு வைத்த பிங்கான் கிண்ணங்களையும் கரண்டிகளையும் கழுவிக்கொண்டிருந்த பையன் சொன்னான்.

"இங்க வா .... அப்பறமா கழுவலாம்"

பையன் முட்டிமேல் கைவைத்து சோம்பேறித்தனமாக எழுந்து சென்றான்.

யாபார நேரத்துல சுறுசுறுப்பா இரு.... இல்லனா இந்த கரண்டியால ஒரே இழு" என்று பையனை மிரட்டினான் கடைகாரன்.

" இந்தா.... இந்த கொடத்துல தண்ணி புட்ச்சா" என்று கூறி காற்றில்லாததாலோ பஞ்சராகிப் போனதாலோ அழுங்கிக்கிடந்த தள்ளுவண்டிச் சக்கரத்துக்குப் பக்கத்திலிருந்த மஞ்சள் ப்ளாஸ்டிக் குடத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு பெட்ரோ மாக்ஸ் விளக்கை சரிசெய்தான். "மலி, கிரைண்டர், மிக்ஸி, டேபிள் கவர்" என்று கூட்டத்தின் நடுவில் ரோட்டில் கூவிக்கொண்டே இடதுகையில் உறைகளை அடுக்கித் தொங்கப்போட்டுக் கொண்டு, வலது கையில் ஒரு உறையை கூட்டத்தின் தலைக்குமேல் பிடித்து ஆட்டிக் கொண்டே தொண்டை வரள கத்திக்கொண்டிருப்பவனை சட்டை பண்ணாமல் மனிதர்கள் சண்டே மார்க்கட் சாலையில் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள்.

பழைய ஒயர் கட்டிலில் நீல ரெக்சின் ஷீட்டை விரித்து அதில் சிறுமிகளுக்காக மிடிசுடிதார் யாபாரம் பண்ணிக்கொண்டிருப்பவனிடம் அடிக்காசு கேட்கும் ரிக்சாக்காரனின் மகள் நின்று கொண்டிருந்தாள்.

"இன்னும் யாபாரமாவலை .... அப்பறமா வா" என்று அந்த வியாபாரி கூறினான். அவளும் பக்கத்துக்கடைக்கு நகர்ந்தாள்.

அருகிலுள்ள டீக்கடையில் அமோக வியாபாரம் டீக்கடைப் பையன் சூடான டீ கிளாஸ்களைத் தூக்கு வளையத்தில் ஏந்திக்கொண்டு, மும்பை விலைக்கே பனியன் வழங்குகிறோம் என்று வியாபார வாக்குறுதி கூறி கடைக்கு எதிரில் நின்று கொண்டு ஆர்ப்பாட்டமாக கூவி வியாபாரம் செய்துகொண்டிருக்கும வியாபாரிகளிடம் சென்றான்.

"டீ.......டீ " என்றான்.

" சூடா இருக்கா ......ஜில்லுனு இருக்கா" என்று எதிர்கடையில் கஸ்டமர் கேட்ட மேலே ஹேங்கரில் தொங்கும் சட்டையை எடுப்பதற்காக கோலையெடுத்து ஹேங்கரின் உள்ளே நுழைத்து எடுத்துக்கொண்டே கேட்டான் - அவனிடம் எப்போதும் நகைச்சுவையாக பேசி வெடைக்கும் பழக்கமுள்ள வெளியூர் வியாபாரி.

"சூடாத்தான் இருக்கு"

" டீயா போடறீங்க ... செரியான சுடத்தண்ணி"

" நானா போடறேன் .... போய் மொதலாளிய கேளு"

'ஒடனே மூக்குமேல கோவம் வந்துடுமே செரிசெரி ஒனக்கு .... மூணு டீ குடு"

கூட்டம் பொழுது நெருங்க நெருங்க இன்னும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. சீருடையின்றியும் சீருடையோடும் போலீஸ்காரர்கள் சுற்றிக்கொண்டே இருந்தனர்.

வழக்கம்போல பழைய புத்தகக்கடையில் புத்தகங்களை பிரித்துப் பார்த்துவிட்டும், சில ஆங்கில இதழ்களை வாங்குவதுபோல் பாவனை

செய்துகொண்டு அதை எடுத்து படம் பார்த்து முடித்ததும் இருந்த இடத்தில் பெயரை சொல்லி இருக்குதா" என்று கேட்டு "இல்லை" என்ற பதிலை மட்டும் வாங்கிக் கொண்டு கூட்டம் பாக்கச்செல்லும் வாடிக்கையாளர்கள் இருந்தனர்.

பையன் இப்போது வெங்காய பஜ்ஜிகளை தாளில் மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அப்போது ஒருவன் அவனிடம் கொஞ்சநேரத்துக்கு முன்னால் வாங்கிய மசால் வடைகளுக்கு கொடுத்த நோட்டின் சில்லரைகளை பெறவேண்டிய அவசரத்தில் கொஞ்சம் வேகமாக பேசினான்.

" தம்பி.... எவ்ளோ நேரம் சில்ரை கேக்கறன்" உடனே கடைகாரன் வாடிக்கையாளரை திருப்திபடுத்த அவனைத் திட்டினான்.

" சுறுசுறுப்பா இரு, அவ்ருக்கு சில்ரையை குடு .... உன் வேலையெல்லாம் ஊட்ல வச்சிக்க"

உடனே பையன் மூஞ்சை மொறைப்பாக வைத்துக் கொண்டே வாடிக்கையாளருக்கு எண்ணெய்க் கையால் சில்லரைகளைத் தந்தான். அதை பெற்றுக்கொண்டதும் அவன் 'யமகா' வண்டியைக் கிளப்பினான்.

சின்ன மொளகா பஜ்ஜியை சாப்பிட்டுவிட்டு காரம் தாங்காமல் " தண்ணி எங்க இருக்கு" என்று கேட்பவனிடத்தில் கடைக்குப் பின்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும் குடிநீரை காட்டினான் பையன். பின்னர் அந்த இடத்தை விட்டு நகர்வதைப் பார்த்த கடைகாரன் அவனைத் திட்டினான்.

"டேய் எங்கடா போற"

"ஒன்னுக்கு இருக்க"

"உனக்கு வேல நேரத்துலதான் எல்லாம் வரும்" பையன் வலதுபாதத்தை சரியாக ரோட்டில் பதியவைக்காமல் செல்வதைப் பார்த்துவிட்டு " என்னடா கால்ல முள்ளு குத்திடிச்சா" என்று கேட்டான்.

"இல்ல பாட்லோடு பொத்துகிச்சி"

" எங்க ...... கம்பெனியிலியா?"

" ஆமாம்" என்றான்.

" தம்பீ .... ஒடனே அதை கவனிக்கனும். பாட்லோடு வெஷம் ..... ஆஸ்பத்திரியிலபோயி தடுப்பூசி போட்டுக்க ஏதாவது ஒரு கிளினிக்ல காட்னாகூட ஊசிபோட்டு அனுப்புவான்" என்று ஒருவன் சூப்பு குடித்துக்கொண்டே பேசினார்.

"அட நீங்க ஒன்னு ..... "செரியான அறந்த வாலு. கைய காலை வச்சிகினு சும்மா இருந்தாதானே..... ரெண்டு மாசந்தான் இருக்கும். கம்பெனியில வேல செய்யும்போது எங்கியோ உழுந்து வாரிகினு வந்துது..... கால்ல சுளுக்கு. நாந்தான் அப்புறம் சுளுக்கு எடுத்து உட்டன்..... இப்ப தொலைவன்... இதுகளை வச்சிகினு மாரடிக்கறதவிட எங்கனா ஓடில்லாம்போல இருக்குது"

" புள்ளைன்னா அப்படிதான் இருக்கும்.... நாம்பதான் கொஞ்சம்

புது எழுத்து 9

பையன் குறுக்குச்சந்தையிலிருந்து வேகமாகத் திரும்பி மக்கள் நெரிசல் மிக்கக் கடையிலிருந்து குளிர்பானக் கடைக்குள் போய் நின்று நகரின் மாக்கட் அருகில் அதிகமாக ஜனக்கூட்டம் பொங்கி வழிந்தது. கடையின் எதிரே ஒன்றிரண்டு பனியன் கடை, முகம் பார்க்கும் கண்ணாடிக் கடை, சினிமா நடிகர் படங்கள் கடை என்று முழுதும் அந்த பிரமாண்ட கண்ணாடி மாக்கட் சாலையை நோக்கிய பார்வையை இரட்டிப்பாக்கி பக்கவாக பார்க்கான். பின்னர் காலில் பசு மடுக்குக் கொடுக்கும் அவசரத்தில் கடைக்கு கொண்டுக்கொண்டே சென்றான்.

ஆனால் அவன் வயதுப்பையன்கள் கண்ணாடி மாக்கெட்டில் மிகவும் சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறார்கள். முழம் போட்டளந்து காசாக வியாபாரம் செய்யும் பூக்கடைக்காரர்கள் பக்கத்தில் வீட்டில் துணிகளை போட்டு வைக்க உதவும் கொடிக்கயிற்றை மீட்டர் கணக்கில் அளவு நாடா (tape) வால் அளந்து வத்திக்குச்சியை பற்றவைத்து (சில சமயம் வாடிக்கையாளரின் சிகரெட் லைட்டரை உபயோகித்து) ஒயர் கயிற்றில் நுனியைக் காட்டி உருகியதும் அறுத்துக்கொடுக்கும் ஒருவன் கூட ஏறக்குறைய அவன் வயதில்தான் இருக்கவேண்டும்.

பாம்பே ரெக்ஸின் ஷீட்டின் நான்கு மூலைகளிலும் வெட்டி போட்ட எளநீர் குடுக்கைகளை கவிழ்த்துவைத்து. அந்த ஷீட்டை மொத்தம் குறுக்கில் மூன்று பகுதிகளாக பிரிக்கும் பொருட்டு, மூன்று டார்ச் லைட்டுகளை கொஞ்சம் இடைவெளிவிட்டு இருவரியாக கவிழ்த்து நிறுத்திவைத்து. ஒவ்வொரு பகுதியிலும் கத்தரிக்கோல், நெகம்வெட்டி, திருப்புளி, பக்குக்கண்ணாடி சாவி, டெஸ்டர், சென்ட் பாட்டில் சகிதம் வியாபாரம் செய்யும் இரண்டு பக்கத்து பக்கத்து கடைகளுக்கு நடுவில் கொஞ்சம் வழிவிட்டு உள்ளடங்கி இருக்கும் கண்ணாடி மாக்கெட்டில்.

ஜோராக எப்போதும் இயங்கும் குளிர் பானக் கடையில் வாடிக்கையாளரின் கட்டளைக்கு பணிந்து சுறுசுறுப்பாக சப்போட்டா ஜூஸ், பெப்ஸி, கொக்கோ கோலா என்று உற்சாகக்குரல் போட்டு எடுத்துவருபவனும் ஏறக்குறைய அவன் வயதுக்காரன்தான்.

எதிர்பாராமல் பூப்போட்ட பிங்கான் பொருள்கள் விற்கும் கடைக்கெதிரில் சந்திப்பை தவிர்க்க வேண்டும் என்று முயற்சி செய்தே சந்தித்துக்கொண்ட கல்லூரிப் பேராசிரியர் இருவர் வேறுவழியின்றி இங்கும் கல்லூரி விழாவில் நடந்த கலாட்டா பற்றிய சர்ச்சையில் மூழ்கியபடியே மந்தமாக ஒவ்வொரு கடையாக கடந்து வரும்போது பையன் உடலை உரசிச்செல்கிறது.

கூட்டத்துக்கு நடுவில் நடைபாதையில் ஒரு ஊதுகுழலை வாயில் வைத்து ஊதியபடியே மற்ற ஊதுகுழல்களை கழுத்தில் தொங்கும் பையில் வைத்துக் கொண்டு வியாபாரம் செய்பவன் சிறுவர்களை நடத்தி அழைத்துவரும் பெற்றோர்களை மீட்டினான். அம்மாவின் கைப்பிடித்தபடியே நடந்துசெல்லும் சிறுவனின் முகம் இவனை கடந்துவிட்ட பொழுதும் இவனையே, இவனின் ஊதுகுழலையே திரும்ப திரும்ப பார்த்தது.

புது எழுத்து 9

அந்த ஊதுகுழலில்தான் என்ன ஒரு அற்புதமான ஒலி! குழுவாலியே" என்று ஒலிக்கும் திரைப்படப் பாடல் தொடங்குவதற்கு முன் வரும் இனிமையான பறவையின் ஒலி அல்லவா அதிலிருந்து வருகிறது. பின்னர் நேரம் ஆக ஆக அந்த ஒலி சண்டே மார்க்கெட்டின் மூலை முடுக்கிலெல்லாம் சிறுவர்களின் மூலம் கேட்டது.

அந்த ஒலியைக்கேட்டதும் செருப்புக் கடைக்குப் பக்கத்தில் கடைபோட்டிருக்கும் கேசட் விற்பனை சென்டர்காரன் பிரபலமான புதிய டப்பாங்குத்து திரைப்பட பாடல்களின் மெட்டில் ஐயப்ப பக்தர்கள் கேட்டு சக்கவென்று இயற்றப்பட்ட பாடல் ஒலித்துக்கொண்டிருப்பதை சட்டென நிறுத்திவிட்டு 'குலுவாலியே' பாடலை கொண்ட கேசட்டை போட்டான். உடனே கேசட்களை அடுக்கி வைத்திருக்கும் பெஞ்சுக்கடியிலுள்ள ஒலி பெருக்கியிலிருந்து அந்த பாடல் ஒலித்தது.

வானலிலிருந்து சூடான வெங்காய பஜிகளை எடுத்து தட்டில் போட்டு விட்டு நெற்றி வியர்வையை துடைத்தான் கடைகாரன்.

இந்த நேரத்தில் பையன் கடைக்குப் பின்னால் சென்று வாந்தியெடுத்தான். "இன்னாடா வாந்தியெடுக்கற" என்று கடைகாரன் கேட்டான்.

"ஒடம்பா சரியில்லை?" என்று கடைகாரன் கேட்டதும் ஆமாம் என்பதற்கு அடையாளமாக தலையாட்டிவிட்டு மீண்டும் ஒக்காளித்து வாந்தியெடுத்தான். பின்னர் கொஞ்ச நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்து விட்டு வாய் கொப்பளித்து கழுவிக்கொண்டு வந்தான்.

கடைகாரன் அவன் நெற்றியில் கைவைத்துப் பார்த்தான்.

"ஜொரம் அடிக்குது..... செரிசெரி....நீ போய் அங்கபடுத்துக்க..... ஊட்டுக்கு போவும்போது எழுப்பறன்"

"எப்பா"

"இன்னாடா"

"என்ன ஊட்டுக்கு இட்டுகினுபோ....... என்னால முடியலப்பா....மயக்கமா வருது" "போவலாம்டா ...... போய் கொஞ்சநேரம் அங்கபடுத்துக்க..... இன்னும் கொஞ்சநேரந்தான் இருக்கு...... எல்லாரும் கடை கட்ருவாங்க ..... அப்பறமா போவலாம். அதுவரைக்கும் ஒரு தூக்கம் போடு......செரியா இருக்கும்.

பையன் சோர்ந்துபோன முகத்துடன் மூடிக்கிடக்கும் தட்டச்சுப்பயிலகத்தின் நடைபாதை வாசலில் படுக்கச்சென்றான்.

கூட்டம் குறைந்தபாட்டை காணோம். இரு புறமும் உள்ள கடைகளில் மக்கள் குவிந்து காணப்பட்டனர். சோடியம் விளக்குகளின் மஞ்சள் வெளிச்சத்தினடியில்.

விதவிதமான பைகளை அடுக்கி வியாபாரம் செய்து கொண்டிருந்தவன் கைதட்டி "ஹலோ வாங்க சார்" என்று விலைகேட்டுச்

புது எழுத்து 9

செல்பவனை கூப்பிட்டான்.

"வேற கடையில வாங்கிக்கரன்.... ஒன் கடை பாட்டுந்தானா இருக்கு" என்று பேசிக்கொண்டே அவர் வேறு கடைக்குச் செல்லாமல் பேரம் பேசினார்.

"எனக்கும் வாணாம் ...... ஒனக்கும் வாணாம்....... ஒரே ரேட்டு நூத்தி இருவத்தஞ்சி" என்று கடைகாரன் கையில் வைத்திருந்த பையை காட்டி கூறினான். "நூத்தி பத்தன்னா சொல்லு" என்று அவரும் கேட்டார்.

" ஏன் சார், இவ்ளோ அநியாயமா வெலை சொல்றீங்களே ...கட்டுபடி ஆவுமா எங்களுக்கு" என்று கொஞ்சம் கறாராக பேசிவிட்டு அந்த 'பேக்'கை இன்னொரு பெரிய 'பேக்கிற்குள் வைத்துஜிப் பை இழுத்து மூடினான். அந்த கடையில் இன்னொருத்தன் வாடிக்கையாளர்கள் கேட்கும் பைகளை எடுத்துக் கொடுத்தான். ஒரே பையில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கும் ஜிப்புகளை திறந்து திறந்து காண்பித்தான்.

"சரி வாங்க சார்" கடைக்காரன் இறங்கி வந்தான்.

அவன் கேட்ட 'பேக்'கை எடுத்துக்கொடுத்தான். அவர் அதை நன்றாக கவனித்து கவனித்துப்பார்த்தார். ஒவ்வொரு பக்க ஜிப்'பையும் திறந்து மூடினார். கைப்பிடியை கவனித்தார். பின்னர் அடுக்கி வைக்கப்பட்டு அடியிலிருக்கும் நீல 'பேக்' கை எடுக்கச் சொல்லி அதை கவனித்தார். அது அவருக்கு சரிப்பட்டு வரவே அதையே வாங்கிக் கொண்டார். நூத்தி ஐம்பது ரூபாயை கடைகாரனிடம் நீட்டினார்.

உடனே அவர் "பத்ரூபா சேன்ஜ் இல்லியா" என்று கேட்டதும் 'இல்லை' என்றார்.

பக்கத்தில் ப்ளாஸ்டிக் ஜாமான் கடைபோட்டிருக்கும் 'பாயி'டம் ஐம்பது ரூபாயை நீட்டி சில்லறை கேட்டார். அவரும் புடிவைத்த ப்ளாஸ்டிக் 'கப்'பை வாடிக்கையாளரிடம் விலைக்கு காண்பிப்பதை நிறுத்திவிட்டு, மேல் பாக்கெட்டில மடித்துவைத்துள்ள நோட்டுகளிலிருந்து பிரித்தெடுத்து, ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார்.

பக்கத்தில் ப்ளாப் ஜட்டி பதினைந்து ரூபாய், சாதா ஜட்டி பத்து ரூபாய் என்று விற்கும் இளைஞர்கள் இருவர் "பத்தே......பத்தே......பத்தே" என்றும் 'பாஞ்சே...பாஞ்சே.........." என்றும் கத்தும் குரல்களை "பெட்டிகோட்.....பெட்டிகோட்" என்று கையில் பெட்டிகோட்டுகளை காட்டிக் கொண்டு நடுரோட்டில் நின்றபடியே வியாபாரம் செய்பவனின் கம்மலான குரல் வெட்டியது.

இன்நேரம் நடுரோட்டில் நின்றுகொண்டு வியாபாரம் செய்பவர்களிடம் வழக்கம்போல் போலிசார் மாமூல் வாங்கிக்கொண்டிருக்கலாம்.

ரிக்சாக்காரர்களிடம் கடைக்குத் தகுந்தவாறு மூவாயிரம் நான்காயிரம் அட்வான்சாக கொடுத்துவிட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கடைபோடும் போது முனிசிபாலிட்டியிடம் அடிக்காசு கட்டி ரசீது வாங்கும்

ஈரக்கு கடைகாரர்களிடம் மட்டும் இவர்கள் பாறல் வாங்குவது கிடையாது அல்லது முடியாது.

கிராமத்தில் குடும்பத்தோடு டவுனுக்கு வந்து மூனு மணியாட்டம் சினிமா பார்த்துவிட்டு, அப்படியே பூங்கா, கடற்கரை என்று சுத்திவிட்டு, சண்டே மார்க்கெட்டில் பொருள்களையும் கூட்டதையும் வெறிக்கப்பார்த்துவிட்டு, சும்மா போகக்கூடாது என்பதற்காகவும் ஞாபகார்த்தமாகவும் அரியாமனை ஒன்றை கறாராக பேரம்பேசி வாங்கிக்கொண்டு திரும்பும் கூட்டத்திலுள்ள கன்னிப்பெண் ஒருத்தியின்மேல் வேண்டுமென்றே இடித்ததற்காகவும் கைவைத்ததற்காகவும் கிராமத்தானால் காட்டிக்கொடுக்கப்பட்ட ஒருவன் லத்தியடிபட்டு போலிசாரல் இழுத்துச்செல்லப்பட்டான்.

இந்த காட்சியை பார்த்தும் கும்பலில் விலை கேட்பதுபோல் கேட்டு கைவைத்த பனியனை திருட நினைப்பவனின் துணிச்சல் பறந்துபோய் விடும். பின்னர் அவன் கண்கள் எதிர்க்கடையில் ரெடிமேடு சட்டை ஒன்றை உடம்பின்மேல் வைத்து அளவு பார்ப்பவனை பார்த்து சோர்ந்துபோகும் - மேலே குறுக்கும் நெடுக்கும் கட்டப்பட்ட கழிகளில் தொங்கும் ஜீன்சுகளை பார்க்காமலேயே.

பையனுக்கு தூக்கம் வரவில்லை. பையன் எழுந்து அப்பாவிடம் சென்று தலைசொறிந்து நின்றான்.

"எப்பா"

" இன்னாடா"

"ஊட்டுக்கு"

" ஊட்டுக்குத்தான .....தோ.....இன்னுங் கொஞ்ச நேரம் பொறுத்துக்க .....கடை கட்ட போறாங்க...... போய்டலாம் .... அதுக்குள்ள ஏன் வந்த ..... போய் தூங்கு போ...... போவும்போது எழுப்பறன்"

உடனே பையன் தனக்குத்தானே முகத்தில் கைவைத்துப் பார்த்தான். ஜுரம் அடித்துக்கொண்டு தானிருந்தது.

"ஜுரம் அடிக்குதா"

"க்கும்"

"சூப்பு குடிக்கிறீயா"

"வேணாம்"

"பின்ன...டீனாச்சும் குடிக்கிறியா"

"ஊகூம்" என்று சொல்லிவிட்டு மீண்டும் பழைய இடத்துக்கே சும்மா படுத்திருக்கச்சென்றான்.

......ஆனால் இன்னும் சண்டே மார்க்கட் முடியவில்லை. எந்த ஒரு கடைகாரனும் கடையை ஏறக்கட்டவில்லை. வியாபாரக்குரல்களும் பேரம் பேசும் குரல்களும் அங்கு நிரம்பிதானிருந்தன.

புது எழுத்து 9

குலசேகரன்

கவிதைகள்

கண்ணாடியுள் உயிர் புதைத்து
உற்று நோக்கியபடியுள்ள
சட்டமிடப்பட்ட விழிகளில்
மேலும் முதுமையுறும் வீட்டு
விதானத்தில் நரையேறிய
ஒட்டடை கலைந்து தொங்கி
சுவர்ப் பாம்பு வளைவில்
நாக்குப் பிளவு அசைய
சுண்ணாம்பு உரிந்த
சருகுப் படிவங்கள் நொறுங்கி
காலடி விலகித் தேயும்
தூண்களை இறுக்கிச் சுற்றி
விநோதக் காட்டுச் செடி
பூத்தசையும் உச்சியில்
வளைகளில் எலிகள் வெளியாகி
எப்போதும் கொறிக்கும் தரை
வெடிப்புகளில் கூடு கட்டி
குருவிகள் எதிரொலிக்கப்
பிம்பங்களைக் கொத்திப் பெருக
மூலையில் இருள் தேங்கி
இரவு பகலாக கறையான்கள்
உத்திரங்களை அரித்து
உதிரும் கூரை மண்
நிலைத்த பார்வை மீது
படிந்து மூடிக் கொண்டிருக்கிறது.

புது எழுத்து 9




நினைவுகளில் சுற்றித் திரிந்த
களைப்பில் உறக்கத்தில் விழுந்து
கனவுக்குள் வந்து எழுகையில்
எக்காலமெனப் புரியா மயங்கி
சுற்றுப்புறம் மங்கிய
தேய்ந்து மறையும் ஓசைகள்
பாரமற்று மிதக்கும் இருப்பில்
மனம் கண் விழித்து
கையால் சுற்றித் தேடி
பெண்ணுடல் படும் உணர்வில்
உந்தத் தானாகத் தழுவி
தோன்றும் முகம் வேறாக
ஆடைகளைத் திறந்து போய்
உறுப்புகளைத் தொட்டெழுப்பி
உடலுள் அந்தரங்கமடைந்து
உறக்கப் பிரக்ஞை கொள்ள
பல கணங்கள் கடந்து
உச்சத்தில் விடிந்துற்றதால்
எல்லாம் மறுபடியும் நினைவுகளில்.

புது எழுத்து 9

மா. கணேசன்

கட்டுரை



வாசகன் இறந்து விட்டான்

மனிதன்-வாசிப்பு-படைப்பு-மொழி உறவுப்பிணைப்பு பற்றிய புதிய வெளிப்பாடுகள்

"we are within the culture of post modernism
to the point where its facile reputiation
is as impossible as any equally facile
celebration of it is complacent and corrupt"

- Fredric Jamesom

"நமது சகாப்தத்தில் விமர்சனம் என்பது இலக்கிய பிரதிகளை புரிந்து கொள்ளவும் , மதிப்பிடவும் உதவுகின்ற வெறும் இரண்டாம்பட்ச உபகரணங்களின் நூலகம் மட்டுல்ல, மாறாக விமர்சனம் என்பது அதனளவிலேயே வேகமாக வளர்ந்து வரும் ஒரு அறிவுத் துறையாகும்" என்பதாக டேவிட் லாட்ஜ் தனது "20ம் நூற்றாண்டு இலக்கிய விமர்சனம்" (1972) எனும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இக்கூற்று அடுத்து வந்த பதினைந்து ஆண்டுகளில் வெடித்தெழுந்த விமர்சனக் கோட்பாடுகளினால் எவ்வாறு ஆற்றலுடன் ஊர்ஜிதமாயிற்று என்பதை அவரது அடுத்த நூலான "நவீன விமர்சனம் மற்றும் கோட்பாடு" (1988) எனும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த வளர்ச்சியானது

முன்யூகிக்கவியலும்படி, இலக்கியத்தைப் பேணிப்பராமரித்து வருகின்ற கல்வி நிறுவன அமைப்புக்குள் மனத்தாங்களையும், இறுக்கத்தையும் உருவாக்கியது. இந்நவீன விமர்சனம் பற்றிய புகார்களில் மிகவும் பொதுவான ஒன்று: இந்நவீன விமர்சனத்தின் கோட்பாடு மீதான வெறித்தனமான பற்றானது மிகவும் அடிப்படையான வழியில் இலக்கியம் பயில்வதை கெடுக்கும் வகையில்; அதாவது பிரதியின் அர்த்தத்திற்கு மூலம் ஆசிரியனே என்பதையும் , பருண்மையான விளக்கம் என்பதற்கான

சாத்தியத்தையும் கேள்விக்குள்ளாக்கியதின் மூலம் குழி பறித்து விட்டது என்பது தான். ஆனால் அனைத்து நவீன விமர்சனக் கோட்பாடுகளும் மரபான மானிடவியல் கொள்கைகளுக்கு விரோதமாக இருக்கவில்லை. மாறாக பெரும்பாலானவை அவ்வாறிருந்தன" என்பதாக லாட்ஜ் கூறுகிறார். தொடர்ந்து நவீன விமர்சனக் கோட்பாடுகளைப் பயின்றிடும்படி பரிந்துரை செய்திடும் பாங்கில் அவர் கூறுவது இது தான். "எது முக்கியமானதென்றால், இப்புதிய கோட்பாட்டு ரீதியான சுய பிரக்ஞையானது சொந்தமாக ஈட்டப்படவேண்டிய ஒன்று: கடனாகப் பெறக் கூடியதல்ல அது அப்பிரக்ஞையை வெளியிடும் மூலநூலகளைப் பயில்வதனை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இம் மூலங்கள், பெரும்பகுதி, கடினமான பிரதிகளாக உள்ளன. அவைகளின் முடிவுகளை ஒருவர் ஏற்றுக் கொள்கிறரோ இல்லையோ, இந்நூல்களைப் புரிந்து கொள்ளும் முயற்சி என்பது அதனளவிலேயே ஒரு கல்வியூட்டும் வழிமுறையாகும்" என்பதாக டேவிட் லாட்ஜ் தனது நவீன விமர்சனம் மற்றும் கோட்பாடு" எனும் நூலின் முன்னுரையில் கூறியுள்ளார்.

உண்மையிலேயே நாம் பின் நவீனத்துவ காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ இல்லையோ அவ்வாறான அறிவிப்புக்களும், பிரகடனங்களும், விளம்பரங்களும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலின் மத்தியல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் இந்நவீன யுகத்தில் நம் தமிழகமானது மீதமுள்ள உலகிடமிருந்து துண்டித்திருக்கவியாலாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளும் போது நமக்கு அறிமுகப்படுத்தப்படும் அனைத்தையும் பெப்ஸி கோலாவிலிருந்து பின் நவீனத்துவம் வரை நாம் எதிர் கொண்டேயாக வேண்டும்.

தமிழில் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பியலில் தான் கோளாறு உள்ளது என்பதாக நாம் எண்ண வேண்டாம். ஏனென்றால் அசலும் மூலமுமான அமைப்பியலிலேயே கோளாறு உள்ளது என்பதைத்தான் டேவிட் லாட்ஜ் - னுடைய முன்னுரையில் காணமுடிகிறது. மேலும் இவ்வமைப்பியல்வாதிகளின் அதீதமான கோரிக்கைகளும் கோட்பாட்டு முடிவுகளும் ஒருபுறமிருக்க பிரடெரிக் ஜேமிஸன் கூறியபடி பின் நவீனத்துவத்தை நாம் கண்டு கொள்ளாமல் தட்டிக் கழிக்கவும் வேண்டாம். அதைத் தலையில் தூக்கிக் கொண்டு கொண்டாடவும் வேண்டாம். இயன்ற வரையில் அதை புரிந்து கொள்ள முயற்சிப்போம். மேலும் விமர்சனம் என்பதே அதனளவில் ஒரு அறிவுத்துறையாக வளர்ந்து விட்டது எனும் கூற்றின் உண்மைநிலையினையும் நாம் கண்டறிய வேண்டியுள்ளது.

நேரம் மற்றும் பிரதியின் நீளம் அகலம் முதலியவைகளின் சிக்கனம் கருதி பின் அமைப்பியலின் ஒரு சில கோட்பாடு பிரகடனங்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவைகளை நம்மால் ஏற்றக்கொள்ள முடிகிறதா, செரித்துக் கொள்ள முடிகிறதா வென்று காண்போம்.

முதலிடத்தில் பின் அமைப்பியலின் ஒரு சில கோட்பாட்டுக் கருத்தினங்களைக் கூட ஏற்றுக் கொள்ளாமல் நம்மால் அதனுள் நுழைந்து எவ்வித ஆய்வினையும் செய்யவியலாது. அதாவது "பிரதி" என்பதை ஏற்றுக்கொள்ளாமல் பிரதியியல் ஆய்வு எதையும் செய்யவியலாது. பிரதி

என்பது எல்லாமும் தான். ஒரு விடுப்புக் கடிதத்திலிருந்து, ஒரு கவிதை, சிறுகதை, நாவல், உரையாடல்பட்டியல், இன்னும் அனைத்துப் பேச்சும் எழுத்தும் செய்திப்பரிமாற்றம் எனும் செயற்பாடும் எல்லாமும் பிரதிகள் தான் என்பதாக ஒரு விரிவான அர்த்தத்தில் பிரதியை எடுத்துக் கொள்வோம்.

அடுத்து ஒரு பின்னமைப்பியல் பிரகடனத்தில் ஒரு பிரதியாகக் கொண்டோமேயானால் அதை எவ்வாறு நாம் புரிந்து கொள்கிறோம் என்பதை கட்டுப்படுத்திடவோ, நம்மை வழி நடத்திடவோ அப்பிரதியில் ஆசிரியனோ, எவ்வித ஆளுமையோ, தன்னிலையோ இல்லை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்வோம், ஆகவே அப்பிரகடனத்தை, பிரதியை நாம் எவ்வாறு புரிந்து கொள்கிறோம் என்பதன் பொறுப்பும் வழிமுறையும் நம்முடையதே. அப்பிரதியை எவ்வாறு பொருள் கொள்கிறோம் என்பது முழுவதும் நம்மைச் (வாசகன்) சார்ந்தது. எவ்வகையான அர்த்தத்தை, பொருளை நாம் அப்பிரதிக்கு வழங்குகிறோம் அல்லது நமது வாசிப்பின் போது உற்பத்தி செய்கிறோம் என்பதுவே அந்தந்த நேரத்திற்கு இறுதியானது என்றும் காணலாம்.

நாம் ஒவ்வொருவரும் சசூர், பார்த் போல அசலான தொழிற்பூர்வமான மொழியியல் ஆய்வாளராக இல்லையேன்றாலும் இயற்கையிலேயே நாம் அனைவரும் மொழியியலாளர்களே.மொழி பற்றிய பேச்சு(meta language) பற்றிக் குறிப்பிடும் போது "மொழியினைப் பயிலும் ஒவ்வொரு வழிமுறையும் குறிப்பாக தாய் மொழியினை குழந்தையானது கற்றுக் கொள்ளும் வழிமுறையும் மொழி பற்றிய மொழியின் செய்முறைகளை விரிவாகப் பயன்படுத்துகிறது" என்பதாக ரோமன் ஜேகோப்ஸன் கூறியுள்ளார். ஆனால் நம் ஒவ்வொருவருடைய மொழியிலும் நம்மையறியாமலே நனவிலி நிலையில் மேற்கொள்ளப்படுவதாகும். ஒவ்வொரு முறையும் நாம் சாதாரணமாகப் பேசும் போதும், எழுதும் போதும் மேற்சொன்ன மொழிப்பற்றிய மொழியின் செய்முறைகளை மேற்கொள்ளவே கொள்ளவே செய்கிறோம். மேலும் நம் ஒவ்வொருவருடைய மொழியியலும் வித்தியாசமானதும், தனித்தன்மையானதும் கூட.

ரோலன் பார்த்தின் "ஆசிரியன் இறந்து விட்டான்" எனும் பிரகடனத்தை எவ்வாறு கொள்வது. என்ன பொருளில் அவர் உரைத்தார் என்று அவரது கட்டுரையினை ஒட்டி ஒழுகிச் சென்று பொருள் கொள்வதா அல்லது கட்டுரையினை வாசித்து விட்டு அவர் இவ்வாறான பொருளில் சொல்லியிருப்பாரா , அல்லது வேறொரு பொருளில் சொல்லியிருப்பாரா என்று பலவகையிலும் சிந்தித்துக் குழம்பிப் போவதா? அல்லது அமைப்பியல் இதெல்லாம் நமக்கு ஒத்து வராது என்று ஒதுங்கிக் கொள்வதா? உண்மையிலேயே சசூர்,பார்த், தெரிதா போன்றோர்களது மொழியியலானது மிகவும் அலாதியானது. அதீத கற்பனையினாலானது. இவ்வாறெல்லாம் கூட மனிதனால் சிந்திக்கவியலும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் இவர்கள். அதே வேளையில் ஒருவரது மொழியியல் இன்னொருவருக்கு இருந்து ஒவ்வாமை தருவதாகக் கூட இருக்கவியலும் என்பது ஒரு உளவியல் உண்மை எனலாம். ஏனென்றால் சசூர், தெரிதா போன்றோரது மொழியியலைப் போல ஒரு எல்லைக்கு மேல் அளவு கடந்து நீட்டிக்கப்படும் எவ்வொரு செயற்பாடும் அர்த்தமற்றதாக முடியக்கூடும்.

புது எழுத்து 9

தெரிதா, பூக்கோ, பார்த் போன்றவர்கள் இறுதியில் என்னவானார்கள். இவர்கள் ஆரம்பகாலத்தில் மார்க்சியவாதிகளாக இருந்து பின்பு மார்க்சியத்தை மறுப்பவர்களாகவும் ஒருங்கமைப்புக்கள் மற்றும் அர்த்தங்கள் இவற்றிலிருந்து விடுதலை கேட்பவர்களாகவும், அவநம்பிக்கைவாதிகளாகவும், சூன்யவாதிகளாகவும் மாறிப்போய்விட்டனர். இவர்களது வாழ்க்கையும், இவர்கள் உருவாக்கிய பிரதிகளும் தொடர்பற்ற விஷயங்களா? இல்லை. இவர்கள் எழுதிய பிரதிகளில் இல்லாதது இவர்களது வாழ்க்கை எனும் பிரதியில் காணவியலும். தன்னால் படைக்கப்பட்ட பிரதிகளுக்கும் வெளியேயுள்ளதாகத் தோன்றும் ஆசிரியனது வாழ்க்கையும் ஒரு பிரதியே, நீட்சிக்கப்பட்ட பிரதி(Exiended Text) யே ஆகும். இவர்கள் எவ்வாறெல்லாம் வாழ்ந்தார்கள், சிந்தனை ரீதியாகத்தேய்ந்தார்கள், இவர்களது நம்பிக்கைகள், விருப்பு வெறுப்புகள் எல்லாமே பிரதிவகைப் பட்டதாகவே காணப்படவேண்டும். ஏனென்றால் ஒரு ஆசிரியன் ஒரு படைப்பை உருவாக்கியதும் இறந்து விடுவதோ, காணாமல் போய்விடுவதோ இல்லை. அது இயலாத காரியமாகும். அதாவது ஆசிரியன் என்பவனை ஒரு வெறும் உடலளவிலான உயிரி என்பதாகக் குறைத்துக் காணும் பட்சத்தில்தான்" ஆசிரியன் இறந்து விட்டான்" போன்ற மரண அறிவிப்பை ரோலன் பார்த்தினால் வெளியிடவியலும்.

ஆனால் ஆசிரியன் இல்லாமல் எப்பிரதியும் படைக்கப்படுவதில்லை. பிரதி என்பது எப்போதும் ஒரு ஆசிரியனை நம்பியே உள்ளது. எவ்வொரு பிரதியும் ஆசிரியன் எனப்படும் மனிதனின் அனுபவங்களும், நம்பிக்கைகளும், சிந்தனைகளும், கருத்துக்களும், அறிவும், அறிவீனமும் இன்ன பிறவும் சேர்ந்து உருவானதே. ஆகவே படைப்பு என்பது ஆசிரியனிடமிருந்து முற்றிலும் வேறானதோ, விடுபட்டதோ அல்ல. இம்மனிதன் வெறும் இரத்தமும் சதையும், எலும்புகளையும் கொண்ட உயிரி மட்டுமல்ல. இவன் தனது உடலுக்காகவும், உயிருக்காகவும் விலங்கையொத்த வெறும் ஜீவித்தலுக்காகவும் வாழ்வதில்லை. இவைகளுக்கும் மேலாகத் தான் கருதும் தத்துவத்திற்காகவும், கொள்கை கோட்பாட்டிற்காகவும், சித்தாந்தத்திற்காகவும், உண்மை என தனது உயிருக்கும் மேலாகக் கருதுகின்ற ஒன்றிற்காகவும் வாழ்கிறான். உண்மையில் அவன் தன்னை அந்த உண்மையுடன், கருத்துடன் பிணைத்தே காண்கிறான். ஆசிரியன் எனும் இந்த மனிதன் உடலும் உயிரும் உள்ள ஒரு ஜீவிமட்டுமல்ல அவன் இவைகளைக்கடந்து ஒரு உளவியல் ஜீவியாக வளர்ந்துள்ளான். எனவே ஆசிரியனை அல்லது எவ்வொரு மனிதனையும் அவனது கருத்துக்களிலிருந்து பிரிக்க வியலாது. உடலளவில் அவன் இறந்து போனாலும் தனது பிரதி வழியே அவன் வாழ்ந்து வருகிறான். ஒரு மனிதன்/ ஆசிரியன்/ வாசகன் இறந்து போனால் இன்னொருவன் பிறந்து விடுகிறான். ஒரு ஆசிரியனது படைப்பை தனதாக்கிக் கொள்ளும், தன் வயப்படுத்திக் கொள்ளும் வாசகன் இருக்கத்தான் செய்கிறான். ஒத்த மனதை, கருத்தையுடையவர்கள் என்கிற சாத்தியம் உள்ள வரையில் ஆசிரியன் வாசகன் என்கிற பிளவிற்கு இடமேயில்லை ஒரு தீர்க்கமான பார்வையுடைய வாசகனே ஆசிரியனாகிறான். ஆசிரியன் என்பவன் அடிப்படையில் ஒரு வாசகனே. பிரதியொன்றை படைக்க வேண்டிய தேவையும், அவசியமும், சந்தர்ப்பமும் வாய்க்கும் போது தீர்க்கமான வாசகன் ஆசிரியனாகி விடுகிறான்.

புது எழுத்து 9

அவன் ஒரு தேர்ந்த ஆசிரியனாக வளர்ந்திடும் போது ஒரு சிறந்த வாசகனுக்கான உதாரணமாகத் திகழ்கிறான். அவன் வாழ்க்கை எனும் பிரதியை எவ்வாறெல்லாம் வாசித்து அனுபவித்தான் என்பதைத்தான் பிற வாசகர்களுக்கு தனது பிரதியின் மூலம் படைத்துத் தருகிறான். பிரதி என்பதை இவ்விடத்தில் வைத்துக் காணும் போது, வாசிப்புச் சாத்தியங்களின் தொகுப்பு தான் பிரதி என்பதாக நாம் பிரகடனம் செய்திடலாம்.

ஆக ஒரு மனிதன் தனது சக - மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் கருத்துக்களை படைத்தவுடன் ரோலன் பார்த் எதிர்பார்ப்பது போல இறந்துவிடுவிதில்லை. எதிர்பாராத விபத்தில் அவன் இறந்து விட்டாலும் அவனது பிரதி (பார்வை, கருத்து) வாழ்கின்றது. அப்பிரதியுடன் ஐக்கியமாகிடும், தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் பிற மனிதர்கள் வாசகர்கள் இருப்பதை, உருவாவதை முற்றாக தவிர்த்து விட வியலாது.

முக்கியமாக பிரதி என்பது எந்த அளவிற்கு பன்முகத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றதோ அதற்குச் சற்றும் குறைவில்லாத அளவிற்கு ஆசிரியன் என்பவனும் பன்முகத்தன்மையுடையவனும், சிக்கலானவனுமாவான். ஆசிரியன் என்பவன் பிரதியை உற்பத்தி செய்கின்ற ஒரு எந்திரம் போன்றவனில்லை. ஒரு ஆழமான பார்வையில் அவனும் ஒரு பிரதியே. இன்னும் சொன்னால் ஒரு மகா பிரதி (super Text) யாவான். ஒரு ஆசிரியனது ஒரு பிரதியானது பன்முகத்தன்மையுடையது பன்முக வாசிப்பிற்கான சாத்தியங்களை உள்ளடக்கியுள்ளதே என்றாலும் அச்சாத்தியங்கள் ஒரு எல்லைக்குட்பட்டதே. ஆனால் இன்னும் எழுதப்படாத எண்ணற்ற பிரதிகளின் தொகுப்பாகிய ஆசிரியன் எனும் மகா பிரதி மட்டுமே எல்லையற்றது. ஏனென்றால் மனித மனம் அல்லது பிரக்ஞை என்பது அத்தகையது. ஆகவே ஆசிரியனுக்கும் பிரதிக்கும் உள்ள உறவானது ஒட்டு மொத்த மொழியியலாளர்கள் கருதுவது போல அவ்வளவு எளிமையான விஷயமல்ல. இவ்வுறவு மிகவும் சிக்கலானது. எவ்வளவு சிக்கலானதோ அவ்வளவிற்கு நுட்பமானது. பிரிக்கவியலாதது.

பிரதி என்கிற போர்வையில் பலவிதமான நொண்டிச் சாக்குகள் (Pretexts) இயங்குகின்றன. அதில் ஒரு பிரதானமான நொண்டிச் சாக்கு என்ன வென்றால் ஸ்டெர்ன் என்பவரின் சொற்களில், "பிரதி என்பது வாசகனும் ஆசிரியனும் பங்கு பெறும் ஒரு கற்பனை விளையாட்டின் களமாகும்.

இதையே வேறு சொற்களில் சொன்னால், பிரதி என்பது பரஸ்பரப் பிரக்ஞை ரீதியாக முன்னேற்றம் தரும் ஒரு வித மனோவிளையாட்டில் (mind Game) அறிவு ஜீவிய ஆட்டத்தில் ஆசிரியனும் வாசகனும் பங்குபெறுவதற்கான ஒரு நொண்டிச் சாக்குத்தான்.

ஒரு பிரதியை படைப்பதின் வாயிலாக ஆசிரியன் என்பவன் தன்னையும் பிறரையும், வாழ்க்கையையும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் தீவிரமான வாசிப்பிற்கு உட்படுத்திக் கொள்கிறான். இத்தீவிரமான வாசிப்பை வளர்த்தெடுப்பதே விமர்சனத்தின் தலையாய கடமையாய் இருக்க வியலும். ஆனால் நடைமுறையில் ஆசிரியனும், வாசகனும் விமர்சகனும் பலவித மயக்கங்களுடனும், பிரமைகளுடனும், போலித்தனங்களுடனும் இயங்குவதனால் தான் மொழி - பிரதி - ஆசிரியன் - வாசகன் ஆகிய

இவைகளுக்கிடையேயான நுட்பமான உறவினை புரிந்து கொள்ள முடியவில்லை அல்லது இப்புரிதல் இல்லாத காரணத்தினால்தான் இவர்கள் மோசமான படைப்புகளையும், விமர்சனங்களையும், வாசிப்புக்களையும் கொண்டுள்ளனர்.

உண்மையில் எவ்வொரு மோசமான ஆசிரியனும் ஒரு பிரதியை படைத்து விட்டு அதனுடன் சும்மா இருந்து விடுவதில்லை, சிற்றிதழ்கள், கடிதம், நேர்ச்சந்திப்பு, இலக்கிய கூட்டம் என்று எவ்வழியிலேனும் அவன் ஒரு மனோ விளையாட்டில் ஈடுபடுவதற்காக சக மனிதர்களிலிருந்து தனது வாசகனை அல்லது ஒரு மோசமான விமர்சகனையாவது இனம் காணக்கூடும். அவனோடு உரையாடக்கூடும். சர்ச்சை செய்யக்கூடும். எவ்வகையிலேனும் தனது வாசகனைப் பெறாத வரையில் ஒரு பிரதி உண்மையில் பிரதி ஆவதில்லை எனலாம். ஆனால் நடைமுறையில் ஒரு பிரதியின் மூலம் இல்லாவிட்டாலும் தனது இன்னொரு பிரதியின் மூலமாவது ஒரு ஆசிரியன் தனது வாசகனை அடையக் கூடும் ஆனால் ஆசிரியர்கள் எப்போதும் தங்களது வாசகர்களை எட்டி விடுகிறார்கள் எனலாம். ராஜேஷ் மற்றும் ராஜேந்திர குமார்கள் தங்களது பெருந்தொகையான வாசகத்திரளைப் பெற்றுள்ளார்கள். மௌனி தான் உயிருடன் இருந்த காலத்திலும் இறந்த பிறகும் கூட தனது வாசகர்களைப் பெற்றுள்ளார். ஏன், இன்றைய மோஸ்தரான சிந்தனையை அளித்திடும் உள்ளூர் பின் அமைப்பியல்/பின் நவீனத்துவவாதிகளும் தங்களுது வாசக சீடர்களைப் பெற்றே உள்ளனர். மேலும் வாசகர்கள் இருந்தும் அவர்களை தங்களது பிரதிகளின் மூலம் எட்டவியலாத ஆசிரியர்களும் இன்னும் தங்களுக்கான பிரதிகளைப் படைக்கின்ற ஆசிரியன் இல்லாத வாசகர்களும் இருக்கிறார்கள். தொடர்ந்து இவ்வழியிலேயே நாம் நமது ஆய்வினை அல்லது மனோ- விளையாட்டினை கொண்டு சென்றால் ஆசிரியன் - பிரதி வாசகன் -மொழி ஆகியவற்றின் நுட்பமான உறவுகளின் எண்ணற்ற இணைப்புக் கண்ணிகளை நாம் இனம் காணக்கூடும்.

அடுத்து, பிரதி என்பது ஆசிரியன் விளைவித்திடும் பொருளல்ல மாறாக பிரதியின் விளைபொருளே ஆசிரியன் என்பதாகக் காணும் ஆண்டனி ஈஸ்தோப் வகை பின் - அமைப்பியல் வழியே காணும் போதும்கூட பார்த்தின் ஆசிரியன் இறந்து விட்டான் என்ற கூற்று பொய்த் தகவலாகத்தான் போய் விடுகின்றது. ஏனென்றால், பிரதியின் விளைபொருளான ஆசிரியன் பார்த் கூறியது போல இறந்து விட்டாலும் அவ்வாசிரியனை இன்னொரு பிரதி ஏன் மீண்டும் விளைவித்திடாது? ஆம், ஆசிரியனால் எப்போதுமே தனது படைக்கப்பட்ட பிரதியை மீறி வளர்ந்திட முடியும். இன்னும் சொல்லப் போனால், ஆசிரியனுடன் அவனது பிரதியும், அவனது பிரதியுடன் ஆசிரியனும் தொடர்ந்து வளர்வது என்பது தவிர்க்க வியலாததாகும். ஏனென்றால் உண்மையில் ஆசிரியன் என்பவன் தனக்கு வெளியேயிருக்கும் எந்தவொரு அர்த்தத்தையும் தனது பிரதியில் பதிவு செய்வதில்லை மாறாக அவன் தன்னைத்தான் தனது பிரதி வழியே தேடுகிறான், தன்னையே அதில் பதிவு செய்கின்றான்.

இப்போது அடுத்த கட்டமாக பிரதிக்கும் மொழிக்கும் உள்ள உறவு குறித்துக் காண்போம். மொழிக்கும் பிரதிக்கும் உள்ள உறவும் சிக்கலானது, நுட்பமானது, பிரதி மொழியாலானது. அதாவது பிரதி அல்லது செய்திப்

புது எழுத்து 9

பரிமாற்றம் என்கிற தேவையினாலெழும் பிரதியாக்கமே மொழியை உருவாக்கி வளர்த்தெடுக்கிறது. பிரதியாக்கத்தின் தேவை இல்லாமல் மொழியின் தேவை இருக்கவியலாது. ஆகவேதான் மொழியானது பிரதி, அர்த்தம் ஆகியவைகளுக்கு முந்தியது எனும் கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இல்லை. மேலும் மொழியின் பிரச்சனை மொழி பற்றியதல்ல. முக்கியமாக அனைத்தும் ஏக காலத்தில் ஒன்றோடொன்று தொடர்புடையதாய், ஒன்றினையொன்று சார்ந்ததாய் தோன்றியவையாதலால் மொழி முந்தியதா? பிரதி பிந்தியதா? என்கிற கேள்விக்கும் இடமில்லை.

மொழிக்கும் பிரதிக்கும் உள்ள நுட்பமான உறவு ஒரு புறமிருக்க மொழியை நாம் எப்பொழுதும் எவ்வகையிலேனும் ஒரு பிரதி மூலமே அறிகின்றோம். அதாவது பிரதிக்கும் வெளியே தனித்து மொழி இயங்குவதில்லை பிரதிக்கும் வெளியே இருப்பதாய் எவ்வொரு மொழியும் இருக்கவும் இயலாது. பிரதிக்கும் வெளியே இருப்பதாகத் தோற்றமளிக்கும் மொழியையும் நாம் மொழி பற்றிய பிரதியின் மூலமே அறிகிறோம். அதே வேளையில் மொழி பற்றிய பிரதியும் மொழியால் ஆனதால் மொழியை மொழி மூலமே அறிகிறோம் என்கிற தோற்றத்தை அது தரலாம். - நமது தாய்மொழியான தமிழை தமிழ் மூலமே கற்கிறோம்.

அம்மா - அம்மா

அப்பா - அப்பா

என்று நாம் ஒவ்வொரு சொல்லாக தாய்மொழியை குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறோம். பிறகு தனிச் சொற்களிலிருந்து சொற்-தொடர்களை சொல்லித் தருகிறோம். அதாவது பிரதிக்கும் வெளியே இருப்பதாகத் தோற்றம் தரும் ஒரு மொழியை, இவ்விடத்தில் தமிழ் மொழியை நாம் குழந்தைக்குக் கற்றுத் தருவதாக எண்ணிக்கொள்கிறோம். ஆனால் எவ்வளவிற்கு மொழியும், பிரதியும் பின்னிப் பிணைந்துள்ளன என்கிற நுட்பமான உறவையே இவ்விடத்தில் நாம் எதிர்கொள்கிறோம். அதே வேளையில் எவ்வொரு மொழியின் தனிச் சொற்களும், சொற்றொடர்களும் பிரதி/பிரதியாக்கம் என்பதற்கு வெளியே இயங்குவதில்லை, இருப்பதில்லை. ஆக ஒரு மொழியின் தனிச் சொற்களையும், சொற்தொடர்களையும் பிரதியின் / பிரதிலாக்கத்தின் கூறுகளே எனலாம்.

அதாவது எவ்வொரு மொழியின் தனிச்சொற்களும் சொற்-தொடர்களும் இயற்கையிலுள்ள பொருள்களையும் அவைகளுக்கிடையேயான உறவினையும், இயக்கத்தையும் சுட்டுவதாக உள்ளவைகளே. இயற்கையிலுள்ள அனைத்துயுமே நாம் பெயரிட்டுள்ளோம். பொருட்களுக்கு இடையேயுள்ள இடைவெளியைக்கூட "இடைவெளி" என்ற சொற்கொண்டு அழைக்கின்றோம். பிரபஞ்சத்தில் உள்ள நமக்கு நன்கு தெரிந்தவைகளையும், புரிந்தவைகளையும் இன்னும் முழுவதுமாகப் புரிந்து கொள்ளாதவைகளையும் கூட (2ம் மனிதன், பிரக்ஞை, வாழக்கை, பொருள் பரிணாமம், பிரபஞ்சம்..) பெயரிட்டுக் குறிப்பிடவே செய்கிறோம். ஆக இயற்கையிலுள்ள எதையும் சுட்டாத, குறிக்காத ஒரு தனிச்சொல் என்று எதுவும் இல்லை. ஆகவே தனியே மொழி

என்று எதுமில்லை. இயற்கையினை, இயற்கையிலுள்ள பொருட்களை அறிவதற்கு கலையும் உணர்வும் அறிவும் அவசியமாகின்றன. மனிதப் பிரக்ஞை ஆகிய இவைகளின் உறவில் பிணைப்பில்தான் மொழி தனது இருப்பைப் பெறுகின்றது, இயங்குகின்றது.

மொழி என்று தனித்து எதுவொன்று இருப்பதால் நாம் உரையாடுவதோ, செய்திப்பரிமாற்றம் செய்வதோ இல்லை. மாறாக நாம் உரையாடுகிறோம், செய்திப்பரிமாற்றம் செய்கிறோம். ஆகவே மொழி இருக்கிறது. மேலும் பொதுவாக எப்போதும் எவ்வொரு பிரதியும் மொழி பற்றியதாக இருப்பதில்லை. குறிப்பாக மொழி பற்றியதாக அது இருக்க வேண்டும் எனும் வேளைகளைத் தவிர்த்து அந்த வேளையில் மொழி பற்றியதான பிரதியின் தேவையினை புரிவில்லாமல் நீட்டிக்கும்போது எந்த நோக்கத்திற்காக மொழியானது உருவாக்கப்பட்டதோ அதற்கு எதிரான திசையில் அது எம்மை இட்டுச் செல்லும். இதன் விளைவு தனி மொழியியலைப் போன்ற வடிகோடமான ஒன்று தான் சம்பவிக்கும். அதாவது "அர்த்தத்தை விட மொழியே முந்தியது", "வார்த்தைகளின் உலகே பொருள்களின் உலகைச் சிருஷ்டிக்கிறது" (லக்கான்), "எவ்வொரு பிரதியும் தன்னைப்பற்றியதே", "மொழி மொழிக்காகவே பயன்படுத்தப்படுகிறது" (முக்காரோவ்ஸ்கி) ...... இன்னும் இவை போன்ற மொழி குறித்த அதீத பாய்ச்சல்களைத்தான் அது விளைவிக்கும். இதன் அர்த்தம் மொழியியலே நமக்கு தேவையில்லை என்பதல்ல. மாறாக மொழியியலின் இடம், பங்கு பாத்திரமானது எல்லை மீறி அனைத்தையும் ஆக்கிரமித்துக் கொள்ளாமல் அனைத்தையும் விழுங்கி விடாமல் இருக்குமாறு அதன் எல்லைகளை நாம் வரையறுத்திட வேண்டும். இல்லாவிடில், மொழியானது தனது தோற்றத்திற்கும் இருப்பிற்கும், இயக்கத்திற்கும் எந்தெந்த அம்சங்களுடன் தொடர்புடையதாகவும், சார்ந்தும் உள்ளதோ அவ்வம்சங்களையெல்லாம் கழித்துக் கட்டிவிட்டு வெறும் மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கும் மிகவும் அபாயகரமான மாபெரும் மொழிவாத மாயை மட்டுமே மிஞ்சும். அதாவது "எவ்வொரு பிரதியும் தன்னைப்பற்றியதே", "இலக்கியம் தன்னைத்தானே எழுதிக் கொள்கிறது, ஆசிரியன் மரணமடைந்துவிட்டான்" "பிரதிதான் பேசுகிறது" "எழுத்து எழுதுகிறது" என்பதான இக்கூற்றுகளில் மனிதனுக்கான ஒரு சிறு இடம் கூட கொடுக்கப்படவில்லை. மொழிக்குக் கொடுக்கப்பட்ட அளவுகடந்த முக்கியத்துவம் இறுதியில் ஆசிரியனை மட்டுமல்லாமல் வாசகன் உட்பட மொத்தத்தில் அது மனிதனை மறுப்பதாக அமைந்து விடுகிறது.

மேலும், மரபான விமர்சனம் மற்றும் வாசிப்பு அணுகுமுறையானது ஆசிரியனை மையமாகக் கொண்டிருந்தது என்பது அவ்வணுகுமுறையின் முழுப்பரிமாணத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததாக கூறவியலாது. ஏனென்றால், அப்படிப்பட்ட மரபு என்றோ மரணித்துப் போயிருக்கும் அதோடு பின் அமைப்பியல் வாதிகளுக்கும் மாய்ந்து மாய்ந்து அதை கொல்ல வேண்டிய தேவையும் இல்லாமல் போயிருக்கும். அடுத்து ஆசிரியனுக்கும், பிரதிக்கும், வாசகனுக்கும் உள்ள நுட்பமான உறவைச் சற்றும் புரிந்து கொள்ளாததின் விளைவாகவே அமைப்பியலானது ஆசிரியனுக்கு

எதிரான துருவத்தில் வாசகனை நிறத்திப் பார்க்கின்றது. இது ஒரு வெறும் மலினமான யுக்தியே தவிர வேறில்லை. இது போன்ற மலினமான யுக்தியை அது எண்ணற்ற இடங்களில் பயன்படுத்தியுள்ளதையும் நாம் காணலாம். உதாரணத்திற்கு "P என்ற ஒலியன் இயக்கத்தன்மை கொண்டிருக்கக் காரணம் நவீன ஆங்கலத்தில் அது

'B 'என்ற ஒலியனுக்கு எதிரானதாக இருக்கிறது.'BIG' என்ற சொல்லுடன் முரண்பட்ட சொல்லாகவே 'PIG' என்ற சொல் இருக்கிறது. இவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவது ஒலியே தவிர பேசுபவரின் உள்நோக்கம் அல்ல" இவ்வாக்கியங்கள் ஆண்டனி ஈஸ்தோப் -னுடைய "சொல்லாடல் கோட்பாடு" எனும் கட்டுரையில் (உன்னதம்) ஜூலை-95,பக்-21) இடம் பெற்றுள்ளன.

அதாவது, நவீன ஆங்கிலத்தில் 'P' என்கிற ஒலியன் 'B 'என்கிற ஒலியனுக்கு எதிரானதாக இருக்கிறதாம். இது போன்ற குரோதம்,விரோதம் எல்லாம் எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் இடையே கூட இருக்கவியலும் என்பதான மரபான மண்டைகளுக்கு எட்டாத ஞான திருஷ்டி பின் அமைப்பியலுக்கு மட்டுமே கிட்டியிருப்பது அதனுடைய துருதிருஷ்டம் தான் போலும். மேலும் 'BIG' என்ற சொல்லிலிருந்து 'PIG' என்ற சொல்லை வேறுபடுத்திக் காட்டுவது ஒலியே தவிர பேசுபவரின் உள்நோக்கம் அல்லவாம். இதுவும் ஒரு அலாதியான அசதியக் கண்டுபிடிப்புத்தான் போலும். ஆனால் இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், சசூரின் மொழிமைய வாத மொழியியலானது தேய்ந்து இறுதியில் வெறும் சப்த/ஒலிமைய வாதமாக குறைந்துவிட்டது என்பது தான். உண்மையில் எல்லாவற்றுடனுமானதொரு அங்கக பிணைப்பில்(organic ginking) தான் மொழியானது இருப்பு பெறுகின்றது , இயங்க முடிகின்றது, என்கிற உண்மையை பின் அமைப்பியலானது ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகளில் கோட்டை விட்டுவிட்டது என்பதற்கான எடுத்துக்காட்டுதான் இது. இவ்வாறெல்லாம் சர்ச்சை செய்வதன் மூலம் நாம் மரபை கட்டிக் காக்கவோ, தூக்கி நிறுத்திடவோ முயற்சிக்கவில்லை மாறாக மரபை உள்வாங்கிக்கொண்டு அதைக் கடந்து மீறிச் செல்வதன் தேவையினை எவ்வாறு பின்னமைப்பியலானது தனது தகிடுதத்தங்களின் மூலம் ஈடு செய்து கொள்கின்றது என்பதே இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது. ஓரிரவிற்குள்ளேயே பெரும் மாற்றங்களைச் செய்திடவியலாது என்பதை சாக்காகக் கொண்டு விட்ட மரபானது தன்னைத் தானே மீறிச் சென்றிட பிரயத்தனம் எதுவும் செய்யாமல் அருவருக்கத்தக்க தொரு மெதுவான கதியில் ஊர்ந்து கொண்டுள்ளது.

"இதுவரை ஆசிரியனின் சிந்தனையில் இருந்து வெளிவருவது தான் படைப்பு என்ற கருத்து அடிபட்டுப்போய் வாசகனின் வெளிப்பாடுதான் படைப்பு என்ற கருத்து மேற்கத்திய இலக்கிய உலகில் தோன்றியுள்ளது" என்பதாகவும், "எழுத்தாளனைக் காட்டிலும் வாசகனுக்கும் வாசிப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்பதாகவும் அறிவிக்கப்படுகின்றன.மரபான விமர்சனம் ஆசிரியனை மையமாகக் கொண்டதென்றால் அமைப்பியல் விமர்சனம் வாசகனை மையமாகக் கொண்டது என்பதாக நாம் எடுத்துக் கொள்ளலாம் என்பது ஒரு பார்வை. ஆனால் தெரிதாவிய பின்னமைப்பியலானது வாசகனுக்குத்

தரும் இடம் எது?" கேட்பவர் இன்றியே எழுத்து இயங்குகிறது. எதிரே இல்லாத யாரோ சிலருக்கு எதையேனும் தெரிவிப்பதற்காக ஒருவர் எழுதுகிறார். உண்மையான எழுத்தாளருக்கு அவரது வாசகர் இல்லாமலிருக்கலாம் ஆனாலும் கூட மற்றவர்களால் படிக்கப்படத்தக்கதாக இருப்பதுவே எழுத்தின் இயல்பு. ஏனெனில் எழுத்து ஒரு வகைக் கருவி" இப்பிரகடனங்களில் எதுவும் வாசகன் இருக்கிறான், அவனுக்கு இடம் உண்டு என்பதைக் கூறவில்லை. அதாவது இறுதியாக வருகின்ற வாக்கியங்களில் மட்டும் வாசகனுக்கும் இடம் உண்டு வாசகன் என்பவன் இருக்கிறான் என்று கூற முயிற்சித்து தோற்றுவிடுகிறது. 'மற்றவர்களால் படிக்கத்தக்கதாக இருப்பது எழுத்தின் இயல்பு' அதாவது எழுத்தின் இயல்பினை பிரதானப்படுத்தும் நோக்கில் வாசகன் சாகடிக்கப்பட்டுவிடகிறான்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி மொழிமையவாத நவீன மொழியலானது சப்த மைய வாதமாகவும் பின்பு எழுத்து மைய வாதமாகவும் குறைந்து போனதோடு படிப்படியே அது ஆசிரியனைக் கொன்றதோடு நில்லாமல் வாசகனையும் கொன்றுவிட்டது எனலாம்.

ஆனால் ஆசிரியன் வாசகன் போன்ற சொற்பிரயோகங்கள் வழக்கொழிந்து போனவைகளாகவே கருதப்படவேண்டும். பிரதியொன்றைப் படைப்பதனால் ஒருவன் ஒருவன் ஆசிரியனாகிவிடுகிறான் என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. அப்பிரதியை வாசிக்கும் ஒருவன் வாசகனாகிடுவதும் புரிந்துகொள்ளக்கூடியதே. இருவரும் பிரதியை மையமாகக் கொண்டே உருவாகிறார்கள். ஒருவர் படைப்பு எனும் செயலின் வழியாகவும், இன்னொருவர் வாசிப்பு எனும் செயலின் வழியாகவும். ஆனால் படைப்புக்கும் வாசிப்பிற்கும் உள்ள உறவு எத்தகையது என்பதை புரிந்து கொள்ளாமல் இச்சிக்கலிலிருந்து விடுபடவியலாது. வாசிப்பிற்கு இடம் கொடுக்கும் படைப்பானது ஏதோவொரு வகையில் வாசிப்புடன் நெருங்கிய தொடர்புடையதாகவே இருக்க வேண்டும். படைப்புக்கும் வாசிப்புக்கும் உள்ள இடைவெளியானது ஒரு நுட்பமான தளத்தில் மறைந்து விடக் கூடியதாக இருக்க வேண்டும். ஆசிரியனும் வாசகனும் ஒரு பொதுவான செயற்பாட்டின் மூலம் ஒன்றிணைந்திடுகிறார்கள். இவ்விருவருக்கும் பொதுவான பண்பாக என்றென்றும் இருந்து வருவது வாசிப்பு. இவ்வாசிப்பானது படைப்பாளியினிடத்தில் ஒரு விசேட மாற்றத்திற்குள்ளாககி படைப்பாகி விடுகிறது. ஆகவே " படைப்பு" என்பதை வாசிப்பின் ஒரு பிரத்யேக வடிவம் எனலாம். இதையே வேறு சொற்களில் சொன்னால், வாசிப்பில் படைப்பும், படைப்பில் வாசிப்பும் உள்ளடங்கியுள்ளது எனலாம்.

ஆசிரியன் என்பவன் தனது படைப்பை இயற்கையின் படைப்பிலிருந்து தனது வாசிப்பின் மூலம் உருவாக்குகிறான். உண்மையில் வாசகனின் வாசிப்பு என்பது பெருமளவில் ஒரு படைப்பை " மறு - படைப்பு"(Re- construction) செய்வதற்குச் சமமானதாகத் தோன்றுகிறதே தவிர பின் அமைப்பியல் கூறுவது போல சிதைத்தல், கட்டுடைத்தல் (De - construction) என்பதனை ஒத்திருப்பதாகத் தோன்றவில்லை. ஆக படைப்புச் செயற்பாடும் , வாசிப்புச் செயற்பாடும் ஒன்றுக்கொன்று எதிரானதாக இயங்குவதில்லை எனும் போது ஆசிரியனும் வாசகனும்



எதிரெதிர் துருவங்களில் நிற்பதில்லை. இருவரும் சகபயணிகளே. ஆசிரியனைப் போலவே வாசகனும் தனது வாசிப்பின் மூலம் தனக்கு வெளியேயிருக்கும் யாதொரு அர்த்தத்தையும் பிரதியில் தேடவில்லை. அவன் தன்னைத்தான் பிரதினூடே தேடுகின்றான். இவ்விடத்தில் பிரதி என்பது ஆசிரியனுக்கோ வாசகனுக்கோ சொந்தமானது கிடையாது. மாறாக அது மனிதனுக்குச் சொந்தமானது. ஏனென்றால் மொழி, படைப்பு, பிரதி,எழுத்து,வாசிப்பு இவையனைத்தும் மனிதப்பிரக்ஞை எனும் உளவியல் ஊடகத்தின் கூறுகளே , கருவிகளே.

ஆகவே, வாசகன் என்பவன் மரபான அர்த்தத்திலும், இன்னும் ஆசிரியன்,தன்னிலை, பிரதியினுள் பொதிந்துள்ளதாகக் கருதப்பட்ட அர்த்தம் என்று பலவித 'மாயை'களை உடைத்தெறிந்தும் வாசகன் எனும் மாயையினை உடைக்கவியலாத கையறு நிலையில் வாசகனை உயர்வாகப் பேசி தனது வாதத்தினை பிரச்சாரம் செய்து வரும் பின் அமைப்பியலின் அர்த்தத்திலும் இறந்து போய்விட்டான்.


ஆக,ஆசிரியனும், பிரதியும் (காண்க:காலச் சுவடு-14, எம்.ஏ. நுஃமானின் 'பிரதியின் மரணம்' கட்டுரை) தற்போது வாசகனும் இறந்து போன பிறகு மிஞ்சுவது எது? மோசமான வாசிப்பு, நல்ல வாசிப்பு, மேலோட்டமான வாசிப்பு, ஆழமான வாசிப்பு சாதாரணமான வாசிப்பு, அசாதாரணமான என்று எண்ணற்ற பல வகைகளுடன் கற்றுத்தரவியலாத வாசிப்பு மட்டுமே என்றென்றும் உள்ளது. வாசிப்பு உள்ளது. ஆகவே பிரதி உள்ளது. பிரதி உள்ளது. ஆகவே மொழி உள்ளது.

புது எழுத்து 9

என்.எம்.பதி

கவிதை

தாஜ்மகால் கிண்ணங்கள்




ஆண் காதல் கொண்டவர்
அனைவரும் ஷாஜஹான் தானே
மூன்று கிண்ணங்கள் சீமையிலிருந்து
மூன்றும் இனிய மெல்லிய வண்ணங்களில்
மிகவும் விலையாய் இருந்திருக்கும்
வாங்கிய கருப்பையாவிற்கு எழுபது
எண்பது ஆண்டுகளுக்கு முன்னால்
சிங்கையின் வீதியிலோ சீனத்துக் கடையிலோ?
மெடான் தெருவிலோ? இரங்கூன் வீதியோ?
பளிங்கே போல் ஆனால் மலிந்த கண்ணாடி
மூடிகள் தகரமாயினும் பொன் என மெருகு
ஏற்றி அதன் மேல் பொறுமையற்று அந்நியக்
கரங்கள் அவசரமாய் பொறித் திருந்த
"கரு" என எழுத்துக்கள்
பொருள் எப்படியும் கொள்ளவே.
ஆனால் இன்று துருவாய்
கருத்துப்போக

அழகுக் குழம்பா? பூமணமோ? வேறு
ஏதேனும் வாசம் வீசும் மேல் பூச்சா?
வாங்கிய கைகள் அவன்மனம்
வாங்கியவள் உடல் மேல் எங்கெங்கோ
பாய்ந்து தவழ்ந்து படுத்து உறங்கியிருக்கும்?
கல்லுக்கட்டியில் பழம் பொருள் க்டையில்
கண்டதும் ஆசையுற்றேன்,விலை அதிகம்
காதல் பரிசுக்கு ஈடா காசு!
காணும் போது எல்லாம் நிரம்பும் ததும்பும்
பறக்கும் பரவசம் காதல்கிண்ணம் மனம்.
கூடவே தோன்றும் இப்போது
எங்கே அவர்கள்?
மூன்றாம் மாடத்தில் நில வொளியில்
பேரர்மார்களை அணைத்து வெள்ளிப்
பேலாவில் பால்ச் சோறு ஊட்டிக் கொண்டா?
அன்றி ஒன்றாயிருந்த அன்றில் என்று
புரைக் கண்ணால் குறை ஒளியில் வெறித்தடம்
நோக்கி அன்றியும்
கல்லறை அன்னம் கரைத்த
சாம்பல் காற்று என்றா? கூறுகிறதில்லை விடையாய்
நிரம்பும் மனம் இனிய துன்பம்
ஆறும்வடுக்களின் கீழே காயம் என்று.

ஹெய்ன்ரிச் போல்

கதைகள்





1. எனது சோகமான முகம்

நான் கப்பல் துறையில் நின்று கொண்டு கடல் பறவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, வழக்கமான தனது ரோந்து சுற்றலில் வந்து கொண்டிருந்த ஒரு போலீஸ் காவலனின் கவனத்தை எனது சோகமான வாடிய முகம் ஈர்த்திருக்க வேண்டும். உண்பதற்கு ஏதாவது கிடைக்கும் என்ற வீணான தேடலில், வட்டமிடும் பறவைகள் திடீரென்று மேல் நோக்கிப் பாய்ந்து சென்று கீழே கடலை நோக்கி வேகமாக இறங்குவதைப் பார்ப்பதிலேயே நான் மூழ்கிப் போயிருந்தேன். துறைமுகமே வெறிச்சோடிக்கிடந்தது. கடல்நீர் பச்சை நிறத்தில் எண்ணெய் கரண்டினால் கடிக்கும், அடர்த்தியாகவும் இருந்தது. பிசுக்கு ஏறி போல் இருந்த நீரின் மேல் பரப்பில், எல்லாவகையான கழிவுகளும் குப்பை கூளங்களும் மிதந்து கொண்டிருந்தன. ஒரேயொரு கலத்தைக்கூட காணமுடியவில்லை. பாரம் தூக்கிகள் துருபிடித்துக்கிடந்தன. சரக்குக் கிடங்குகள் கொட்டகைகள் நிலை குலைந்து போயிருந்தன. நாவாய்த்துறையின் கறுத்த இடிபாடுகளுக்கிடையில் எலிகளும் கூட வசிப்பதாகக் காணோம். எங்கும் அமைதி ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

நான் ஒரு குறிப்பிட்ட கடற்பறவை (Sea ʃull) யின் மீது பார்வையைச் செலுத்தி அதன் பறக்கும் நடவடிக்கையைக் கவனித்துக்கொண்டிருந்தேன். வானத்தில் காற்றின் வரி இடி முழக்கத்தை முன் கூட்டியே உணர்ந்த தூக்கணாங்குருவியைப் போல காற்றில் மிதந்து கொண்டிருக்கும் அது. எப்போதாவது, கிரீச்சிடும் கத்தலோடு மேலே வட்டமடித்துக்கொண்டிருக்கும் தன் கூட்டத்தோடு சேர்ந்து கொள்வதற்காக மேல் நோக்கிய பாய்ச்சலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் என்று

உள்ளாசையை? வெளிப்படுத்திக்கொள்ளும் சுதந்திரம் மட்டும் எனக்கு இருந்திருக்குமானால் கடற்பறவைகளுக்கு உணவளிப்பதற்காக முதலில் அதை நுணுக்குகளாக்கித் தூவி, ஏதோவொரு இடத்தில் குவியலாகப் பரப்புவதற்கான ஒரு குறிப்பிட்ட அறுதியிட்ட வெள்ளைப்புள்ளியை உருவாக்குவேன் ; அப்போது அப்பறவைகள் அங்குமிங்கும் அலையாமல் அம்மையப்புள்ளியையே குறியாகக் கொண்டு பறக்கும் ; ஒரு கொத்துக் கயிறைச் சேர்த்து இழுப்பதைப் போன்று ஒரு ரொட்டித்துண்டை வீசி எறிந்து வட்டமடித்துக்கொண்டும் குறுக்கும் நெடுக்குமாக தாழப் பறந்து கொண்டு கீச்சீட்டுக் கொண்டிருக்கும் பரபரப்பான பறவைகளை வலைக்குள் இணைத்து வைப்பேன். ஆனால், நானோ அவைகளைப் போலவே பசியோடும் சோர்வோடும் இருந்தேன் ; இருந்தாலும் என் துன்பத்திற்கிடையிலும் நான் மகிழ்ச்சியாக இருந்தேன்; ஏனெனில் கைகளை என் கால் சட்டைப் பைகளில் விட்டுக்கொண்டு கடற்பறவைகளைப் பார்த்தபடி என் சோகத்தில் மூழ்கியவாறு அங்கு நின்று கொண்டிருப்பதில் ஒரு நிம்மதியை நான் உணர்ந்தேன்.

திடீரென்று அதிகாரப்பூர்வமான ஒரு கை என் தோளைத் தொட்டதை உணர்ந்தேன். ஒரு முரட்டுக்குரல் ம்.... இப்போது என்னோடு வா என்றது. அந்தக்கை என் தோளை இறுகப்பற்றி என்னைத் திருப்பி நிற்கச் செய்ய முயன்றது, ஆனால் நான் அதற்கு மசியாமல் அக்கையை உதறிவிட்டு அமைதியாகக் கூறினேன், " நீ ஒரு கிறுக்கன்" என்று. "தோழனே, இன்னும் என்கண்களுக்கு தெரியாமலிருந்த அவன் கூறினான். உன்னை நான் எச்சரிக்கிறேன்!

'ஐயா', என்று நான் உறுதியான குரலில் அழைத்தேன்.

ஐயா, என்று என்னைக் கூப்பிடுவதற்கு என்ன அர்த்தம்

அவன் கோபத்தோடு கத்தினான். நாம் எல்லோரும் தோழர்கள்தான்.

இப்படிக்கூறிவிட்டு என்னைச் சுற்றி எதிரில் நின்று என்னைப் பார்த்தான்; நிம்மதியாக இங்குமங்குமாக சுழன்று கொண்டிருந்த என் பார்வையை என் முகத்தை பலவந்தமாகப் பிடித்து அவனது எளிமையான, சாதாரணமான, நேர்மையான முகத்திற்கு நேராகக் கொண்டு வந்து பார்க்கும்படிச் செய்தான்; இருபதாண்டுகளுக்குள் மேலாக தனது கடமையைச் செய்வதைத் தவிர வேறொன்றுக்கும் தகுதியில்லாத ஒரு எருமையைப் போலவே பெருமிதத்தோடு இருந்தான்.

'என்ன காரணத்துக்காக' .... என்று நான் கேட்கத் தொடங்கினேன்.

போதுமான காரணங்கள் இருக்கின்றன என்று இழுத்து "உன் சோகமான முகமே போதும்" என்றான்.

நான் சிரித்துவிட்டேன்.

சிரிக்காதே. அவனது எரிச்சல் நியாயமானதுதான். உரிமம் பெறாத விலைமாதோ, தள்ளாடும் மாலுமியோ, திருடனோ, தப்பித்து ஓடும் ஒரு குற்றவாளியோ சிறைப்பிடிக்க அவனுக்கு கிடைக்கவில்லை என்பதால் அவன் மிகவும் மனச்சோர்வு அடைந்திருப்பான் என்று முதலில் நான்

நினைத்தேன். ஆனால், இப்போது உண்மை நிலையை உணர்ந்து கொண்டேன். என்னைச் சிறைபிடிப்பதுதான் அவனுடைய நோக்கமாக இருந்தது.

" ம், இப்போது என்னோடு புறப்படு "

'எதற்காக?' நான் மீண்டும் அமைதியாகக் கேட்டேன். என்ன நடக்கிறது என்பதை நான் உணர்வதற்கு முன்பாகவே, என் இடது கை மணிக்கட்டு ஒரு மெல்லிய சங்கிலியால் சுற்றப்பட்டிருப்பதை அறிந்தேன்; உடனே எனக்குப் புரிந்து விட்டது மீண்டும் ஒரு முறை நான் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்று. நிச்சுக்தெரியாமல் அலைந்து கொண்டிருக்கும் அக்கா ற்பறவைகளை நோக்கி திரும்பி நின்று அவைகளைக் கடைசியாக ஒரு முறை பார்த்தேன். அமைதியான சாம்பல் நிற வானத்தைப் பார்த்தேன். திடீரென்று திரும்பி நீருக்குள் பாய்ந்துவிட முயன்றேன். தலைமைக் காவலர்களால், காவல் நிலையத்தின் பின்புறத்தில் மூச்சு முட்டித் திணறும்படி அடித்து நொறுக்கப்படுவதைவிட அல்லது சிறையில் மீண்டும் அடைக்கப்படுவதைவிட, அழுக்கு நுரைகளோடு கிடக்கும் அந்தச் சாம்பல் நீரில் தன்னந்தனியாக மூழ்கி விடுவது மிகவும் விரும்பத்தக்கது என்று எனக்குத் தோன்றியது. ஆனால், அந்தப் போலீஸ்காவலர் சட்டென்று என்னைப் பிடித்திழுத்து தன்னோடு இறுகச் சேர்த்துக் கட்டித் தழுவிக் கொண்டதால், என்னை நானே எல்லாவற்றிலிருந்தும் விடுவித்துக்கொண்டு சுதந்திரமானவனாகும், எனது எல்லா நம்பிக்கையும் வீணாயிற்று.

" இன்று மீண்டும் ஒரு முறை நான் கேட்டேன் "

நீ எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கின்றது.

"நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்" என்று உரக்கவே சொன்னேன்.

" உன் சோகமான முகம்.........." அவன் தலையாட்டினான்.

ஆனால், இந்த சட்டம்; புதுசாச்சே............? நான் கேட்டேன்.

இது பிறப்பித்து முப்பத்தியாறு மணிநேரம் ஆன பழைய சட்டம்; ஒவ்வொரு சட்டமும் அதைப் பிரகடனப்படுத்தி இருப்பத்திநாலு மணி நேரத்துக்குப்பிறகு நடைமுறைக்கு வருகின்றது உனக்குத் தெரியுமென்றாலும் எனக்கு நல்லா தெரியும்.

" ஆனா அத நான் கேள்விப்பட்டதே இல்லையே"

இப்படி சொல்றது என்னைக் காப்பாத்திடாது. ஒலிபெருக்கி, நாளிதழ்கள் இன்னும் பல வகையிலும் அது நேத்து பிரகடனப்படுத்தப்பட்டிருக்கு இதைச் சொல்லி என்னை சற்று வெறுப்போடு பார்த்துவிட்டு மேலும் தொடர்ந்தான். பத்திரிக்கை, இதழ்கள், வானொலி போன்றவற்றின் அருள் கொடையில் பங்கு பெற முடியாதவர்களுக்காகவே துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டு நாட்டின் எல்லா வீதிகளின் மீதும் வானத்திலிருந்து தூவப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தோழனே

கடந்த முப்பத்தியாறு மணி நேரமும் நீ எங்கே காலங்கழித்துக் கொண்டிருந்தாய் என்பதை நாங்கள் விரைவிலேயே கண்டுபிடிப்போம்.

அங்கிருந்து என்னை இழுத்துச் சென்றான். முதன்முறையாக வெளியிலிருக்கும் குளிரால் என் உடல் நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்; குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள என்னிடம் குப்பாயம் இல்லை. என் வயிற்றின் நுழைவாயிலில், உண்மையில் பசியுணர்வு திரண்டு புரண்டு உறுமிக்கொண்டிருப்பதை முதல் முறையாக அப்போதுதான் உணர்ந்தேன். மேலும், நான் மிகவும் அழுக்காகவும், முகம் மழிக்கப்படாமலும், கந்தலாடையில் இருப்பதையும் அப்போதுதான் முதன்முறையாக எண்ணிப்பார்த்தேன். ஒவ்வொரு தோழனும் சுத்தமாகவும், முகம் நன்றாக மழிக்கப்பட்டும், மகிழ்ச்சியாகவும், நன்றாக உணவருந்தியும் காணப்படவேண்டும் என்று சட்ட திட்டங்கள் இருப்பதையும் முதன் முறையாக அறிந்தேன். சோலைக்காட்டு காவல் பொம்மையே, திருடிவிட்ட குற்றத்தை கண்டுபிடித்து விட்டதைப் போலவும் அதற்காக அதை அதன் கனவு உலகமான நிலத்தின் ஓரத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதைப் போலவும், அவன் என்னை தனக்கு முன்பாக தள்ளி நடக்க வைத்தான். வீதி மனித நடமாட்டமின்றி கிடந்தது. காவல் நிலையம் மிகுந்த தொலைவில் இல்லை. என்னைச் சிறை பிடித்ததற்கான ஏதோவொரு காரணத்தை விரைவில் கண்டுபிடித்து விடுவார்கள் என்று எனக்குத் தெரிந்ததுதான். என் இதயம் கனத்திருந்தது காரணம் என் சிறுவயதில் நான் புழங்கிய இடங்களின் வழியாக அவன் என்னை அழைத்துச் சென்றதுதான். துறைமுகத்தைப் பார்த்த பிறகு அந்த இடங்களுக்குத்தான் செல்ல எண்ணியிருந்தேன்; புதர்கள் நிரம்பியிருந்த பொதுப்பூங்காக்கள், அகன்ற நடைபாதைகள்-இவை எல்லாமே இப்போது சமன்படுத்தப்பட்டு முறையாக ஒழுங்காக நாற்சந்திகளாக ஏற்பாடு செய்யப்பட்டு, திங்கள், புதன், மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டுப்பற்றுக்குழுக்கள் உடற்பயிற்சி செய்யவும் நடைபயிலவும் ஒதுக்கப்பட்டிருந்தன. வானம் மட்டுமே முன்பு இருந்ததைப் போலவே இருந்தது. காற்றும் முன்பிருந்ததைப் போலவே எனது பழைய நாட்களில் எனது இதயம் நிறைய கனவுகளாக இருந்த காலத்தைப் போலவே இருந்தது.

நாங்கள் நடந்து சென்ற பாதையில் இங்குமங்குமாக, காவல் (போர்வீரர்) குடியிருப்புக்களின் அனேக சுவர்களில் அரசாங்க முத்திரைகளுடன் அறிக்கைகள் தொங்கவிடப்பட்டிருந்ததைப் பார்த்தேன். புதன்கிழமைகளில் இச்சுகபோகமான இன்பங்களில் பங்கெடுக்க வேண்டியது யாருடைய முறை என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. சில குறிப்பிட்ட மதுபானக்கடைகளும் கூட தங்களின் மதுபான வகைகளின் அடையாளங்களை அப்படி விளம்பரத்தட்டிகளாகத் தொங்க விட்டுக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தன. நேர் செங்குத்துப் பட்டைகளாக தேசிய வண்ணங்கள் இளம் தவிட்டு நிறம், அழுத்தமான தவிட்டு நிறம், இளம் தவிட்டு நிறம் என்று இருக்கும்படி தகரக் குவளைகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட ஒரு பியர் குவளையின் படம்: அதிகார பூர்வமான புதன்கிழமை குடிப்பவர்களின் பட்டியலில் தங்களின் பெயர்களைப் பார்த்தவர்களின் இதயங்கள் சந்தேகத்திற்கிடமின்றி

மகிழ்ச்சியால் நிரம்பியிருக்கும். நிச்சயமாக அவர்கள் புகழ்க்குடை பியனை பருகும் வாய்ப்பை தவறவிடாமல் அதில் பங்கெடுப்பார்கள்.

நாங்கள் கடந்து சென்ற எல்லோருமே தங்களின் நன்றாக ஆவலுக்கன் அடையாளத்தை தவறாமல் தங்கள் முகத்தில் வெளிப்படுத்தினர் ஒரு வேளை போலீஸ் காவலனைக் கண்டதில் அவர்களது சேர்வற்ற செயல்பாடுகளின் ஆர்வ ஒளிவட்டம் மேலும் அதிகமாக ஒளிவீசத் தொடங்கியதோ என்னவோ, அவர்கள் எல்லோரும் தங்களின் நடையின் வேகத்தை மேலும் விரைவுபடுத்தினர். கடமையில் தங்களது துல்லியமான ஈடுபாட்டை வெளிப்படுத்தத் துவங்கினர். சாக்குக் கொட்டகைகளிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த பெண்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட முக மலர்ச்சியான களிப்பை வெளிப்படுத்தும் செயலை மகிழ்ச்சியைப் பதிவு செய்வதை மிகவும் சிறப்பாகவே செய்தனர். வீட்டை நிர்வகிக்கும் பெண்ணின் கடமையைச் செய்வதில் புன்சிரிப்புடனான மகிழ்ச்சியையும் களிப்பையும், அவர்கள் காட்ட வேண்டும் என்னும் எதிர்பார்ப்புக்கு ஏற்பவே அவர்கள் நடந்து கொண்டனர். எனெனில் ஆகக்குச் சொந்தமான தொழிலாளிக்கு ஒவ்வொரு இரவும் ஒரு முழுமையான உணவை தயாரித்தளிப்பதோடு, அவனது உற்சாகத்தைப் புதுப்பிப்பதும் அவனது மனைவியின் கடமையாகும்.

ஆனால், எங்கள் பாதையில் நேரடியாக குறுக்கிடுவதற்கு யாருமே கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதைப் போன்று எல்லோருமே மிகத் திறமையாக எங்களைத் தவிர்க்க முயன்றனர். தெருக்களில் மனித வாழ்க்கையின் அடையாளம் எங்கெல்லாம் தென்பட்டதோ அங்கெல்லாம் எங்களுக்கும் முன்னால் எங்களை சேர்ந்து இருபது அடி தூரத்திற்கு சென்று அவர்கள் மறைந்து போய்க்கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் சாக்குக் கொட்டகைக்குள் வேகமாக நுழைந்தோ ஒரு மூலையைச்சுற்றிச் சென்றோ மறைந்து போக முயன்றனர். மற்றும் சிலர் தங்களுக்குப் பழக்கமே இல்லாத புதிய வீடுகளுக்குள் நுழைந்து வெளிக் கதவுக்குப் பின்னால் பதட்டத்தோடு நின்றுகொண்டு எங்கள் காலடியோசை அடங்குவதற்காகக் காத்திருந்தனர்.

ஒரேயொரு முறைதான், ஒரு குறுக்குத் தெருவை நாங்கள் கடந்து போய்க் கொண்டிருந்தபோது, ஒரு வயதான மனிதனை நேருக்கு நேராகச் சந்தித்தோம். அவருடைய பள்ளி ஆசிரியர் அடையாள அட்டை என் பார்வையில் பட்டது. எங்களைத் தவிர்ப்பதற்கு அவருக்கு போதிய வாய்ப்பு கிடைக்கவில்லை, எனவே, அவர் 'மனமில்லாமல் முயன்றார். வரையறை செய்திருந்த வகையில் (முழுமையாக இழிவுபடுத்துவதன் அடையாளமாக தனது உள்ளங்கையால் தனது தலையில் தானே மூன்று முறை அறைந்துக்கொண்டு போலீஸ் காவலனுக்கு வணக்கம் செலுத்திய பிறகு - என் முகத்தில் மூன்று முறை காறித்துப்புவதன் மூலமும் அசிங்கமான அழுக்கான துரோகி என்னும் கட்டாயப் பழிச்சொல்லை என்மீது சுமத்தியும் தனது குடிமகனுக்குரிய கடமையைச் செய்ய முயன்றார் என்றே சொல்வேன். அவரது இலக்கு (குறி) என்னவோ சரியானதுதான். ஆனால் அன்றைய பகல்பொழுது மிகுந்த வெப்பமாக இருந்ததால் அவருடைய தொண்டையும் மிகவும் வறண்டு போயிருந்திருக்க வேண்டும். என்மீது ஒரு சில துளிகள் மட்டுமே விழுந்தன. என்னையும் அறியாமல் இயல்பாக

என் சட்டைக்கையினால் துடைக்க முயன்றேன். அதனால் போலீஸ்காவலன் என் பின்புறம் எட்டி உதைத்தான். தன்கை முட்டியால் என் முதுகின் மீது ஓங்கி தாக்கினான், உணர்ச்சியற்ற குரலில் முதல்கட்டம் என்று முழங்கினான். அதாவது இத்தாக்குதல் முதல்முறையாக எல்லா போலீஸ்காவலர்களாலும் கொடுக்கப்படும் தண்டனையின் மென்மையான வடிவமாகும்.

பள்ளி ஆசிரியர் அவர் செல்ல வேண்டிய பாதையில் விரைந்து சென்று விட்டார். ஏறக்குறைய எல்லோருமே எங்களை நேரிடையாக சந்திப்பதைத் தவிர்த்து விலகிச்சென்றனர். ஒரு வெளுத்த, பருத்த, பொன்னிற முடியை உடைய பெண்மணி மட்டும், மாலை நேரக் களியாட்ட இன்பத் துய்ப்புகளுக்கு முன்னதாக காதல்-கூடாரங்களுக்கு எதிரில் வரையறுக்கப்பட்ட நல்ல காற்று வாங்குவதற்காக உலவிக் கொண்டிருந்தவள், கபடமான முத்த முத்திரை ஒன்றை என்னை நோக்கி ஊதினாள். நான் நன்றியுடன் புன்னகைத்தேன். போலீஸ் காவலன் அதைக் கவனிக்காததைப் போல் பாசாங்கு செய்ய முயன்றான். இத்தகைய பெண்மணிகளுக்கு மட்டும் அத்தகைய உரிமைகளை வழங்க வேண்டிய தேவை அவர்களுக்கிருந்தது. மற்ற தோழர்கள் சட்டப்படி கேள்விக்கிடமின்றி கடுமையான தண்டனையைப்பெற்றுத்தீர வேண்டியவர்களாவர். பொதுவான நடைமுறை மனவுறுதியையும் மன அமைதியையும் பராமரிப்பதில் அவர்கள் போதுமான அளவுக்குப் பங்காற்றுவதில் அவர்கள் பொதுவான சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக (வெளிப்படையாக கூறாமல்) கருதப்பட்டனர். நெடுந்தொலை நோக்கில் வருங்காலங்களில் விளைவுகளைத் தரக்கூடிய இச்சலுகை, தாராளமயமாக்க துவக்கத்தின் ஒரு அடையாளம் தான் இது என்று, (அரசியல்) தத்துவ ஒளியான பேராசியர் பிரௌய் கொய்த் பி.எச்.டி., டி.லிட்., அவர்கள் புகழால் சுட்டப்பட்டுள்ளது. தலைநகருக்கு வரும் வழியில் ஒரு பண்ணை வீட்டில் வைத்து நேற்று முன்தினம்தான் இதை நான் படித்தேன். ஒரு மாணவன்-அந்த விவசாயியின் மகனாகவே இருக்கலாம்-மிகவும் வேடிக்கையான சில குறிப்புகளால் அந்த இதழின் சில பக்கங்களை அழகு படுத்தியிருந்ததையும் நான் பார்க்க நேர்ந்தது.

நல்ல வேளையாக இப்போது நாங்கள் காவல் நிலையத்தைச் சென்றடைந்தோம். அதே நேரத்தில் சங்குகள் ஒலித்தன. தடுத்து அடக்கி வைக்கப்பட்ட மகிழ்ச்சியின் வெளிப்பாடுகளை முகத்தில் தேக்கிய ஆயிரக்கணக்கான மக்களின் வெள்ளம் தெருவில் பாய்ந்தோட வேண்டுமென்பதற்கான அடையாளம் அது. (வேலை முடிவடைகின்ற நேரத்தில் ஒருவரது மகிழ்ச்சி வெளிப்பாடுகள் தடை செய்யப்பட்டிருப்பதாக காட்ட வேண்டியது அங்கு தேவைப்படுகின்ற ஒன்றாகும். இல்லாவிட்டால் வேலை செய்வது மிகவும் கடினமானதாகத் தோன்றிவிடலாம். வேலை தொடங்கும்போது அதை அனுபவித்து மகிழ்ச்சியோடு செய்வதாகத் தோன்ற வேண்டும்-பாடுவதும் கொண்டாடுவதுமாக இருக்க வேண்டும்) இந்த ஆயிரக்கணக்கான மக்களும் என்மீது வேலை முடியும் நேரத்துக்கு முன்பான பத்து நிமிடங்களை குறிப்பிட்டு சங்கு ஒலித்தது. அந்தப் பத்து நிமிடங்களை ஒவ்வொரு தொழிலாளியும் தங்களை முழுமையாக தூய்மைப்படுத்திக்கொள்ள பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று

புது எழுத்து 9

எதிர்பார்க்கப்படுவார்கள். இது அரசாங்கக் கொலையாளியின் குறிக்கோளு வாசகமான மகிழ்ச்சியும் தூய்மையும் என்பதற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

உள்ளூர் காவல் நிலையத்தின் நுழைவாயில் ஒரு குறுகலான பெட்டி போன்ற அமைப்பு. அங்கு காவலுக்கு நின்றிருந்த இரு வாயில் காப்பாளர்களை நான் அவர்களைக் தாண்டிச் செல்லும் போது வழக்கமான உலகியலாக தண்டிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் பலன்களை எனக்குத் தந்தனர். தங்களின் துப்பாக்கிகளால் என் நெற்றிப்பொட்டின் மீது ஓங்கி இடித்தனர். துப்பாக்கிகளின் கைப்பிடியே முறியும்படி என் தோள் எலும்பின் மீது பலமாக அடித்தனர். இதுவும் கூட அரசாங்கச் சட்டம் எண்.1-ன் பீடிகை (முன்னுரை)க்கு இணங்கத்தான். ஒவ்வொரு காவல்துறை அதிகாரியும், எந்தவொரு கையகப்படுத்தப்பட்ட அல்லது பிடிபட்ட (அதாவது சிறை பிடிக்கப்பட்ட என்று பொருள்) நபர் எதிர்படும்போது அப்படி சிறைபிடித்த அதிகாரியைத் தவிர மற்றவர்கள் வன்முறையை நிகழ்த்திக்காட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். கைது செய்யப்பட்ட (நபரை சிறைபிடித்த) அதிகாரி, அந்த நபரை விசாரிக்கும்போது, தேவையான உடல்சார்ந்த தண்டிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கட்டத்தில் பங்கு கொள்ள உரிமை அளிக்கப்படுகிறார். உண்மையான அரசாங்க சட்டம் எண்.1 பின்வருமாறு அதை விளக்குகின்றது: ஒவ்வொரு காவல் துறை அதிகாரியும் யாரை வேண்டுமானாலும் தண்டிக்கலாம்; ஒரு குற்றத்தை செய்த எந்தவொருவரையும் அவர் தண்டித்தே ஆக வேண்டும். எல்லா தோழர்களுக்கும் தண்டனை உண்டு. யாருக்கும் தண்டனையிலிருந்து விதிவிலக்கு என்பது போன்ற எதுவும் கிடையாது. தண்டனையிலிருந்து விதிவிலக்கும் கிடைக்கலாம் என்ற விதி மட்டும் உண்டு.

அப்போது நாங்கள் பெரிய பெரிய ஜன்னல்களை அதிக எண்ணிக்கையிலமைந்த ஆளரவமற்றுக் கிடந்த ஒரு நீண்ட தாழ்வாரம் வழியாக போய்க்கொண்டிருந்தோம். பிறகு தானாகவே ஒரு கதவு திறந்துகொண்டது. அங்கு காவலிருந்த வாயில் காப்பாளர்கள் ஏற்கெனவே எங்கள் வருகையை அறிந்திருந்தனர். அந்த நாட்களில், எல்லோரும் மகிழ்ச்சியாகவும், சீர்பாடுகளோடும் இருக்கும்போது, ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு கட்டளைப் படி பெற்ற ஒரு வாசகத்தை தங்களால் முடிந்தவரையில் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டிருக்கும்போது, கையகப்படுத்தப்பட்ட (சிறைபிடிக்கப்பட்ட) தோழரின் வருகை என்பது அந்த நாட்களில் இயல்பாகவே ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும். ஒரு மேசை, அதன்மீது ஒரு தொலைபேசிக்கருவி, இரண்டு நாற்காலிகளைத் தவிர ஏறக்குறைய காலியாக இருந்த ஒரு அறைக்குள் நாங்கள் சென்றோம். அறையின் நடுவில் நின்றுகொண்டேயிருக்கும்படி செய்யப்பட்டேன். போலீஸ்காவலன் தன் கவசத் தொப்பியைக் கழற்றி விட்டு நாற்காலியில் அமர்ந்தான்.

முதலில் சற்று நேரம் அமைதியாக இருந்தது. எதுவும் நடைபெறவில்லை. அவர்கள் எப்போதுமே அப்படித்தான் செய்வார்கள். இது மிகவும் மோசமான கட்டம். என்முகம் மெல்ல மெல்ல சோர்வுற்று

வாடி வதங்குவதை நான் உணர்ந்தேன், நான் மிகுந்த களைப்போடும், பசிபோடுமிருந்தேன். இதற்குள்ளாக, சோகம் தேங்கிய அந்த மகிழ்ச்சி பின் கடைசி துணுக்கு அடையாளமும் மறைந்து போயிருந்தது; அதன் மிச்சம் மீதியாவது என்னிடமிருந்தது என்று எனக்குத் தெரியும்.

சில வினாடிகளுக்குப் பிறகு,உயரமான வெளுத்த முகம் கொண்ட அமைதியான ஒரு மனிதன் அறைக்குள் வந்தான். ஆரம்ப விசாரணையாளரின் இளம் நீல நிற சீருடை அணிந்திருந்தான். எதுவும் பேசாமல் நாற்காலியில் உட்கார்ந்து என்னைப் பார்த்தான்.

தகுதிநிலை ?

சாதாரணத் தோழன்.

என்று சொன்னேன்.

கடைசியாக செய்த வேலை ?

குற்றவாளி ?

இரண்டு காவலர்களும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

எப்போது, எங்கே விடுதலை பெற்றாய்?

நேற்று,12-வது கட்டடம், அறை எண். 13

எங்கே போக அனுமதி?

தலை நகருக்கு

சான்றிதழ்.... ?

என் சட்டைப் பையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சான்றிதழை எடுத்து அவனிடம் கொடுத்தேன். அதை அவன் பச்சை அட்டையுடன் இணைத்து விட்டு அந்த அட்டையில் என்னைப் பற்றிய விவரங்களைக் குறிக்கத் தொடங்கினான்.

உன்னுடைய இதற்கு முந்தைய குற்றம்?

மகிழ்ச்சியான முகத்தோடு இருந்தது.

இருவரும் மீண்டும் பார்வைகளைப் பறிமாறிக் கொண்டனர்.

விளக்கமாகக் கூறு, விசாரணை அதிகாரி சொன்னான்.

நான் கூறத்தொடங்கினேன். அப்போது, பொது துக்கநாளாக கடைபிடிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருந்த அன்று ஒரு நாள், என் மகிழ்ச்சியான முகம் ஒரு போலீஸ் அதிகாரியின் கவனத்தைக் கவர்ந்து விட்டது. அன்றுதான் தலைவர் இறந்த (ஆண்டு) நினைவுநாள்.

தண்டனைக்காலம் ?

ஐந்தாண்டுகள்.

நடத்தைச் சான்று ?

புது எழுத்து 9

மோசம்.

காரணம் ?

வேலை-உற்சாகத்தில் பற்றாக்குறை (வேலையில் உற்சாகமின்மை). அடுத்து என்னை நெருங்கி வந்தான் ஒழுங்காக, என் முன்பற்கள் நான்கை தட்டி உடைத்தெறிந்தான். நான் காலம் கடந்து போன குற்றவாளி என்று குறிப்பிட்டுக் காட்டப்படுவதற்கான அடையாளம் அது. இது ஒரு மிகுதியாக்கப்பட்ட நடவடிக்கை என்று நான் எண்ணிப்பார்க்கவேயில்லை. அதன்பிறகு அந்த முதல் கட்ட விசாரணை அதிகாரி அறையிலிருந்து சென்றான்; பெரிய விசாரணை அதிகாரி பருத்த உடலோடு கடும் தவிட்டு நிற சீருடையில் அறைக்குள் வந்தான்.

அவர்கள் எல்லோருமே என்னை அடித்தார்கள். விசாரணை அதிகாரி, முதன்மை விசாரணையாளன், தலைமை விசாரணையாளன், ஆய்வாளர், மற்றும் இறுதிகட்ட ஆய்வாளர் எல்லோருமே அடித்தனர். அத்துடன் போலீஸ்காவலன் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள, உடல் சார்ந்த எல்லா தண்டனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டான். என் சோகமான முகத்தின் காரணமாக எனக்கு பத்தாண்டு சிறைவாச தண்டனையையும் விதித்தனர். அப்போது என் மகிழ்ச்சியான முகத்திற்காக விதித்த ஐந்தாண்டு தண்டனையோடு சேர்த்து மேலும் ஒரு ஐந்தாண்டு சிறை தண்டனை.

மகிழ்ச்சி மற்றும் சவுக்காரத்தின் அடுத்த பத்தாண்டுகள் என்னால் உயிரோடு இருக்க முடியுமானால், இப்போதே, என் முகத்தில் எந்தவித உணர்வுமே வெளிப்படாமல் (பதிலாகாமல்) இருக்கும்படி பார்த்துக்கொள்ள நான் முயற்சி செய்தாக வேண்டும்.



2. (சிறைக்) கூண்டு

ஒரு ஆள் முள் கம்பி வேலிக்கு பக்கத்தில் நின்றுகொண்டு புதர்கள் அடர்ந்த காட்டை ஆழ்ந்த சிந்தனையோடு பார்த்துக்கொண்டிருந்தான். ஏதாவது ஒரு மனித உயிர் தென்படுமோ என்று தேடிக் கொண்டிருந்தான்.

ஆனால், இந்த சிக்கலான தடைகளை, இந்த அச்சுறுத்தும் முறையாக அமைக்கப்பட்ட முள் கம்பிகளாலான சிக்கலான தடைகளை மட்டும் அவனால் பார்க்க முடிந்தது. பிறகு மற்றவைகளை விரட்டுவதற்காக வைக்கப்பட்ட கூச்சமிடும் உருவங்கள் கழிப்பிடங்களுக்குப் போகும் வழியில் கொளுத்தும் வெயிலுக்கு ஊடாக அசைந்தாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். முடிவேயற்ற நீளத்திற்கும் நீண்டு கிடக்கும் கூடாரங்களும் வெற்று நிலங்களும் கூட தெரிந்தன. ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு மேல் வலைக்கம்பிகளே இல்லையென்று சொல்லக் கேட்டிருக்கின்றான். ஆனால் அவனால் அதை நம்ப முடியவில்லை. வெளிறிய நீலவானத்தின் தூய்மையான, கட்டற்ற, உணர்ச்சியற்ற முகமும் கூட மனிதக்கண்களைக் குருடாக்குவதாகவே தோன்றியது. அதில் எங்கோ ஒரு சிறிய சூரியன் இரக்கமற்றவகையில் மிதந்து கொண்டிருந்தது. நடுப்பகலின் போதுக்குக் கட்டுப்பட்டிருக்கும் விலங்கின் மூச்சிறைப்பைப் போல முழு உலகமே அசைவற்ற கட்டுப்பாட்டுக்கும் வெப்பமாக கருக்கப்பட்டு அதன் பிடிக்குள் கிடந்தது. வளர்ந்து, வளர்ந்து, வளர்ந்துகொண்டேயிருப்பதைப் போல் தோன்றும் அப்பட்டமான, அப்பட்டமான தீயின் திடுக்கிடச் செய்யும், மலைக்கச் செய்யும் ஒரு கோரத்தைப் போல வெயில் அவன் மீது அழுத்திக் கொண்டிருந்தது....

அவன் கண்கள் எந்த மனித உயிரையும் சந்திக்கவில்லை. அவனுக்குப்பின்னால் திரும்பாமலேயே மிகவும் தெளிவாக அவனால் அதைப் பார்க்க முடிந்தது - கலப்படமற்ற பயங்கரம். அழுகிக்கொண்டிருக்கும் மீன்களைப் போல அடுக்கடுக்காக அடுக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அங்கிருந்த மற்றவர்கள், [illegible] அதற்குப்பிறகு தெரிந்தது. அப்பழுக்கற்ற தூய்மையான கழிப்பிடங்கள், அவனுக்குப்பின்னால் வெகுதொலைவில் எங்கேயோ விண்ணுலகும் கூடத் தெரிந்தது; கொழு கொழுவென்றிருந்த காவலர்களால் காக்கப்பட்ட நிழல் தருகின்ற வெறுமையான கூடாரங்கள்

எவ்வளவு அமைதியாக, எவ்வளவு புழுக்கமாக உள்ளது.


உக்கிரமான சப்பட்டை அடியால் தாக்குண்டு அவன் கழுத்து உடைந்து போனதைப் போல் திடீரென்று அவன் தன் தலையைத் தாழ்த்தினான். அவனை மகிழ்வித்த ஏதோ ஒன்றை அவன் பார்த்தான். அது, வெற்றுத்தரையில் படிந்த முள் கம்பி வேலியின் மென்மையான நிழல்கள். அவை தொய்மையான, அழகான, ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கும் கிளைகளின் நேர்த்தியான செதுக்கிவைத்த அடையாளம் போல் இருந்தன. ஒன்றோடொன்று இணைந்து காணப்பட்ட அந்த மென்மையான அடையாளங்கள் என்றும் குறையாத குளிர்மை கொண்ட அமைதியின் அடையாளங்களாக இருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. ஆமாம் அவை அமைதியாக ஆறுதலாக அவனைப் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டிருப்பதாகத் தோன்றியது

அழகான அந்தக் கிளையில் ஒன்றை பொறுக்கி எடுப்பதற்காக அவன் குனிந்து மிகவும் கவனமாக முட்கம்பிகளுக்கிடையில் கையை நீட்டி அதைத்

புது எழுத்து 9

தொட்டான். அதை எடுத்து தன் முகத்திற்கு நேராக பிடித்துக் கொண்டு புன்னகைத்தான், ஏதோ, ஒரு விசிறி அவனுக்கு முன்னால் மென்மையாக காற்றை வீசிக்கொண்டிருந்ததைப்போல. பிறகு, அந்த இனிமையான நிழல்களை ஒன்றுகுவித்து வாரி எடுப்பதற்காக தன் இரு கைகளையும் வெளியே நீட்டி அவைகளைத் தொட்டான். அந்த அடர்ந்த புதர் காட்டின் வலது புறமும் இடதுபுறமும் பார்த்தான். அவன் கண்களிலிருந்த அமைதியான மகிழ்ச்சி மங்கி மறைந்தது. ஒரு வெறிகொண்ட ஆசையின் அலை பொங்கி எழுந்தது. அங்கே அவன் கணக்கற்ற சிறு சிறு செதுக்கி வைத்தது போன்ற அடையாளங்களைப் பார்த்தான். அவைகளைக் குவித்து எடுக்க முயன்ற போது, விலைமதிப்பற்ற குளிர்ச்சியான நிழலின் நிலைத்த தன்மையை அவை அவனுக்கு அளித்திருக்க வேண்டும். அவனது கண்ணிமைகளின் சிறைக்குள்ளிலிருந்து வெடித்துக் கிளம்புவதைப்போல அவனது கண்மணிகள் அகலமாக விரிந்தன. வீரிட்ட கத்தலோடு அவன் அடர்ந்த புதர் காட்டுக்குள் திடீரென்று பாய்ந்தான். அவன் எந்த அளவுக்கு அந்த இரக்கமற்ற சிறிய முள்வேலியில் கைகளை நீட்டி நேர்த்தியான சிக்கலான நிழலின் கிளைகளைப்பற்றிக் கொள்ள முயன்றானோ அந்த அளவுக்குக் கொடூரமாகத் தோற்றுக்கொண்டிருந்தான். சிலந்தி வலையில் பூச்சி ஒன்று மாட்டிக்கொண்டு தவிப்பதைப்போல. கொழு கொழுவென்றிருந்த போலீஸ் காவலர்கள் அவனை விடுவிக்க தங்களின் (முள் வேலிக்) கம்பி வெட்டுக்கருவியை எடுத்துக்கொண்டு அங்கு வந்து சேரும்போது, அவனது துடிதுடிப்பு அத்தனையும் ஏற்கெனவே அடங்கிப் போயிருந்தன.

3. அலைசறுக்கு விளையாட்டு வீரன்



முப்பத்தியாறு மணி நேர பயணத்திற்குப் பிறகு மிகவும் களைத்துப் போய் கொலக்னெ வந்து சேர்ந்தான் அந்த இளைஞன். அதுவொரு கோடைக்கால வெப்பம் வாட்டிய ஞாயிறு பிற்பகல். ரயில் நிலையத்திடலில் கூட்டம் நிறைந்து இருந்தது. பெரிய பெரிய சுவரொட்டிகளும் அலங்காரமான பாதைகளும் மருந்து தயாரிப்பாளர்களின்

மாநாடு ஒன்றைப் பற்றி பறைசாற்றிக்கொண்டிருந்தன. அந்த இளைஞன் விடுதி விடுதியாக தளர்வோடு ஏறியிறங்கி ரயில்நிலையத்திலிருந்து விலகி விலகி தொலைவாகச் சென்று இறுதியில் எப்படியோ அந்நகரத்தின் பழைய பகுதியின் எல்லையிலிருந்த ஒரு பழைய விடுதியில் தங்குவதற்கு இடம் பிடித்தான். தான் தங்கியிருக்கும் அறையிலிருந்த இரண்டாவது படுக்கையை விட்டுக்கொடுப்பதாகக் கூறியுள்ள மற்றொரு வாடிக்கையாளனுடன் ஒரு அறையை இவன் பகிர்ந்து கொள்ளலாம் என்று விடுதிக் காப்பாளன் கூறினான்.

அந்த இளைஞன் தனது ஒரே சுமையான கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு குறுகலாகவும், வெப்பமாகவும் இருந்த படிக்கட்டுக்களில் ஏறினான். கீழே கேட்டு வாங்கிய எலுமிச்சை சாறு கலந்த குடிநீர் போத்தலுடன் அறையின் கதவருகில் சென்றபோது "முப்பத்தியாறு மணி நேர பயணத்திற்குப் பிறகு மிகவும் களைத்து. என்றும் சிடுசிடுப்பான குரலைக்கேட்டு கதவைத் தள்ளித் திறந்தான். அவன் முதலில் பார்த்தது, ஒரு வெள்ளை நிற சிறிய மேஜையையும் அதன்மீது கிடந்த பல சிறிய காகிதத் துண்டுகள் மற்றும் உதிரியாகக் கிடந்த கரும் பழுப்பு நிற புகையிலைக் குவியலையும் தான். தெருவை நோக்கியிருந்த அறையின் கதவும் ஜன்னலும். ஜன்னல்கதவுகள் திறந்து கிடந்தன. அதன் அடுக்கு மறைப்புகள் திறந்து விடப்பட்டிருந்தன. வெளிறிய வெளிச்சத்தில் புகையிலை ஊதாநிறத் தோற்றத்தில் காட்சி தந்தது. கதவுக்கு நேர் எதிராக ஒரு கண்ணாடி. வாஷ்பேசனில் நீளமான கறுத்த மஞ்சள் ஓரங்களைக் கொண்ட ஒரு வெடிப்பு இருந்தது. திறந்து கிடந்த உடுப்பு அடுக்கும் ஒரு பேழையில் அவன் முதலில் பார்த்தது பூஞ்சனம் பிடித்த இருட்டைத்தான். பிறகு ஒரு கசங்கிய மழைக்கோட்டும், வெளியே பிதுங்கிக் காணப்பட்ட, உள்ளாடைகளின் கால்களோடு இருந்த ஒரு சிறிய பெட்டியும் தெளிவாகத் தெரிந்தன. கதவுக்கு இடது பக்கம் வெள்ளை படுக்கை விரிப்போடிருந்த ஒரு இரும்புக்கட்டில் இருந்தது. அதன் மீது ஒரு கறுப்பு நிற அரைக்கோட்டு இறுதியில் சற்று உள்ளடங்கிய மூலையின் மங்கிய ஒளியில் போடப்பட்டிருந்த கட்டிலின் மீது படுத்துக்கிடந்த தன் அறைத்தோழனை அவனால் பார்க்க முடிந்தது; பருத்த முகம் வழிக்காத ஒரு ஆள், அவனது நீலமும் வெள்ளையும் கலந்த கோடுகளைக் கொண்ட சட்டை அவனது வயிற்றின்மீது இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தது. எல்லா விடுதிகளும் நிரம்பி வழியும் மருந்து தயாரிப்புத் தொடர்பான பலரில் ஒருவனாக அவனை, அந்த இளைஞன் கருதிக்கொண்டான்.

அவ்வப்போது புகைமேகங்களை வெளியே விட்டுக்கொண்டு அசையாமல் படுத்திருந்த அந்த பருத்த உருவத்தை அவன் மெதுவாக அணுகி, அமைதியாக 'என் பேர் வெங்க்' என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். படுக்கையில் படுத்திருந்தவன் நிமிர்ந்து பார்க்காமலும் அசையாமலும் 'வெல்டன் என்பது போல் எதையோ முனகி விட்டு, 'பரவாயில்லை' என் று கூறி மறுபடியும் தன் மௌனத்தில் ஆழ்ந்தான்.

வெங்க் குழாயைத் திருப்பிப் பார்த்தான். தன் கைப்பெட்டியை படுக்கையின் மேல் வைத்தான். அந்த மனிதனது அரைக்கோட் ஜாக்கெட்டை

புது எழுத்து 9

எடுத்து ஒரு நாற்காலியின் மேல் தொங்கவிட்டான். தனது சட்டையைக் கழற்றினான். தன் உடம்பை மெதுவாகவும் முழுமையாகவும் கழுவிக்கொண்டான். பல் துலக்கிக் கொண்டு முகத்தை மழித்தான். வெட்டி அசையவும் இல்லை பேசவுமில்லை. அவனுடைய ஒரே அசைவு, எப்போதாவது தனது தடியனான வீங்கியிருப்பதைப்போல் தோன்றிய உதடுகளைத் திறந்து புகைச் சுருள்களை வெளியே தள்ளுவது தான் சுற்றிக் கொண்டிருந்த அழிக்கதவுகளின் இருபுறத்திலும் ஜாலத்தை நோக்கி வெள்ளை முக்கோணங்களாக புகை மேலெழுந்தது.

உடலைக் கழுவிக் கொண்ட பிறகு மிகுந்த புத்துணர்ச்சி பெற்றவனாக உணர்ந்தான் வெங்க். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். புகைத்து முடிந்ததும் தன் படுக்கையில் படுத்து உறங்கிப் போனான். அவன் கண் விழிக்கும் போது அடுத்தவன் எழுந்துவிட்டு முகம் மழித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அறைக்குள்ளிருந்த வெப்பநிலை குளிர்ந்து போயிருந்தது. ஜன்னல் அழிக்கதவுகளை மென்மையாக அசைத்துக்கெண்டிருந்தது மென்மையான தென்றல். வெளியில் தெருவில் இன்னமும் அமைதி நிலவியது. பக்கத்து வீடுகள் எதோ ஒன்றில் ஒரு பெண் மெல்லிசைப் பாடலைப் பயிற்சி செய்து கொண்டிருந்தாள். ஒரு ஞாயிறு பிறபகலுக்கு மிகவும் பொருத்தமான சூழல். அந்த பெண் மோசமாக வாசித்துக்கொண்டிருந்தாள், தவறான இசைக்குறிப்புகளோடு. ஒரு இடத்தில் அரை பிர்க்காக்களின் முழுமையை, ஒரு கொத்தை அந்த இளைஞன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அந்தக் கட்டத்தில் சொல்லி வைத்ததைப் போல அவள் தட்டுத்தடுமாறினாள் அல்லது நிறுத்தி விட்டாள்.

(நுரைப்பஞ்சு பொருத்திய தனது ஷேவிங் பிரஸ்ஸால், தனது முகமெங்கும்சோப்பு நுரையைத் தேய்த்தபடி) வெட்டி கண்ணாடியின் முன்னால் நின்று கொண்டிருந்தான். அணைந்து போயிருந்தது போல் காணப்பட்ட தனது சுங்கானை அவன் சின்னமுப் தனது பற்களுக்கிடையில் இடுக்கிக் கொண்டிருந்தான். அவனது சட்டையின் கைகள் சுருட்டி விடப்பட்டிருந்தன. அவனது ஆற்றல் மிக்க முடிகள் நிறைந்த கைகளின் அசைவுகள் மிகவும் சுறுசுறுப்போடிருந்தன. வெங்க் எழுந்து தனது சிகரெட்டை மீண்டும் பற்றவைத்து மெதுவாக ஜன்னலருகில் சென்று நின்றான். தெரு காலியாக, சாம்பல் படிந்தாற்போல் வெளிறி அமைதியாக இருந்தது. எதிர்புறத்திலிருந்த வீட்டில், மெலிந்த செம்பழுப்பு நிறம் கொண்ட ஒரு மனிதன், உள் சட்டை மட்டும் அணிந்தவனாய், ஜன்னலின் அடிக்கட்டையின் மேல் சாய்ந்தவாறு ஒரு கருஞ்சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குப்பின்னால் அறையின் உட்புறத்தில் சிவப்பு உள்ளாடையிலிருந்த ஒரு பெண் தனது அக்குளில் பூசு மாவைத் தூவிக் கொண்டிருப்பதையும் இளைஞன் பார்த்தான். பியானோ வாசித்துக்கொண்டிருந்த அந்தப்பெண், இப்போது ஒரு நாட்டுப்புற ராகத்தை வாசித்துக்கொண்டிருந்தாள்; அதையும் கூட அவள் மோசமாகத்தான் வாசித்துக்கொண்டிருந்தாள்.

"உன்னைப் பாத்தா எனக்குப் பொறாமையாயிருக்கு". திடீரென்று வெட்டர் ஒரு இதமான ஈர்க்குப் குரலில் கூறினான். "இந்த புழுக்கத்துல கூட உன்னால தூங்க முடியுதே

புது எழுத்து 9

முப்பத்தியாறு மணிநேரம் பயணம் செய்ததுக்கப்புறம் ...... "தன்னுடைய மழிக்கும் கத்தியிலிருந்து நுரையைத் துடைத்தவாறே நின்றிருந்த வெல்டரைப் பார்த்து வெங்க் கூறினான்.

மருந்து தயாரிப்பவரா?" வெல்டர் கேட்டான்.

இல்ல" இளைஞன் சிரித்துவிட்டுக் கூறினான் " நான் நெனச்சேன் நீங்கதான்.

" அடக்கடவுளே ! " இப்போது வெல்டர் சிரித்துக்கொண்டிருந்தான். " மருந்து தயாரிப்பாளர்களுக்கு நான் எதிர்பானவன் இல்லேன்னாலும் .... உண்மையில் நானும் ஒரு மருந்தாளனாக ஆகணும்னு ஆசைப்பட்டவன் தான்..... அப்புறம் "தன் சுங்கானைப் பற்ற வைத்துக்கொண்டே அவன் தொடர்ந்தான். நானும் கூட முப்பத்தியாறு மணி நேரம், பயணம் செய்துகிட்டு தான் இருக்கறேன், இருந்தாலும் என்னால தூங்க முடியல - நானும் மருந்தாளனா இருக்கணும்னு அந்தக் கடவுளை வேண்டிக்கிறேன்.

பல குறிப்புகளுக்குப் பிறகு கேட்டால் தவறில்லை என்று உணர்ந்த வெங்க் மிகவும் தாழ்மையோடு கேட்டான்: "அதாவது உங்கள் வேலை அத்தகைய கடுமையான ஒன்றா?"

ஆனால் வெல்டர், தன் முகத்திலிருந்த சோப்பு நுரையைத் துடைப்பதிலும் குஞ்சத்தைக் கழுவுவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். வெளியே வீதியில் அதிகரித்துக்கொண்டிருந்த இரைச்சலைக் கேட்டு வெங்க் எட்டிப் பார்த்தான். மஞ்சள் வண்ண பின்னல் சட்டைகளை அணிந்திருந்த வெற்றி பெற்ற மகிழ்ச்சியோடு கால் பந்தாட்டக் குழுவொன்று விளையாட்டு விசிறிகளால் சூழப்பட்டு கடந்து போய் கொண்டிருப்பதாக தெரிந்தது. எதிர்புற வீட்டு ஜன்னலில் அந்த அந்த மனிதனுக்குப் பக்கத்தில் அந்தப் பெண்ணும் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கொழுத்து இளமையாக இருந்தாள். அவளும் அந்த மனிதனும் உற்சாகமிழந்தவர்களாகக் காணப்பட்டனர். வெல்டர் இப்போது எல்லாவற்றையும் முடித்தவனாக, தனது டையைக் கட்டி முடித்தபடியே சாதாரணமாகக் கேட்டான். " எந்த வழியாக நீ போகப் போகிறாய்"?

வெங்க் தனது 'கோட்டை' கட்டில்களின் குமிழியிலிருந்து எடுத்து அணிந்து கொண்டிருந்தவன் " மியூனிச் ஹம்பர்க், ஹம்பர்க்-கொலக்னெ; என்று கூறினான்.

ஆங் ... நல்ல யோசனைதான்... சரி இப்போ நாம ஏதாவது சாப்பிடப் போகலாமா? போகலாம் இல்லையா? நான் உன் திட்டம் எதுலயும் குறுக்கிடலன்னு நம்பறேன் ...." வெல்டர் கேட்டான். இரண்டு பேரும் மாலை முழுதும் ஒன்றாகவே கழித்தனர். இருவரும் ஒருவரோடொருவர் ஒன்றிப் போனார்கள் என்றே தோன்றியது. அவர்கள் ஆர அமர உட்கார்ந்து சிறிது 'வைன்' குடித்தார்கள், 'ரைன்' நதியோரம் நடந்தனர். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தேன் கனி பாலாடை ஐஸ்கீரிம் சாப்பிடும்படி வெல்டெரை, வெங்க் இசைய வைக்கவும் கூட முயற்சித்தான். ஆனால், அப்போதும் வெல்டெரின் தொழில் பற்றி கண்டுபிடிக்கவே அவனால் முடியவில்லை. வெகுநேரம் கழித்து விடுதிக்கு திரும்பி வந்து சேரும்வரை. காற்று

இப்போது குறைந்து போயிருந்தது; ஜன்னல் ஓர அழிக்கதவுகளுக்கு அப்புறம் வெப்பம் மிகுதியாகவும் கொடுமைப்படுத்துவதாகவும் இருந்தது. புகைத்துக்கொண்டே அவர்களிருவரும் அவரவர் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தனர். வீதியிலிருந்து குரல்களின் மெல்லிய கலவையும் குறைத் து வைக்கப்பட்ட வானொலியின் ஒலிகளும் கேட்டுக்கொண்டிருந்தது. நீண்ட நேரம் அவர்கள் அமைதியாக இருந்தனர். வெங்க் தனது சிகரெட்களை ஒன்றன் பின் ஒன்றாக விரைவாக பரபரப்பாக ஆவலோடு அவனது உதடுகளிலேயே அவை எரிந்துறைய ஒட்டிக்கொள்ளும் வரை புகைத்தான். பின்பு அவற்றை வாஷ்பேசினை நோக்கி அறையின் குறுக்காகச் சுண்டியெறிந்தான். இருளில் வெல்டெரின் சுங்கானின் ஒளிவட்டம் நேரமாக ஆக விரிந்துகொண்டே போயிற்று, பிறகு சாம்பலால் மூடப்பட்டு சுருங்கிப் போனது.

வெல்டர் மிக அமைதியாகக் கேட்டான். "எதற்காக?" எதற்காக நீ இவ்வளவு நீண்ட பயணங்களைச் செய்து கொண்டிருக்கின்றாய்?

வெங்க் ஒரு விநாடி தயங்கிவிட்டு, பிறகு " நான் ஒரு பெண்ணின் பின்னால் சென்று கொண்டிருக்கின்றேன் ...."

" அவள் அழகாகவாவது இருக்கின்றாளா?"

" அப்படித்தான் எண்ணுகிறேன்"

மீண்டும் அவர்கள் அமைதியாகி, புகைப்பதைத் தொடர்ந்தனர். வெப்பம் மிகுந்த வீதியிலிருந்தும் கூடுகின்ற நடைபாதையிலிருந்தும் உடலை வாட்டும் மேகங்களாக சூடு மேலெழுந்து கொண்டிருந்தது.

" ஓ.... ஆமாம்," வெல்டெர் பெருமூச்சு விட்டான். " இதபாரு, உனக்கு இருப்பத்தியாறு வயசாகுது, அழகான முடி, ஆறு அடி உயரம்ன்னு நான் சொல்வேன். ஐந்தாயிரம் மார்க்ஸ் பணம் உனக்குக் கிடைப்பதானால் நீ என்ன செய்வாய்?

வெங்க் அமைதியாக இருந்தான், ஆனால் அமைதி திடீரென்று வேறு வகையாக இருந்தது. " ஆமாம்" வெல்டெர் மறுபடியும் பெருமூச்சு விட்டான். " நீ என்ன செய்வாய்? நான் என்ன சொல்றேன்னா, ஆறடி உயரம், இருபத்தெட்டு வயது, அழகான முடியுள்ள ஒருவனைத் தேடிக்கொண்டிருக்கிறேன். என் மேலாளர் என் உள்ளுணர்வு மீது நம்பிக்கை கொண்டுள்ளார். அவர் கூறுனார்: 'வெல்டெர், போய் அவனைத் தேடிப்பார். எப்படியாவது அவன் நமக்குக் கிடைத்தாக வேண்டும். உன் உள்ளுணர்வு உனக்கு உதவி செய்யும். "ஓ" வெறுப்போடு சிரித்துப் பெருமூச்சு விட்டான். "என் சொந்த உள்ளுணர்வே என்னை வெறுப்புக்கொள்ளச் செய்கின்றன. இருக்கட்டும், நீ சொல்லு, நீ என்ன செய்வாய்?"

வெங்க் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். அவன் பேசத் தொடங்கும்போது அவனது குரல் சற்று கீழடங்கி, சோர்வுற்று சிறிது வஞ்சப்புகழ்ச்சியாக இருந்தது. இருளில் அவன் முகம் சிவந்தும் சிரித்தும் கொண்டுமிருந்தன. வெளியிலிருந்து அந்த மென்மையான, அடையாளம் தெரியாத முனகல் இப்போதும் வந்தது. வெங்க் மற்றொரு சிகரெட்டைப்

பற்ற வைத்தான். சினிமாக்களில் அவர்கள் செய்வதைப் போல என்னால் செய்ய முடியும் என்று நான் எண்ணுகின்றேன். ஒரு அலைசறுக்கு வீரனாக அல்லது அதைப்போன்ற ஒன்றாக ஆவது..... ரிவெய்லா.... ஃ புளோரிடா...... அலைசறுக்கு விளையாட்டு. உனக்கு அலை சறுக்கு விளையாட்டு தெரியுமா? என்று கேட்டான். வெல்டெர் பதில் கூற வில்லை.

"ஓ... முடியுமே," வெல்டெர் மென்மையாகக் கூறினாள்.

மறுபடியும் அவர்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்து புகை பிடித்தனர்.

பிறகு சட்டென்ற வெல்டெர் கேட்டான். நீ யாரைத் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறாயோ அவனை உன்னோடு அழைத்துச் செல்ல மாட்டாய் அல்லவா?"

வெங்க் பெரியதாக சிரித்து விட்டான். இருளில் அவன்தன் ஜாக்கெட்டைத் தேடியெடுத்து வெல்டெரின் படுக்கையை நோக்கி எறிந்து விட்டுக் கூறினான்:

இப்பவும் அதுதான் இருக்கு...

வெல்டர் அசையவுமில்லை, நகர்ந்து ஜாக்கெட்டைத் தடவி எடுத்து அதில் தேடிப்பார்க்கவுமில்லை. ஒரு நிமிடத்திற்குப்பிறகு அவன் வெறுமே கேட்டான்:

"இல்லை" என்றான் வெங்க்.

" அப்படியென்றால் நாம் புறப்படத் துவங்கலாமே"



4. மழைநீர் கால்வாய்

பலத்தகாற்று வீசி, வீட்டின் கூரையோடுகள் தளர்ந்தும் செங்கற்கள் உதிர்ந்துகொண்டிருக்கும் போது நீண்டநேரமாக அவர்கள் தூங்கமுடியாமல் படுத்துக்கொண்டே புகைப்பிடித்துக்கொண்டிருந்தனர். மேல் தளங்களிலிருந்து சுவர்ச்சுவரைப்பூச்சுகளின் துண்டுகள் பெயர்ந்து பெருத்த

ஒலியுடன் கீழே விழுந்து உடைந்து சிறு சிறு கற்களாக பரவிக்கிடந்தன.

அவர்கள் தங்களின் சிகரெட்களின் புகையில் லயித்திருந்த போது அவன்அவளது விதமானசெந்நிற, மங்கிய ஒலி வடிவை பட்டுமே பார்த்தான். அவளது இரவு உடைக்கு அடியில் தெரிந்த அவளது மார்பகங்களின் மென்மையான வெளிக்கோடுகளையும் அவளதுஅமைதியான பக்கத்தோற்ற வடிவமைப்பையும் அவளது உதடுகளுக்கிடையில் உறுதியாக மூடியிருந்த மடிப்பு, குறுகலான அந்தக்காட்சி அவள் முகத்தில் தெரிந்த அந்த சிறிய பள்ளத்தாக்கு போன்ற சரிவு, அவனுக்குள் மென்மையான உணர்வுகளை நிரப்பியது. இருபுறங்களிலும் போர்வையை அவர்கள் உறுதியாக இழுத்துவிட்டுக்கொண்டு, ஒருவரோடொருவர் நெருக்கமாக ஒட்டிக்கொண்டிருந்தனர். அந்த நீண்ட இரவு முழுக்க தங்களை வெதுவெதுப்பாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும். பலகணி அழிக்கதவுகள், தடதடவென்று ஒலியெழுப்பிக்கொண்டிருந்தன. ஜன்னலின் கண்ணாடிச் சட்டங்களிருந்த தாறுமாறான துளைகளின் வழியாக காற்று சீழ்க்கையொலி எழுப்பிக்கொண்டு பாய்ந்தது. அவர்களின் தலைக்குமேலாக சிதைந்து போன பரணில் காற்று ஊளையிட்டுக் கொண்டிருந்தது. எங்கோ ஒரு இடத்தில் ஏதோவொரு திடமான உலோகத்தாலான பொருள் ஒன்று சீராகவும் இரைச்சலோடும் ஒரு சுவரில் மோதும் ஒலி, அவள் மெதுவான குரலில். மழைத்தண்ணி வடியிற குழாய், ரொம்ப நாளா ஒடைஞ்சி கெடக்கு." என்றான்.

அவள் ஒரு வினாடி அமைதியாக இருந்தாள். பிறகு அவன் கையைப் பற்றிக்கொண்டு மென்மையாகத் தொடர்ந்தாள்: "அப்போது இன்னும் போர் தொடங்கியிருந்த நான் ஏற்கெனவே நான் இந்த வீட்டுக்கு மழைத்தண்ணி வடியிற குழாய்த்துண்டு அங்கே தொங்கவிட்டிருக்கிறதப் பார்க்கறேன், அவங்க இத பழுதுபாத்துட்டுபாங்கன்னு நினைப்பேன்; ஆனா, அவங்க இத சரி செய்ததேயில்ல. அது வளைஞ்சுபோய் தொங்குது, அதோட பற்று வளையங்கள், (Clawps) ஒன்று தளர்ந்து கழண்டு போயிருக்குது, எந்த நேரத்திலயும் விழுந்துடும்ன்ற மாதிரியே எனக்கு எப்போதும் தோணும். காத்து வீசும்போதெல்லாம் அது ஆடுற சத்தம் எனக்குக் கேக்குது, புயலடிக்கிற ராத்திரிங்கள்ல தவறாம கேக்கும், நான் எப்பவும் இங்கதான படுத்திருப்பேன். போர் தொடங்கின பிறகும் அது இங்க இப்படியே தொங்கிகிட்டிருந்தது. சாம்பல்நிறமான இந்த வீட்டுச் சுவர்மேல, ஒவ்வொரு மழைக்குப்பிறகும் சுவருக்குப் பக்கத்துலயே, சில நேரங்கள்ல சுவத்து மேலயே மழைத்தண்ணி வெள்ளமா ஒழுகி நீங்க தெளிவா பாக்கலாம்; ஒரு வெள்ளையான தடயம், சாம்பல் நிறக் கறை போட்ட மாதிரி அந்த ஜன்னலையும் தாண்டிப் போறத நீங்க பாக்கலாம். நடுவில் வெள்ளை மையங்களோட அங்கங்கெ வட்டமான ஓட்டுப்பகுதிங்க. அதுக்குப்பிறகு நான் ரொம்பத் தொலைவா போயிட்டேன், துருங்கியாவிலும், பெர்லினிலும் வேலை செய்ய வேண்டியதாயிருந்தது. போர் முடிஞ்சதும் நான் இங்க திரும்பி வந்துட்டேன். அந்த வடிகுழாய் இன்னமும் அங்கே தொங்கிட்டேயிருக்கு; அரைப்பகுதி கட்டடம் இடிஞ்சு சரிஞ்சு கெடக்கு - நான் ரொம்பத் தொலைவுல ரொம்ப ரொம்பக்

தொலைவுல இருந்தேன், நான் நிறையவே வலி,சாவு, ரத்தம் எல்லாத்தையும் பாத்துட்டேன்; விமானத்துலயிருந்து யந்திரத்துப்பாக்கியால அவங்க என்னை நோக்கிச் சுட்டாங்க,நான் ரொம்ப பயந்து போயிட்டேன், ரொம்பவே பயந்துட்டேன். ஆனா, இவ்வளவெல்லாம் நடந்தும், இவ்வளவு நாளாகியும், துத்தநாகம் பூசப்பட்ட அந்த இரும்புத்துண்டு மட்டும் இங்கதொங்கிட்டேயிருக்கு அதுக்கு கீழயிருக்கிற சுவரு ஏறக்குறைய முழுசாவே போயிட்டிருக்கு. ஊர் ஓடுங்கள்லாம் விழுந்துடிச்சுங்க, மரங்க வேரோடு சாய்ஞ்சி போயிடிச்சுங்க. காரைப்பூச்செல்லாம் பெயர்ந்து நொருங்கி விழுந்துடிச்சிங்க, 'பாம்புங்க' விழுந்துதுங்க, நெறைய 'பாம்ப்'ங்க; ஆனா, துத்தநாகம் பூசிய அந்த இரும்புக் குழாய் தொடர்ந்து, அந்த ஒரேயொரு பற்று வளையத்துலயே தொங்கிகிட்டிருந்திருக்கு, அது எப்பவும் எந்தவித பாதிப்புக்கும் உள்ளானதேயில்ல, அதோட வளைஞ்சு சரிஞ்சு பகுதி மட்டும் இந்த 'வெடி' தாக்குதலுங்களுக்கெல்லாம் மசிஞ்சு குடுக்கவேயில்லை."

அவளுடைய குரல் மேலும் கீழடங்கி,ஏறக்குறைய ஒரு மந்திர உச்சாடனம் போல் ஆயிற்று. அவர் அவள் கையை அழுத்தி, "அந்த ஆறு வருஷத்துல நிறைய மழை வந்து கொட்டு கொட்டுன்னு கொட்டியிருக்கு; நெறைய மரணங்கள் ஏற்பட்டு கணக்கற்ற ஆளுங்க செத்திருக்காங்க, பல சர்ச்சுங்க அழிக்கப்பட்டிருக்கு, ஆனா, நான் திரும்பி வந்தப்பொ இந்த மழைத்தண்ணி வடிகுழாய் மட்டும் அங்க இன்னும் தொங்கிக்கொண்டேயிருக்கு. காத்து வீசும் போதெல்லாம் இரவுல அது ஓயாம முனு முனுக்கிறத நான் கேட்டேன். அதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைஞ்சிருக்கேன்னு உன்னால நம்ப முடியுதா?

"நான் நம்பறேன்" அவன் கூறினான்.

காற்று குறைந்திருந்தது. ஏறக்குறைய எங்கும் ஒரு அமைதி. குளிர் நெருங்கி நெருங்கி வந்தது. அவர்கள் போர்வையை இழுத்துவிட்டுக்கொண்டு அதற்குள் தங்கள் கைகளை மறைத்துக் கொண்டார்கள். அந்த இருளில் அவனால் எதையும் தெளிவாக அடையாளம் காண முடியவில்லை. அவளது பக்கவாட்டுத் தோற்றத்தையும் கூட அவனால் பார்க்க முடியவில்லை, அவளது மூச்சை அவனால் உணரக்கூடிய அளவுக்கு அவள் அவனோடு ஒட்டினாற் போல் நெருங்கிப் படுத்துக்கொண்டிந்த போதிலும், அவளுடைய அமைதியான ஒழுங்கான, வெதுவெதுப்பான மூச்சுக்காற்று அவனுடைய தோலைத்தொட்டுத் தடவியது. அவள் உறங்கிவிட்டாள் என்று அவன் நினைத்தான். ஆனால் திடீரென்று அவள் மூச்சு விடுவதை அவனால் கேட்கமுடியவில்லை; இருட்டில் அவன் அவள் கைகளைத் தேடினான். அவள் தன் கையை கீழ்நோக்கி நகர்த்தி அவன் கையைப் பற்றி அதைத் தன்னோடு இறுக்கிக் கொண்டாள். 'அவை வெது வெதுப்பாக இருக்கும் என்றும், இரவு முழுக்க அவன் குளிரால் நடுங்க வேண்டியிருக்காது என்றும் அவனுக்குத் தெரியும்.

திடீரென்று அவள் அழுது கொண்டிருக்கிறாள் என்பதாக அவனுக்குத் தெரிந்தது. விசும்பும் ஒலி எதுவும் காதால் கேட்கமுடியவில்லை. அவளது முகத்தை அவளது இடது கையால் துடைத்துக்கொண்டிருந்ததால் ஏற்பட்ட

கடுக்கையின் அசைவைக் கொண்டு அவன் அதை உணர்ந்தான். அதுவும் கூட நிச்சயமில்லை, ஆனாலும் அவள் அழுது கொண்டிருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். அவன் எழுந்து உட்கார்ந்தான். அவளை நோக்கிக் குனிந்தான். அவள் விக்கலிட்டுக் கொண்டிருப்பதை மீண்டும் உணர்ந்தான் ஒரு மின் ஆற்றல் அவனைத் தாண்டி மென்மையாக ஓடிக்கொண்டிருப்பதைப் போல அவனது முகத்தின் மீது அது பரவுவதாக அவனுக்குத் தோன்றியது.

"படுத்துக்கோ" மெதுவாக அவள் கூறினாள் 'சளி புடிச்சிக்கும்' அவன் அவள் மீது லேசாக சாய்ந்தவாறே இருந்தான். அவளைப்பார்க்க அவன் விரும்பினான். ஆனால், சட்டென்று அவள் தன் கண்களைத் திறக்கும்வரை அவனால் எதையும் பார்க்க முடியவில்லை. பிறகு அந்த இருளில் அவள் கண்களிலிருந்து வந்த ஒளியைப் பார்த்தான். ஒளி வீசும் - கண்ணீர்த்துளிகள்.

அவள் நீண்ட நேரம் அழுதுக்கொண்டிருந்தாள். அவன் அவள் கையை எடுத்து இறுக்கமாக பற்றிக்கொண்டான். பிறகு மறுபடியும் அதைப் போர்வைக்குள் இழுத்து பிடித்துக்கொண்டான். அவளது பிடிப்பு தளரும் வரையில் அவன் அவள் கையை நீண்ட நேரம் பிடித்துக்கொண்டிருந்தான். அவன் கையிலிருந்து அவளுடைய கை மெதுவாக நழுவிற்று - அவள் தோள்களைச் சுற்றி அவன் கைகளால் வளைத்தான். நெருக்கமாக அவளை அணைத்துக்கொண்டான். அவர்களது மூச்சுக் காற்று மாறி மாறி வந்து ஒருவரையொருவர் வருடிக்கொடுப்பது போல் செயல்பட்டன...

ஜெர்மனிலிருந்து ஆங்கிலத்தில்:

லெய்லா வென்னவிட்ஸ்



தமிழில்:

தி.சு.சதாசிவம்

புது எழுத்து 9

கேப்ரியேல் கார்சியா மார்க்வெஸ்

சிறுகதை

பெரிய அம்மாவின் இறுதிச்சடங்கு

மெக்காண்டோ ராஜ்யத்தின் தன்னிகரிலா அரசியும் தொண்ணூற்றிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தவருமான பெரிய அம்மா சென்ற செப்டம்பர் மாதம் ஒரு செவ்வாய்க்கிழமை பரிசுத்த வாசனையுடன் காலமானார். அவரது இறுதிச் சடங்கில் போப்பாண்டவர் அவர்களே நேரில் கலந்து கொண்டார். விசுவாசமற்றவர்கள் அனைவரும் புரிந்து கொள்வதற்காக எழுதப்படும் பெரிய அம்மாவின் உண்மை வரலாறு இது.

இப்போது ராஜ்யம் பெரிய அதிர்ச்சியினின்றும் மீண்டு விட்டது. ஸான் ஸாஸின்டோவின் தோல்இசைக்கருவி இசைப்பவர்களும், குவாஜிராவின் கடத்தல்காரர்களும், சின்யூவின் விவசாயிகளும் காக்ககமயலின் விலை மாதர்களும், சியர்பென் மந்திரவாதிகளும், அரக்காட்டகாவின் வாழைத்தோட்ட வேலையாட்களும் தாங்கள் அனுபவித்த கடுமையான கண்காணிப்பிலிருந்து விடுபட்டு தங்கள் கூடாரங்களைச் சுருட்டிக்கொண்டு நிம்மதியடைந்தார்கள். குடியரசுத் தலைவரும் மக்கள் பிரதிநிதிகளும் அமானுஷ்ய சக்தி கொண்டவ்ர்களும் வரலாற்றிலேயே மிகப் பிரமாண்டமான இந்த இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட பின் தங்கள் சொத்துக்களின் உரிமையை திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

மதத் தலைவர் தம் சரீரத்துடனும் ஆத்மாவுடனும் வானுலகம் எழுந்தருளிவிட்டார். காலிக்குப்பிகள்,



சுவர் துண்டுகள், எலும்புத் துணுக்குகள், தகரப் பாக்குகள், அழிந்த துணிகள், இறுதிச் சடங்குக்காக வந்த மக்களின் கழிவுகள் போன்றவற்றின் காரணமாக மெக்காண்டோ நகரத் தெருக்களில் நடமாட முடியவில்லை. எனவே, வீட்டு வாசல் கதவின் முன் ஒரு ஸ்டூலில் இருந்துகொண்டு இந்த பரபரப்பான செய்தியை தொடக்கம் முதல் எடுத்துரைக்கப் போகிறேன். வரலாற்றாசிரியர்கள் என்னை முந்திவிடக்கூடாது.

பதினான்கு வாரங்களுக்கு முன்பு வீக்கத்துக்கு வைத்துக் கட்டும் மாவு, கடுகுப் பூச்சு, ரத்தம் உறிஞ்சும் அட்டைகள் இவற்றாலும், மரணாவஸ்தை காரணமாக ஏற்பட்ட உணர்ச்சி மற்றும் பலவீனத்தாலும், பெரிய அம்மா தன்னை தனது பழைய பிரம்பு நாற்காலியில் அமர்த்திவிடும்படியும், தனது இறுதி விருப்பங்களைத் தெரிவிக்கப்போவதாகவும் கூறினாள். இறப்பதற்கு முன் அவள் செய்யவேண்டிய ஒரே காரியம் இதுதான். அன்று காலை அந்தோனி இஸபெல் பாதிரியாரின் உதவியுடன் தனது ஆத்மா சம்பந்தமான விஷயங்களை, ஒழுங்குபடுத்திக் கொண்டாள். இப்போது செய்ய வேண்டியது லௌகீக விஷயங்களை, தன் படுக்கையைச் சுற்றி நிற்கும் தன் வாரிசுகளான மருமக்கள், மருமகன்களிடம் ஒப்படைக்க வேண்டும். நூறு வயதை எட்டிக்கொண்டிருக்கும் பாதிரியார் தனக்குத்தானே பேசிக்கொண்டபடி தன் அறையிலேயே இருந்தார். அவரை பெரிய அம்மாவின் அறைக்கு எடுத்துச்செல்ல வேண்டியிருக்கும் என்பதற்காகவே, அவர் பெரிய அம்மாவின் அறையிலேயே இருக்கட்டும் என்று தீர்மானித்து விட்டார்கள்.

மூத்த மருமகன் நிக்கானர் சட்ட அமல் அதிகாரியைப் பார்க்கச் சென்றிருந்தான். அவன் நல்ல வளர்ச்சி - முரடன் போலிருப்பான். காக்கி உடையணிந்து காலில் முள்வைத்த பூட்ஸ்கள் அணிந்திருப்பான். சட்டைக்குள் பெல்டில் நீண்ட குழலுள்ள ரிவால்வர் தொங்கிக்கொண்டிருக்கும். மெல்ல மண்டல் மற்றும் வாசனையுள்ள ஓர்கனே செடியின் மணமும் இருண்ட அறைகளில் அடைத்திருந்த மரப்பெட்டிகளும் நான்கு வம்ச பரம்பரைகளின் தூசியும் சென்ற ஒரு வாரமாக அந்த இரண்டு மாடிக் கட்டிடத்தை நிறைப்பித்துக்கொண்டிருந்தன. எல்லாம் இந்த தருணத்துக்காகத்தான். மத்திய ஹாலில் முன்பெல்லாம் ஆகஸ்ட் மாத ஞாயிற்றுக்கிழமைகளில் இறைச்சிக்காக மான்கள் வெட்டப்படும். கொன்ற பன்றிகளைத் தொங்க விடுவார்கள். அங்கே இப்போது உழவு இயந்திரங்களிலும் உப்பு மூட்டைகளிலும் வேலையாட்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். உத்தரவு கிடைத்ததும் அவர்கள் கழுதை மீதேறி அந்த பரந்த சாம்ராஜ்யத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் துயரச் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். குடும்பத்தின் மற்ற ஆட்கள் வீட்டினுள்ளே ஒரு அறையில் இருக்கிறார்கள். சொத்து பங்கீடு விவகாரத்தின் காரணமாகவும் தூக்கமின்மையாலும் அவர்கள் களைப்புற்றிருக்கிறார்கள். அவர்களின் அழுகை ஒலிகள் சிறிது சிறிதாக ஒன்று கலந்து உச்ச நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. பெண்களுக்கே முழு உரிமை என்ற திடமான கொள்கை பெரிய அம்மாவையும் அவளது திரண்ட சொத்துக்களையும் ஒரு வேலியாகச் சுற்றி வளைத்திருந்தது. அதற்குள்ளே மாமன்மார்கள் தங்கள் மருமகளின் குழந்தைகளை மணந்திருந்தனர். கஸின்கள்

அத்தைகளைக் கட்டியிருந்தனர். சகோதரர்கள் தங்கள் மதனிமார்களை கல்யாணம் செய்திருந்தனர். எல்லாமாக ஒரு குறிப்பிட முடியாத விசித்திர உறவு அவர்களை இணைத்து, பிறக்கும் குழந்தைகளை வட்டத்துக்குள் வட்டாக சுழலவைத்தது. இதில் தப்பிப் பிழைத்தது எல்லோருக்கும் இளைய மருமகளான மக்தலேனாதான். மனப் பிரமையில் தனக்குத் தோன்றிய விசித்திர காட்சிகளின் காரணமாக அந்தோனி இஸபல் பாதிரியாரிடம் பேய் விரட்டும்படி செய்து தன்னைத் தூய்மைப் படுத்திக்கொண்டாள். தலையை மொட்டையடித்தாள். உலக வாழ்வின் பெருமைகளைத் துறந்து தேவாலயத்தில் இளம் துறவியாகச் சேர்ந்து கொண்டாள்.

அதிகாரப்பூர்வமான குடும்பத்துக்குப் புறமே ஆண்கள் ஆங்காங்கே பல குழந்தைகளை உற்பத்தி செய்துகொண்டார்கள். குடும்பப் பெயரைக் கூற முடியாத அந்தப் பிள்ளைக்ள் வீட்டு வேலையாட்களின் ஆதரவில் வளர்ந்தன. சில அங்கேயே வேலை பார்த்தன. சிலவற்றை பெரிய அம்மா தத்தெடுத்து அரவணைத்துக் கொண்டாள்.


அவள் இறந்துபோவாள் என்ற உண்மை காத்திருப்பவர்களின் நம்பிக்கையை உயிர்ப்பித்தது. அதிகாரத்துக்கும் அடிபணிதலுக்கும் உரிய அவளது குரல் அந்த அறையில் ஒரு சிறு ஊதுகுழல் போல்தான் எழுந்தது. ஆனால் அது வீட்டில் தூரத்து மூலைகளிலெல்லாம் எதிரொலித்தது. இந்த மரணத்தில் யாருக்கும் விரோதமில்லை. இந்த நூற்றாண்டில் பெரிய அம்மாதான் மெக்காண்டோவின் ஈர்ப்பு மையம். அந்தக்காலத்தில் அவளுடைய சகோதரர்களும் அவளது பெற்றோர்களும், பெற்றோர்களின் பெற்றோர்களும் இரண்டு நூற்றாண்டுகளாக அவ்விதம்தான் இருந்தார்கள். இந்த ஊரே அவளது பெயரில் தான் அமைக்கப்பட்டது. அதன் தொடக்கம் யாருக்கும் தெரியாது. அதன் மதிப்பும் யாருக்கும் தெரியாது. ஆனால் எல்லோருக்கும் ஒரு விஷயம் தெரியும் - பெரிய அம்மாதான் தேங்கிய நீருக்கும் ஓடும் நீருக்கும், மழைக்கும் வறட்சிக்கும், பாதைகளுக்கும் தந்திக் கம்பங்களுக்கும் லீப் வருஷத்துக்கும் கொதிக்கும் அலைகளுக்கும் உரிமை படைத்தவள் என்பது. உயிருக்கும் உடமைக்கும் அவள்தான் சொந்தமானவள். பால்கனியில் பிற்பகலில் குளிர்ந்த காற்றில் பழைய பிரம்பு நாற்காலியில் தன் கனத்த உடம்பும் பருத்த வயிறும் அழுந்த உட்கார்ந்திருக்கும் போது, உண்மையில் உலகிலேயே அவள்தான் மிகப்பெரிய பூணக்காரி என்றும் அதிகாரம் படைத்தவள் என்றும் தோன்றும்.

பெரிய அம்மா ஒரு நாள் இறந்துபோவாள் என்று ஒருவரும் நினைத்துப் பார்த்ததில்லை. அவளது குடும்பத்தினரைத் தவிர, அந்தோனி இஸபல் பாதிரியாரின் முதுமை அவளுக்கு ஒரு முன்னறிவிப்பாக இருந்தது. ஆனால் அவள் தன் அம்மா வழி தாத்தாவைப் போல் நூறு வயதுக்கும் அதிகமாக வாழப்போவதாக நம்பியிருந்தாள்.

அவள் தாத்தா 1845-ல் நடந்த ஒரு சண்டையின் போது, தம் வீட்டு அடுக்களையைச் சூழ்ந்திருந்த கர்னல் அரேலியானோவின் படையை எதிர்த்துப் போரிட்டவர். இந்த வருட ஏப்ரல் மாதத்தில்தான், ஒரு திறந்தவெளிச் சண்டையில் பெடரல் படைகளை தன்னால் போரிட்டு

வெற்றி பெற முடியாது என்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

வலி ஏற்பட்ட முதல் வாரத்தில் குடும்ப வைத்தியர் அவளுக்கு கடுகு பத்துப்போட்டு கம்பளிக் காலுறைகளை அணிவித்தார். அவர் பரம்பரை வைத்தியர். மாண்ட்பெல்லியரில் படித்தவர். மருத்துவத் துறையின் வளர்ந்து வரும் வேகம் அவர் சித்தாந்தத்துக்கு விரோதமானது. பெரிய அம்மா அவரைத் தவிர வேறு வைத்தியர் எவரையும் கொண்டோவில் நியமிக்க வேண்டாம் என்று ஆணையிட்டிருந்தாள். ஒரு காலத்தில் அவர் குதிரையில் சவாரி செய்தபடி மாலையில் ஏழை மக்களையும் நோயாளிகளையும் சென்று பார்ப்பார். அதனால் ஆங்காங்கே இயற்கை அவருக்கு நிறைய குழந்தைகளையும் அருளியிருந்தது. ஆனால் வாத நோய்; அவரைப் படுக்கையில் தள்ளிவிட்டது. அப்படியிருந்தும் அவர் நோயாளிகளை நேரில் பார்க்காமலேயே நோயை ஊகித்து மருந்தை வேலையாட்கள் மூலம் கொடுத்தனுப்பத் தொடங்கினார். பெரிய அம்மாவின் அழைப்பு கிடைத்ததும் அவர் தமது பைஜாமாவை அணிந்தபடி கிளம்பினார். இரண்டு கம்புகளை ஊன்றியபடி அவர் பெரிய அம்மாவின் அறைக்குள் நுழைந்ததுமே, பெரிய அம்மா மரணத்தின் வாயிலில் நிற்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டார். பிங்கான் ஜாடிகள், நிறைந்த மருந்துப்பெட்டியை அங்கேயே [illegible] சொல்லி, மூன்று வாரங்களாக வலி குறைப்புப் பூச்சுகளையும் தைலங்களையும்



பது எழுத்து ?

அவன் உடம்பில் தேய்த்து வந்தார். உப்பிய தேரைகளை வலியுள்ள இடத்தில் வைத்துக் கட்டினார். கிட்னிகளில் அட்டைகளை வைத்து ரத்தத்தை உறிஞ்ச செய்தார். இறுதியில் பார்பரைக் கொண்டு அவனது இரத்தத்தை மாற்றவேண்டும் அல்லது அந்தோனி இயேசுசபைப் பாதிரியாரைக் கொண்டு பேய் விரட்ட வேண்டும் என்று முடிவு செய்தார்.

நிக்கானர் பாதிரியாரை அழைத்துவரச் சொன்னான். பத்து திடமான ஆட்கள் பாதிரியாரின் வீட்டிலிருந்து ஒரு கிறீச்சிடும் மர நாற்காலியில் அவரை அமர்த்தி, பழசாகிப்போன, விசேஷதினங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் ஒரு சால்வையால் போர்த்தி, அவரை பெரிய அம்மாவின் படுக்கை அறைக்குத் தூக்கி வந்தனர்.

மெக்காண்டோவின் ஜனங்களுக்கு அந்த செப்டம்பர் அதிகாலையில் ஒலித்த வாத்திகனின் சிறிய மணியோசை அந்த முக்கிய செய்தியைத் தெரிவித்து விட்டது. சூரியன் உதித்ததும் பெரிய அம்மாவின் மாளிகையின் முன் உள்ள பரந்தவெளி ஒரு பொருட்காட்சி திடல் போல் காட்சி அளித்தது.

ஏதோ ஒரு யுகத்தின் நினைவு போலிருந்தது அது. எழுபது வயது வரை பெரிய அம்மா தன் பிறந்த தினத்தை மிகவும் ஆடம்பரமாக, நினைவில் நெடுநாள் நிற்கும்படியாகக் கொண்டாடுவது வழக்கம். நீண்ட கழுத்துகொண்ட பெரிய குப்பிகளில் மது தாராளமாக வழங்கப்படும். திறந்த வெளியில் மாடுகள் பலியிடப்படும். ஒரு மேஜைமேல் நின்றபடி இசைக்குழுவினர் மூன்று நாட்கள் இடைவிடாது இசைமழை பொழிவர். அந்த நூற்றாண்டின் முதல் வாரத்தில் கர்னல் அரேலியானோ புயண்டியாவின் படை தங்கியிருந்த வாதுமை மரங்களின் கீழ் கடைகள் திறக்கப்பட்டு, வாழைப்பழ மது, இறைச்சித் துண்டங்கள், ரத்தக் கட்டிகள், வெட்டி உலர்த்திய மாமிச சாசேஜ், யுக்கா ரொட்டிகள், தேங்காயும் பருப்பும் சேர்ந்த பண்டங்கள், லொங்கானியா, மதுவகைகள் போன்றவை விற்கப்பட்டன. விலை குறைந்த ஆபரணங்களும் காதணிகளும், அலங்காரப்பொருட்களும் விற்கப்பட்டன. சேவல் சண்டையும் லாட்டரியும் கூட இருந்தன. இந்த நெருக்கடிகளுக்கிடையில் பெரிய அம்மாவின் படங்களையும் உருவம் பொறித்த அணிகளையும் விற்றனர்.

விழா இரண்டு நாட்களுக்கு முன்பே தொடங்கி, அவளது பிறந்த நாளன்று நிறைவு பெறும். பெரிய அம்மாவின் மாளிகையில் குடும்பத்தினர் நடனம் ஆடுவர். வாணவேடிக்கைகள் நடைபெறும். கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விருந்தினர்களுடன், சட்ட பூர்வமான குடும்ப உறுப்பினர்களுடன் முறைதவறி பிறந்தவர்களும் சற்று அதிக எண்ணிக்கையிலேயே கலந்துகொண்டு பழைய பியானோ இசைக்கு நடனமாடுவர். பெரிய அம்மா தலைமை வகிப்பாள். ஹாலின் கடைசியில் லினன் தலையணை வைத்த ஈஸிசெயரில் சாய்ந்தபடி, அனைத்து விரல்களிலும் மோதிரம் அணிந்த தனது கையால் ஆணைகளை பிறப்பித்தபடி இருப்பாள். அன்று இரவுதான் அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் திருமணங்கள் நிச்சயிக்கப்படும். மணமக்களின் சம்மதத்துடனேயே பொதுவாக இது நடைபெற்றாலும், பெரிய அம்மாவின் விருப்பம்தான் கடைசி வார்த்தை. விழா முடிவில் பெரிய அம்மா பால்கனிக்குச் செல்வாள்.

மலர்களாலும் ஜப்பான் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட மாடியில் இருந்தபடி கூட்டத்தினரை நோக்கி நாணயங்களை அள்ளி வீசுவாள்.

இந்த வழக்கம் இடையிடையே தடைபடத்தான் செய்தது. குடும்பத்தில் தொடர்ந்து ஏற்பட்ட மரணங்கள், நாட்டில் தலைதூக்கிய சில அரசியல் நிச்சயமின்மை போன்றவைதான் காரணம். புதிய தலைமுறையினருக்கு விழாவின் ஆடம்பரத்தைப் பற்றி கேள்வி அறிவுதான். பெரிய பூஜையின்போது அவளை அவர்கள் பார்த்ததில்லை. அப்போது சிவில் அதிகாரிகள் சூழ்ந்து நிற்க, பலி பூஜையின் போதுகூட முட்டுக்கால் போடாதிருக்கும் உரிமையுடன் தனது பிளானல் ஸ்கர்ட்டும் காம்பிரிக் பாவாடையும் கசங்காமல் பார்த்துக்கொள்வாள். வயது வந்தவர்களுக்கு தாங்கள் சிறுவர்களாக இருந்தபோது பார்த்தது ஏதோ மாயக்கதைபோல் நினைவில் இருக்கிறது. மாளிகையிலிருந்து தேவாலயத்தின் பலிபீடம் வரை இருநூறு மீட்டர் தூரம் விரிவாக்கப்பட்டிருக்கும் கயிற்றுப் பாய் மீது ஒரு பிற்பகலில் நடந்து வந்த மேரியா டெல் ரோஸாரியோ காஸ்டனெடா மான்டெரோ தனது அப்பாவின் மரணச்சடங்கில் பங்கெடுத்துவிட்டு ஒரு புதிய கவர்ச்சியுடன் கயிற்றுப் பாய் பாதை வழியே திரும்பி நடந்து தனது இருபத்து இரண்டாவது வயதிலேயே பெரிய அம்மா ஆகிவிட்டாள். அந்த மத்திய கால பார்வை, குடும்பத்தின் சென்ற காலத்தை மட்டுமல்ல, நாட்டின் பழைய காலத்தையும் சேர்ந்ததுதான்.

பெரிய அம்மா தன்னைப் பற்றிய கதையிலேயே கலந்துவிட்டாள். அவள் தன் அதிகாரத்தை நிக்கானர் மூலம் செயல்படுத்தினாள். அந்த வெளிப்படையான உறுதி நிலைத்திருந்தது.

பெரிய அம்மா தன் உயிலை எழுதி கையெழுத்திடும் நாளில் அவளது வாரிசுகள் மூன்று நாட்கள் தொடர்ந்து விழா கொண்டாடுவார்கள் என்ற நம்பிக்கை - வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் - எல்லோருக்கும் இருந்தது. அதே வேளை, அவள் தனது அந்திம காலத்துக்கு சில மணி நேரம் முன்பு வரை தனது விருப்பங்களை வெளிப்படுத்தமாட்டாள் என்பதும் அனைவருக்கும் தெரியும். அவள் எப்படியும் ஒருநாள் இறக்கப்போகிறவள்தான் என்பது பற்றி யாரும் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. இன்று காலை, அந்திம பிரார்த்தனையின் கலகலவென்ற ஒலியைக் கேட்டு விழித்தெழுந்த மக்கள் பெரிய அம்மாவுக்கும் மரணம் உண்டு என்பது மட்டுமல்ல, அந்தவேளை நெருங்கிவிட்டது என்பதையும் புரிந்து கொண்டனர்.

அந்தநேரம் வந்து விட்டது. லினன் படுக்கையில் காதுவரைக் கற்றாழையால் பூசப்பட்டு அழுக்கடைந்த கீழை நாட்டு பருத்தித் துணியால் போர்த்தப்பட்ட அவளைப் பார்த்த எவருக்கும் அவளுடைய தாய்மை நிரம்பிய மார்பில் சுவாசத்தின் அடையாளம் எதையும் காணமுடியவில்லை. ஐம்பது வயதுவரை தன்னைக் கைப்பிடிக்க வந்தவர்களையெல்லாம் நிராகரித்த பெரிய அம்மா, எண்ணற்ற குழந்தைகளுக்குப் பாலூட்டும் செழுமைக் கொண்டிருந்தும் அவள் குழந்தை பெறாத கன்னியாகவே இறக்கிறாள். இறுதிக் கட்டத்தில் அந்தோனி இஸபல் பாதிரியார் அவள்

புது எழுத்து 9

கைகளில் எண்ணெய் தடவ பிறரது உதவியை நாடவேண்டியிருந்தது. ஏனெனில் மரண அவஸ்தையில் அவள் தன் உள்ளங்கைகளை நன்றாக மூடிக் கொண்டு விட்டாள். மருமக்களின் உதவி பயனளிக்க வில்லை. அதே களேபரத்தில் கற்கள் பதித்த நகைகள் அணிந்த தன் கையை அவள் மார்போடு சேர்த்து அழுத்திவைத்துக்கொண்டு, மருமக்களைக் கடுமையாகப் பார்த்தபடி 'வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள்' என்று திட்டினாள். அப்புறம் அந்தோனி இஸபல் பாதிரியாரைப் பார்த்தாள். தொழுகைக்கான உடையுடன் இருந்தார் அவர். அவருடன் உதவியாளன் அதற்கான உபகரணங்களுடன் இருந்தான். நம்பிக்கையோடும் பயத்தோடும் அவள், "நான் இறந்துகொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, தன் விரலில் அணிந்திருந்த பெரிய வைர மோதிரத்தைக் கழற்றி, தேவாலயத்தில் ஊழியம் செய்ய புதிதாய் சேர்ந்திருந்த மக்தலேனாவிடம் கொடுத்தாள். உண்மையில் மோதிரம் அவளுக்குத்தான் சேரவேண்டும். மிகவும் இளைய வாரிசு அவள். இதன் மூலம் ஒரு பாரம்பரிய வழக்கம் முற்றுப் பெற்றுவிட்டது. மக்தலேனா குடும்பப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தேவாலய ஊழியத்தில் சேர்ந்திருக்கிறாள்.



பொழுது விடியும்போது, கடைசி அறிவுரைகளை நிக்கானருக்கு அளிப்பதற்காக மற்றவர்களை அங்கிருந்து போகும்படி சொன்னாள். தன் கடைசி காரியங்களை எவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்பது

பற்றி அரை மணி நேரம் பழைய அதிகாரத் தோரணையில் பேசினாள். தனது உடலை எப்படி அடக்கம் செய்யவேண்டும். அதற்குமுன் எப்படி அதைப் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும் தனியாக அறிவுரைகள் வழங்கினாள். 'மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் இந்தச் சமயத்தில் என் உடம்பைப் பார்க்க வருபவர்களில் பெரும்பாலோர் திருடர்கள் தான்' என்றாள். பின்னர் பாதிரியாருடன் தனியாக விரிவான விதத்தில் பாவ மன்னிப்பு பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள். தன் மருமகள் மருமகன்களுடன் சேர்ந்து பிரார்த்தனையில் கலந்துகொண்டாள். அப்போதுதான் அவர்களிடம் தன் கடைசி ஆசைகளைத் தெரிவிப்பதற்காக தன்னை ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்த்தும்படிக் கூறினாள்.

நிக்கானர் இருபத்து நான்கு பக்க நோட்டு புத்தகம் ஒன்றில் மிகத் தெளிவான எழுத்துக்களில், அவளுடைய சொத்து விவரங்களை எந்த விடுதலுமின்றி எழுதியிருந்தான். மெதுவாக மூச்சுவிட்டபடியே பெரிய அம்மா சட்ட அமல் அதிகாரியிடம் தன் சொத்துக்களின் விவரங்களைப் பட்டியலிட்டாள். தன் அளப்பரிய அதிகாரத்தின் மூலத்தையும் தெரிவித்தாள். வைத்தியரையும் அந்தோனி பாதிரியாரையும் சாட்சிகளாக வைத்தாள். மிக நீண்ட அளவிலான அவள் சொத்துக்களின் உண்மையான மதிப்பை மிகவும் குறைத்து மதிப்பிட்ட பின்னும் அது மூன்று மாவட்டப் அளவு விரிந்திருந்தது. நாட்கள் செல்லச் செல்ல அது திருமணங்களின் மூலம் பெரிய அம்மாவின் அதிகாரத்தின் கீழ் ஒன்று சேர்ந்திருந்தது. சரியான எல்லைகள் இல்லாத அந்த இடம் ஐந்து டவுன்ஷிப்கள் கொண்டிருந்தது. சொந்தக்காரர் ஒரு நெல்மணிகூட விதைக்காவிட்டாலும் முன்னூற்று ஐம்பத்து இரண்டு குடும்பங்கள் குத்தகைதாரர்களாக இருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் தன் பிறந்த தினத்தில், தனது நிலங்கள் அரசுக்கு சென்று விடாதபடிக்கான ஒரே வேலையைச் செய்தாள் - குத்தகையை வசூலித்தாள். வீட்டின் பின் பகுதியில் உட்கார்ந்துகொண்டு தன் நிலத்தில் வசிப்பதற்கான வாடகையை அவளே வசூலித்தாள் - அவளுடைய முன்னோர்கள் குத்தகைதாரர்களின் முன்னோர்களிடமிருந்து வசூலிப்பதைப்போல மூன்று நாட்களாக தொடர்ந்த குத்தகை வசூலின் பிறகு வீட்டின் பின்பக்கத்தில் பன்றிகளும், வான்கோழிகளும், குஞ்சுகளும், அன்பளிப்புகளும் மரத்தில் காய்த்த முதல் காய்கனிகளும் பரிசுகளாகக் குவிந்திருக்கும். உண்மையில் அந்தக் குடும்பத்துக்கு கிடைப்பது இந்த ஒரே அறுவடை மட்டுமே. ஒரு லட்சம் ஹெக்டேர் நிலமோ ஆரம்ப முதலே இறந்தபோன பூமிதான். ஆனால் இந்த எல்லைக்குள்ளேயே மெக்கான்டோவின் ஆறு நகரங்களும் வளமுடன் வளர்ச்சி பெற்றிருந்தது வரலாற்று அதிசயம்தான். அந்த எல்லைக்குள் ஒரு வீட்டிலிருப்பவனுக்கு அந்த வீட்டின்மேல் எந்த பாத்தியதையும் இல்லை. ஏனெனில் நிலம் பெரிய அம்மாவுக்குரியது. அவளுக்கு வாடகை தரப்படுகிறது - ரோடுகளை மக்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக அரசு அவளுக்கு கொடுக்க வேண்டியிருப்பது போல.

அந்தக் குடியிருப்புகளுக்கு வெளியே நிறையமாடுகள் சுற்றித் திரிந்தன. யாரும் அவற்றை எண்ணிப் பார்ப்பதோ கவனிப்பதோ இல்லை. அவற்றின் பின்புறத்தில் பரம்பரையான பூட்டுச்சின்னம் சூடு வைக்கப்பட்டிருந்தது. தூர இடங்களில் வேனிற் காலத்தில் தண்ணீர் இன்றி

தாகத்துடன் அலைந்து திரிந்துகொண்டிருப்பது அந்த வரலாற்றுக்கு ஒரு சாட்சியமாக இருந்தது. மக்கள் போராட்டத்துக்குப் பிறகு நீண்ட தொழுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக காலியாகத் தொடங்கியதன் காரணம் என்னவென்று ஒருவருக்கும் புரியவில்லை. பின்னர் அந்த இடங்களில் கரும்பு ஆலைகளும் பால் பண்ணைகளும் நெல் அரவை ஆலைகளும் தோன்றத் தொடங்கின.

தான் பட்டியலிட்ட விவரங்களுடன், மூன்று பெட்டிகள் நிறைய தங்க நாணயங்கள் விடுதலைப் புரட்சியின்போது வீட்டின் ஏதோ ஒரு பக்கத்தில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் தனது உயிலில் குறிப்பிட்டிருந்தாள், பெரிய அம்மா. எவ்வளவோ முயற்சி செய்து தோண்டித் தேடிய பின்னரும் அது கிடைக்கவில்லை. குத்தகைக்குவிட்ட நிலங்களிலிருந்து வரும் வருவாய் மற்றும் பழங்கள் போன்றவற்றைப் பெறுவதுடன், அவ்வப்போது திருத்திவரையப்பட்ட மறைந்திருக்கும் புதையல்பற்றிய வரைபடமும் தலைமுறையாக வந்து கொண்டிருந்தது.

தன் உடைமைகளைப் பட்டியலிட பெரிய அம்மாவுக்கு மூன்று மணி நேரம் பிடித்தது. புழுக்கம் நிறைந்த படுக்கையறையில், மரணத்தை எட்டிக்கொண்டிருக்கும் அவளது குரல் ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய சிறப்புடன் குறிப்பிட்டது. நடுக்கத்துடன் அவற்றில் கையொப்பம் இட்டு அதன் கீழே சாட்சிகளும் ஒப்பிட்டதும், வாதாம் மரங்களின் நிழலில் குழுமத் தொடங்கியிருந்த மக்கள் உள்ளத்தில் ஒரு ரகசிய நடுக்கம் ஏற்பட்டது.

அவளுடைய அத்தனை முக்கியமில்லாத பொருட்களின் பட்டியல்தான் பாக்கியிருந்தது. அவளது முன்னோர்கள் தாம் இறப்பதற்கு முன் வம்ச அதிகாரத்தை நிலைநாட்டும் திருப்தியில் செய்தது போலவே அவளும் மிக பிரயாசையுடன் தனது பிரமாண்ட பிருஷ்டத்தால் நகர்ந்து எழுந்து அதிகாரமும் அன்பும் கலந்த குரலில் சட்ட அமல் அதிகாரியிடம் கண்ணுக்குப் புலப்படாத அந்தச் சொத்துக்களை விவரித்தாள்.

அடிமண்ணின் செழிப்பு, எல்லை நிர்ணயிக்கும் கடற்கரை, கொடியின் நிறங்கள், தேசிய அதிகாரம், பரம்பரைக் கட்சிகள், மனித உரிமை, சட்ட உரிமைகள், தேசியத் தலைமை, மேல் முறையீட்டு உரிமை, சட்ட மன்ற விசாரணைகள், சிபாரிசு கடிதங்கள், வரலாற்று ஆவணங்கள், சுதந்திரமான தேர்தல், அழகுராணிகள், மேல் தள பேச்சுக்கள், பெரிய ஆர்ப்பாட்டங்கள், மதிப்புமிக்க இளம் பெண்கள், நல்ல கனவான்கள், கண்டிப்பான ராணுவத்தினர், மாட்சிமை தங்கிய போப், உச்சநீதிமன்றம், தடைசெய்யப்பட்ட பொருட்கள், சுதந்திரமான பெண்கள், ஊன் பிரச்சினை, மொழியின் தூய்மை, சுதந்திரமாகச் செயல்படும் பொறுப்பான பத்திரிகை, தென் அமெரிக்க ஏதென்ஸ், பொதுமக்கள் கருத்து, குடியரசின் பாடங்கள், கிருஸ்தவர்களின் நடத்தை, அன்னிய செலவாணித் தட்டுப்பாடு, அகதிகள் உரிமை, கம்யூனிஸ்ட்களால் வரும் ஆபத்து, வாழ்க்கைச் செலவு உயர்வு, குடியரசின் பாரம்பரியம், வசதியற்ற பிரிவினர், அரசு ஆதரவு அறிக்கைகள்.

அவளுக்கு மூச்சு வாங்கியது. முடிக்க இயலவில்லை. இரண்டு நூற்றாண்டுகளாக குடும்பத்தில் நிலவும் கூச்சல்களையும் மீறிக்கொண்டு ஒரு கத்தல் அவளிடமிருந்து வெளிப்பட்டதுடன், அவள் உயிர் பிரிந்தது.

புது எழுத்து 9

அன்று மாலை வெளிவந்த செய்தித் தாள்களின் விசேஷப் பதிப்புகளில் முதல் பக்கத்தில் இடம்பெற்றிருந்த ஓர் இருபது வயது பெண்ணின் படத்தைப் பார்த்ததும் அது ஒரு புதிய அழகுராணி என்றே தலைநகர மக்கள் நினைத்தனர். நான்கு பத்தி அளவில் பெரிதாக்கி சற்றே டச் செய்யப்பட்ட அந்தப் புகைப்படத்தில் பெரிய அம்மா மீண்டும் தன் இளமைக் கோலத்தில் காட்சி அளிக்கிறாள். அடர்ந்த தலைமயிரில் தந்தச் சீப்பும் தலை வட்டமும் இடம்பெற்றிருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மெக்காண்டோ தெரு வழியே சென்ற ஒரு புகைப்படக்காரனால் எடுக்கப்பட்டு, செய்திப் பத்திரிகை அலுவலகத்தில் பலவருடங்களாக ஊர் பேர் தெரியாத ஆட்கள் பிரிவில் வருங்கால சந்ததியாரின் நினைவில்படுவதற்காகக் காத்திருந்தது. உருக்குலைந்த பஸ்களில், அரசு அலுவலக லிப்ட்களில், சிறிய தேநீர்க் கடைகளில் மக்கள் பயபக்தியுடன் அவள் பெயரைக் கூறிக்கொண்டனர். நான்கு மணிநேரம் முன்புவரை அவள் பெயர் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது - எல்லாம் இப்போது அச்சு இயந்திரங்களின் தயவு. லேசாக தூற்றலும் பனியும் இருந்தது. அனைத்து தேவாலய மணிகளும் இறந்தவளுக்காக ஒலி எழுப்பின. புதிய வீரர்களின் பயிற்சி தொடக்க விழாவுக்குச் சென்றுகொண்டிருந்த குடியரசுத்தலைவர் இந்தச் செய்தியால் ஆச்சரியமடைந்தார். ஒரு தந்தியின் பின்பக்கம் தம் கையெழுத்தில் யுத்த அமைச்சருக்கு ஒரு குறிப்பு எழுதினார் - தன் உரையின் இறுதியில் பெரிய அம்மாவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தும்படி.

அவள் மறைவினால் தினசரி வாழ்க்கை சீர்குலைந்து விட்டது. எங்கெங்கோ வடிகட்டப்பட்டு தம்மை வந்தடைந்த மக்களின் உணர்ச்சிப் பெருக்கால் பாதிப்படைந்த குடியரசுத்தலைவர், நகரத்தில் நிலவிய பயங்கர அமைதியைக் கவனித்தார். ஒன்றிரண்டு சிறிய கடைகள்தான் திறந்திருந்தன. நகர தேவாலயம் ஒன்பது நாள் துக்கம் அனுசரிக்க தயாராகிக் கொண்டிருந்தது. தலைநகர் தலைமை அலுவலகத்தில், செய்தி தாள்களால் உடம்பைப் போர்த்திக்கொண்டு பிச்சைக்காரர்கள் தூங்கிக் கொண்டிருந்த தாழ்வாரங்களிலும், மறைந்த குடியரசுத் தலைவர்களின் மௌனச் சிலைகள்மீதும் விளக்குகள் ஏற்றப்பட்டன. குடியரசுத்தலைவர், நகரத்தின் துயரத்தில் பங்குகொண்டு அதனால் பாதிக்கப்பட்டவராய், தமது அலுவலகத்தில் நுழைந்ததும், அங்கு அவருக்காக வழக்கத்தைவிட சோகம் ததும்பிய முகத்துடன் கருப்பு டை அணிந்தபடி அமைச்சர்கள் காத்துக்கொண்டிருந்தனர்.

அன்றிரவு நடைபெற்ற நிகழ்ச்சிகளும் அதன்பிறகு உள்ளவையும் சரித்திரப் பாடமாகக் கருதப்படத் தக்கவை. மக்கள் சக்தியை பெரிய நிலைக்கு உயர்த்திய கிருஸ்தவ உணர்ச்சி மட்டுமல்ல, மாறுபட்ட விருப்பங்களும் முரண்பட்ட தீர்ப்புகளும் சேர்ந்து புகழ்பெற்ற உடம்பை புதைப்பதில் இருந்த பொது கருத்தும்தான்.

பல ஆண்டுகளாக பெரிய அம்மா தன் சாம்ராஜ்யத்தில் சமூக அமைதி மற்றும் அரசியல் ஒருமைப்பாடு இரண்டையும் காப்பாற்றி வந்திருக்கிறாள். தனது இரகசிய அறையில் மூன்று பெட்டிகள் நிறைய அவள் வைத்திருந்த வாக்குச் சான்றுகள் தான் அதற்குக்காரணம். அங்கு பணியாற்றுபவர்கள் அவள் தயவில் வாழ்பவர்கள், பெரியவர்கள், சிறுவர்கள் அனைவரும் தங்கள்

பது எழுத்து 9

வாக்குகளை மட்டுமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்துபோனவர்களின் வாக்குகளையும் பயன்படுத்தினர். தற்கால அதிகாரத்திற்குப் பதில் வழக்கமானவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தாள். பாமர மக்களுக்குப் பதில் உயர் வர்க்கத்தினரை ஆதரித்தாள். மக்கள் முயற்சிக்கு மேலாக தெய்வீக அறிவைப் பயன்படுத்தினாள். அமைதி நாட்களில் அவளது திடசித்தம் சர்ச் உறுப்பினர்களையும், ஊழியர்களையும், மானியம் பெறுபவர்களையும் ஏற்காமல் தனது விருப்பத்தையே ஏற்கச் செய்தது. ரகசியமான வழிகளில் தனக்கு வேண்டியவர்களுக்கு உதவினாள். அதற்காக தேர்தலில் கூட மோசடி செய்தாள். சிரமமான சமயங்களில் தனது கட்சிக்காரர்களுக்கு ரகசியமாக ஆயுதங்கள் வழங்கினாள். ஆனால் வெளிப்படையாக தன்னைப் பழிவாங்கியவர்களுக்கு உதவுவதாகக் காட்டிக் கொண்டாள். அதனால் அவளுக்கு மிகப்பெரிய விருதுகள் வழங்கப்பட உறுதிசெய்யப்பட்டன.

குடியரசுத் தலைவருக்கு தமது பொறுப்பின் கடினத்தைப் பற்றி தமது ஆலோசகர்களிடம் எதுவும் கேட்க வேண்டியிருக்கவில்லை. அரண்மனை வரவேற்பு ஹாலுக்கும் வைசிராய்கள் உலாவும் நடைபாதைக்கும் இடையே சைப்ரஸ் மரங்கள் அடர்ந்த தோட்டம் இருக்கிறது. காலனி நாட்களின்போது அங்கே ஒரு போர்த்துக்கீஸ் துறவி காதல் தோல்வி காரணமாக தற்கொலை செய்துகொண்டார். தன்னைச் சுற்றி கனமான மெடல்கள் அணிந்த அதிகாரிகளின் கூட்டம் இருந்தாலும் அந்த இடத்தை இரவு நேரங்களில் கடந்துசெல்லும்போது குடியரசுத் தலைவருக்கு இனம்புரியாத ஒரு நடுக்கம் ஏற்படும். ஆனால் அன்று இரவு அவரது நடுக்கத்துக்கு ஒரு முன்னெச்சரிக்கையின் சக்தி இருந்தது. வரலாற்றின் விதி குறித்த உணர்வு அவருக்கு ஏற்பட்டது. பெரிய அம்மாவின் மறைவுக்காக பத்து நாட்கள் துக்கம் அனுசரிக்க உத்தரவிட்டார். யுத்தக் களத்தில் நாட்டுக்காக உயிர்துறந்த வீரர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதை அவளுக்கு மரணத்துக்குப்பின் வழங்குவதாக அறிவித்தார். தம் நாட்டு மக்களுக்கு அன்று அறிவித்த இரங்கற் செய்தி காலையில் வானொலி மூலமும் தொலைகாட்சி மூலமும் பரவின. பெரிய அம்மாவின் இறுதிச் சடங்கு உலகத்துக்கே ஒரு உதாரணமாக அமையும் என்பதையும் அவர் தெரிவித்தார்.

இந்த உயர்ந்த எண்ணம் ஒரு சில சிக்கல்களையும் ஏற்படுத்தத்தான் செய்தது. பெரிய அம்மாவின் முன்னோர்கள் எப்போதோ ஏற்படுத்திய சட்டங்கள் இப்போது நடைபெறப்போகும் காரியங்களுக்கு தயாராக இல்லை. சட்டத்தைக் கரைத்துக் குடித்த வல்லுநர்கள், தர்க்க சாஸ்திர நிபுணர்கள், சட்ட விரிவுரையாளர்கள் அனைவரும் சட்ட நூல்களை அலசி தலைவர் பெரிய அம்மாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதை அனுமதிக்கும் விதியைக் கண்டுபிடிக்க முயன்றனர். அரசியல் பீடங்கள், குருக்கள், செல்வந்தர்கள் போன்றோர் நாள் முழுதும் பயத்தில் கழித்தனர். அரைவட்ட கட்சி கட்டிடத்தில் நூற்றாண்டுகளாக சட்டத்தைப் பற்றி மட்டுமே பேசிவந்த இடத்தில் தேசியத்தலைவர்கள் எண்ணைச்சாய படங்களுக்கும் கிரேக்க அறிஞர்களின் சிலைகளுக்கும் நடுவே, பெரிய அம்மாவின் பணி பற்றி வானளாவாக உயர்த்திப் பேசினார்கள். மெக்காண்டோவின் கடுமையான செப்டம்பரில் பெரிய அம்மாவின் உடல் கொப்புளங்களால் நிறைந்திருந்தது. முதன் முறையாக மக்கள், பிரம்பு

நாற்காலியில் அமர்ந்த, மத்தியானம் தூங்காத, கடுகு ஒத்தடம் இல்லாத, மூப்பு எய்தாத புனித பெரிய அம்மாவை நினைவு கூர்ந்தனர்.

முடிவற்ற நேரங்கள் வார்த்தைகளால் நிரம்பி வழிந்து நாடு முழுவதும் எதிரொலித்தது. அச்சு வாகனங்களில் அவை உயிர்பெற்றெழுந்தன. பொறுப்புணர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் நீண்ட வள வள பேச்சுக்களுக்கிடையில் பெரிய அம்மாவின் உடல் நூற்று நான்கு டிகிரியில் அவர்களது தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. எழுதப்பட்ட சட்டங்களின் நடுவே பகுத்தறிவு என்ற ஒன்றும் இருப்பதை மறுத்துக் கூற ஒருவரும் எழவில்லை. பிணத்தை மருந்துகளால் பூசுவதற்கு ஆணைகள் இடப்பட்டதுடன், குடியரசுத்தலைவர் சவ அடக்கத்தில் பங்கெடுப்பதை அனுமதிக்கும் சட்டத் திருத்தமும் நிறைவேற்றப்பட்டது.

விவாதங்கள் நகர எல்லையைக் கடந்து, கடல்களைத் தாண்டி, காஸ்டல் கான்டோல்பாவின் மடத்தினூடே ஒரு நல்ல தீர்ப்பாக வெளிவந்தது. வேனல் நாட்களால் ஏற்பட்ட தூக்கக் கலக்கத்திலிருந்து விடுபட்டு மதத் தலைவர் ஜன்னலருகே சென்று வெளியே கவனித்தார். நீரில் மூழ்கி தேடிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற சில தினங்களாக பத்திரிகைகளில் அதைத் தவிர முக்கிய செய்திகள் வேறெதுவுமில்லை. எனவே மதத்தலைவர் தம் இருப்பிடத்திலிருந்து சற்று தூரத்தில் நடந்து கொண்டிருக்கும் அந்த நிகழ்ச்சியைப் பற்றி அக்கறை கொள்வதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் அன்று மாலை ஒரு பெரிய மாற்றம். இதற்கு முன் குளத்தில் மூழ்கி இறந்த பெண்களின் படங்களுக்குப் பதில் ஒரு இருபது வயது இளம்பெண்ணின் படம் சுற்றிலும் கறுப்புக் கட்டங்களுடன் பிரசுரமாயிருந்தது. மதத் தலைவர் (போப்) அந்த படத்திலிருப்பவளை உடனே அடையாளம் கண்டுகொண்டு விட்டார். தாம் புனித பீட்டர் ஆசனத்தில் எழுந்தருளியபோது தமக்கு அறிமுகமானவள் அவள்தான். 'பெரிய அம்மா' என்று அவர் வாய் முணு முணுத்தது. குருமார்களின் தனி இருப்பிடங்களிலும் அதே பெயர் அடிப்பட்டது. இருபது நூற்றாண்டுகளின் நடைமுறைகளை மீறி முதன் முறையாக மதத் தலைவர் தமது மூடிய கறுப்பு நிறக் காரில் பெரிய அம்மாவின் அபூர்வ இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளப் புறப்பட்டுவிட்டார்.

பீச் தோட்டங்களைக் கடந்த வல்யா அப்பியா அண்டிகா கடற்கரையைத் தாண்டி (அந்த செய்தியைக் கேள்விப்பட்டிராத சினிமா நட்சத்திரங்கள் மொட்டை மாடியில் சூரிய ஒளியில் குளித்துக்கொண்டிருந்தனர்) சென்றது. அன்று மாலை புனித பீட்டரின் தேவாலயத்திலிருந்து சுழன்றுவரும் மணியோசை மெக்காண்டோவின் இரைச்சலுடன் கலந்து பின் டைபரின் கரையிலுள்ள காஸ்டல் சந்த் ஆஞ்சலோவின் நீண்ட பாலத்தை அடைந்தது. மாலையாகும் போது புனித பீட்டர் தேவாலய மணியின் ஒலி சுழன்று வந்து மெக்காண்டோவின் கலகலவொலியுடன் இணைந்தது. ரோம் சாம்ராஜ்யத்துக்கும் பெரிய அம்மாவின் நிலத்துக்கும் இடையே எல்லைக்கோடாக அமைந்த சதுப்பு நிலத்தின் குறுக்கே ஒரு கூடாரத்தில் இருந்த மதத் தலைவர், மக்கள் கூட்டம் கடந்து செல்வதால் குரங்குகள் கலவரமடைந்து கூச்சலிடுவதைக் கேட்டார். இரவில் பயணம் மேற்கொள்ளும் படகில் யுக்காசெடிகளும், வாழைக்

புது எழுத்து 9

தலைகளும், கொழிக்குந்தகைகளும், பெரிய அம்மாவின் இறுதிச் சடங்கின் போது பொருட்களை நிறைய விற்கலாம் என்ற ஆசையுடன் புறப்பட்ட ஆண்களும் பெண்களும் இருந்தனர். மதத்தலைவர் அன்றிரவு முதன் முறையாக கொசுக்கடியால் தூக்கம் வராமல் மிகவும் அவதிப்பட்டு விட்டார். ஆனால் மறுநாள் காலையில் அவர் கண்ட அற்புதக் காட்சி - பெரிய அம்மாவின் சாம்ராஜ்யம், பல்ஸாங் ஆப்பிள் தோட்டம், உடும்பு முதலியவை அவர் மனதை உற்சாகப்படுத்தி முந்திய இரவின் சோர்வை அகற்றி அவருடைய தியாகத்துக்கு ஈடு செய்தன.

மாட்சிமை தங்கிய மதத் தலைவரின் வருகையைத் தெரிவிப்பதற்காக அறைக் கதவு மூன்று முறை தட்டப்பட்டதும், நிக்கானர் விழித்துக்கொண்டான். வீட்டை மரணம் ஆக்ரமித்திருக்கிறது. தொடர்ந்து ஏற்பட்ட அவசர தலைமை உரைகளால் அறிவிக்கப்பட்டு, அவற்றை மறித்து வந்த அவசர செய்திகள் தூக்கப்பட்டு, உலகின் பலமூலைகளிலிருந்தும் பொது மக்களும் தேவாலயத்தைச் சேர்ந்தவர்களும் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு வந்து குழுமத் தொடங்கினர். இருண்ட இடைவெளிகளிலும் ஏற்கனவே ஆட்கள் நிறைந்த வாசல் பகுதியிலும், தேவையற்ற பொருட்களைச் சேர்ந்து வைக்கும் மாடியிலும் திரண்டனர். பின்னும் தாமதமாக வந்தவர்கள் தேவாலயத்தைச் சூழ்ந்த தாழ்ந்த சுவர்களிலும் வேலிகளிலும் முக்கிய இடங்களிலும் மரவேலைப்பாடுகளிலும் மாடிகளிலும் தங்களைத் திணித்துக் கொண்டனர். மத்திய ஹாலில் பெரிய அம்மாவின் உடல் மூடப்பட்டுக் கிடத்தப்பட்டிருந்தது. தந்திகள் வந்து குவிந்த வண்ணமிருந்தன. அவளுடைய ஆறு மருமக்களும் அழுது அழுது களைப்படைந்து அழுகையை நிறுத்திவிட்டு உடலின் அருகே ஒருவித திருப்தியுடன் மற்றவர்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

ஆயினும் உலகம் இன்னும் சில நாட்கள் காத்திருக்கத்தான் வேண்டும். நகர கவுன்சில் மண்டபத்தில் நான்கு லெதர் ஸ்டூல், சுத்திகரிக்கப்பட்ட ஒரு கூஜா நீர், கயிற்றால் கட்டப்பட்ட ஒரு தூளி, இவற்றுக்கிடையே மதத் தலைவர் வியர்வையும் தூக்க கலக்கமும் வருத்த, இரவில் நினைவுக் குறிப்புகளையும் நிர்வாக ஆணைகளையும் படித்தபடி இருந்தார். பகலில், தன்னைப் பார்க்க வரும் சிறுவர்களுக்கு ஜன்னல் வழியே தின்பண்டங்கள் கொடுத்தார். அந்தோனி இஸபல் பாதிரியாருடனும் சில வேளை நிக்கானருடனும் தோன்றி தீர்மானத்தின் அறிவிப்பை வாசித்தார். குடியரசுத் தலைவர் ம்ம்ம்... தம் விசேஷ அதிகாரத்தின் கீழ் ம்ம்ம்... பெரிய அம்மாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள ம்ம்ம்.. முடிவெடுத்தார்.

அந்த மகத்தான தினமும் வந்தது. தெருக்களில் வண்டிகளும் விற்பனையாளர்களும் நிரம்பியிருந்தனர். வறுத்த திண்பண்டங்கள், லாட்டரி விற்பனை கடைகள் தோன்றின. கழுத்தைச் சுற்றிக் கட்டிக்கொண்டு பாம்புடன் மனிதர்கள், எல்லா வியாதிகளையும (அக்கி நோய் உட்பட) குணப்படுத்தி சிரஞ்சீவித்தன்மையை அளிக்கும் அற்புத மருந்துகளை விற்கத் தொடங்கினர். சிறு சதுக்கத்தில் கூட்டம் கூடாரங்களை அமைத்து படுக்கைகளை விரித்திருந்தது. வில்லேந்திய சுறுசுறுப்பான வீரர்கள்

அதிகாரிகளுக்காக வழி அமைத்துச் சென்றனர். பலதரப்பட்ட மக்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஸான் ஜோர்ஜிலிருந்து மந்திரவாதிகள், உப்புச் சுரங்கத் தொழிலாளர்கள், அயாபெலியிலிருந்து குதிரை வீரர்கள், சான் பெலோயோவிலிருந்து பாடகர்கள், லா குவேயிலிருந்து கோழி வளர்ப்பவர்கள், ஸபானானாவிலிருந்து அதிக உழைப்பின்றி பிழைப்பவர்கள், ரெபோலோவிலிருந்து டாம்பீக உடையணிந்தவர்கள், மாக்தலானாவிலிருந்து படகோட்டிகள் மற்றும் இந்த வரலாற்றின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் வேறு பலரும் இருந்தனர். கர்னல் அரேலியானோ ப்யூன்டியானாவின் படையைச் சேர்ந்தவர்களும் வந்தனர், ட்யூக் ஆப் மார்ல்பாரோவின் தலைமையில் நூற்றாண்டுகளாக பெரிய அம்மா மற்றும் அவள் இனத்தாரிடம் தங்களுக்கிருந்த விரோதத்தை மறந்து சவ அடக்கத்துக்கு வந்து குடியரசுத் தலைவரிடம் அறுபது வருடங்களாக தங்களுக்கு வழங்கப்படாமலிருக்கும் ஓய்வூதியத் தொகையை உடனே வழங்கக் கேட்டுக்கொண்டனர்.

பதினோரு மணிக்கு சற்று முன்பு வெயிலில் வியர்த்து பித்துப் பிடித்த கூட்டத்தை சரிகை வேலைப்பாடுடன் கூடிய ஜாக்கெட்டுகள் அணிந்த அமைதியான காவலர்கள் கட்டுப்படுத்த, கூட்டம் மகிழ்ச்சியில் ஆரவாரித்து கூச்சல் எழுப்பியது. குடியரசுத்தலைவர், அமைச்சர்கள், நாடாளுமன்ற பிரதிநிதிகள், உச்சநீதி மன்ற நீதிபதிகள், மாநில அமைச்சர்கள், அரசியல் கட்சிகள், மதப் பிரதிநிதிகள், வங்கி அதிகாரிகள், வணிக, தொழில் நிபுணர்கள் அனைவரும் கம்பீரமாக நடந்து தந்தி அலுவலகத் திருப்பத்தை அடைந்தனர். வழுக்கைத் தலையும் பருத்த உடலும் கிழட்டுத் தன்மையும் வியாதியும் கொண்ட குடியரசுத் தலைவர் வருவதை முதன்முறையாகப் பார்க்கும் மக்களின் கண்கள் அவர் யாரென்று அறியாமலேயே வியப்பில் விரிந்தன. நிமிர்ந்த நெஞ்சும் வரிசையான மெடல்களும் கொண்ட ராணுவத்தினருடன் வந்த குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின் முன் ஆர்ச் பிஷப்கள் பலவீனமாகவே காட்சியளித்தனர்.

இரண்டாவது வரிசையில், மெல்லிய கறுப்புடை அணிந்த தேசிய ராணிகள் வந்தனர். தங்கள் படாடோபமான அலங்காரங்களை முதன்முறையாகத் துறந்து அவர்கள் அணிவகுத்திருந்தனர். முதலாவதாக வந்தது சோயாபீன் ராணி, தொடர்ந்து பச்சைப் பட்டாணி ராணி, வாழை ராணி, பூச்செடி ராணி, மாதுளை ராணி, தேங்காய் ராணி, அவரைகாய் ராணி, 255-மைல் நீள-உடுப்பு-முட்டைகள் தோர்வை-ராணி. மற்றும் இந்த வரலாறு முடிவற்று நீண்டுவிடும் என்ற நிர்ப்பந்தத்தால் நீக்கப்பட்ட அநேக ராணிகளும் வந்தனர்.

ஊதா நிற பட்டினால் மூடப்பட்ட சவப்பெட்டியில் கிடக்கும் ராணி எட்டு செப்பு ஆணிகளால் பிறரிடமிருந்து விலகி இருக்கிறாள். பார்மல்டிஹைடில் ஊறிய அவளால் தனக்காக வெளியே நடைபெறும் ஆடம்பரங்களை அறிய முடியவில்லை. பால்கனியில் அமர்ந்தபடி புழுக்கம் காரணமாக தூக்கம் வராத நேரங்களில் அவள் கற்பனை செய்துகொண்டிருந்த பிரமாண்டமான சிறப்பான விழா இப்போது சென்ற 48 மணி நேரமாக நடந்துகொண்டிருக்கிறது. அவள் நினைவாக அனைத்து வயதினரும் மரியாதை செய்கின்றனர். போப் மதத் தலைவர் வந்திருக்கிறார்.

புது எழுத்து 9

தம் கற்பனையில் அவர் வாத்திகன் தோட்டங்களின் உயரே அலங்கரிக்கப்பட்ட ஒரு ரதத்தில் பறந்துகொண்டிருப்பார். இப்போது அவர் கையில் வர்ணம் தீட்டப்பட்ட பனை ஓலை விசிறியுடன் தம் பெருமையும் அதிகாரமும் மிளிர, உலகத்திலேயே மிகப்பெரிய இறுதிச்சடங்கை கௌரவிக்க வந்திருக்கிறார்.

யாருக்கு அதிக அதிகாரம் என்பதைக் காட்டும் போட்டிகள் கண்ணைப் பறிக்க, சாதாரண மக்களுக்கு அவர்கள் எதற்காக சண்டையிடுகிறார்கள் என்பதே புரியவில்லை. முடிவில் நகரின் மிகவும் உயர் பதவியில் உள்ளவர்கள் பிணத்தைக் கிடத்தும் மேடையை தோளில் சுமந்து செல்லலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. மெக்காண்டா தெருவழியாக சவ ஊர்வலம் செல்லும்போது சில பெரிய பறவைகளின் நிழல்களும் அதைத் தொடர்ந்து சென்றதை யாரும் கவனிக்கவில்லை. உயர் பதவியிலிருப்போர் நடந்துசெல்லும்போதும், நெடுநீளமாக இடைஞ்சல்படுத்தும்படி விட்டுச்சென்ற குப்பைகளையும் யாரும் கவனிக்கவில்லை. பெரிய அம்மாவின் உடல் எடுத்துச்செல்லப்பட்ட மறு நிமிஷமே அவளுடைய மருமக்களும், வளர்ப்புக் குழந்தைகளும், வேலையாட்களும் வீட்டின் கதவை அடைத்துவிட்டு மரச் சட்டங்களிலிருந்து ஆணிகளைப் பிடுங்கி அஸ்திவாரம் வரை தோண்டி வீட்டைப் பங்குபோட ஆரம்பித்துவிட்டனர். சவ அடக்கத்தின் பேரொலியையும் மீறி கூட்டத்தினர் விட்ட நிம்மதிப் பெரு மூச்சைக் கேட்க ஒருவரும் தவறவில்லை. பதினான்கு நாட்களாக நடந்து வந்த வேண்டுதல்களும், புகழ் பாடுதலும், மனதை உருக்கும் சோக கீதங்களும் ஒருவழியாக முடிந்து விட்டன. கல்லறையின் மேல் இரும்பு மேடை வைக்கப்பட்டுவிட்டது. அப்போது அங்கிருந்த சிலர் தாங்கள் ஒரு புதுயுகம் பிறப்பதின் சாட்சிகளாக இருப்பதாகக் கருதினர். மதத் தலைவர் தாம் வந்த நோக்கம் நிறைவேறியது என்று திருப்தியடைந்தார். அவர் தம் உடம்போடும் ஆத்மாவோடும், இனி சுவர்க்கம் செல்லலாம். குடியரசுத்தலைவர் நிம்மதியாக அமர்ந்து தன் நியாயப்படி அரசாளலாம். இப்போது இருக்கிற அனேக ராணிகளும் இனி வரப்போகிறவர்களும் தம் விருப்பப்படி யாரையும் திருமணம் செய்துகொண்டு நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம். சாதாரண குடிமக்கள் பெரிய அம்மாவின் சாம்ராஜ்யத்தில் தம் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் குடிசைகள் கட்டி வாழலாம். ஏனெனில் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் சக்தி படைத்த ஒரே ஆத்மா இப்போது ஓர் இரும்பு மேடையின் கீழே அழுகிக் கொண்டிருக்கிறது. இனி மீதி உள்ளது, யாராவது வாசல் கதவின் முன் பக்கம் ஒரு ஸ்டூலை போட்டுக்கொண்டு உட்கார்ந்து இந்தக் கதையையும்; அது போதிக்கும் நீதியையும் எதிர்கால சந்ததியினருக்காக சொல்லிக் கொள்ளலாம். அப்போது பெரிய அம்மாவின் கதையை நம்பாதவர் யாரும் இருக்க மாட்டார்கள். ஏனெனில் நாளைக்கு, புதன்கிழமை, குப்பை அள்ளுபவன் இறுதிச்சடங்கின் மீதி உள்ள குப்பைக் கூளங்களை நிரந்தரமாகப் பெருக்கி அள்ளிச் சென்று விடுவான்.

●

தமிழில் : **எம்.எஸ்.**

புது எழுத்து 9

அதிகாரிகளுக்காக வழி அமைத்துச் சென்றனர். பலதரப்பட்ட மக்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஸான் ஜோர்ஜிலிருந்து மந்திரவாதிகள், உப்புச் சுரங்கத் தொழிலாளர்கள், அயாபெலியிலிருந்து குதிரை வீரர்கள், சான் பெலோயோவிலிருந்து பாடகர்கள், லா குவேயிலிருந்து கோழி வளர்ப்பவர்கள், ஸபானானாவிலிருந்து அதிக உழைப்பின்றி பிழைப்பவர்கள், ரெபோலோவிலிருந்து டாம்பீக உடையணிந்தவர்கள், மாக்தலானாவிலிருந்து படகோட்டிகள் மற்றும் இந்த வரலாற்றின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் வேறு பலரும் இருந்தனர். கர்னல் அரேலியானோ ப்யூன்டியானாவின் படையைச் சேர்ந்தவர்களும் வந்தனர். ட்யூக் ஆப் மார்ல்பாரோவின் தலைமையில் நூற்றாண்டுகளாக பெரிய அம்மா மற்றும் அவள் இனத்தாரிடம் தங்களுக்கிருந்த விரோதத்தை மறந்து சவ அடக்கத்துக்கு வந்து குடியரசுத் தலைவரிடம் அறுபது வருடங்களாக தங்களுக்கு வழங்கப்படாமலிருக்கும் ஒய்வூதியத் தொகையை உடனே வழங்கக் கேட்டுக்கொண்டனர்.

பதினோரு மணிக்கு சற்று முன்பு வெயிலில் வியர்த்து பித்துப் பிடித்த கூட்டத்தை சரிகை வேலைப்பாடுடன் கூடிய ஜாக்கெட்டுகள் அணிந்த அமைதியான காவலர்கள் கட்டுப்படுத்த, கூட்டம் மகிழ்ச்சியில் ஆரவாரித்து கூச்சல் எழுப்பியது. குடியரசுத்தலைவர், அமைச்சர்கள், நாடாளுமன்ற பிரதிநிதிகள், உச்சநீதி மன்ற நீதிபதிகள், மாநில அமைச்சர்கள், அரசியல் கட்சிகள், மதப் பிரதிநிதிகள், வங்கி அதிகாரிகள், வணிக, தொழில் நிபுணர்கள் அனைவரும் கம்பீரமாக நடந்து தந்தி அலுவலகத் திருப்பத்தை அடைந்தனர். வழுக்கைத் தலையும் பருத்த உடலும் கிழட்டுத் தன்மையும் வியாதியும் கொண்ட குடியரசுத் தலைவர் வருவதை முதன்முறையாகப் பார்க்கும் மக்களின் கண்கள் அவர் யாரென்று அறியாமலேயே வியப்பில் விரிந்தன. நிமிர்ந்த நெஞ்சும் வரிசையான மெடல்களும் கொண்ட ராணுவத்தினருடன் வந்த குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின் முன் ஆர்ச் பிஷப்கள் பலவீனமாகவே காட்சியளித்தனர்.

இரண்டாவது வரிசையில், மெல்லிய கறுப்புடை அணிந்த தேசிய ராணிகள் வந்தனர். தங்கள் படாடோபமான அலங்காரங்களை முதன்முறையாகத் துறந்து அவர்கள் அணிவகுத்திருந்தனர். முதலாவதாக வந்தது சோயாபீன் ராணி, தொடர்ந்து பச்சைப் பட்டாணி ராணி, வாழை ராணி, பூச்செடி ராணி, மாதுளை ராணி, தேங்காய் ராணி, அவரைகாய் ராணி, 255-மைல் நீள-உடுப்பு-முட்டைகள் தோர்வை-ராணி. மற்றும் இந்த வரலாறு முடிவற்று நீண்டுவிடும் என்ற நிர்ப்பந்தத்தால் நீக்கப்பட்ட அனேக ராணிகளும் வந்தனர்.

ஊதா நிற பட்டினால் மூடப்பட்ட சவப்பெட்டியில் கிடக்கும் ராணி எட்டு செப்பு ஆணிகளால் பிறரிடமிருந்து விலகி இருக்கிறாள். பார்மல்டிஹைடில் ஊறிய அவளால் தனக்காக வெளியே நடைபெறும் ஆடம்பரங்களை அறிய முடியவில்லை. பால்கனியில் அமர்ந்தபடி புழுக்கம் காரணமாக தூக்கம் வராத நேரங்களில் அவள் கற்பனை செய்துகொண்டிருந்த பிரமாண்டமான சிறப்பான விழா இப்போது சென்ற 48 மணி நேரமாக நடந்துகொண்டிருக்கிறது. அவள் நினைவாக அனைத்து மதத்தினரும் மரியாதை செய்கின்றனர். போப் மதத் தலைவர் வந்திருக்கிறார்.

புது எழுத்து 9

தம் கற்பனையில் அவர் வாத்திகன் தோட்டங்களின் உயரே அலங்கரிக்கப்பட்ட ஒரு ரதத்தில் பறந்துகொண்டிருப்பார். இப்போது அவர் கையில் வர்ணம் தீட்டப்பட்ட பனை ஓலை விசிறியுடன் தம் பெருமையும் அதிகாரமும் மிளிர, உலகத்திலேயே மிகப்பெரிய இறுதிச்சடங்கை கௌரவிக்க வந்திருக்கிறார்.

யாருக்கு அதிக அதிகாரம் என்பதைக் காட்டும் போட்டிகள் கண்ணைப் பறிக்க, சாதாரண மக்களுக்கு அவர்கள் எதற்காக சண்டையிடுகிறார்கள் என்பதே புரியவில்லை. முடிவில் நகரின் மிகவும் உயர் பதவியில் உள்ளவர்கள் பிணத்தைக் கிடத்தும் மேடையை தோளில் சுமந்து செல்லலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. மெக்காண்டா தெருவழியாக சவ ஊர்வலம் செல்லும்போது சில பெரிய பறவைகளின் நிழல்களும் அதைத் தொடர்ந்து சென்றதை யாரும் கவனிக்கவில்லை. உயர் பதவியிலிருப்போர் நடந்துசெல்லும்போதும், நெடுநீளமாக இடைஞ்சல்படுத்தும்படி விட்டுச்சென்ற குப்பைகளையும் யாரும் கவனிக்கவில்லை. பெரிய அம்மாவின் உடல் எடுத்துச்செல்லப்பட்ட மறு நிமிஷமே அவளுடைய மருமக்களும், வளர்ப்புக் குழந்தைகளும், வேலையாட்களும் வீட்டின் கதவை அடைத்துவிட்டு மரச் சட்டங்களிலிருந்து ஆணிகளைப் பிடுங்கி அஸ்திவாரம் வரை தோண்டி வீட்டைப் பங்குபோட ஆரம்பித்துவிட்டனர். சவ அடக்கத்தின் பேரொலியையும் மீறி கூட்டத்தினர் விட்ட நிம்மதிப் பெரு மூச்சைக் கேட்க ஒருவரும் தவறவில்லை. பதினான்கு நாட்களாக நடந்து வந்த வேண்டுதல்களும், புகழ் பாடுதலும், மனதை உருக்கும் சோக கீதங்களும் ஒருவழியாக முடிந்து விட்டன. கல்லறையின் மேல் இரும்பு மேடை வைக்கப்பட்டுவிட்டது. அப்போது அங்கிருந்த சிலர் தாங்கள் ஒரு புதுயுகம் பிறப்பதின் சாட்சிகளாக இருப்பதாகக் கருதினர். மதத் தலைவர் தாம் வந்த நோக்கம் நிறைவேறியது என்ற திருப்தியடைந்தார். அவர் தம் உடம்போடும் ஆத்மாவோடும், இனி சுவர்க்கம் செல்லலாம். குடியரசுத்தலைவர் நிம்மதியாக அமர்ந்து தன் நியாயப்படி அரசாளலாம். இப்போது இருக்கிற அனேக ராணிகளும் இனி வரப்போகிறவர்களும் தம் விருப்பப்படி யாரையும் திருமணம் செய்துகொண்டு நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம். சாதாரண குடிமக்கள் பெரிய அம்மாவின் சாம்ராஜ்யத்தில் தம் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் குடிசைகள் கட்டி வாழலாம். ஏனெனில் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் சக்தி படைத்த ஒரே ஆத்மா இப்போது ஓர் இரும்பு மேடையின் கீழே அழுகிக் கொண்டிருக்கிறது. இனி மீதி உள்ளது, யாராவது வாசல் கதவின் முன் பக்கம் ஒரு ஸ்டூலை போட்டுக்கொண்டு உட்கார்ந்து இந்தக் கதையையும்; அது போதிக்கும் நீதியையும் எதிர்கால சந்ததியினருக்காக சொல்லிக் கொள்ளலாம். அப்போது பெரிய அம்மாவின் கதையை நம்பாதவர் யாரும் இருக்க மாட்டார்கள். ஏனெனில் நாளைக்கு, புதன்கிழமை, குப்பை அள்ளுபவன் இறுதிச்சடங்கின் மீதி உள்ள குப்பைக் கூளங்களை நிரந்தரமாகப் பெருக்கி அள்ளிச் சென்று விடுவான்.

தமிழில் : **எம்.எஸ்.**

புது எழுத்து 9

கேப்ரியேல் கார்சியா மார்க்வெஸ்

சிறுகதை

நாபோ



தேவதைகளைக் காத்திருக்கச் செய்த அந்தக் கரிய மனிதன் ....

நாபோ வைக்கோலின் மீது தலைகுப்புறப் படுத்துக் கொண்டிருந்தான். தனது தேகத்தின் மீது சிறுநீர்க் கழித்த குதிரையொன்று உரசித் தேய்த்துக்கொண்டிருக்கும் வாடையை அவனால் உணர முடிந்தது. அவனது பழுப்பு நிற, ஒளிரும் மேனியின்மீது அவன் அந்தக் கடைசி குதிரைகளின் கதகதப்பான உஷ்ணத்தை உணர்ந்தான். என்றாலும் அவனால் அவற்றின் உடலை உணர இயலவில்லை. நாபோவால் எதையும் உணர இயலவில்லை. குதிரை லாடத்தின் அந்தக் கடைசி அடி அவனுடைய நெற்றியில் மேடிட்டுப் பதிந்ததோடு உறைந்து போய் விட்டது போல இருந்தது. இப்பொழுது அந்த ஒரு உணர்வு மட்டுமே அவனிடம் இருந்தது. தனது கண்களைத் திறந்தான். மீண்டும், அவற்றை மூடினான். பின் அமைதியாக, நெடுஞ்சாண் கிடையாக நீட்டி, விறைப்பாக, அந்த பிற்பகல் முழுக்க அவன் இருந்த அதே விதமாய், காலமற்று தான் வளர்ந்து கொண்டே போவதாய் தன்னை உணர்ந்தபடி, கிடந்தான். அவனுக்குப் பின்னால் இருந்த யாரோ, 'வா, நாபோ, நீ ஏற்கனவே போதுமான அளவு தூங்கியாகி விட்டது' என்று சொல்லும்வரை அப்படியே கிடந்தான். குரல் கேட்டு நிலை மாற்றி நேராகிக் கொண்டான். ஆனால் குதிரைகளை அவன்

காணவில்லை. கதவு மூடியிருந்தது. அவற்றின் பொறுமையற்ற காலடி சப்தங்களை அவனால் கேட்க முடியவில்லை என்ற உண்மையையும் மீறி அவன் அந்த விலங்குகள் அங்கே தான் இருட்டில் எங்கேயோ இருக்கின்றன என்று கற்பனை செய்து கொண்டான். தன்னிடம் பேசிக் கொண்டிருக்கும் நபர் குதிரைத் தொழுவத்திற்கு வெளியிலிருந்தபடி தன்னோடு பேசிக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொண்டான். ஏனெனில் கதவு உட்புறமாக மூடப்பட்டு நாதங்கியிடப்பட்டிருந்தது. மீண்டும் ஒரு முறை அவனுக்கும் பின்னாலிருந்து அந்தக் குரல் கூறியது. "ஆமாம் நாபோ நீ ஏற்கனவே போதுமான அளவு தூங்கியாகி விட்டது, ஏறத்தாழ மூன்று நாட்களாக நீ தூங்கிக் கொண்டிருந்திருக்கிறாய்." அதைக் கேட்டதும்தான் நாபோ தன்னுடைய கண்களை முழுமையாகத் திறந்து கொண்டு, "ஒரு குதிரை என்னை உதைத்து விட்டபடியால் நான் இங்கே இருக்கிறேன்." என்று ஞாபகப்படுத்திக் கொண்டான்.

காலத்தின் எந்த நாழிகையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அவனுக்குத் தெரியவில்லை. நாட்கள் கடந்தோடி விட்டன. பட்டணச் சதுக்கத்திற்கு அவன் வழக்கமாகப் போய் வரும் அந்த தொலைதூர சனிக்கிழமை இரவுகளின்மீது யாரோ ஈரமான கடற்பஞ்சைக் கொண்டு துடைத்து விட்டது போல் இருந்தது. அந்த வெள்ளைச் சட்டைப் பற்றி மறந்து விட்டான். பசும் வைக்கோல் கொண்டு செய்யப்பட்ட ஒரு பச்சைத் தொப்பியும் அழுத்தமான நிறத்திலான கால்சராயும் தன்னிடம் இருந்தன என்பதை அவன் மறந்து விட்டான். தனக்கு காலில் பூட்சுகளே இல்லை என்பதை அவன் மறந்து விட்டான். நாபோ சனிக்கிழமை இரவுகளில் அந்த சதுக்கத்திற்குச் சென்று அங்கே ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்து கொள்வான். இசையைக் கேட்பதற்காக அல்ல. அந்தக் கரிய மனிதனைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருப்பதற்காய். ஒவ்வொரு சனிக்கிழமையும் அவனைப் பார்த்தான் நாபோ. அந்த கறுப்பின மனிதன் கொம்புச் சட்டமிட்ட மூக்குக் கண்ணாடியை அவனுடைய காதுகளோடு சேர்த்துக் கட்டப்பட்ட அளவில் அணிந்து கொண்டிருப்பான். பின்புறமிருந்த இசை மேடைகளில் ஒன்றிலிருந்தவண்ணம் அவன் சாக்ஸ்ஃபோன் கருவியை இசைப்பான். நாபோ அந்தக் கரிய மனிதனைப் பார்த்தான் என்றாலும் அந்தக் கரிய மனிதன் நாபோவைப் பார்த்ததில்லை. குறைந்தபட்சம் சனிக்கிழமை இரவுகளில் அந்தக் கரிய மனிதனைப் பார்ப்பதற்காய் நாபோ அந்த சதுக்கத்திற்குப் போய் வருவது வழக்கம் என்பது யாருக்கேனும் தெரிந்திருக்கிறதா? அந்த நபர் நாபோவைவிட அந்தக் கரிய மனிதன் எப்போதேனும் பதிலுக்கு அவனைக் கவனித்துண்டா என்று கேட்டிருந்தால் (இப்பொழுதல்ல, ஏனெனில் அவனால் எதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள இயலவில்லை) நாபோ 'இல்லை' என்று தான் பதில் கூறியிருப்பான். குதிரையைப் பேணிப் பராமரிப்பதைத் தவிர்த்து அவன் செய்த ஒரே காரியம் அது தான்; அந்தக் கரிய மனிதனைக் கவனித்துக் கொண்டிருப்பது.

ஒரு சனிக்கிழமை அந்தக் கரிய மனிதன் இசைக்குழுவின் அவனது வழக்கமான இடத்தில் இல்லை. ஒருக்கால், அந்த இசை மேடை அங்கே தான் இருந்தது என்ற உண்மையையும் மீறி இனி அந்தக் கரிய மனிதன் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கப் போவதில்லை என்பதாகத்தான்

நாம்போவின் உடனடியான எண்ணவோட்டமாக இருந்திருக்கக் கூடும். ஆனாலும் அந்தக் குறிப்பிட்ட காரணத்திற்காய் அதாவது அந்த இசைமேடை இன்னும் அங்கேயேதான் இருக்கிறது என்ற காரணமாய் அவன் அந்தக் கரிய மனிதன் அடுத்து வரும் சனிக்கிழமையில் திரும்பவும் தனது இடத்தில் இருப்பான் என்று பின்னர் எண்ணினான். ஆனால் அடுத்து வந்த சனிக்கிழமை அவன் திரும்பியிருக்கவில்லை. தவிர அந்த இசைமேடையும் அதன் இடத்தில் நின்று கொண்டிருக்கவில்லை.

உருண்டு ஒருக்களித்துக் கொண்ட நாபோ அந்த மனிதன் தன்னிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். முதலில் நாபோவால் அவனை அடையாளங்காண முடியவில்லை. குதிரைத் தொழுவத்தின் இருட்டு அவனை மறைத்திருந்தது. அந்த மனிதன் துருத்திக் கொண்டிருந்த கழி ஒன்றில் அமர்ந்தபடி, பேசிக் கொண்டும், தன்னுடைய முழங்கால்களைத் தட்டி விட்டுக்கொண்டும் இருந்தான். "ஒரு குதிரை என்னை உதைத்து விட்டது." நாபோ அந்த மனிதனை அடையாளங்காண முயற்சித்தவாறே, மீண்டும் கூறினான். "ஆமாம்", என்றான் அந்த மனிதன். "அந்தக் குதிரைகள் இப்பொழுது இங்கே இல்லை நாங்கள் இசைக் குழுவில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்" நாபோ தன் தலையை அசைத்தான். அவன் இன்னமும் சிந்தித்துப்பார்க்கத் தொடங்கவில்லை. ஆனால் இப்பொழுது அவனுக்கு அந்த மனிதனைத் தான் எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று தோன்றியது. நாபோவுக்குப் புரியவில்லை. ஆனால் யாரோ ஒருவர் அவ்விதம் தன்னிடம் கூறுவது அவனுக்கு வினோதமாகப் படவில்லை. காரணம், தினமும் அவன் அந்தக் குதிரைகளைப் பேணிப் பராமரித்து வருகையில் அவற்றின் கவனத்தைத் திருப்ப அவன் புதிதுபுதிதாகப் பாடல்களை உருவாக்கினான். பின், குதிரைகளுக்குத் தான் பாடிய அதே பாடல்களை வரவேற்பறையிலும், அந்த ஊமைப் பெண்ணின் கவனத்தைத் திருப்புவதற்காய் பாடி வந்தான். அவன் பாடிக் கொண்டிருக்கும் போது யாரேனும் அவனிடம் தான் அவனை ஒரு இசைக்குழுவுக்கு அழைத்துப் போய்க் கொண்டிருப்பதாகக் கூறியிருந்தால் அது அவனை ஆச்சரியப்பட வைத்திருக்காது. இப்பொழுது அவன் இன்னமும் குறைவாகவே வியப்படைந்தான். அவனுக்கு எதுவும் புரியவில்லை என்பதால் அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான், மந்தமாகியிருந்தான், விலங்குத்தன்மை கூடி இருந்தான். "குதிரைகள் எங்கே என்று எனக்குத் தெரிய வேண்டும்" என்றான் அவன். அதற்கு அந்த மனிதன் சொன்னான், "நான் ஏற்கனவே உன்னிடம் கூறி விட்டேன். குதிரைகள் இங்கே இல்லை. எங்களுடைய அக்கறையெல்லாம் உன்னுடைய குரல் மாதிரி ஒரு குரலைக் கண்டடைவதில்தான் இருக்கிறது. ஒருக்கால், வைக்கோலின் மீது முகம் கவிழ்ந்திருந்த நிலையில், நாபோவுக்குக் கேட்டிருந்திருக்கக் கூடும். ஆனால் அந்தக் குதிரைக் குளம்பு அவனுடைய நெற்றியில் விட்டுச் சென்ற வலியைத் தனது மற்ற ஒழுங்கற்ற புலனுணர்வுகளிலிருந்து அவனால் வேறுபடுத்திக் காண இயலவில்லை. அவன் கால்நடைத்தீவனப் போரின்மீது தனது தலையைத் திருப்பிக் கொண்டு உறங்கிப் போனான்.

அந்தக் கரிய மனிதன் இப்பொழுதெல்லாம் அந்த இசைக்குழுவில் இல்லை என்ற உண்மை நிலவரத்தையும் மீறி நாபோ மேலும் இரண்டு

மூன்று வாரங்களுக்கு அந்தச் சதுக்கத்திற்குத் தொடர்ந்து போய் வந்து கொண்டிருந்தான். ஒரு வேளை அந்தக் கரிய மனிதனுக்கு என்ன நேர்ந்து விட்டது என்று நாபோ கேட்டிருந்தால் யாரேனும் அவனுக்கு பதிலளித்திருக்கக் கூடும். ஆனால் நாபோ கேட்கவில்லை. தொடர்ந்து அந்த இசைநிகழ்ச்சிகளுக்கு வேறொரு மனிதன் வேறொரு ஸாக்ஸஃபோன் கருவியுடன் அந்தக் கரிய மனிதனின் இடத்தை எடுத்துக் கொள்வதற்கு வரும் வரை, போய்க் கொண்டிருந்தான். புது ஆசாமி வந்த பிறகு நாபோவுக்கு அந்தக் கரியமனிதன் இனித் திரும்பி வர மாட்டான் என்பது தீர்மானமாகத் தெரிந்து விட, இனி அந்த சதுக்கத்திற்கு மீண்டும் செல்வதில்லை என்று முடிவு செய்து கொண்டான். அவன் விழித்தெழுந்தபோது மிகச்சிறிய நேரமே தான் உறங்கிக் கொண்டிருந்ததாக அவன் எண்ணினான். ஈர கால்நடைத்தீவன வாடை இன்னமும் அவனுடைய நாசியை எரித்துக்கொண்டிருந்தது. அந்த இருட்டு இன்னமும் அவன் கண்களுக்கு எதிராக இருந்தது; அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருந்தது. அந்த மனிதனும் இன்னமும் அந்த மூலையில் இருந்தான். தனது முழங்கால்களைத் தட்டிக் கொடுத்தபடியிருந்த அந்த மனிதனின் தெளிவற்ற, ஆனால், அமைதி நிரம்பிய குரல் கூறிக் கொண்டிருந்தது: "நாங்கள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் நாபோ. நீ இப்பொழுது ஏறத்தாழ இரண்டாண்டு காலம் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறாய். இப்பொழுதும் எழுந்து கொள்ள மறுக்கிறாய்." பின், நாபோ மீண்டும் தனது கண்களை மூடிக் கொண்டான். திரும்பவும் கண்களைத் திறந்தவன் அந்த மூலையிலேயே பார்த்தவண்ணமிருந்தான். மீண்டும் ஒரு முறை அந்த மனிதனை கவனம் குலைந்து, குழம்பித் திகைத்த நிலையில், பார்த்தான். அப்பொழுதுதான் நாபோவால் அவனை அடையாளங் கண்டு கொள்ள முடிந்தது.

வீட்டிலிருந்தவர்களுக்கு நாபோ சனிக்கிழமை இரவுகளில் அந்த சதுக்கத்தில் என்ன செய்து கொண்டிருந்தான் என்பது தெரிந்திருக்குமேயானால், அவனுக்கு இப்பொழுது வீட்டிலேயே இசை இருப்பதால்தான் அவன் போவதை நிறுத்தி விட்டான் என்று, அவன் வழக்கமாக சதுக்கத்திற்குப் போய் வருவதை நிறுத்தியபோது அது குறித்து அவர்கள் நினைத்திருக்கக்கூடும். அந்தச் சமயத்தில்தான் அந்தப் பெண்ணுக்கு வேடிக்கைக் காட்டுவதற்காய் நாங்கள் கிராமஃபோனைக் கொண்டு வந்திருந்தோம். அதை யாரேனும் நாள் முழுக்க சுற்றி விட்டுக் கொண்டிருக்க வேண்டியிருந்ததால், அதற்கு தகுந்த நபர் 'நாபோ' தான் என்பது மிகவும் இயல்பான விஷயமாக இருந்தது. அவன் குதிரைகளைப் பராமரிக்க வேண்டியில்லாதுபோத இதைச்செய்யலாம். அந்தப் பெண், இசைத்தட்டுகளை செவிமடுத்தவாறு அப்படியே அமர்ந்திருந்தாள். சில சமயங்களில் இசை ஓடிக்கொண்டிருக்கும்போது, அந்த பெண் தனது நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு, இன்னமும் சுவரையே பார்த்த வண்ணம், உளறியவாறு தன்னைத் தாழ்வாரத்திற்காய் இழுத்துக்கொண்டு செல்வாள். நாபோ அந்த ஊசியைத் தூக்கி விட்டு, பாடத் தொடங்குவான். ஆரம்பத்தில் வீட்டிற்கு அவன் முதலில் வந்த போது அவனுக்கு என்ன செய்யத் தெரியும் என்று நாங்கள் கேட்டதற்கு, தனக்கும் பாடத் தெரியும் என்று கூறினான். ஆனால், அவன் கூறியதில் யாருக்கும் ஆர்வம்

புது எழுத்து 9

உண்டாகவில்லை. எங்களுக்கு வேண்டியது குதிரைகளைப் பேணி பராமரிக்க ஒரு பையன். நாபோ எங்களுடனேயே தங்கினான் என்றாலும், தொடர்ந்து பாடியபடியே இருந்தான். ஏதோ, நாங்கள் அவனைப் பாடுவதற்காகத்தான் வேலையிலமர்த்தியிருந்தோம் என்பது போலவும், குதிரைகளைப் பராமரித்தல் என்பது அவனுடைய பாடும் பணியை சுலபமாக்குவதற்காய் ஏற்பட்ட ஒரு குறுக்கீடு என்பது போலவும் இருந்தது அவன் போக்கு. இப்படியே ஏறத்தாழ ஒரு வருடத்திற்கும் மேலாகத் தொடர்ந்தது. வீட்டிலிருந்த நாங்கள் அந்தப் பெண்ணுக்கு ஒரு போதும் நடக்க இயலாது, ஒரு போதும் அவளால் யாரையும் அடையாளங்காண இயலாது. எப்பொழுதுமே அவள் அந்தச் சிறிய அளவு செத்துவிட்ட தனிமை கூடிய, பெண்ணாகத்தான், கிராமஃபோனை செவிமடுத்தபடி, நாங்கள் அவளை அவளுடைய நாற்காலியிலிருந்து தூக்கியெடுத்து அவளுடைய அறைக்குக் கொண்டு செல்லும் வரை அப்படியே உணர்ச்சியற்று சுவரையே வெறித்தபடிதான் இருப்பாள் என்ற உண்மைக்குப் பழகி விடும் வரை அப்படியே தொடர்ந்தது. அதன் பின் அவள் எங்களை வலிக்கச் செய்யவில்லை. ஆனால் நாபோ இன்னமும் விசுவாசமாக நேரம் தவறாமல், அந்த கிராமஃபோன் மேல் பித்துப் பிடித்தவனாக இருந்தான். அந்த சமயத்தில் நாபோ சனிக்கிழமை இரவுகளில் இன்னமும் அந்தச் சதுக்கத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தான். ஒரு நாள், அந்தப் பையன் இன்னமும் குதிரை லாயத்தில் இருக்கும்போது, கிராம ஃபோன் பக்கத்திலிருந்து யாரோ கூறினார்கள்: "நாபோ!". நாங்கள் அப்போது தாழ்வாரத்தில் இருந்தோம். யாரும் சொல்லியிருக்கவியலாத ஒன்றைப் பற்றி நாங்கள் யாரும் அக்கறைக் கொள்ளவில்லை. ஆனால் அந்தக் குரலை நாங்கள் இரண்டாம் முறையும் கேட்டோம். " நாபோ!". இரண்டாம் முறையும் கேட்டதும் நாங்கள் தலையை உயர்த்தி, "அந்தப் பெண்ணோடு இருப்பது யார்? " என்று கேட்டோம். யாரோ பதிலளித்தார்கள்: "யாரும் உள்ளே வந்ததாக நான் பார்க்கவில்லை." இன்னொருவர் கூறினார்: "ஏதோ ஒரு குரல் 'நாபோ' என்று கூப்பிட்டதை நான் கேட்டேன். என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்." ஆனால், நாங்கள் என்னவென்று பார்க்கச் சென்றபோது அந்தப் பெண் மட்டும்தான் சுவரின் மீது சாய்த்தபடி இருந்தாள்.

நாபோ சீக்கிரமாகவே திரும்பி வந்து படுக்கச் சென்று விட்டான். அதற்கடுத்த சனிக்கிழமை அவன் அந்தச் சதுக்கத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை. ஏனெனில் அந்தக் கரிய மனிதனுடைய இடத்தில் வேறு யாரோ வந்திருந்தார்கள். அதற்குப்பின் மூன்று வாரங்கள் கழித்து, ஒரு திங்கட்கிழமை, நாபோ இன்னமும் குதிரைத் தொழுவத்தில் இருக்கையில், அந்தக் கிராமஃபோன் ஓட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் யாரும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பின்னர், அந்தக் கறுப்புப் பையன் பாடியபடியே, குதிரைகளின் நீர் அவன் உடம்பிலிருந்து சொட்டிக் கொண்டிருக்க, வந்து கொண்டிருப்பதை நாங்கள் பார்த்தபோதுதான் அவனிடம் நாங்கள் கேட்டோம்: "நீ எப்படி வெளியே வந்தாய்?". அவன் கூறினான்: "கதவின் வழியாக. மத்தியானத்திலிருந்தே நான் லாயத்தில் தான் இருக்கிறேன்." "கிராமஃபோன் பாடிக்கொண்டிருக்கிறது. உனக்குக் கேட்கவில்லை?" என்று நாங்கள் அவனைக் கேட்டோம். தன்னால் கேட்க

புது எழுத்து 9

முடிகிறது என்று கூறினான் நாபோ. "யார் அதை சுழற்றி விட்டது?" என்று நாங்கள் அவனைக் கேட்டோம். அவன், தனது தோள்களைக் குலுக்கியபடி கூறினான்: "அந்தப் பெண். அவள் நிறைய நாட்களாகவே அதை சுழற்றி விட்டுக்கொண்டிருக்கிறாள்."

அப்படித்தான் விஷயங்களெல்லாம் இருந்தன. ஒரு நாள் நாங்கள் அவனை அந்த கால்நடைத்தீவனப் போரின் மீது தொழுவத்தில் பூட்டி வைக்கப்பட்ட நிலையில் அந்தக் குதிரை லாடத்தின் முனை அவனுடைய முன்நெற்றியில் மேடிட்டு அழுந்தப் பதிந்திருக்க, தலைகுப்புறக் கிடப்பதைக் காணும் வரை. தோளைப் பற்றி அவனை நாங்கள் தூக்கி நிறுத்துகையில் நாபோ கூறினான்: "ஒரு குதிரை என்னை எட்டி உதைத்ததால்தான் நான் இங்கே இருக்கிறேன்." ஆனால் அவன் சொல்லியிருக்கக் கூடியதில் யாருக்கும் எந்த அக்கறையும் இருக்கவில்லை. உறைந்து போய் செத்துக் கிடந்த அவனுடைய கண்களும், பச்சை நுரை தள்ளியிருந்த அவனுடைய வாயும்தான் எங்களுடைய ஆர்வத்தைத் தூண்டின. அந்த இரவு முழுவதும் அவன் தேம்பியழுதபடி, உடம்பு நெருப்பாய் கொதிக்க ஜன்னி கண்டு அலத்தியவாறு, குதிரை தொழுவத்தில் கால்நடைத் தீவனப்புல்லில் தான் தொலைத்து விட்ட சீப்பைப் பற்றிப் பிதற்றியபடி, கழித்தான். அது தான் முதல் நாள். அதற்கு அடுத்த நாள், அவன் தனது கண்களைத் திறந்து, "எனக்கு தாகமாய் இருக்கிறது," என்று கூறியபோது நாங்கள் அவனுக்குத் தண்ணீர் கொண்டு வந்தோம். அவன் ஒரே விழுங்கில் அதை முழுக்கக் குடித்துத் தீர்த்து விட்டு இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று இரு முறை கேட்டான். "இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று நாங்கள் அவனிடம் கேட்டதற்கு அவன் கூறினான்: "ஏதோ குதிரை என்னை எட்டியுதைத்து விட்டது போல் உணர்கிறேன்." அப்படியே, பகல் முழுவதும், இரவு முழுவதும் இடைவிடாமல் பேசிக்கொண்டேயிருந்தான். இறுதியாக, அவன் தனது படுக்கையின் மீது அமர்ந்து கொண்டு தனது ஆள்காட்டி விரலால் மேல்நோக்கி உயர்த்திச் சுட்டியவாறு குதிரைகளின் குதிநடை அவனை இரவு முழுக்க விழித்துக்கொண்டிருக்கும்படி செய்ததாகக் கூறினான். ஆனால், அதற்கு முந்தைய இரவிலிருந்து அவனுக்கு ஜுரம் இருக்கவில்லை, அவனுடைய ஜன்னிப் பிதற்றலும் இப்பொழுது இல்லை. ஆனாலும் அவன், அவர்கள் அவனுடைய வாயில் ஒரு கைக்குட்டையை வைத்து அடைக்கும் வரை, இடைவிடாமல் பேசிக்கொண்டேயிருந்தான். பிறகு, நாபோ அந்தக் கைக்குட்டைக்குப் பின்னாலிருந்து, தனது செவிகளுக்கு அருகில் அவனால் அந்த, தாழிட்ட கதவிற்கு மேற்புறம் தண்ணீருக்காய் தேடிக் கொண்டிருக்கும் அந்த குருட்டுக் குதிரைகளின் மூச்சுக்காற்றைக் கேட்க முடிவதாகக் கூறியவாறே, பாடத் தொடங்கினான். அவன் ஏதாவது சாப்பிடட்டும் என்பதற்காய் நாங்கள் அந்தக் கைக்குட்டையை அவனுடைய வாயிலிருந்து நீக்கிய போது அவன் சுவரை நோக்கித் திரும்பிக்கொண்டான். அவன் உறக்கத்திலாழ்ந்து விட்டான் என்றே நாங்களெல்லோரும் நினைத்தோம். அப்படியே சிறிது நேரம் அவன் தூங்கியிருக்கலாம் என்பது கூட சாத்தியம் தான். ஆனால் அவன் விழித்தெழுந்த போது அந்தப் படுக்கையில் இருக்கவில்லை. அவனுடைய பாதங்கள் கட்டப்பட்டிருந்தன. கைகள் அந்த அறையிலிருந்த ஒரு தாங்கு கழியுடன் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன. மடிந்து ஒடுங்கிய நிலையில் நாபோ பாடத் தொடங்கினான்.

அந்த மனிதனை அவனால் அடையாளங்கண்டு கொள்ள முடிந்தது. நாபோ அந்த மனிதனிடம் கூறினான்: "நான் உங்களை முன்பே பார்த்திருக்கிறேன்." அதற்கு அந்த மனிதன் கூறினான்: "ஒவ்வொரு சனிக்கிழமையும் நீ அந்த சதுக்கத்தில் என்னைக் கவனித்துக்கொண்டிருப்பதை வழக்கமாகச் செய்து வந்தாய்." "அது சரிதான், ஆனால் நான் தான் உங்களைப் பார்த்தேன், நீங்கள் என்னைப் பார்க்கவில்லை என்று நான் நினைத்தேன்." என்றான் நாபோ. அதற்கு அந்த மனிதன் கூறினான்: "நான் உன்னை ஒரு போதும் பார்த்ததில்லை. ஆனால் பின்னர், நான் வருவதை நிறுத்தி விட்ட பிறகு, சனிக்கிழமைகளில் என்னைக் கவனிக்கும் வழக்கத்தை யாரோ நிறுத்திக் கொண்டு விட்டது போல் உணர்ந்தேன் நான்." அதைக் கேட்டதும் நாபோ கூறினான்: "நீங்கள் திரும்பி வரவேயில்லை. என்றாலும் நான் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தேன்." அதைக் கேட்டதும் அந்த மனிதன், இன்னமும் அசைவற்ற நிலையிலேயே, தனது முழங்கால்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்ட வண்ணமே, "என்னால் அந்த சதுக்கத்திற்குத் திரும்பிச் செல்ல" இயலாமல் போய் விட்டது. அப்படிச் செல்வது மட்டும் தான் உருப்படியான காரியமாக இருந்த போதிலும் கூட என்னால் மறுபடி அங்கே செல்ல இயலவில்லை." நாபோ எழுந்து உட்கார முயற்சித்தபடி, கால்நடைத்தீவனப் போரிலிருந்து தனது தலையை உலுக்கிக் கொண்டான். இன்னமும் அவனால் அந்த உணர்ச்சியற்ற, பிடிவாதக் குரலை, மறுபடியும் தான் தூக்கத்தில் இறங்கிக் கொண்டிருக்கிறோமா என்பதை அறியக் கூட நேரமில்லாத நிலையை அவன் எட்டும் வரை, கேட்க முடிந்தது. அந்தக் குதிரை அவனை எட்டியுதைத்து விட்டதிலிருந்து, அப்படித்தான் நடந்தது. எப்பொழுதுமே அவன் அந்தக்குரலைக் கேட்டான், "நாங்கள் உனக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறோம் நாபோ. நீ எவ்வளவு நேரமாக உறங்கிக் கிடந்தாய் என்ற காலக்கணக்கை அளக்க இனி எந்த வழியும் இல்லாமல் போய் விட்டது."

அந்த கறுப்பின மனிதன் இசைக்குழுவிற்கு வருவதை நிறுத்தி நான்கு வாரங்கள் ஆகி விட்ட நிலையில், ஒரு நாள் நாபோ அந்தக் குதிரைகளில் ஒன்றின் வாலை சீவி விட்டுக்கொண்டிருந்தான். அதை அவன் ஒரு போதும் செய்ததில்லை. எப்பொழுதும் அவற்றை வெறுமே தட்டிக்கொடுத்துப் பராமரித்து, இடையே கிடைக்கும் நேரத்தில் பாடிக்கொண்டிருப்பதுதான் அவன் வழக்கம். ஆனால், புதன்கிழமையன்று அவன் சந்தைக்குச் சென்றிருந்தபோது அங்கே ஒரு சீப்பைப் பார்த்துத் தனக்குள் இவ்வாறு கூறிக்கொண்டான்: 'அந்த சீப்பு குதிரைகளின் வால்களை வாரி விடுவதற்குரியது.' அந்த சமயத்தில்தான் அவனை எட்டி உதைத்து அவனுடைய வாழ்நாளிற்குமாய் ஒரேயடியாய் குழப்பி, எல்லாம் கலந்து தட்டியதாக அவனை மாற்றி விட்ட அந்த குதிரையுடனான மொத்த விஷயமும், பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்கு முன்பு, நடந்தது. வீட்டில் யாரோ கூறினார்கள்: "அன்றைய தினமே அவன், இப்படியே தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் உளறிக் கொட்டிக்கொண்டிருப்பதாய் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்காமல், இறந்து போய் விட்டிருந்தால் எத்தனையோ மேலாக இருந்திருக்கும்". ஆனால் நாங்கள் அவனைப் பூட்டி வைத்த நாளிலிருந்து யாருமே அவனைத் திரும்பவும் பார்த்திருக்கவில்லை.



எங்களுக்கு மட்டும்தான் தெரியும் அவன் அங்கே, அந்தப் பூட்டப்பட்ட அறையில் இருக்கிறான் என்பது. அப்பொழுதிலிருந்து அந்தப் பெண் மீண்டும் அந்த கிராமஃபோனை இயக்கவேயில்லை. ஆனால், வீட்டில் அதைப்பற்றி அறியும் ஆர்வம் எங்களில் யாருக்கும் இருக்கவில்லை. நாங்கள் அவனை அங்கே, அவனே ஒரு குதிரை என்பது போல் அடைத்து வைத்திருந்தோம்; ஏதோ, அந்த உதையின் மூலம் குதிரையின் மந்தத்தனம் அவனுக்குள் செலுத்தப்பட்டு, அவனுடைய முன்நெற்றியில் குதிரைகளின் முட்டாள்தனம் அத்தனையையும் ஆழப் பதித்து வைத்து விட்டதுபோல்; விலங்குத்தன்மையின் அனைத்து அம்சங்களையும். பின், அந்த நான்கு சுவர்களுக்குள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவனை அங்கேயே விட்டுவிட்டோம், ஏதோ சிறைவாசத்தின் மூலம் அவன் இறந்து பட்டாக வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்து விட்டதைப் போல்- அவனை வேறு எந்த வழியிலும் கொன்று முடித்து விடுமளவு நாங்கள் கொடூரமானவர்களாக இல்லை யென்பதால், அப்படியே பதினான்கு வருடங்கள் கடந்து முடிந்தன. குழந்தைகளில் ஒருவன் வளர்ந்து பெரியவனாகி 'நாபோ' வின் முகத்தைப் பார்த்தே தீர வேண்டும் என்று தன் மனதிற்குள் மிகுந்த உந்துதல் இருப்பதாகக் கூறினான். சொல்லியவன், அந்தக் கதவைத் திறந்தான்.

நாபோ திரும்பவும் அந்த மனிதனைப் பார்த்தான். "ஒரு குதிரை என்னை எட்டியுதைத்து விட்டது," என்றான் அவன். அதற்கு அந்த மனிதன் கூறினான்: "நீ இதையேதான் பல நூற்றாண்டுகளாய் கூறிக் கொண்டிருக்கிறாய், இடைப்பட்ட நேரத்தில் நாங்கள் எங்கள் இசைக்குழுவில் உனக்காகக் காத்துக்கொண்டு வருகிறோம். நாபோ மீண்டும் தனது தலையை உலுக்கிக்கொண்டு, காயம்பட்ட தனது முன்நெற்றியை மறுபடியும் ஒருமுறை அழுத்திக்கொண்டு, விஷயங்கள் எப்படி நடந்தேறின என்று தனக்கு திடுமென நினைவு வந்து விட்டதாக நினைத்தான். "ஒரு குதிரையின் வாலை நான் சீவி விட்டது அதுதான் முதல் தடவை" என்றான் அவன். அதற்கு அந்த மனிதன் கூறினான்: "அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம் - அதன் காரணமாய் நீ வந்து இசைக்குழுவில் பாடத் தோதாயிருக்கும் என்பதற்காய்". நாபோ கூறினான்: "நான் அந்த சீப்பை வாங்கியிருக்கக்கூடாது". அதற்கு அந்த மனிதன் கூறினான்: "நீ எப்படியும் அதைப் பார்த்திருக்கத்தான்போகிறாய். நீ அந்த சீப்பை கண்டெடுப்பாய் எனவும், குதிரைகளின் வால்களை சீவி விடுவாய் எனவும் நாங்கள் முடிவு செய்திருந்தோம்." நாபோ கூறினான்: நான் அவற்றிற்குப் பின்னால் ஒருபோதும் நின்றதில்லை." அதற்குஅந்த மனிதன், இன்னமும் அமைதியாக, இன்னமும் பொறுமையின்மையை வெளிப்படுத்தாத வண்ணம் கூறினான்: "ஆனால், நீ அங்கு நின்றாய்; அந்தக் குதிரை உன்னை உதைத்து விட்டது என்பது உண்மை. நீ இசைக்குழுவுக்கு வர அது ஒன்றுதான் உனக்கு வழியாக இருந்தது." இப்படியே அந்த உரையாடல், அதேயளவாய் சுருதி குறையாமல், தினமும் தொடர்ந்து

கொண்டேயிருக்க இறுதியில் வீட்டிலிருந்த யாரோ கூறினார்கள்: "அந்தக் கதவை யாரேனும் திறந்து நிச்சயம் பதினைந்து வருடங்களாவது ஆகியிருக்கும்."

அந்தப் பெண் (அவள் வளர்ச்சியடைந்திருக்கவில்லை, அவளுக்கு முப்பது வயதுக்கு மேலாகியிருக்கும், அவள் கண்ணிமைகளில் துயரம் படியத் தொடங்கியிருந்தது) அவர்கள் கதவைத் திறந்தபோது கவனை நோக்கியவாறு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் தனது முகத்தை மூக்கைச் சுருக்கி மோப்பம் பிடித்தவாறே, மறுபக்கம் திருப்பினாள். அவர்கள் அந்தக் கதவை மூடியபோது, மீண்டும் கூறினார்கள்: "நாபோ அமைதியாக இருக்கிறான். உள்ளே இப்பொழுது எதுவுமே நகரவில்லை. அசையவில்லை. வரும் நாட்கள் ஒன்றில் அவன் இறந்து விடுவான். அந்த வாடையைத்தவிர மற்றபடிக்கு நமக்கு அது தெரியவே வழியில்லை. பின், வேறு யாரோ கூறினார்கள்: "நம்மால் உணவைக் கொண்டும் அதைச் சொல்ல முடியும். அவன் ஒரு போதும் சாப்பிடுவதை நிறுத்தியதேயில்லை. அவன் அங்கே நன்றாகத்தான் இருக்கிறான், அறையில் பூட்டப்பட்டு, தொந்தரவு செய்ய ஒருவரும் இல்லாமல். பின்பக்கத்திலிருந்து அவனுக்கு நல்ல வெளிச்சம் கிடைக்கிறது." அவ்வாறாய், விஷயங்கள் இருந்தவிதமாகவே இருந்தன; ஆனால், அந்தப் பெண் கதவை நோக்கியே விடாப்பிடியாகப் பார்த்தவாறு, அதிலிருந்த சிறு கீறல்கள், பிளவுகள் வழியாய் வடிகட்டப்பட்டு வெளியான வெதுவெதுப்பான ஆவிப் புகைகளை மோப்பம் பிடித்தபடி இருந்தாள். அவ்விதமாகவே அவள் இருக்க, அதிகாலையில், வரவேற்பறையில் ஒரு உலோகத்தனமான சப்தத்தை நாங்கள் செவிமடுத்தோம். பதினைந்து வருடங்களுக்கு முன்பு நாபோ கிராமஃபோனை சுற்றிவிட்டுக் கொண்டிருக்கும்போது அதே ஒலியை நாங்கள் கேட்டிருக்கிறோம் என்பது எங்களுக்கு நினைவிற்கு வந்தது. நாங்கள் எழுந்து கொண்டு, விளக்கை ஏற்ற, மறந்துபோன அந்தப் பாடலின் ஆரம்பம் எங்கள் காதுகளை வந்தடைந்தது, வெகு நீண்ட காலமாய் இசைத்தட்டுகளில் இறந்து போய் விட்டிருந்த அந்த துயரமான பாடல். அந்த சப்தம் தொடர்ந்து ஒலித்த வண்ணம் இருந்தது. அதிகமாக சிரமங்கூடியதாய் கேட்டபடியே இருக்க, நாங்கள் வரவேற்பறையை எட்டிய கணம் ஒரு வறண்ட ஒலி எங்களை எட்டியது. எங்களால் இன்னமும் அந்த இசைத்தட்டு ஒலித்துக்கொண்டிருப்பதைக் கேட்க முடிந்தது. கிராமஃபோனுக்குப் பக்கத்தில் அந்தப் பெண் சுவரையே நோக்கியபடியும், திசைதிருப்பும் கைப்பிடியை கையில் பிடித்தபடியும் அமர்ந்திருப்பதையும் நாங்கள் பார்த்தோம். எதுவும் சொல்லவில்லை நாங்கள். ஆனால், யாரோ ஒருவர் ஏதோ ஒரு சமயத்தில் எங்களிடம் அந்தப் பெண்ணுக்குக் கிராமஃபோனை எப்படி திசை மாற்றுவது என்று தெரியும் என கூறியதை நினைவு கூர்ந்தவாறே எங்கள் அறைகளுக்குத் திரும்பிச்சென்றோம். அதை நினைத்தபடி நாங்கள் அந்த உறைந்த கப்பிச்சுருளில் எஞ்சியிருப்பதன் மீது இன்னமும் சுழன்று கொண்டிருக்கும் இசைத்தட்டிலிருந்து வந்து கொண்டிருந்த அந்தக்கீறல் விழுந்த சின்ன இசைத்துணுக்கைக் கேட்டபடி அப்படியே விழித்திருந்தோம்.

அதற்கு முந்தைய நாள், அவர்கள் அந்தக்கதவைத் திறந்ததும் அது

புது எழுத்து 9



ஒரு உயிர்மக் கழிவின் வாடையை, ஒரு இறந்த உடலின் வீச்சத்தைக் கிளப்பியது. அந்தக் கதவை யார் திறந்தாரோ அவர் கூச்சலிட்டார்; "நாபோ ! நாபோ !!" ஆனால், உள்ளிருந்து யாரும் பதிலளிக்கவில்லை. கதவுத் திறப்பின் அருகில் காலித்தட்டு கதவின் கீழாக உள்ளே செலுத்தப்படும். தினசரி மூன்று தடவைகள் அந்தத் தட்டு மீண்டும் வெளியே, உணவின்றி, வந்து நிற்கும். நாபோ உயிரோடு இருக்கிறான் என்பதை நாங்கள் அறிந்து வைத்திருந்தது அப்படித்தான். ஆனால், வேறு எந்த வழியாகவும் அந்த விவரம் எங்களுக்குத் தெரியவில்லை. உள்ளே எந்தவித அசைவும் இல்லை; எந்தவிதப் பாடலொலியும் கேட்கவில்லை. அவர்கள் அந்தக் கதவை மூடி விட்ட பிறகுதான் நாபோ அந்த மனிதனிடம் இப்படிக் கூறியிருக்க வேண்டும்: "என்னால் இசைக்குழுவிற்குப் போக இயலாது." அந்த மனிதன் "ஏன்" என்று கேட்டான். அதற்கு நாபோ கூறினான்: "ஏனெனில், என்னிடம் அணிந்து கொள்ள பூட்சுகளே இல்லை." அதைக் கேட்டதும் அந்த மனிதன், எழுந்து நின்ற வண்ணம் கூறினான்: "அதனால் பாதகமில்லை; இங்கே ஒருவரும் பூட்சுகள் அணிவதில்லை." நாபோ அந்த மனிதன் தன்னை நோக்கி உயர்த்திக் காட்டிக் கொண்டிருந்த அந்த வெறுங்காலின் மஞ்சள் நிறமான தடித்த பாதத் தோலைப் பார்த்தான். "நான் இங்கே உதைக்காய் நிரந்தரமாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன்," என்றான் அந்த மனிதன். "அந்தக் குதிரை என்னை ஒரு விநாடி முன்புதான் எட்டியுதைத்தது," என்றான் நாபோ. "இப்பொழுது நான் என் முகத்தில் சிறிது தண்ணீரைத் தெளித்து விட்டுக் கொண்டு அதற்குப் பிறகு அவற்றை சற்று காலார நடக்கக் கூட்டிச் செல்வேன்." அதைக் கேட்டு அந்த மனிதன் கூறினான்: "குதிரைகளுக்கு நீ இனி தேவையில்லை. இங்கே இப்பொழுது குதிரைகளே இல்லை. நீதான் எங்களோடு வர வேண்டும்". அதற்கு நாபோ கூறினான்: "குதிரைகள் நிச்சயம் இங்கு இருந்தாக வேண்டும்." அவன் சற்றே உடலை உயர்த்தி, தன்னுடைய கரங்களை கால்நடைத்தீவனப்போசில் புதைத்துக்கொள்ள, அந்த மனிதன் கூறினான்: "அவற்றைப் பார்த்துக்கொள்ள கடந்த பதினைந்து வருடங்கள் அவர்கள் யாரையும் வைத்துக்கொள்ளவில்லை." ஆனால் நாபோ, கால்நடைத்தீவனப் போருக்கு அடியிலிருந்த தரையைக் கீறிப்பிறாண்டி விட்டவாறே, சொல்லிக் கொண்டிருந்தான். "அந்தச் சீப்பு நிச்சயம் இங்குதான் இன்னமும் இருக்க வேண்டும்." அதைக் கேட்ட அந்த மனிதன் கூறினான்: "அவர்கள் அந்த குதிரைத் தொழுவத்தை பதினைந்து வருடங்களுக்கு முன்பே மூடி விட்டார்கள். அதில் இப்பொழுது குப்பைக்

கூளம் நிரம்பியிருக்கிறது. அதற்கு நாமோபா இவ்வாறு கூறினான்: "குப்பை கூளமெல்லாம் ஒரு பிற்பகலில் சேர்ந்து விடாது. அந்தச் சீப்பைக் கண்டெடுக்காதவரை நான் இங்கேயிருந்து வெளியேற மாட்டேன்."



அதற்கடுத்த நாள், அவர்கள் அந்தக் கதவை மீண்டும் தாழிட்டுவிட்ட பிறகு, அவர்கள் உள்ளே சிரமங்கூடிய அசைவுகளை மீண்டும் ஒரு முறை கேட்டனர். அதற்குப்பிறகு ஒருவருமே நகரவில்லை. முதல் 'கிறீச்' ஒலிகள் கேட்டபோதும், கதவு அசாதாரண அழுத்தத்தின் கீழ் அசைந்து கொடுக்கத்தொடங்கியபோதும் யாரும் எதையும் மீண்டும் கூறவில்லை. உள்ளே, பட்டியில் அடைக்கப்பட்ட விலங்கு ஒன்றின் மூச்சிரைப்பு போல் ஏதோ ஒலிப்பது கேட்டது. முடிவாக, துருப்பிடித்த 'கீல்' களின் ஒலி, அவை தகர்ந்து உடைந்தபோது, கேட்ட சமயம் நாபோ தனது தலையை மீண்டும் உலுக்கிக் கொண்டான். "அந்தச் சீப்பைத் கண்டெடுக்காதவரை, நான் இசைக் குழுவுக்குப் போக மாட்டேன்" என்றான் அவன். " அது நிச்சயம் இங்கே எங்கோதான் இருக்க வேண்டும்" . பின் அவன் அந்த கால்நடைத் தீவனப் போரில் கையைப் புதைத்து, அதை வெட்டிப் பிளந்து, தரையைக் கீறிப் பிறாண்டித் தேடியபடி இருக்க, இறுதியாக அந்த மனிதன் கூறினான்: """அப்படியானால் சரி நாபோ, நீ இசைக்குழுவுக்கு வரத் தேவையான ஒரே ஒரு விஷயம் அந்த சீப்பைத் தேடிக் கண்டெடுப்பதுதான் என்றால், போய் அதைத் தேடு." அவன் முகம் ஒரு வித சகிப்பு கூடிய அந்தகாரத்தால் இருண்டிருக்க, அவன் முன்நோக்கி சாய்ந்தான். அங்கிருந்த தடுப்பின் மீது தனது கைகளைப் போட்டுக் கொண்டவன் கூறினான்: "போ நாபோ, யாரும் உன்னைத் தடுக்காதவாறு நான் பார்த்துக்கொள்கிறேன்."

அதே நேரம் அந்தக் கதவு பெயர்ந்து அந்த பிரும்மாண்டமான விலங்குத்தன்மையான கறுப்பின மனிதன், தனது நெற்றியில் அந்தக் கொடூரமான தழும்போடு (பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன என்ற உண்மையையும் மீறி இருந்தது) அங்கிருந்த மேஜை நாற்காலிகளின் மேல் தட்டுத் தடுமாறித் தடுக்கியவண்ணம், அவனது கைமுஷ்டிகள் உயர்ந்து, அச்சம் விளைவிப்பதால் காணப்பட்ட நிலையில் (அவர்கள் பதினைந்து வருடங்களுக்கு முன்பு)அவன் ஒரு கரிய சிறுவனாய் அந்தக் குதிரைகளைப் பராமரித்துக் கொண்டிருந்த காலத்தில்) அவனைக் கட்டிப் போட்ட, அந்தக் கயிறு இன்னமும் அவனைப் பிணைத்திருக்க, வெளியே வந்தான்.

வராந்தாவின் (வெளி முற்றத்தை அடையும் முன்பு) முந்தைய நாள் இரவிலிருந்து அந்த கிராமஃபோன் திசை திருப்பிக் கைப்பிடி அவனுடைய கையிலேயே இருக்கும் நிலையில் அப்படியே அமர்ந்த வண்ணமிருந்த அந்தப் பெண்ணைக் கடந்து சென்று (சங்கிலியில் பிணைக்கப்படாத அந்த சக்தியை கண்டபோது அவள், ஒரு காலத்தில் கட்டாயம் ஒரு வார்த்தையாக இருக்கும்படியான ஏதோ ஒன்றை நினைவு கூர்ந்தாள்), வெளிமுற்றத்தை (குதிரைத் தொழுவத்தை கண்டடையும் முன்பாக), வரவேற்பறைக் கண்ணாடியைத் தனது தோளால் இடித்துக் கீழே விழச் செய்தபின், ஆனால், அந்தப் பெண்ணைப் பார்க்காமலே (கிராமஃபோன் அருகிலும் சரி, அந்த நிலைக்கண்ணாடியிலும் சரி) அடைந்து, தனது முகம் சூரியனை நோக்கிய நிலையில், மூடிய கண்களுடன் (உள்ளே உடைந்த கண்ணாடியின் ஓசை இன்னமும் கேட்டபடியிருக்க) நின்றான். பின், இலக்கின்றி, கண்கள் கட்டப்பட்ட நிலையிலான ஒரு குதிரையைப் போல், பதினைந்து வருட சிறைவாசம் அவனது ஞாபகத்திலிருந்து அழிந்துவிட்ட, ஆனால், அவனது உள்ளுணர்வுகளிலிருந்து அழித்து விடாத (அந்தக் குதிரையின் வாலை அவன் வாரிச் சீவி விட்ட, அதன் விளைவாய் அதற்குப் பிறகான வாழ்நாள் முழுக்க மூளை குழம்பிய நிலையில் விடப்பட்ட அந்தத் தொலைதூர நாளிலிருந்து) அந்தக் குதிரைத் தொழுவக் கதவைத் தன் போக்கில் இயல்பாய்த் தேடியவாறு ஓடினான். ஆடுகள் நிரம்பிய அறையொன்றில் கண்கட்டிய நிலையிலான காளையைப் போல் பேரழிவு, சீர்குலைவு, கலவரம், களேபரம் எல்லாவற்றையும் தனக்குப்பின்னே விட்டுச் செல்பவனாய், அவன் அந்தப் பின்கட்டை அடைந்து (இன்னமும் குதிரைத் தொழுவத்தைக் கண்டுபிடிக்காதவனாய்), அந்த நிலைக் கண்ணாடியை இடித்துக் கீழே தள்ளிய அதே சூறாவளிச் சீற்றத்தோடு தரையைக் கீறிப்பிறாண்டினான். அப்படிக் கீறிப்பிறாண்டுவதன் மூலம், அந்தக் குதிரைக்குட்டியின் மூத்திரவாடையை அவனால் திரும்பவும் கிளர்ந்தெழச் செய்ய முடியும் என்று எண்ணுவதே போல், குதிரைத் தொழுவத்தின் கதவுகளை அடைந்து அவற்றை ஒரேயடியாக விரைவாய் உந்தித் தள்ளியதில், உள்ளே முகம் மண்ணைக் கவ்வும்படியாக விழும் வரையும். ஒருக்கால் மரண வேதனையில் இருக்கலாம், எனில் இன்னமும் அந்த, அரைக்கணம் முன்பு அந்தப் பெண்ணை செவி மடுக்க வொட்டாமல் அவனைத் தடுத்த அந்த ஆக்ரோஷ விலங்குத்தன்மையால் குழம்பிய நிலையில்; அவன் அவளைத் தாண்டிச் செல்வதைக் கேட்டதும், கிராம ஃபோனின் திசை திருப்பிக் கைப்பிடியை உயர்த்தியவன், உளறியவாறு, நினைவுபடுத்திக் கொண்டவனாய் இருந்த இடத்தை விட்டு அசையாமல், வாயைச் சிறிதும் அசைக்காமல், ஆனால் கிராமஃபோனின் திசைதிருப்பிக் கைப்பிடியை உயரே சுழற்றியவாறு, தன் வாழ்நாளில் என்றைக்குமாய் அவள் உச்சரிக்கத் கற்றறிந்த அந்த ஒரே வார்த்தையை நினைவுப்படுத்திக் கொண்டவளாய், அவள் அதை வரவேற்பறையிலிருந்து ஓங்கிக் குரலெடுத்துக் கூவினாள்:

"நாபோ ! நாபோ !" ●

தமிழாக்கம் : லதா ராமகிருஷ்ணன்

எட்மண்ட் ஜபேஸ்

கவிதைகள்



(1912 - 1991)

எகிப்தில் பிறந்த யூத இனத்தைச் சேர்ந்தவர். பிரெஞ்சு மொழியில் எழுதியவர்.

இங்கு மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகள் கீழ்க்கண்ட புத்தகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை.

EDMAND JABES.

The book of Questions vol. I, II/ translated by Rosmerice Waldrop, (wesleyan University Press, Hanover and London/ 1991)

The Book of Dialogue, translated by Rosmerie Waldrop (Wesleyan University Press, Connecticut, 1987)

If therwere any where but Desert, translated by Keith Waldrop. (Station Hill press, 1988)

The little book of unsuspected subversion, translated by Rosmarie Waldrop.

(Merdian, Stanford University press, California 1996)

A foreigner carrying in the crook of his arm a tiny book. translated by Rosemarie waldrop. (Weleyan University press, Hanover and London 1993)

பெயர் என்பது நான் என்பதற்கு அதிகாரம் தருகிறது. ஆனால் அதை
நியாயப்படுத்துவதில்லை.

“தூரம்” என்று நீ அழைப்பது (குறிப்பது) மூச்சிழுப்பதற்கும்,
மூச்சுவிடுவதற்குமான காலம்தான் வேறொன்றுமில்லை.
மனிதனுக்குத் தேவைப்படும் உள்வலி அனைத்தும் அவன்
நுரையீரல்களிலேயே இருக்கிறது.
வெறிச்சோடிக்கிடக்கிறது வாழ்வின் வெளி.

“ஒவ்வொரு சைகையும் வெறுமையால் மூடப்பட்டிருக்கிறது”

அந்நியனிடம் அவன் பிறந்த இடம் எது என்று கேட்காதே. அவன்
எங்கே போகிறான் என்று கேள்.

தன் கண்ணீர் முழுவதையும் நட்சத்திரங்களாக மாற்றிவிட்டு
கண்ணீருற்று நிற்கும் கடவுளுக்காக அழுகிறான் மனிதன்.
நட்சத்திரங்கள் சிதறிய வானமாக வலி இரவு முழுமையும் நமக்குள்.

காயங்களின் கூட்டுறவு ஒன்றையொன்று குறுகிக்கொள்ளும் கைகள்

கோட்டின் உள்நோக்கிய தன்மை

வாழ்க்கையை கடந்து அழிகிறது வாழ்க்கை.
சூரியனுக்கு வாக்களிக்கப்படும் (வழங்கப்படும்) மரணம்.

“எண்ணம் கண்டுபிடிக்கிறது. மனிதன் கற்றுக்கொள்கிறான்.
வார்த்தைகள் அறிகின்றன”.

தனிமையின் ஒவ்வொரு வார்த்தையிலும் ஒவ்வொரு வார்த்தையின்
மலராத தனிமை.

நம்மை அழிப்பது எழுதப்பட்ட அந்த வார்த்தை அல்ல. அந்த
வார்த்தையினுள் அழிக்கப்பட்டிருக்கும் மற்றொரு வார்த்தைதான்.
இரு விதமான அழிப்பையும் நம்முன் வைக்கிறது நூல்.

தன்னை விலக்கிய ஒரு உலகத்தை பாட முடியாத யூதன்,
ஒரு பாடலில்
அந்த உலகத்தை வாசிக்க(படிக்க) கற்றுக்கொண்டான்.

அந்நியனுக்காக யாரும் காத்திருப்பதில்லை, அந்நியன் மட்டுமே

என்றும் எப்பொழுதும் காத்திருக்கிறான்.

எழுதுதலில் வாழ்ந்து அழித்தலில் செத்துப்போகிறோம் நாம்.

நான் சிந்திக்கிறேன், சிந்தனையால் நான் உருவாக்கப்படுகிறேன். ஆனாலும் நான் எந்த அளவுக்கு அச்சிந்தனை சேருமிடமாக இருக்கிறேனோ அந்த அளவுக்கு அச்சிந்தனை என் படைப்பாகவும் இருக்கிறது.

சிந்தனையில் துவங்குகிறது பொறுப்புணர்வு.

மறைக்கப்பட்டிருக்கும் பெயரொன்றை, ஏற்கனவே தன்னுடையதாக கொண்டிருப்பதற்கு, நாம் பெயரிடுகிறோம். பெயரிட வேண்டும் என்பதற்காக பெயரிடுகிறோம். பகிர்ந்து கொள்ளப்படக்கூடிய ஒரு பெயர்.

மறைக்கப்பட்டிருக்கும் பெயர் ஒன்றே ஒன்றுதான். தனித்தன்மையுடன் இருப்பதற்கு அது அறியப்படாததாக இருக்கவேண்டும். உச்சரிக்க முடியாத பெயரல்ல, ஆனால் என்றும் எப்போதும் உச்சரிக்கப்படாத பெயர்.

பேசப்பட்ட வார்த்தைக்கு வரலாறு இல்லை. ஆனால் மாற்றப்பட முடியாத ஒரு வரலாற்றை கொண்டிருக்கிறது மௌனம்.
அவ்வரலாற்றை
திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறது, வார்த்தை.

ஒரு பிரதியை உரக்கப்படிக்கும்போது, உன்னுடைய குரலை கேட்க முடியவில்லையா உன்னால்: மௌனத்தின் வரலாறு ஒரு பிரதி. மௌனத்தைக் கேட்பது, ஒரு நூல்.

"நூலின் நினைவு எனக்கு இருக்கிறது.
ஏனென்றால் அது மட்டுமே
என்னை இன்னும் நினைத்துக்கொண்டிருக்கிறது"
விதையும் சாம்பலும்
வளர்ச்சியை குறிக்கிறது மரணம்.

நீ என் ஆத்மாவை அழைக்கிறாய். உன் குரலில், உன் அழைப்பில் இருக்கிறது என் ஆத்மாவின் வேதனை.

அவன் கூறினான்: " முகத்தில் விழும் நேற்றின் அறை"

அவன் கூறினான்: "நாளையின் கை"

புது எழுத்து 9

மணலின் புழுதி படர்ந்த மௌனத்திலும் இருக்கிறது எண்ணம்.

அந்நியன்? அந்நிய நான்?
ஆறாத்தானவை என்று தெரிந்துதான் புண்படுத்தும் அந்த வார்த்தைகளை
மௌனத்தில் ஆழ்த்தியிருக்கிறோம் நாம்.
வேதனையை வலியை ஏற்பதுதான் வார்த்தையின் மௌனம்
எழுதுவது, இந்த மௌனத்தை எழுதுவது
விடைபெறுவதற்கு இல்லை வார்த்தைகள்

மரணத்தின் கண்ணாடியில் தன்னைத்தானே மதித்து

வியந்து கொள்கிறது மரணம்.
என்னுடையதாக இல்லாத ஒரு நிலத்தை விட்டு
நான் சென்றேன் மற்றொரு நிலத்திற்கு அந்நிலமும் என்னுடையதல்ல.
நூலை தான் வெளியாகக்கொண்ட, மையினால் ஆன ஒரு
வார்த்தையினுள் நான் தஞ்சம் புகுந்தேன் நான்,
எங்கிருந்தும் வராத ஒரு வார்த்தை, பாலையின் புரியாத வார்த்தை,
இரவில் என்னை நான் போர்த்திக் கொள்ளவில்லை
சூரியனிடமிருந்து தப்பிக்க நிழல் தேடவில்லை
நிர்வாணமாக நடந்தேன் நான்.
நான் எங்கிருந்து வந்தேன் என்பது பொருளற்று போனது
நான் எங்கே போகிறேன் என்பதுபற்றி யாருக்கும் கவலையில்லை

காற்று, காற்றுடன் பேசுகிறேன் நான்.
காற்றில் அலையும் மணலின் துகள்.

பாலையை நிலக்காட்சி என சொல்லமுடியாது, வெவ்வேறுபட்டதாக
பலவகைப்பட்டதாக பாலை இருந்தாலும், அது நிலக்காட்சியின்
இன்மை
அந்த இன்மையினால் யதார்த்தத்தை பெறுகிறது பாலை.

பாலையை ஓர் இடமென்றும் சொல்லமுடியாது. அது இடமற்ற
இடம்:
இடத்தின் இடமற்ற இடம் அல்லது இடமற்ற இடத்தின் இடம்.

பாலையை வெற்றிடமாகவோ, சூன்யமாகவோ கூட
கொள்ளமுடியாது. பாலையை ஓர் முடிவாகவும் கொள்ளமுடியாது
பாலை ஒரு துவக்கமாகவும் இருக்கிறது.

புது எழுத்து 9

பாலையை தூரம் என்றும் கொள்ளமுடியாது. பாலையை உண்மையான தூரமாகவும், அதே சமயம் நினைவுக்கான கிடங்குகளும் சின்னங்களும் இல்லாமல்
முழுமையான தூரமின்மையாகவும் இருக்கிறது. நான்கு அடிவானங்கள் மட்டுமே பாலையின் எல்லைகள். நான்கு அடிவானங்களையும், இணைத்தும் பிரித்தும் கிடக்கிறது பாலை. தன்னைப்பிரிவதில் தன்னைப்பிரிப்பதில் ஓர் திறந்த வெளியாக, திறக்கும் ஓர்இடமாக மாறுகிறது பாலை.

மௌனமான குறியீட்டிற்கு முன்னால் மௌனத்தை அணுகுதல்
பக்கத்திற்கு முன்னால் நூலை அணுகுதல்
நம்மை எழுதியவாறே நம் எண்ணங்களை விழிக்கச்செய்யும்
வார்த்தைகளுக்காக காத்திருத்தல்

ஒரு கையினால் முகத்தை நீ மூடிக்கொண்டால்
பகலினுள் நுழைந்தது இரவு.

" யாருக்காக எழுதுகிறாய் நீ "
யாருக்காகவும் இல்லை. ஒரு வேளை என்றும் எப்பொழுதும்
யாருக்காகவோ காத்துகொண்டேயிருக்கும் மௌனத்திற்காக
இருக்கலாம்.

நம்முன் இருக்கிறது நூல்.
நூலின் முதல் பக்கத்தை சிவப்பில் குறித்துவிடு, ஏனென்றால்,
துவக்கத்தில் புலப்படாததாக இருக்கிறது காயம்.

" நான் அலறுகிறேன் நான் அலறுகிறேன், அலறலின்
கள்ளங்கடமின்மைதான் நாம்.
" இந்தக்கதவுக்குப்பின்னால் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது"
ஒரு நூல் தன் இலைகளை உதிர்த்து கொண்டிருக்கிறது"

"நூலின் கதை என்ன?"

" ஓர் அலறலை உணர்வது"

" எனக்குப் புரியவில்லை
"பேசுவது என்னை சித்ரவதை செய்கிறது"

" எங்கிருக்கிறாய் நீ?"
" நான் சொல்வதில்
" எது உன் உண்மை?
" என்னைப் புண்படுத்தியது

புது எழுத்து 9

"எது உன் விடுதலை"?
" நான் கூறியதை மறப்பது"
" இருண்டுகொண்டு வருகிறது நான் உள்ளே வரலாமா?"
" ஒவ்வொரு வார்த்தையிலும் எரிகிறது ஒரு சுடர்"
" நீ பின் தொடரும் நூலின் ஒவ்வொரு பக்கத்திலும், அடியற்ற ஆழத்தில்,சிறகொன்று ஒளிர்கிறது பெயருடன்."
பார்ப்பது என்பது கண்ணாடிகளினூடாகச் செல்வது.
முடிவில்: இறுதி நட்சத்திரத்தின் இரவு.
உன் மௌனம்: நான் இருந்தேன், நீ பேசுகிறாய்: நான் இருக்கிறேன்.
உனக்கும் உன் தன்னிலைக்கும் இடையில்? நூலுக்கும் நூலை பிரிவதற்கும் இடையில் வாழ்வதற்கும் சாவதற்கும் எத்தனை பக்கங்கள் இருக்கின்றன.
" சூரியனுக்கு பின்னால் இன்னும் தனிமையாக வானம்"
வாழ்க்கைக்கு பின்தான் கடவுள், அங்கு வாழ்க்கை தன் பெயரை மாற்றிக்கொள்கிறது.

" புதைக்கப்பட்ட அதிகாலைக்கும், தொலைந்த சூரிய உதயத்திற்கும் இடையில் இரவினுள் நான்"

"நீ ஒரு நூல் எழுதுவதாக கனவு காண்கிறாய். நூல் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது.
" பெயரற்ற கல் நான், என்னுள் உயிருடன் ஒளிரும் ஒளியில் இருக்கிறது என் பெயர்."

"நீ சுவர்களை எழுப்புகிறாய், நான் எழுப்புகிறேன் இடையில் இருக்கும் வெளியை."

•

வாழ்க்கைக்கு எதிராக வெறுமையின் உண்மையை வைத்தேன் நான்
நீரற்றுக் கிடக்கின்றன என் கரைகள்.

" கடவுள் பிரியும் இறந்த காலம் தான் நாம்"
வார்த்தைகளின் குடலறுத்து விட்டன வார்த்தைகள்
தாங்கமுடியாத நாற்றம்

" நம்மிடம் ஒரு நிலமும் ஒரு நூலும் இருந்தன. நூலில் இருக்கிறது நம் நிலம்"

" ஒவ்வொரு இரவுக்கும் (என்னிடம்) இருக்கின்றன நட்சத்திரங்கள்"

" உன் வண்ணத்தை மங்கச் செய்யும் எந்தவொரு வார்த்தையையும் மலர் மறுக்கிறது."
" இருளின் அலறல்கள்தான் நிறங்கள்"

புது எழுத்து 9

" மௌனத்தில் நாம் எப்பொழுதும் மரணத்தை ஒட்டுக்கேட்கிறோம்
ஊற்றின் வார்த்தை- நதியின் தீர்க்க தரிசனம்.

என்ன பயன்?

அவன் கூறினான்
நீ உன் உதடுகளை இழப்பாய்
நான் கூறினேன்
இப்பொழுது என் உதடுகளால் என்ன பயன்?

அவன் கூறினான்
உன் கண்கள் வறண்ட ஏரிகளாகும்
நான் கூறினேன்.
எனக்கு நூல் மனப்பாடமாகத்
தெரியும்.
" பனி நம்இதயங்களை புதைத்துவிட்டது, ஆனால் உயரமான மரம்
நம் அலறல்களை நினைவு கூர்கிறது.

" வலியுறுத்தி நிலைக்கும் இறந்த காலம்தான் மரணம்.'

" பெயரினூடாக இரவு பகலாகிறது"

" என் வேதனையில் இருக்கிறது என் பெயர், என் வேதனைக்கில்லை
ஒரு பெயர்"

" வாழ்வதாக நினைக்கிறாய், மரணத்தை தூண்டிக்கொண்டிருக்கிறாய்"
"எந்த நூலை சொல்கிறாய் நீ?"

" நூலினுள் இருக்கும் நூலைச் சொல்கிறேன் நான்"
" நான் படிக்கும் இந்த நூலினுள் இன்னொரு நூல் ஒளிந்திருக்கிறதா?"
" நீ எழுதிக்கொண்டிருக்கும் நூல்"
அவன் கூறினான் என்னிடம்
மஞ்சள் என் இனம்
நான் பதிலளித்தேன்
நானும் உன் இனம் தான்

கறுப்பு என் இனம்
நான் பதிலளித்தேன்
நானும் உன் இனம்தான்.

அவன் கூறினான் என்னிடம்
வெள்ளை என் இனம்

நான் பதிலளித்தேன்
நானும் உன் இனம்தான்

மஞ்சள் நட்சத்திரம் என் சூரியன்
இரவால் மூடப்பட்டவன் நான்
விதியின் கல்லைப்போல
வெண்மையானது என் ஆத்மா.
"மனிதனைப்போல செத்துப்போவதில்லை, வார்த்தை. ஆனால் ஒரு
வார்த்தையைப் போல செத்துப்போகிறது. அதனுடன் பிரபஞ்சமும்
நொறுங்குகிறது"

"என் காலம் என்னை நேசித்ததாக நான் நினைத்திருந்திருக்கலாம்."
காலத்தின் விளிம்பில் மௌனமாய் இருந்தது காலம்
சூரியனின் மௌனத்திலானது நூல்
வார்த்தையில், இடத்திலும் ஒலியிலும் மனிதன் கடவுளைச்
சேர்ந்தவன்
குறியீட்டிலும் சைகையிலும் கடவுள் மனிதனைச் சேர்ந்தவன்.
வார்த்தையை இழப்பது படைப்பின் அலறலில் கடவுளை இழப்பது.
"அனைத்தையும் தரை மட்டமாக்கும் சமநிலைப்படுத்தும்
கடவுள் இன்மைதான் மரணம்.

மற்றொரு வார்த்தை இல்லை. கடவுள் என்னுடன்
பேசிக்கொண்டிருக்கிறார். நான் பதில்சொல்கிறேன். மற்றொரு ஒலி
இல்லை: மௌனத்தை கேட்கிறது மௌனம்.
நமக்கிடையே உள்ள வித்தியாசம் எப்பொழுதும் தெளிவாக
இருப்பதில்லை. ஒரு வரிக்கும் பற்றி எரியும் ஒரு வரிக்கும் இடையே
உள்ள வித்தியாசத்தைப் போல


"நம்பிக்கை:பின்வரும் பக்கம் நூலை மூடாதே"
நான் நூலின் அனைத்துப்பக்கங்களையும் புரட்டிவிட்டேன்
நம்பிக்கையை காணோம்

ஒரு வேளை நம்பிக்கைதான் அந்த நூல்.
மையம் என்பது ஒரு அலறல், திறந்த காயம் ஒரு சாவி
வட்டம் ச த்தியமில்லாத இடத்தில் மையமும் சாத்தியமில்லை

"நான் " - உலகம்
"நீ " - எதிரொலி
இடமும் குரலுமற்று
நாம் யார்?

என் குரல்

புது எழுத்து 9



இறுதி தடை , இறுதி எல்லை என்பது(உறுதியாக யாரால் சொல்லமுடியம்?) மையம்.

எங்கிருக்கிறது மையம்?
சங்குகளுக்கு அடியில்.

நூல் என்பது ஒரு சூழல் வழி. வெளியேறுவதாக நீ நினைக்கிறாய். மேலும் ஆழமாக சிக்கிக்கொள்கிறாய். ஓடித் தப்பிப்பதற்கான வாய்ப்பே இல்லை. தப்பிக்க வேண்டும் என்றால் நீ படைப்பை அழிக்க வேண்டும்.அழிக்க உனக்கு மனம் வரவில்லை. உன் தவிப்பு உயர்ந்து வருவதை என்னால் கவனிக்க முடிகிறது மெதுவாக, ஆனால் உறுதியாக உயர்கின்றன உன் தவிப்பும் பதற்றமும்.
சுவர்களுக்குப்பின்னால் சுவர்கள். இறுதியில் உனக்காக யார் காத்திருக்கிறார்கள்? யாருமில்லை உன்னை யார் புரட்டிப்பார்ப்பார்கள்? மொழி பெயர்ப்பாளர்கள்? நேசிப்பார்கள், சந்தேகமே இல்லை யாரும் இல்லை இரவில் தனியாக இருக்கிறாய். தனியாக இருக்கிறாய் உலகத்தில், உன் தனிமை மரணத்தின் தனிமை. மற்றுமொரு காலடி, ஒரு வேளை யாராவது வரலாம் . சுவற்றை துளைக்கலாம் உடைக்கலாம். ஓர் வழியை உனக்காக கண்டுபிடிக்கலாம், யாரும் இங்கு வரப்போவதில்லை. உன் பெயரைத் தாங்கி இருக்கிறது நூல். வாளின் மீது இறுக்கப்பட்டிருக்கும் கையின் பிடியைப்போல இறுக்கப்பட்டிருக்கிறது உன் பெயர்.

புது எழுத்து 9

"எதிரொலிகளால் எழுதப்படுகின்றன அலறல்கள், வெளியின் நூலின் விடுபட்ட சொற்றொடர்கள்."

பிறகு ஒவ்வொரு எழுத்துக்கும் இடையில் இருக்கும் எரியும் வெளியில் இல்லாமல் வேறு எங்கு தான் இருக்க முடியும் உண்மை?

நூல் அதன் எல்லைகளுக்கு வெளியில் தான் முதலில் வாசிக்கப்படுகிறது.

ஒரு வட்டம்
வட்டத்தினுள் மற்றுமொரு
வட்டம்
புதிய வட்டத்தில் இன்னும்
ஒரு வட்டம்
இப்படியாக
இறுதிவரை: விசை ததும்பும்
ஒரு புள்ளி
பிறகு புலப்படாமல் ஒரு புள்ளி
நம்ப முடியாததாக இருக்கிறது
இல்லாமல் இருக்கிறது கம்பீரமாக
ஒரு பெண் ஒரு சொல்
மெல்லச் சுழலும் ஒரு சொல்லை
சுற்றிச் சுழலும் ஒரு பெண்,
சுழன்று, நம்பமுடியாத வேகத்தில்
சுழன்று
அவர்களை வெளிவிட்ட வெளியில்
அவர்களை ஒரு வட்டமாக
மாறும் வரை சுழன்று
அவர்கள் துரத்தும் சிறிய வட்டம்
அவர்கள் துரத்தும் என்றும் சின்னஞ்சிறிய வட்டம்
விசித்திரமான ஒவ்வாத சிறுவட்டம்
ஒரு துளை ஒரு வெற்று உறை (துளை?)
இரவின் கண்
சிதைக்கப்பட்ட கண்(கருவிழி?)
பிறகு,? நீ பார்க்கிறாய்
பாய்ந்து வீழ்கிறாய்.
ஒருமை என்று அழைக்கப்படுவது இதுதானா?
ஒருமை எனப்படுவது இதுதானா?
இதுதானா ஒருமை என்பது?
அவிழ்க்கப்பட்ட ஒரு வட்டம்?
வட்டமாக ஓர் அலறல்,

புது எழுத்து 9

ஓர் அடி
உறுதி சொல்லும் ஒரு வார்த்தை
நான் உன்னைக் கொண்டேன் ஒரு வார்த்தையாக

"நான்" என்பது தான் நூல்?

" எங்கெல்லாம் என் குரல் வீழ்கிறதோ அங்கெல்லாம் நூலின் குரல் தந்திரமாக உள் நுழைந்து விடுகிறது"
" எனக்குச் சொல், நூலின் இந்தக்குரல் எப்படிப்பட்டது?"

" பழக்கப்பட்ட ஒரு குரல், என்னுடையது, என்னு டையதாக இருக்கலாம்"
" நீதான் நூலா ?"
" நான் நான்தானா?"

" எங்கெல்லாம் நூலின் குரல் வீழ்கிறதோ அங்கெல்லாம் உன் குரல் வீணாகிறது"

" நூலின் மௌனத்திலிருந்துதான் பேசுகிறாயா? நீ? "

" நானா பேச்சு? நானா மௌனம்?/ (பேச்சுதானா நான்?/ மௌனம் தானா நான்?)

பொழுது-அதன் நிழல், அதன் சுடர் - மனிதன், பிரபஞ்சத்தின் வாழ்வையும் சாவையும் வரையறுக்கும் வல்லமை கொண்டது. ஆனால் அதன் நிமிடங்கள் எண்ணப்படுபவை (எண்ணிக்கையிலானவை.)

பறவைகளுக்கு புகலிடமாக, நிலத்திற்கு வேதனையாக மரம், வெளி இறுக்கப்படுகிறது நிலத்தின் மீது.
அதனால்தான் சிறகுகளைப்போல தடிக்கின்றன இலைகள், பனித்துளிகளை கண்ணீராக விட்டு அழுகின்றன.
ஒருவருக்கொருவர் அந்நியராக, நமக்கு மட்டுமே பதில் சொல்கிறோம் நாம்

உன் துரதிர்ஷ்டத்தின் உடைந்த கண்ணாடி சூரிய ஒளியில் மின்னுவதைப்போல, தன்மையுடன் எரிகிறது வார்த்தை.

நூலுடன் துவங்குகிறது காலம்

வார்த்தையின் கவிழ்ந்த சிறகுகளை கொண்டிருக்கிறது மௌனம்
எப்பொழுதும் வார்தைக்கு அப்பால் இருக்கிறது நூல். வார்த்தை

செத்துப்போகும்) மடியும் இடம் அது.

வெகு தூரத்தின் வானத்தின் வார்த்தை, நூலில தன் கூட்டைக்
ட்டுகிறது
" நீ எழுதுகிறாய். பக்கத்தின் பின்பக்கம் வெறுமையாகவே
இருக்கிறது(வெற்றிடமாகவே).

ஒரு நூலை எரித்தால், அது காட்டில் இல்லாமையாக மலர்கிறது. ஒரு
நூலை மூழ்கடித்தால் அது ஒரு அலையாக விரிகிறது. ஒரு நூலை
புதைத்தால் , அது பாலையின் தாகத்தைத் தணிக்கிறது. விடுபடுதலின்
தூய நீராக வார்த்தைகள்.

பிறப்பது என்பது உன் பெயரைத்தேடுவது: உன் பெயரை
கண்டுபிடிப்பது நீ செத்துக்கொண்டிருக்கிறாய் என்பது.
ஒரு மனிதனின் வாழ்க்கை : மரணத்தின் நிழலுக்கும் மரணத்திற்கும்
இடையில் இருக்கும் தூரம்.

மரணம் உன்னை எங்கே இட்டுச்செல்லும் என்று உனக்குத்தெரியாது நீ
உயிருடன் இருக்கிறாய்.

" பிரிவைக்குறிக்கிறது காலம், காலத்தில் வாழ்கிறோம் நாம்"

கடவுள் தன் வார்த்தைகளில் பெண்ணாக, தன் சைகைகளில் ஆணாக

ஒரு முகமூடி: நித்தியத்திற்கான நமது முகமாக இருக்கலாம்.

கண்ணாடியில் தான் செத்துப்போவாய் நீ.

எப்பொழுதும் நூலும் நானும், தவிர்க்கமுடியாத எதிர்கொள்ளல்/
மோதல்

" மௌனம்
கடவுளை சேர்திக்கின்றன வார்த்தைகள் மௌனத்தில்
எழுதப்படுகிறான் மனிதன்."

கதையின் காலையில் உலகத்தின் மரணத்துடன் இணைக்கிறது
மரணம்

என்ன சொல்வேன் என்று எனக்குத் தெரியும்
என்ன எழுதுவேன் என்று எனக்குத் தெரியும்
நான் சொல்வது கேட்கப்படும்
நான் எழுதுவது, படிக்கப்படும்

புது எழுத்து 9

நாளை என்பது ஏற்கனவே வரையறுக்கப்பட்டுவிட்டது
நாளை- ஆனால் எங்கு? எப்பொழுது?
கடல் என்றும் எப்பொழுதும் கரைக்குத் திரும்புவதில்லை.

மரணத்தை அலை என்றான் ஒரு மனிதன்:
உயர்ந்த அலையில்
வாழ்க்கை பாடுகிறது தாழ்ந்த அலையில்
உலகம் அழுகிறது.

மரணத்தை மணப்பெண் என்றான் ஒரு மனிதன்:
திருமண நாளில்
வாழ்க்கை பாடுகிறது: மனிதனின் இரவில்
உலகம் அழுகிறது

மரணத்தை விதானம் என்றான் ஒரு மனிதன்
அதிகாலையில்
அனைத்துத்துளைகளிலும் பாடுகிறது உடல்: மாலையில்
உயிர் அழுகிறது.
இந்த மனிதன், எங்கே அவன்?
மரணம் அழைக்கிறது.

நாளை என்பது எப்பொழுதும் நிழலுக்கு அப்பால் இருக்கும் நாள்
தான்,
ஒன்றுமில்லாமல் விடப்பட்ட ஒரு வார்த்தையின் மௌனத்தில்
அனைத்தும் நிகழ்கிறது
இரு பக்கங்களுக்கிடையில்.
நூலை நீ எப்பொதும் இழப்பதில்லை. நீ உன்னை இழக்கிறாய்
என் மரணத்துடன் தான் பேசுகிறது நூல், நான் அறியாதது என்
மரணம்.

நூலில் இருக்கும் என் உண்மை என்பது வாழ்வுக்கு வெளியிலிருக்கும்
என் உண்மை என் நூல்களை சுற்றி வளர்கிறது என் வாழ்க்கை.

என் வெளிப்பாடுகளில் வெளியிடப்படாததின் ஒளியில் எழுதுகிறேன்
நான்.

ஒருவேளை எழுத்தில் உண்மை என்பது அலறல் அந்த அலறலுக்கு
ஒப்பனையும் ஆடையும் தருகின்றன வாக்கியங்கள்.
அடிபட்ட சிறகின் படிப்பில் இருக்கிறது யதார்த்தம்.
சதையின் பிணைக்கப்பட்டிருக்கிறது எண்ணம். செத்த எண்ணம் என்பது
பலியிடப்பட்ட ஓர் உடல்.

புது எழுத்து 9

புணரும் இருவர் இரவைக் கடக்கும் ஓர் நிழல்

எதற்காக காத்திருக்கிறாய்? எதற்காக காத்திருக்கிறாய்?
மரணத்திற்காக. சரி, வேறு எதற்காக ?
மரணத்திற்கு திரும்புவதற்காக.

உன் அலறல்களால் அமைத்திருக்கிறாய் அவன் பெயரை, ஒவ்வொரு
அலறலும் உனக்குப் பெயர் தரும் வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தாக.

நான் சிந்திக்கிறேன் அதனால் நான் இருக்கிறேன் என்றால்
என் தனிமை முடிவற்றது.

உன் நெஞ்சத்தில் துடிக்கிறது ஒரு புள்ளி: உன் இதயம்
உன் கையில் துடிக்கிறது ஒரு புள்ளி : உன் நாடி
வெளியில் துடிக்கிறது ஒரு புள்ளி : கேள்.

அக்காலத்தில் அக்காலத்தில் நரகத்தின் நெருப்பெரிக்கப்
பயன்படுத்தப்பட்டன நம் நூல்கள்.
நூல்கள் இருக்கும் வரை எரிக்கும், எரியும் கனவுகளும் இருக்கும்.

நான் இருந்த இடத்தில் ஒரு அந்நியனாக
நான் போகும் இடத்தில் ஒரு அந்நியனாக
நான் இருக்கும் இடத்தில் ஒரு அந்நியனாக.
அவன்
புள்ளியைப்
பற்றிப்
பேசினான்
கேட்டுக்
கொண்டிருந்தவன்
தன்
கண்களை
கசக்கினான்
இரவை
வெளியேற்றுவதற்காக.

மரணம் நம்மிடமிருந்து தப்பிக்கும் பொழுதும் தொடர்ந்து
கொண்டிருக்கும் அலறல் தான் எழுத்து.
என் மரணத்தால் என்னுடன் செத்துப்போகிறது மரணம்.
உறுதியானதாக கொள்ளக்கூடியது இது ஒன்று மட்டும் தான்.

"இடதுகை என்பது அதிகாலை, வலது கை என்பது மாலை. மங்கும்
ஒளியின் படைப்புதான் நூல்"

புது எழுத்து 9

"இடது கை என்பது வாழ்வு, வலது கை என்பது மரணம். மரணம் தான் எழுதுகிறது

கண்ணாடியல்ல எழுதப்பட்ட பக்கம். எழுதுவது என்பது அறிந்திராத ஒரு முகத்தை எதிர்கொள்வது.

ஒற்றை அலையில் செத்துப்போக முடியாமல் வெறிபிடித்து அலையும் கடல்.

பிரபஞ்சம் ஒரு நூல்: ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கம்
விழித்தெழும்போது ஒளியின் பக்கத்தை வாசிக்கிறாய். உறங்கும் போது இருளின் பக்கத்தை வாசிக்கிறாய்- அதிகாலையின் வார்த்தை - மறத்தலின் வார்த்தை
பாலைக் கில்லை நூல்.

நடுங்கியவாறே, கையெழுத்தால் வார்த்தைகளால் நிரப்பப்பட்ட ஓர் ஏட்டை தன் ஆசிரியரிடம் கொடுத்தான் அவன்: அது அவனுடைய நூல்
" ஏன் நடுங்குகிறாய்?" என்றார் ஆசிரியர்.
" இந்தப்பக்கங்கள் பனிப்பாளங்களைப் போல என் விரல்களை எரிக்கின்றன. நான் குளிரில் நடுங்குகிறேன்" என்றான் அவன்
" இந்தப்பக்கங்களில் என்னதான் இருக்கிறது ? சொல் " என்றார் ஆசிரியர்.
" எனக்குத் தெரியாது "என்றான் அவன்
' உனக்குத் தெரியாது என்றால் வேறு யாருக்கு தெரியும்? என்றார் ஆசிரியர்.
" நூலுக்குத் தெரியும் "

எந்த ஞாபகமும் / எந்த நினைவும் கள்ளங்கபடமற்றதல்ல.
உன் கண்கள்?
என் நூலினுடையவை
'உன் காதுகள்?"
" என் நூலினுடையவை"
' உன் மூச்சு?"
'என் நூலினுடையது"
' உன் நம்பிக்கை? "
" என் நூலினுடையது"
' உன் வாய்ப்புகள்?"
" என் நூலினுடையது"
உன் மரணம்?
நூலின் இறுதிப்பக்கத்தில் எனக்காகக்காத்திருப்பது: நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் மரணத்தின் மரணம்.

பது எழுத்து 9

தாழ்ந்திருக்கும் கண்களுடன் எழுதுகிறாய்-- ஆனால் வானத்தைத் தாங்கியிருக்கும் கண்கள்.

பதிலுக்கில்லை நினைவு. கேள்வி மட்டுமே நினைவு கூர்கிறது.
பனிக்கு மணலைத் தெரியாது. பனி அறியாத மணல் இருந்தும் பாலை இருக்கிறது இரண்டிலும்.

நூலை கனவு காண்பதாக நினைக்கிறாய் நீ. நீதான் அதன் கனவு

கேள்வி படைக்கிறது. பதில் கொல்கிறது.
நீ வாழ்வதாக நீ நினைக்கிறாய். உன் வாழ்க்கையை நீ எழுதுவதாக நினைக்கிறாய்: நீ ஒரு குழியைத் தோண்டுகிறாய்

ஒரு குழந்தையின் முகம், இன்னும் மொழியால்
வடிவமைக்கப்படாமல் காலத்திற்கு அப்பால் இருக்கும் முகம்.

கேள்விகளற்றது நித்யம்.

எப்பொழுதும் ஓர் இழந்த முகத்தின் மீதாகவே முடிக்கிறது நூல்.
எப்பொழுதும் விரக்தியுற்ற வார்ததையொன்றினாலேயே
செத்துப் போகிறோம் நாம்.

என் வீட்டில் காலத்திற்கு இல்லை புகலிடம்.

எப்பொழுதும் வெறுமையின் இழை நெடுகத்தான் எழுதுகிறோம் நாம்.

இந்தப் பக்கத்தில் வாழ்கிறோம் நாம். எப்பொழுதும் மறு பக்கத்தில் தான் செத்துப்போகிறோம்: ஆனால் மனத்தில் இருக்கிறது கோடு.

நீ இழக்கும் நாட்களை மட்டும் தான் உன்னால் எண்ணமுடியும்

உலகத்தில் நாம் இல்லாமல் போவது என்பது,
ஒரு வேளை சூன்யத்தில் நாம் இருப்பது என்பதுதான்.

......மரணத்திற்கும் செத்துக்கொண்டிருப்பதற்கும் இடையில் இருக்கும் முக்கியத்துவம் அன்று இந்த இடைவெளி (இடைவேளை)
"நான்" என்பது "நீ என்பதன் அற்புதம்
அவர் கூறினார் " குறிப்பிட்ட ஒரு தர்க்கத்திலிருந்து வருவது இது" நீ

என்பதைக் குறிக்க நான், நான் என்பதை நியாயப்படுத்த நீ மறைந்து போவதற்காக அவன்
நிகழ் என்பது இல்லை எதிர்காலத்தால் துரத்தி துரத்தி வேட்டையாடப்படும் இறந்தகாலம், இறந்த காலத்தால் துன்புறுத்தப்படும் எதிர்காலம்.
வேதனைக்கு
மறுப்பது என்பது மலர்களாலான ஓர் தீவு
வெறுமையின் இனிய மணம்
பிறர் ஓர் புனைவு
கேள்விகளுடன் துடிக்கிறது. உரையாடலின் இதயம்
ஒவ்வொரு வார்த்தையுள்ளும் இரு வார்த்தைகள் இருப்பது போல
ஒவ்வொரு மௌனத்துள்ளும் இருக்கின்றன இரு மௌனங்கள். பேச்
சுவர்களை உடைத்து விடு.
சுதந்திரத்தோடு பிணைக்கப்பட்ட ஒன்றல்ல உண்மை ஆனால் உண்மையின்
ஒரு வாசிப்பாக அமையாத சுதந்திரம் என்பது இல்லை.
தன் ஆசிரியரைப் பார்க்கச் சென்றான் ஒரு இளைஞன் அவரிடம் அவன் கேட்டான்
"நான் உங்களுடன் பேச முடியுமா?"
ஆசிரியர் பதிலளித்தார் நாளை வா பிறகு நாம் பேசு வோம்".
மறுநாள் அந்த இளைஞன் திரும்ப வந்தான். கேட்டான்.
"நான் உங்களுடன் பேச முடியுமா?"
ஆசிரியர் பதிலளித்தார். "நாளை வா,
பிறகு நாம் பேசுவோம்"
ஏமாற்றமடைந்தவனாக வந்த இளைஞன் கேட்டான் நேற்றும் வந்து இதே
கேள்வியைத்தான் உங்களிடம் நான் கேட்டேன், என்னுடன் பேச மறுக்கிறீர்கள்?"
ஆசிரியர் பதிலளித்தார். நேற்றிலிருந்து நாம் உரையாடிக் கொண்டுஇருக்கிறோம் நாம் யாரைக் குறை சொல்ல முடியும். நம் காதுகள் பழுதடைந்து இருக்கும்போது
தேவைப்படும் (அத்தியாவசியமான) வெறுமை.

ஆங்கிலம் வழி தமிழில் : கண்ணன். எம்



ஸிம் எஸக்கியல்

கவிதைகள்

ஒரு விளைக்கணம்

பாவனை, பாசாங்கு, நான் பாசாங்கு
நீ பாசாங்கு, நாம் பாசாங்கு, அவர்கள் பாசாங்கு.

நான் பாசாங்கு செய்தேன், நீ பாசாங்கு செய்தாய்,
நாம் பாசாங்கு செய்தோம், அவர்கள் பாசாங்கு செய்தார்கள்.

பாவனை, பாசாங்கு, நான் பாசாங்கு செய்ய மாட்டேன்
நீ பாசாங்கு செய்யமாட்டாய், நாம் பாசாங்கு செய்யமாட்டோம்
அவர்கள் பாசாங்கு செய்யமாட்டார்கள்.

இனிமேல் பாவனையில்லை
பாசாங்கிற்கு ஒரு முடிவு.
0



செல்வி புஷ்பா ட்டி.எஸ்-ன் பிரிவு உபசார விருந்து

நண்பர்களே
நமது அருமைச் சகோதரி
ஒரிரு தினங்களில்,
வெளிநாடு புறப்படுகிறார்
மேலும்
இன்று நாம் கூடியிருப்பது
அவரின் வெளிநாட்டுப் பயணத்தை வாழ்த்துவதற்கு, வாழ்த்து சொல்வதற்கு

நண்பர்களே, உங்கள் அனைவர்க்கும் தெரியும்,

செல்வி புஷ்பா எவ்வளவு இனிமையானவர் என்பது
இனிமையான புறத்தோற்றத்தை மட்டுமே சொல்லவில்லை
உள்ளத்திலும் இனிமையானவர்.
செல்வி புஷ்பா சிரித்துக் கொண்டேயிருக்கிறார் மேலும்
சிரித்துக்கொண்டேயிருக்கிறார்
ஒரு காரணமுமின்றி
ஆனால் அவள் எளிமையாக எதையோ உணர்வதால்.


செல்வி புஷ்பா மிக உயர்ந்த
குடும்பத்திலிருந்து வந்திருக்கிறார்
அவள் தந்தை புகழ்பெற்ற வழக்கறிஞர்
பல்சரில் அல்லது சூரத்தில்
இப்போது எனக்கு சரியாக நினைவில்லை

சூரத்? அஸ், சரி
ஒரே ஒரு முறை சூரத்தில் தங்கியிருக்கிறேன்
குடும்பத்தோடு
என் மாமாவின் பழைய நண்பர்கள் வீட்டில்,
அவர் மனைவி நன்றாக சமைப்பாள் ...
அது வெகு காலத்திற்கு முன்பு
செல்வி புஷ்பாவின் விஷயத்திற்கு மறுபடியும் வருகிறேன்
ஆண்களிடமும் பெண்களிடமும்
மிகவும் புகழ்பெற்ற பெண் அவள்
எப்போது அவளிடம் எதையாவது செய்து கொடுக்கவா என்று கேட்டாலும்
அவள் சொல்கிறாள், "இப்போதுதான் செய்து முடித்தேன்"
இது ஒரு நல்ல பழக்கம் நான் எப்போதும்
நல்ல பழக்கத்தைப் பாராட்டுகிறேன்
நான் எதைக் கேட்டாலும் அல்லது யார் கேட்டாலும்
அவள் எப்போதும் சரி என்கிறாள்
இன்று தன் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்வதற்கு
புறப்பட்டு போகிறாள்
அவளின் வெளிநாட்டு பயணம் சிறப்பாக அமைய நாம் வாழ்த்துவோம்

இப்போது அடுத்ததாக பேச இருப்பவரை அழைக்கிறேன்
அதன்பிறகு செல்வி புஷ்பா
ஏற்புரை நிகழ்த்துவார்.
0

புது எழுத்து 9

கங்கா



நம்மைப்பற்றி நமக்கே தற்பெருமை
தாராள மனப்பான்மை மேல்

துணிதுவைக்கும் வேலைக்காரியை
சந்தேகப்படுகிறோம்

சோரம் போகிறாளென
வேலையை விட்டு நீக்கவில்லை

அவள் எப்போதும் பெறுகிறாள்
ஒரு கோப்பை தேநீர்

நேற்று மாலையிலிருந்து
அவளுக்காகப் பாதுகாத்து வைத்திருக்கிறோம்

ஒரு சப்பாத்தி, பழையது
ஆனால் கொஞ்சம் நல்ல நிலையிலிருக்கிறது

வருடத்திற்கொரு பழைய
புடவையும் ஜாக்கெட்டும்

ஒரு தட்டில் வைத்து
எளிதாகக் கொடுக்கிறோம்

அல்லது ஒரு கோப்பையும் தட்டும்
மேலும் அவள் வாங்குகிறாள்

ஒரு சிறு நாணயத்தை வெற்றிலை பாக்கி(பான்)ற்காக
அல்லது அவள் குழந்தைகளுக்கு இனிப்பிற்காக

அவளோடு வாசனையைக் கொண்டு வருகிறாள்
அவள் பின்னால் அதை விட்டுச் செல்கிறாள்

ஆனால் நாம் அதைப் பயன்படுத்துகிறோம்
இவர்கள் ஒருபோதும் கற்றுக்கொள்வதில்லை

நிஸிம் எஸக்கியலின் Collected Poems Oxford University Press-
தொகுப்பிலிருந்து தமிழில் : சிபிச்செல்வன்

புது எழுத்து 9

எஸ். செந்தில்குமார்

கவிதை

நூறு மிட்டாய்கள் ஊறியிருக்கும்
குளமொன்றை கண்டடைந்த யுவன்
தன் பால்ய காலத்தில் தவறிவிட்ட
மிட்டாய் அப்போது மிதந்து வந்திடாதாயென ஏங்கி
இருக்கிற வயோதிகனிடம் அமர்கிறான்.
கண் அறிந்துவிடுகிற ஆழத்தில் மிட்டாய்கள் சுவைக்க
அசைவு கொள்கிறது
தொடுதலில் நீரும் கண்ணில் மிட்டாயுமென
மிட்டாய் குளத்தைக் கண்டு
ஏங்கிய வயோதிகன் பால்ய ஞாபகத்தில்
குளம் விட்டு நீங்குகிறான்
அலையொன்றை விலக்கி நீர் பருகும் யுவன்
தன் வயோதிகத்தை அலைவு கொள்ளும் நீரில் காண்கிறான்
தொடுதலில் மிட்டாயினையும் கண்ணில் குளத்தையும்
சேர்த்தே.

மிட்டாய் குளம்



இங்கு எதுவும் நிகழவில்லை

மு.சத்யா



வெளியீடு:
அன்னம், மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் -613 007

விலை ரூ. 30

தொகுப்பின் பின்னட்டையில் புகைப்படம் இணைக்கப்பட்டிருக்க வில்லையெனில் மு. சத்யா ஓர் ஆண் கவிஞர் என்றே நம்பிக் கொண்டிருந்திருப்பேன். தொகுப்பை வாசித்து முடித்தப் பின்னும் அந்த அளவுக்கு ஆண் கவிஞரால் எழுதப்பட்டதா அல்லது பெண் கவிஞரால் எழுதப்பட்டதா என அடையாளப் படுத்த முடியாத கவிதைகளாக இவை உள்ளன. அவ்வப்போது சில இதழ்களில் சத்யாவின் கவிதைகளை வாசிக்க நேர்ந்த போது அவற்றை எழுதியது ஓர் ஆண் என்றேதான் நம்பி வந்தேன். (இன்றைய படைப்புலகத்தில் பெண்ணியம், தலித்தியம் போன்ற கருத்துருவங்கள் கையாளப்படுகின்ற சூழலில் 'ஆசிரியர் குறித்த தகவல்களும் நமக்கு முக்கியமாகின்றன. அதன் வழியாக நாம் படைப்பைக் கூடுதலான அர்த்தத்தில் புரிந்து கொள்ள முடியும்) யாரேனும் இத்தொகுப்பை வாசித்திருப்பின் 'செடியுடல்' 'நிலமாகும் உடல்' 'செய்வதொன்றுமில்லை' 'அடுக்களையும் ஆயாசமும்' போன்ற கவிதைகளை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள் என வாதாடலாம். ஆமாம் மேற்கண்ட கவிகைளின் 'சொல்லி' பெண்ணாக இருப்பதற்கான தடயம் வெளிப்படையாக உள்ளது. ஆனால் தொகுப்பின் மொத்த கவிதைகளில் இவை மிகச் சிறுப்பான்மை. அதே நேரத்தில் பூச்சாடி திரவம் (மது அருந்தும் அனுபவமாக எடுத்துக் கொண்டால் - முன்னுரையில் மூன்றாவது வரியில் 'சுயமாய் ஒரு சிகரெட் பிடிக்கும்' என்ற வரியும் உள்ளது. நிகழ்தகவை அறிந்தவன் (தலைப்பே ஆண்பாலை குறிக்கிறது), உள் அடர்வுகள் (இயந்திர மனிதனாய்?) உச்சியில் தெரியும் அடிவாரம் (மானுடன் நான்?) போன்ற கவிதைகளின் 'நெரேட்டர்' ஓர் ஆணாக இருப்பதற்கான அம்சம் அவற்றிலேயே உள்ளன. இவற்றைத் தவிர்த்து பிற கவிதைகள் 'பாலறிய முடியாத கவிஞர்' ஒருவரால் எழுதப்பட்டவையாக உள்ளன. இந்த விஷயத்திற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் என யாரேனும் கேள்வியெழுப்பக் கூடும். இன்று எழுத்துறையில் அடியெடுத்து வைக்கும் பெண் கவிஞர்களில் பலர் தம் கவிதைகளில் கவிதையனுபவங்களைக் காட்டிலும் தம் பால் அடையாளங்கள்க மற்றும் அது சார்ந்த பிரச்சனைகளையே முதன்மைப் படுத்தி வருவதைக் காண்கிறோம். (விதிவிலக்கு, ரிஷி, பெருந்தேவி..,போன்ற கவிஞர்கள் சிலர்) இது தலித் கவிஞர்களுக்கும் பொருந்தும். கவிதைகள், கவிதையனுபவங்களுக்காக இன்றி விஷயங்களுக்காகப் பொருட் படுத்த வேண்டியவையாக மாறி வருவதைக்

புது எழுத்து 9

கற்பனை மேலெழுந்துள்ளது. இது பற்றி இவ்வளவு போதும்.

இளம் கவிஞர் மு. சத்யாவின் முதலாவது தொகுப்பான இதில் இரண்டு வகையான கவிதைகள் இடம் பெற்றுள்ளன. புனைவம்சம் அற்ற வழக்கமான அர்த்த வார்க்கப்பட்ட கவிதைகள். இவை நிச்சயம் சத்யாவின் தொடக்க நிலை கவிதைகள் எனலாம். இரண்டாவது வகையில் தற்போதைய கவிதை அடையாளங்களாக உள்ள கவன நிலையும், புனைவம்சமும் மிக்க கவிதைகள் அடங்கும். இந்த இரண்டாம் வகை கவிதைகளுக்காகவே இத்தொகுப்பு முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக செடியுடல் (ப. 27) என்ற கவிதையில் தன் கருப்பு நிறத்தால் தாழ்வு மனப்பான்மையும் தனிமையுற்றச் சிறுமியின் கனவம்சம் புனைவாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பருத்தாணிச் கம்பினால் தோழியர்/ செடிகொடிகளை வரைய [illegible] தான் வரைய வரைய/ செடிகொடிகளும் வளர்ந்தன/ உடலெங்கும் பரவின/கொடிகள் மலராயின/ மரங்கொத்திகள் கொத்தலாயின/பறவைகள் கேசக்கூட்டில்/குஞ்சு பொரித்தன. இதைப் போன்றே பூச்சாடி திரவம் (ப.14) நீலமாகும் உடல் (ப.35), சூழலும் கட்டாமணி (ப.49), உச்சியில் தெரியும் அடிவாரம் (ப.60) போன்ற கவிதைகளிலும் புனைவம்சம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. இவை போன்ற கவிதைகளே தமிழ்க் கவிதைகளை அடுத்தக் கட்ட கவிதைகளாக அடையாளப் படுத்துவனாவாகும். கணிசமான கவிதைகள் இத்தகைய போக்கில் அமைந்திருப்பதாலேயே இத்தொகுப்பு கவனிக்கத்தகுந்த முக்கியமான தொகுப்பாக உள்ளது.

தே.நேசன்



நீர்வெளி

(கவிதைகள்)

அய்யப்ப மாதவன்

வெளியீடு :
அகரம், மனைஎண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் -613 007
விலை ரூ. 35/-

அய்யப்ப மாதவனின் மூன்றாவது கவிதைத் தொகுதி இது. இரண்டாவது தொகுதியான 'நானென்பது வேறொருவன்' பரவலான கவனம் பெற்றது. இத்தொகுப்பு அதனின் நீட்சியாகவும் அதிலிருந்து வேறுபட்ட புதிய தளங்களையும் தம்முள் கொண்டுள்ளது. இக்கவிதைகள் எளிமையான மொழியில் புதுமையான காட்சிப் படிமங்களை நிகழ்த்திக் காட்டுகின்றன. கனவுகளென நிகழும் வினோதப் பிரதேசத்தினூடக பயணிக்கும் அனுபவங்களாக இவை உள்ளன. குறிப்பாக பாதாளப் பேரழகி (பக். 6-7), பனி இளவரசி (பக் 22- 23) , குன்றுகளிடையே மறையும் வயலின் (பக் 56-57) ஆகிய கவிதைகளின் பின்புலம் முறையே கடலின் ஆழ்பகுதி, நகர பனி பிரதேசம், மலைக்குன்றுகள் நிறைந்த பள்ளதாக்கு என அமைந்துள்ளன. மூன்று பரப்பிலும் ஒரு பெண் திடீரென தோன்றி கட்டித்தழுவவோ முத்தமிடவோ எத்தனிக்கையில் மறையவோ, கரையவோ, காணாமலேபோகவோ நேர்கிறது. இதுபோன்ற வினோதக் காட்சிகளின் அரங்கமாகவே இத்தொகுப்பு உள்ளது. உள்ளுறை, இறைச்சி, உவமை, உருவகம், படிமம், குறியீடு போன்றவற்றையெல்லாம் கடந்தும் கைவிட்டும் இன்று நவீன கவிதைகள் எழுதப்படுகின்றன. அவை நேரடியாகவும் எளிமையாகவும் ஆனால் விநோதமான கனவுத் தன்மையும் புனைவம்சமும் கொண்டும் திகழ்கின்றன. இவ்வாறான நவீன கவிதைகளுக்கு உதாரணமாக இத்தொகுப்பும் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தே.நேசன்

புது எழுத்து 9

ஆதி



கலை,
இலக்கியம்,
மற்றும்
அரசியலுக்கான இதழ்

12/11 ஐந்தாம் தெரு, குமரன் காலனி,
வடபழனி, சென்னை -26
செல்: 9841436721

தனி இதழ் ரூ.15
ஆண்டு சந்தா ரூ.150



சிற்றகலில் இருந்து பேரொளி

அருந்ததி நிலையம்
19 கண்ணதாசன் சாலை
சென்னை 17,

விலை 150

புதுக்குரல்கள் மற்றும் சலனம் ஆகிய தொகுப்புகளுக்கு பின் சமகாலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய ஒரு அருமையான புது கவிதை தொகுப்பு வெளிவந்து இருக்கிறது. புத்தகத்தை தொகுத்தவர்கள் பூமா ஈஸ்வரமூர்த்தி மற்றும் லதா ராமகிருஷ்ணன் ஆகியோர் ஆவர். தற்கால புதுகவிஞர்களின் புதுகவிதைகள் அடங்கிய அரசியல் எதுவும் கலக்காத அசலான தொகுப்பு இது. மிகவும் பாராட்டப் படவேண்டிய முயற்சி. எனவே வாங்கி ஆதரிக்க வேண்டிய புத்தகம் இது. ஓரிரு குறைகள் மட்டுமே இங்கே சுட்டப்படுகிறது. கவிஞர்கள் பற்றிய குறிப்புகளில் காளிதாஸ் இருமுறைஇடம் பெற்று இருக்கிறார். ஸ்ரீ நேசன் மற்றும் மனோன்மணி ஆகியோர் பற்றிய குறிப்புகள் இல்லை. அமிர்தராஜ் எழுதிய கவிதைகள் இல்லை. குறிப்பு உண்டு. அமிர்தராஜின் பெயரில் அச்சாகியுள்ள கவிதைகள் காசியபனின் கவிதைகள் ஆகும். காசியபனின் கவிதைகள் பற்றி கோணலாகப் பார்க்கும் காக்கைக்கு என்ற கவிதையில் வரும் ஒரு வரியே அவரின் கவிதை தொகுப்பின் அட்டைக் குறிப்பில் இடம் பெற்றுள்ளது ஆகும். பூரம் என்னும் கவிதை பற்றி. பூரான் என்பது பிராமண வழக்கில் பூரம் ஆகும். பூரான் பற்றிய பிராமண கதை மரபு வேறு நாட்டார் வழக்கில் நிலவும் கதை மரபு வேறு. பூரம் கவிதையே டி.எச்.லாரன்சின் சினேக் (பாம்பு) என்றகவிதையை சத்தியமாய் நினைவூட்டக் கூடும். அமிர்தராஜின் தலையில் காசியபனை ஒட்டி பதிப்பாளர் புத்தகத்தை காப்பாற்றவேண்டும். C மணி என்று சி.மணி யையும் ப்ரும்ம ராஜன் என்று - பிரம்மராஜனையும் எழுதுவது ரசிக்கத்தக்கதாய் இல்லை. தவிர்த்திருக்கலாம் பிரேமிள், பிச்சமூர்த்தி,ஆத்மநாம்,அபி.. என ஒரு சிலரை. அப்போது இத்தொகுப்பின் கனம் மேலும் கூடியிருக்கும். சிறு பத்திரிகை கவிதைத் தொகுப்பு என்ற துணைத்தலைப்புடன் வெளிவந்திருக்கும் இப்புத்தகத்தில் எந்த கவிதை எந்த சிறு பத்திரிகையில் வெளி வந்தது என்ற தகவல் இல்லை. இருந்தாலும் இன்னும் கொஞ்சம் கவனத்துடன் இருந்திருக்கலாம். பூமா ஈஸ்வரமூர்த்தியும் லதா ராமகிருஷ்ணனும் அருந்ததி நிலையமும் பாராட்டப்பட வேண்டியவர்கள். தற்கால கவிதைகள் - தற்கால கவிஞர்கள் பற்றிய இச்சிற்றகல் தொகுப்பு மாயஇருட்டில் வெளிச்சம் பரவ ஒளி கசிய விட்டிருக்கிறது.

பினாகினி

ஜீவா தமிழ் 1.0

working in...
Win98, Me, Win2000, NT, XP, Win2003

supported Software...
PageMaker, CorelDRAW, Quark xpress, MS Office, & Multimedia Softwares.

keyboard layout...
Typewriter1, Typewriter2, Inscript, Tamil'99 with Visual keyboard layout specialities.

115 TAM fonts + 45 Symbol fonts + 4000 Cliparts